
# இலங்கைப் பிள்ளையைப் புரிந்து கொள்ளல்

## 2002 ஆம் வருடத்தில் அரச பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்ந்த மாணவ மாணவியர் பற்றிய நெட்டாங்கு ஆய்வு (2002 - 2006)

## 2002-2006 ஆம் வருடங்களிற்குரிய தனியாள் ஆய்வறிக்கை - 43 (27T)




ஆராய்ச்சி அலகு
ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம



அனுசரணை
யுனிசெப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# இலங்கைப் பிள்ளையைப் புரிந்து கொள்ளல்

2002 இல் அரச பாடசாலைகளில் முதலாந் தரத்தில் சேர்ந்த
மாணவ - மாணவியர் பற்றிய நெட்டாங்கு ஆய்வு (2002-2006)

## பாடசாலை மற்றும் வீட்டுப் பின்புலம்
## மாணவர் விருத்தியில் செலுத்தும் செல்வாக்கு



ஆராய்ச்சி அலகு
ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2008

அனுசரணை
யுனிசெப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6203 (P) Archives.

370.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிள்ளையைப் புரிந்து கொள்ளல்

2002 ஆம் வருடத்தில் அரச பாடசாலைகளில்
முதலாம் தரத்தில் சேர்ந்த மாணவ மாணவியர் பற்றிய
நெட்டாங்கு ஆய்வு (2002-2006)

## 2002-2006 ஆம் வருடங்களிற்குரிய
## தனியாள் ஆய்வறிக்கை
## 43 (27T)

# பாடசாலை மற்றும் வீட்டுப் பின்புலம்
# மாணவர் விருத்தியில் செலுத்தும் செல்வாக்கு

ஆராய்ச்சி அலகு
ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2008

அனுசரணை
யுனிசெப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிள்ளைகளைப் புரிந்து கொள்ளல்

## 2002 ஆம் வருடத்தில் அரச பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்ந்த மாணவ மாணவியர் பற்றிய நெட்டாங்கு ஆய்வு (2002-2006)

## 2002-2006 ஆம் வருடங்களிற்குரிய தனியாள் ஆய்வறிக்கை
## 43 (27T)

## பாடசாலை மற்றும் வீட்டுப் பின்புலம் மாணவர் விருத்தியில் செலுத்தும் செல்வாக்கு

ஆராய்ச்சியாளர் : எஸ். எச். எம். ஷரீபீக்

ஆராய்ச்சி அலகு
ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2008

அனுசரணை
யுனிசெப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிள்ளையைப் புரிந்து கொள்ளல்

## 2002 ஆம் வருடத்தில் அரச பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்ந்த மாணவ மாணவியர் பற்றிய நெட்டாங்கு ஆய்வு (2002 - 2006)

(2002-2006) ஆம் வருடங்களிற்குரிய தனியாள் ஆய்வறிக்கை:

43(27T) ஆம் இலக்க தனியாள் ஆய்வறிக்கை

பாடசாலை மற்றும் வீட்டுப் பின்புலம் மாணவர் விருத்தியில் செல்வாக்கும் செலுத்தும் செல்வாக்கு


எழுதியவர்:

எஸ். எச். எம். ஷிபீக்



முதல் பதிப்பு : 2008



தேசிய கல்வி நிறுவகம்©


ஆய்விற்கான ஆலோசனை : பேராசிரியர் லால் பெரேரா

திட்டமுகாமை ஆலோசனை : கலாநிதி ரீ. ஆர். ஏ. ஜே. குணசேகர

ஆய்வுக் குழுவினர் : கலாநிதி கொட்வின் கொடித்துவக்கு

டி. ஏ. எஸ். டி. ரத்னாயக


இலங்கை தேசிய நூலகம் : ISBN - 955-597-


அட்டைப் படம் : ஆய்விற்குத் தெரிவு செய்யப்பட்ட இலக்கம் 34 ஆம் பாடசாலை மாணவ ஆக்கத்தின் ஊடாக கொட்வின் கொடித்துவக்கினால் தயாரிக்கப்பட்டது.

கணனி வடிவமைப்பு : செல்வி. கமலவேணி கந்தையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றுப் பொழிப்பு

இந்நெட்டாங்கு ஆய்விற்குட்படுத்தப்பட்ட அனீஸ் என்ற மாணவன் தமிழ் மொழி மூலம் கல்வி பெறும் பாடசாலையானது, கொழும்பு நகர மத்தியிலமைந்துள்ள சிங்கள, தமிழ் இரு மொழி மூல வகுப்புகளைக் கொண்ட வகை 2 (Type 2) முஸ்லிம் ஆண்கள் பாடசாலையாகும். இப்பாடசாலை ஆறு பிரதான பாதைகளின் முக்கிய சந்தியொன்றுக்கு அருகில், அவற்றுள் ஒரு பிரதான பாதை ஓரத்தில் அமைந்துள்ளது. பாடசாலைச் சுற்று வட்டத்தில் இன்னுமொரு முஸ்லிம் மகளிர் பாடசாலை, ஜும்மாப் பள்ளிவாசல், கிறிஸ்தவ தேவாலயம், பௌத்த விகாரை, இந்துக் கோயில், அநாதையில்லம், பிரபல தனியார் வைத்தியசாலை, பௌத்த, கிறிஸ்தவ பாடசாலைகள் மற்றும் சிறியதொரு சிறுவர் பூங்கா என்பன அமைந்துள்ளன. அத்துடன் பாடசாலைக்கு 300-400 மீற்றர் தொலைவில் புகையிரத நிலையமும் அமைந்துள்ளது. எப்பகுதியிலிருந்தும் பாடசாலையை சென்றடைய இலகுவான போக்குவரத்து வசதிகள் (தனியார், அரச பேருந்து சேவைகள், தொடருந்து சேவை, முச்சக்கர வண்டி முதலியன) உள்ளபோதிலும் எப்போதும் காணப்படும் போக்குவரத்து சந்தடிகள் பாடசாலைக் கருமங்களுக்கு ஓர் இடையூறாக உள்ளதெனக் கொள்ளல் முடியும். மேலும் புகை, தூசி என்பனவற்றால் மாசுற்ற வளிமண்டலம் சூழலில் காணப்படுகிறது.

இப்பாடசாலை 912 சதுர மீற்றர் நிலப்பரப்பிலமைந்துள்ளது. 33 மீற்றர் X 7.5 மீற்றர் அளவுடைய மூன்று மாடிக்கட்டிடமொன்று அதனோடு "L" வடிவில் இணைக்கப்பட்டதான மற்றுமொரு இரு மாடிக்கட்டிடம் (ஒரு தளத்தில் இரு வகுப்பறைகள் வீதம்), ஆய்வுகூடம் மற்றும் தனி வகுப்பறைக் கட்டிடமொன்று உள்ளிட்ட 5 கட்டிடங்கள் இவ்வாறமைந்துள்ளமை பிள்ளை நேய பாடசாலையின் இயல்பு அல்ல; அது மாணவர்கள் சுயாதீனமாக இயங்கி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடையாகவுமுள்ளது.

சராசரியாகப் பார்க்குமிடத்து வகுப்பறை இட ஒதுக்கீடு 1 மாணவருக்கு 1.58 சதுர மீற்றராகவுள்ளது. இது உரிய நியம அளவிற்கு அணித்தாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையில் ஏறக்குறைய 1000 புத்தகங்களையும் சில சஞ்சிகை, புதினப் பத்திரிகை களையும் (சந்தா செலுத்தி வாங்குவன) கொண்ட நூலகமொன்று 2003 ஆம் ஆண்டு முதல் இயங்குகிறது. சிறிய விஞ்ஞான ஆய்வுகூடமொன்றும் குழாய் நீர், மின்சாரம், மலசலகூட வசதிகளும் உள்ளன. இருந்த தொலைபேசி இணைப்பு தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. 2003 இல் ஆரம்பிக்கப்பட்ட நூலகம் தவிர மேற்குறித்த விவரங்கள் 2002 முதல் ஆய்வுக்குரிய முழுக் காலப் பகுதிக்கும் பொருந்துவனவாகும்.

இப்பாடசாலை சிங்கள, தமிழ், முஸ்லிம், மலாய் மக்கள் கலந்து வாழும் பல்லின, பன்மத, பன்மொழிச் சூழலில் காணப்படுகிறது. இப்பாடசாலையில் முஸ்லிம், மலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களைச் சேர்ந்த சிறுவர்களே கல்வி பெறுகின்றனர். அதிக எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் (2002 இல் 332 பேர்) சிங்கள மொழி மூலமும் குறைந்த எண்ணிக்கை கொண்டோர் (2002 இல் 145 பேர்) தமிழ் மொழி மூலமும் கல்வி பெறுகின்றனர். பொதுவாக சிங்கள மொழி மூல வகுப்புக்களில் 30 இற்கு மேற்பட்ட பிள்ளைகளும் தமிழ் மொழி மூல வகுப்புக்களில் குறைந்த எண்ணிக்கை (5-10) பிள்ளைகளும் கல்வி பெறுகின்றனர்.

இப்பிள்ளைகளின் பெற்றோர்கள் அநேகமாக சிங்கள மொழித் தேர்ச்சியுடையோராகவும் தமிழ் மொழி தவிர மலாய், ஆங்கில மொழிகளில் பரிச்சயமுடையோராகவும் காணப்படு கின்றனர். ஆய்வுக்குரிய மாணவனாகிய அனீஸுடைய தாயாரும் சிங்கள, தமிழ், மலாய் மொழிகளில் உரையாடக்கூடியவராகவுள்ளமை அவதானிக்கப்பட்டது. தகப்பன் தமிழ், சிங்கள மொழிகளில் சரளமாக உரையாடக்கூடியவர்.

இப்பாடசாலைப் பிள்ளைகளது பெற்றோர்களில் அநேகமானோர் தாழ்ந்த பொருளாதாரப் பின்னணியுடையோர்களாவர். மிகமிகக் குறைந்த எண்ணிக்கையினரே நிரந்தரத் தொழில்களில் அல்லது உத்தியோகங்களில் இருக்கின்றனர். கூலித்தொழில், அங்காடி வியாபாரம், முச்சக்கர வண்டி ஓட்டுனர் ஆகிய தொழில்களிலேயே பொதுவாக ஈடுபடு கின்றனர். பிள்ளைகளும் தகப்பன்மாருக்கு உதவியாக இத்தொழில்களுக்குச் செல்வதுண்டு. தவிர குதிரைப் பந்தயம், போதைப்பொருள், மதுபானம் என்பவற்றுடன் தொடர்புபடுவோரிலும் அநேகர் உள்ளனர். இவற்றிலும் கூட பிள்ளைகளை ஈடுபடுத்தும் சந்தர்ப்பங்கள் இல்லாம லில்லை. அனீஸின் தகப்பனாரும் அவ்வப்போது அங்காடி வியாபாரங்களில் ஈடுபடுபவராக உள்ளார்.

இப்பாடசாலையில் கற்கும் அநேக பிள்ளைகள் பாடசாலைச் சூழலில் காணப்படும் "தோட்டங்கள்" என அழைக்கப்படும் நெரிசல் மிக்கதும் வசதி குறைந்ததுமான சேரி வீடுகளில் வசிப்போராவர். அனீஸ் என்ற இம்மாணவனது வீடு தொடருந்துப் பாதை வழியாகச் சென்று, வாவிப் (Lake) பக்கம் இறங்கும் பகுதியிலுள்ள சேரியில் பேர வாவிக் கரையில் அமைந்துள்ளது. அதனை வீடு என்று அழைப்பது பொருத்தமற்றது. நான்கு பக்கமும் பலகையினால் மறைக்கப்பட்டிருந்ததுடன், வீட்டின் கூரை பீப்பாய்த் தகடுகளினால் வேயப்பட்டிருந்தது. அதனுள் தான் குடும்ப அலுவல்கள் நடைபெற வேண்டியிருந்ததுடன், வீட்டிலிருந்து வெளியிறங்கியவுடன் குறுகிய அடிப்பாதையில் தான் கால் வைக்க வேண்டியுமுள்ளது. அப்பாதையின் கீழ் கழிவு நீர்க்கான் ஓடுகிறது. பிள்ளைகளின் விளையாட்டு, மற்றும் ஓய்வு நேரம் களிப்புக்கேற்ற வீட்டு முற்றம் அல்லது வேறு தள வசதிகள் காணப்படவில்லை.

அடிப்பாதையின் மறுகரையிலும் இதே மாதிரியான சிறிய குடிசைகளின் நீண்ட வரிசை காணப்படுகிறது. அத்துடன் அனீஸுடைய வீட்டின் ஒரு பக்கப்பலகைச் சுவர் வாவி யுடன் தொட்டுக் கொண்டவாறு அமைந்திருந்தது. இவை அனீஸ் என்ற இப்பிள்ளையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, ஆளுமை வளர்ச்சிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாகக் கொள்ளப் படலாம்.

அனீஸ் போன்ற பிள்ளைகள் மிகவும் நெருக்கமான சூழலில் வாழ்வதனாலும் நெருக்க மாகக் கட்டிடங்களமைந்த பாடசாலை வளவினுள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவதாலும் அவர்களது உடல், உள விருத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது. பழக்க வழக்கங்கள், சொற்பிரயோகங்கள் என்பவற்றின் தரம் சுற்றாடலில் காணப்படும் தரத்தை மேவியதாக அமைந்து விடுகின்றது. ஆயினும் சுற்றாடலில் காணப்படும் தரமோ தாழ்ந்த நிலையி லுள்ளது. எனவே அனீஸ் இத்தகைய செல்வாக்கிற்குட்பட்ட பிள்ளையாகக் காணப்படுகிறார்.

அனீஸுடைய தாயார் மலாய் இனத்தைச் சேர்ந்தவர். தான் ஒரு முஸ்லிம் எனக் கூறுவார். தகப்பன் இந்திய வம்சாவழித் தமிழர். இந்து சமயத்தவர். பின்னர் இஸ்லாம் சமயத்தைத் தழுவியதாகக் கூறினார். எனினும் எந்த சமயத்தையும் ஆழ்ந்து பின்பற்றும் போக்கு இருவரிடத்திலுமே காணப்படவில்லை.

இஸ்லாமியர்களின் சிற்சில ஆசாரங்களும், சடங்கு சம்பிரதாயங்களும் அவர்களிடம் பொதுவாகக் காணப்படுகின்றன. அனீஸ் திருக்குர்ஆன் ஓதக் கற்பிக்கப்படும் "மத்ரசாவு" க்கு அனுப்பப்படுவதுடன் பள்ளிவாசலுக்கும் அவ்வப்போது அனுப்பப்படு கின்றான்.

இந்து சமயத்தவர் சிலர் கருதுவது போல் "காளியம்மன்" தன்னை ஆட்கொள்வதாகவும், அப்போது தான் சுய நினைவிழந்து விடுவதாகவும், காளியம்மன் தனக்கூடாகப் பேசுவதாக வும், அனீஸின் தாயார் கூறினார். தான் இவ்வாறு காளியம்மனை விருவிப்பதற்காக பூஜைப் பொருட்களை ஒழுங்குபடுத்தி, சிலைகளுடன் வைத்திருந்தார். வாவிப் பக்கமாக சிறியதொரு அறையையும், வீடாகப் பாவிக்கும் அறையுடன் இணைந்ததாக அமைத்து, இதற்காக அவ்வறையைப் பயன்படுத்தி வருகின்றார். பல வாடிக்கையாளர்கள் அவரைத் தேடி வருகை தருவதாகவும் அவருக்கூடாக காளியம்மனிடமிருந்து பலன் பெற்றுச் செல்வதாகவும், அதனால் அவருக்குச் சிறிதளவு வருமானம் கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2002 இல் அனீஸுடைய வகுப்பில் 5 பிள்ளைகள் இருந்துள்ளனர். பின்னர் 4 பிள்ளைகள் தொடர்ந்து இருந்து வந்துள்ளனர். 1 ஆம் 2 ஆம் வகுப்புகளில் இருந்தபோது இரண்டு மாடிக் கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் இரண்டாவதாக இருந்த அறை வகுப்பறையாகவிருந்தது. 6m x 6m உடைய இவ்வறையின் இரு பக்கச் சுவர்கள் பாதிக்கு மேல் கம்பி வலையிடப் பட்டிருந்தன. மற்றைய முழுமையான சுவர்களில் ஒன்றில் சீமெந்தினால் கரும்பலகை அமைக்கப்பட்டிருந்தது. காட்சிப் பலகை, பல்வேறு கட்புல சாதனங்கள், தேவையானளவு தளபாடங்கள் காணப்பட்டன. எனினும் வகுப்பறையின் கம்பி வலையிடப்பட்ட சுவரின் பின்னால் பாடசாலை எல்லை வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்சுவர் எழுப்பப்பட்டிருந்ததாலும் வகுப்பறைக்கு முன்பக்கமாக இக்கட்டிடத்தின் அருகிலேயே மற்றுமொரு வகுப்பறைக் கட்டிடத்தின் சுவர் அமைந்து இருந்ததாலும் போதுமான வெளிச்சமும் காற்றோட்டமும் வகுப்பறைக்குக் கிடைக்கவில்லை. இது பல் தர வகுப்பறையாக (Multi Grade) அமைக்கப்பட்டிருந்ததுடன் ஒரு மாணவனுக்கு ஏறத்தாழ 5.8 சதுர மீற்றர் பரப்பு கிடைத்திருந்தது.

மூன்றாம் வகுப்பில் கற்கும்போது L வடிவான அதே கட்டிடத்தின் மற்றைய கிளையின் கீழ்த்தளத்திலிருந்த அறை, பல்தர வகுப்பறையாக அமைந்திருந்தது. இவ்வகுப்பறையிலும் முன்பு போன்றே பல வசதிகள் காணப்பட்ட போதிலும் போதியளவு வெளிச்சமும் காற்றோட்டமும் இல்லாதிருந்தது. வெயில் காலங்களில் அதிக வெக்கையாகவும் இருக்கும்.

4 ஆம் 5 ஆம் வகுப்புகளில் கற்றபோது இதே கட்டிடத்தின் மேல் மாடியிலிருந்த பிரதான மண்டபத்தில் அனீஸுடைய வகுப்பு அமைக்கப்பட்டிருந்தது. இவ்வகுப்பிலும் சுவரில் பதிக்கப்பட்ட கரும்பலகை, கம்பி வலை பாதிச்சுவருக்கு பொருத்தப்பட்ட நிலை, போதுமான தளபாடங்கள் இருந்ததுடன் போதுமான வெளிச்சமும் காற்றோட்டமும் கிடைக் கக்கூடியதாகவுமிருந்தது. எனினும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் போன்ற தேவை களுக்காக இம்மண்டபம் அடிக்கடி பயன்படுத்தப்படுவதால் மாணவர் தற்காலிகமான இடங்களிற்கு கூட்டிச் செல்லப்படுகின்றனர். அத்தகைய நிகழ்ச்சிகளின் பின்னர் மாணவருக் கான பொருட்கள் வைக்கப்பட்டிருந்த ஒழுங்குகள் சீர்குலைந்து விடுவதும், பொருட்கள் சேதமடைவதும், காணாமல் போவதும் உண்டு. இந்நிலைமை 4 ஆம் வகுப்பிலும் 5 ஆம் வகுப்பிலும் கற்கும்போது அனீஸுக்கும் அவனது சக மாணவர்களுக்கும் அவர்களது கற்றலில் பாதிப்பையேற்படுத்தியதெனலாம்.

1 ஆம், 2 ஆம் வகுப்புக்களில் அனீஸ் இருந்தபோது முறைமையான கற்பித்தல் பயிற்சி எதுவும் பெற்றிராத, தொண்டராகச் சேவைபுரியும் முஸ்லிம் யுவதி ஒருவர் ஆசிரியையாகப் பணியாற்றினார். தான் அனீஸுடைய குடும்பப் பின்னணியை நன்கு அறிந்துள்ளதால் அவர் மீது மிகவும் அன்பு செலுத்தி, மிகுந்த கரிசனையுடன் அவரை நன்னெறிப்படுத்தவும், அவருக்குக் கல்வியூட்டவும் முயற்சிகள் மேற்கொண்டதாகவும் அதனால் அனீஸிடம் கணிசமான நேரெண் மாற்றம் ஏற்பட்டதெனவும் அவ்வாசிரியை குறிப்பிட்டார். ஆயினும் ஆராய்ச்சியாளரின் புலக்காட்சிப்படியோ சேகரிக்கப்பட்ட தரவுகளின்படியோ அவ்வாறான மாற்றங்கள் கணிசமாக ஏற்பட்டுள்ளனவென்பதை உறுதி செய்ய முடியவில்லை.

3 ஆம் வகுப்பில் ஒரு சிரேட்ட, பயிற்றப்பட்ட முஸ்லிம் ஆண் ஆசிரியர் அனீஸின் வகுப்பில் கற்பித்துள்ளார். ஆயினும் அவர் மாணவர் செயற்பாடுகள் மூலம் கற்றல் அனுபவங்களை ஏற்பாடு செய்து வழங்குபவராகக் காணப்படவில்லை. சொல்லிக் கொடுத்து விளங்கப்படுத்தும் போதனைமுறைக் கற்பித்தல் மேற்கொள்பவராகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கப்பட் டுள்ளார். எனினும், தான் உயர்ந்த கற்பித்தல் பணியையாற்றுவது போன்ற பாவனை அவரில் காணப்பட்டது.

4 ஆம் வகுப்பிலிருந்தபோது மலே இனத்தைச் சேர்ந்த பல வருட அனுபவமுள்ள பயிற்றப்பட்ட பெண் ஆசிரியை அனீஸின் வகுப்பில் கற்பித்தார். எல்லாக் குறைகளும் உள்ளவர்களாகப் பிள்ளைகளை நோக்கும் போக்கும், இவர்களைத் திருத்தவே முடியாது என்ற கருத்தும் இவ்வாசிரியையிடத்தில் பதிவாகியிருந்ததை அவரது பேச்சுக்களிலிருந்தே ஊகிக்க முடிந்தது. பிள்ளைகளை அதிலும் குறிப்பாக அனீஸ் என்ற ஆய்வுக்குரிய பிள்ளையை கடினமாக வைதும், தண்டனைகள் வழங்கியும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சித்துள்ளார் என்பதும் தெளிவாகியது. உதாரணமாக வகுப்பில் அனீஸை ஏனைய பிள்ளைகளிடமிருந்து தனிமைப்படுத்தி வேறாக ஒரு மேசை, கதிரை வழங்கி அமரச் செய்தமையைக் குறிப்பிடலாம்.

தொடர்ந்தும் பல்தர வகுப்பாகவிருந்த போதிலும் 5 ஆம் வகுப்பில் அனீஸுடைய வகுப்பில் பயிற்றப்பட்ட தமிழ்ப் பெண் ஆசிரியை ஒருவர் பொறுப்பேற்றார். இதுவரை கற்பித்த ஆசிரியர்களை விட இவர் சற்று வித்தியாசமானவராகக் காணப்பட்டார். புதிய கற்பித்தல் நுட்பங்களை குறிப்பாக மாணவர் செயற்பாடுகளுக்கு இடமளித்து ஓரளவுக்கேனும் பயன் படுத்துபவராக இவ்வாசிரியர் இருந்துள்ளார். மேலும் 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கு இப்பிள்ளைகளைத் தயார்படுத்த வேண்டுமென்பதிலும் ஓரளவு ஆர்வம் காட்டி வந்துள்ளார். இப்பரீட்சையில் அனீஸ் 71 புள்ளிகளை பெற்றமை கூட, அனீஸுடைய கூட்டு மொத்தப் பின்புலத்தின் அடிப்படையில் நோக்கும்போது ஒரு பெரிய சாதனையென்றே அவ்வாசிரியை கருதினார். இவர் பாடசாலை விட்ட பிறகும், வார இறுதி நாட்களிலும் இப்பிள்ளைகளுக்கு வகுப்புகள் நடாத்தியதாகவும் குறிப்பிட்டார்.

இத்தகையதொரு பின்புலத்தில் வாழ்ந்து வரும் அனீஸ் கற்றல் நடவடிக்கைகளில் பங்கேற்கும் பாங்கினை அவர் பாடசாலைக்கு வருகை தராமலிருக்கும் நாட்களின் எண்ணிக்கையிலிருந்து புரிந்து கொள்ளமுடியும். வருடாவருடம் 29 நாட்கள், 32 நாட்கள், 33 நாட்களென அதிக எண்ணிக்கையான நாட்களில் பாடசாலைக்கு வருகை தராமலிருந்துள்ளார். பல்வலி, சளி, காய்ச்சல் போன்ற சுகவீனங்கள் வருகை தராமைக்கான காரணங்களாகப் பெரும் பாலும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை தவிர பாடசாலையில் பாட போதனை சீராக நடக்காமை, தகப்பன் அங்காடி வியாபாரங்களில் ஈடுபடும்போது அவருக்குத் துணையாக அவருடன் செல்லல் என்பனவும் வருகை தராமைக்குக் காரணங்களாக இருந்துள்ளன. மற்றப் பிள்ளைகளுடன் சண்டையிட்டு அதனால் காயப்படுவதன் காரணமாகவும், வருகை தராமலிருந்துள்ளார். தான் விரும்பிய நாட்களில் பாடசாலைக்கு வருகை தராமலிருந்து விட்டுப் பின்னர் ஏதேனுமொரு காரணத்தைச் சோடித்துக் கொள்ளும் போக்கும் அவரிடம் காணப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையிலிருந்து உரிய நேரத்துக்கு முன்னர் வெளியேறிச் சென்றுவிட வேண்டும் என்ற விருப்பு அவ்வப்போது வெளிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக ஆசிரியர்களின் கண்காணிப்பின் கீழ் தொடர்ந்து இருக்க வேண்டிய சந்தர்ப்பங்களிலும், கூடி விளையாட ஏனைய பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் அனீஸ் இவ்விருப்பைக் காட்டியுள்ளார்.

2002 ஆம் ஆண்டு முதற்கொண்டே பாடசாலைக்கு நேர காலத்துடன் வருகை தரக்கூடிய வராக அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். பாடசாலை நாட்களில் நேரகாலத்துடன் துயிலெழுந்து தாமாகவே ஆயத்தமாகிப் பாடசாலைக்குச் செல்வதற்குத் தயாராகி விடுவதாகப் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். அவர் பாடசாலைக்குச் செல்லும் வழியில் ஏனைய நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று அவர்கள் தயாராகி வரும் வரை நின்று அவர்களுடன் பாடசாலைக்குச் செல்லும் பழக்கம் இருந்துள்ளதாக சக மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அனீஸ"ம் அவருடன் வரும் ஏனைய மாணவர்களும் தாமதமாகி வருகை தருதல் அரிதெனவும், தாமதிக்க நேர்ந்தால் பாடசாலைக்கு அத்தினம் வருகை தராது வீட்டில் தங்கி விடுவதாகவும், ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். தாமதித்து வருகை தரல் பற்றிய இந்தப் போக்குகள் தொடர்ந்து 5 ஆம் வகுப்பு வரை அனீஸிடம் காணப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தன்னிச்சையாகச் செயற்படுவதில் ஆர்வமுள்ள இப்பிள்ளை, அவ்வாறு செயற்படுவதற்கொரு சந்தர்ப்பமாக பாடசாலை தொடங்கும் வரையுள்ள நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள நாடுவது, அவர் நேர காலத்துடன் பாடசாலைக்கு வருவதற்கான ஒரு தூண்டியாகக் கொள்ளப்படலாம்.

அனீஸ் சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவரெனினும் மெலிந்த, பலவீனமான தோற்றத்தில் காணப்படுவார். வீட்டிலிருந்து காலையுணவு கொண்டு வருபவராகவும், அதிகமாக ரொட்டி, முட்டை, நூடில்ஸ் என்பனவாக இவை இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இடைவேளை யின்போது சிற்றுண்டிச்சாலையில் நொறுக்குத் தீனிகள், ஐஸ் கிறீம் முதலானவற்றை வாங்கியுண்பவராகவும் காணப்பட்டுள்ளார். 2004 ஆம் ஆண்டில் யூன் மாதம் முதல் திசம்பர் மாதம் வரை 19.7kg - 19.8kg என்ற வீச்சுக்குள் இவரது நிறை மாறிமாறியிருந்த தாக அவதானிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் இம்மாணவன் 117.4cm என்ற மாறாத உயரமுடையவராகவும் இருந்துள்ளார். சக மாணவர்களும் நிறை, உயரம் என்பவற்றைப் பொறுத்தவரை இவரோடு ஒத்திருக்கக் காணப்பட்டனர்.

மேற்குறித்த பின்னணிகளைக் கொண்ட அனீஸ் சிறந்த பழக்க வழக்கங்களைக் கொண்ட வராகக் காணப்படவில்லை. உதாரணமாக 2002 இன் பிற்பகுதியில் கூட உணவுக்கு முன் கைகளைக் கழுவிச் சுத்தம் செய்தல், உணவு முழுவதையும் உண்ணல், சுற்றாடலை சுத்தமாகப் பேணுதல் போன்ற நற்பழக்கங்கள் அனீஸிடம் விருத்தியாகியிருக்கவில்லை. அவ்வாறே தலை, நகம், பல் ஆகியவற்றைச் சுத்தமாகப் பேணுதல், மலசல கூடத்தைச் சரியாகப் பயன்படுத்தல், ஆடையணிகளைச் சுத்தமாகவும் அழகாகவும் பேணுதல் போன்ற நற்பழக்கங்களும் அவரிடத்தில் விருத்தியாகியிருக்கவில்லை. அடுத்தடுத்த வருடங்களிலும் இதே போக்கே இப்பிள்ளையில் காணப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் குறும்புகள் செய்பவராகவும், ஏனைய பிள்ளைகளுடன் சண்டை, சச்சரவுகளை யேற்படுத்திக் கொள்பவராகவும், மற்றவர்களை தனக்குத் தேவையானவாறு நடக்கும்படி வலுக்கட்டாயப்படுத்துபவராகவும் காணப்பட்டுள்ளார். தனது புத்தகங்களைக் கொண்டு

வராத நாளில் மற்றொருவருடைய புத்தகத்தைப் பலாத்காரமாகப் பறித்துக்கொண்டு பயிற்சிகளைச் செய்ய முயற்சிப்பதும் தான் செய்து முடிந்த பின்னர் உரிய மாணவனிடம் புத்தகத்தைக் கொடுப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களிடம் இவர் பற்றிய முறைப்பாடுகள் ஏதும் செய்யப்பட்டால் பொய்யாகவோ மெய்யாகவோ ஏதேனும் விளக்கம் கூறி தப்பித்துக் கொள்ள முயற்சிக்கும் போக்கு இவரிடம் அவதானிக்கப்பட்டுள்ளது. மற்றவர்களைப் பயமுறுத்தித் தனது காரியங்களைச் செய்து கொள்ள எத்தனிப்பது, அவர் மீது தாயாரது செயற்பாடுகளின் செல்வாக்கினால் ஏற்பட்டிருத்தல் முடியும். ஏனெனில் தாயார் அனீஸைப் பயமுறுத்துவது, கண்டிப்பது, அடிப்பது என பல நடவடிக்கைகளில் எப்போதும் ஈடுபடுவார்.

சமயப் பழக்க வழக்கங்களை எடு:த்துக் கொண்டாலும் கூட அனீஸிடம் அவை சிறப்பாக விருத்தியுற்றுக் காணப்படவில்லை. சமயச் செயற்பாடுகள், கிரியைகளில் பங்கு கொள் வதற்கான விருப்பு மாறி மாறிக் கூடிக் குறைந்து கொண்டிருந்ததேயன்றி, நிலையானதாக இருக்கவில்லை. ஆராய்ச்சியாளரின் புலக்காட்சிக்கமைய பெற்றோர்கள் தாம் பின்பற்றும் சமயத்திலும் சமயக் கிரியைகளிலும் முறையாகத் தொடர்ந்து ஈடுபடுவதில்லை என்பதன் பிரதிபலிப்பாகவே அனீஸ் சமயக்கிரியைகளில் உறுதியின்மையுடன் ஈடுபடுவதைக் குறிப் பிடலாம்.

அவர் சாதாரணமாகப் பிரயோகிக்கும் வார்த்தைகள் அவர் வாழும் சூழலின் பாதிப்பை நன்கு பிரதிபலிக்கின்றன. இழிசொற்கள், இழிவான வழக்குகள் அவர் பேச்சில் பயன் படுத்துபவராகக் காணப்பட்டுள்ளார். ஆயினும் 4 ஆம், 5 ஆம் வகுப்புக்களிலிருந்தபோது அவை இழிவான, பயன்படுத்தக்கூடாத சொற்களும் வழக்குகளும் என்ற உணர்வுடனேயே அவற்றைப் பிரயோகித்துள்ளார். தான் அவற்றை மொழிவதை ஆசிரியர்கள் கேட்டு விடக் கூடாது என்ற கவனம் அவரிடமிருந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் முதலே பேச்சு தொடர்பான தேர்ச்சிகளை நன்றாக அடையப் பெற்றிருந்த அனீஸ் முதலாம் வகுப்பிலிருந்தபோது இடையறாது கதைப்பவராகவும், 2 ஆம், 3 ஆம் வகுப்பு களில் இருந்தபோது தேவையானவற்றைத் தெரிவுசெய்து கதைப்பவராகவும் காணப்பட் டுள்ளார். 2 ஆம் வகுப்பிலிருக்கும்போது சம்பவமொன்றை விவரித்துக் கதைக்கும் ஆற்றல் அவரிடம் காணப்பட்டுள்ளது. ஆக்கபூர்வமாகக் கதைகளை உருவாக்கி, உருவாக்கிய கதைகளைச் சொல்லக்கூடிய தேர்ச்சியும் அடையப்பெற்றிருந்தார். 2004, 2005 ஆம் ஆண்டுகளில் அவரிடம் வழங்கப்படும் சிறிய செய்தியொன்றை, திரிபடையாது அச்சொட்டாகக் கூறும் ஆற்றல் அவரிடம் காணப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முன் - கல்வி பெற்றவராக இருந்தும் 2002 பெப்ரவரி மாதத்தில் ''அ'' என்ற அரிச்சுவடியின் முதலாவது எழுத்தை மாத்திரமே அனீஸினால் அடையாளம் காண முடிந்தது. ஆயினும் அடையாளங்கண்டு வாசிக்கக்கூடிய எழுத்துக்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து, யூலை மாதமாகும்போது மரம், பத்து, படம் போன்ற எளிய சொற்களை வாசிக்கக்கூடிய தேர்ச்சியைப் பெற்றும், ஆண்டிறுதியாகும்போது வருடத்துக் குரிய வாசித்தல் தேர்ச்சித் திறன்களை அடையப் பெற்றுமிருந்தார். எனினும் இத்தேர்ச்சி களில் உறுதித்தன்மை குறைவாகவேயிருந்தது. 2003 இலும் 2004 இலும் தொடர்ந்து வாசிக்கும் தேர்ச்சிகள் அதிகரித்து 2004 இல் கொடுக்கப்படும் எந்த வாக்கியத்தையும் அவரால் வாசிக்கக்கூடியதாகவிருந்தது. ஆயினும் வசனங்களின் கருத்து தெளிவாகும் வகையில் சொற்கள், சொற்கூட்டங்களை வேறாக்கியும் நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும், சொற்களைத் தொகுதியாக்க வேண்டிய இடங்களில் தொகுதியாக்கியும் வாசிக்கும் தேர்ச்சி அனீஸிடம் காணப்படவில்லை. மேலும் எழுத்துக்களை உச்சரிக்கும் போது லகர-ளகர-ழகர, ரகர-றகர போன்ற வல்லின மெல்லின பேதங்களைச் சரியாக வெளிக்காட்ட முடியவில்லை. அத்துடன் அவரது வீட்டுச் சூழலில் பயன்படுத்தப்படும் வழக்குகளைப் பிரதிபலிப்பனவாகவும் அவரது உச்சரிப்புகள் காணப்பட்டன. இதேபோக்கு 2005 ஆம், 2006 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து காணப்பட்டுள்ளது.

முதலாம் வகுப்பின் மூன்றாம் தவணையாகும் போது பென்சிலை முறையாகப் பிடித்து எழுதும் தேர்ச்சியை அனீஸ் அடையப் பெற்றிருந்தார். அக்கால கட்டத்தில் அவர் தன்னிச்சையாக எதனையேனும் எழுதுவதிலும் வரைவதிலும் நேரத்தைச் செலவிடுவதாக வீட்டிலும் பாடசாலையிலும் அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். ஆயினும் எல்லா எழுத்துக்களையும் இதுவரை அவரால் சரியாக எழுத முடியவில்லை. 2002 ஆம் வருடம் ஒக்டோபர் மாதமளவில் ஒரு சொல்லைப் பார்த்த பின் அதனை எழுதக்கூடியவராக அனீஸ் காணப்பட்டுள்ளார். அப்போது சொல்லின் எழுத்துக்களை ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து எழுதும் தேவையிருக்கவில்லை. 2003 ஆம் ஆண்டில் இரண்டாம் தவணையில் 5-6 சொற்களுடன் கூடிய எளிய வசனங்களை அமைக்கவும் அவற்றை யெழுதவும் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். எனினும் எழுத்துப்பிழைகள் மற்றும் வசனத்தில் சொற்கள் அமைய வேண்டிய ஒழுங்குவரிசையில் பிழைகள் விடக்கூடியவராக அவர் காணப்பட்டுள்ளார். தொடர்ந்து விருத்தியாகிய எழுத்துத் தேர்ச்சிகள் 4 ஆம், 5 ஆம் வகுப்புகளுக்கு வந்த பின்னரும் கூட அவரில் உறுதியாகக் காணப்படாமை சுட்டிக் காட்டப்பட வேண்டிய அமிசமாகும்.

2002 ஆம் ஆண்டிலிருந்த செவிமடுத்தல் தொடர்பான தேர்ச்சிகள் அனீஸிடம் தொடர்ந்து விருத்தி பெற்றுள்ளன. 2003 இல் வினாக்களுக்கு வாய்மொழி மூலம் சரியான துலங்கல் காட்டக்கூடியவராக இருந்துள்ள அனீஸ் சிந்தித்துத் துலங்கல் காட்டக்கூடியவராகவும் ஆரம்பம் முதலே இருந்து வந்துள்ளார். 2004 இல் குழுவிலும், தனியாகவும் செவிமடுத்துத் துலங்கக்கூடியவராகக் காணப்பட்ட அவர் 2005 ஆம், 2006 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து அவ்வாறே காணப்பட்டுள்ளார். செவிமடுத்தல் தேர்ச்சிகள் அவ்வப்போது காணப்பட்ட போதிலும், அவை இம்மாணவனிடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாகக் காணப்படவில்லை. செவிமடுத்தல் திறன்கள் காணப்படினும் அவரது கவனத்தை ஈர்த்துச் செவிமடுக்கச் செய்யும் தகவுடைய செயற்பாடுகள் அரிதாகவே நிகழ்த்தப்பட்டுள்ளமையும் அதனால் ஆசிரியர்கள் வழங்கும் விரிவுரைகள் போன்றவற்றுக்குத் தொடர்ந்து உறுதியான செவிமடுத்தல் அனீஸிடம் காணப் படவில்லையென்பதும் ஆய்வாளரின் அகப்பார்வையாகும்.

ஆரம்ப காலத்திலிருந்தே சித்திரங்கள் தீட்டுவதில் ஆர்வமுடையவராக அனீஸ் காணப் பட்டுள்ளார். தனது தகப்பனுடைய உருவப்படம் எனக் கூறிக் கொண்டு 2002 யூன் மாதத்திலேயே உருவமொன்றை வரைந்துள்ளார். மண்வெட்டி, பூ போன்ற பொருட்களின் உருவங்களை வரைவதற்கும் முயன்றுள்ளார். அவரது ஆக்கத்தின் பெறுதி (End product) சிறப்பாக அமைந்திருக்கவில்லையென்பது உண்மையே. மூடியவுருக்களை அவற்றின் எல்லைக்குள் நிறந்தீட்டும் ஆற்றல் அவரிடம் காணப்பட்டுள்ளது. 2004 இலும் பாடசாலைக்கு வராதபோது வீட்டில் தன்னிச்சையாக ஏதேனும் வரைந்து கொண்டிருப்பவராக அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். ஆயினும் 2005 இல் இத்தன்மை குறைவாகவே காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அனீஸ் சித்திரம் தீட்டுவதற்கு இயல்பாகக் காட்டிய ஆர்வம் போசிக்கப்பட்டு அவரது தேர்ச்சித் திறன்கள் போதுமானளவு விருத்தியடைய வாய்ப்புக் கிட்டவில்லையென்று கூறுதல் முடியும்.

அனீஸினது கணிதம் தொடர்பிலான தேர்ச்சிகள் முதலாம் வகுப்பிலிருந்து படிப்படியாக விருத்தியடைந்து வந்துள்ளன. எண்கணிதச் செய்கைகள் தொடர்பான தேர்ச்சிகள் 2002 ஆம், 2003 ஆம் ஆண்டுகளில் படிப்படியாக விருத்தியடைந்துள்ளன. 2004 இல் பின்னங்கள் தொடர்பிலான தேர்ச்சிகளும் விருத்தியடைந்துள்ளன. நாணயங்களைப் பிரயோகித்தல், தளக் கேத்திர கணிதவுருவங்களை அடையாளங் காணுதல் மற்றும் வரைபுருக்களில் கொடுக்கப்படும் தரவுகளை அறிந்து கொள்ளல் ஆகிய திறன்கள் விருத்தியடைந்திருந்தன. அவ்வாறிருப்பினும், இங்கும் அவரிடம் விருத்தியடைந்திருந்த தேர்ச்சிகள் உறுதியாகக் காணப்படாமை குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக 2004 இன் முதலாம் தவணையிலேயே அவரால் 1000 இலும் குறைவான இரண்டு எண்களைக் கூட்டவும், பெரிய எண்ணிலிருந்து சிறியதைக் கழிக்கவும் முடிந்தது. ஆயினும் 2005 இலும் கூட அவ்வாறான கூட்டல், கழித்தல்களைப் பிழையாகச் செய்யும் சந்தர்ப்பங்களுமிருந்துள்ளன.

2002 இல் ஆங்கில மொழியில் எவ்வித தேர்ச்சியும் பெற்றிராத அனீஸ் 2003 இல் ஆங்கிலம் கற்பதற்கெனப் பிரத்தியேக வகுப்புக்கு அனுப்பப்பட்டுள்ளார். 4 ஆம், 5 ஆம் வகுப்புக்களில் இருந்தபோது அவருடைய ஆங்கில எழுத்துக்கள் சீராக அமைந்திருந்தன.

விளையாட்டுக்களில் ஆர்வமுடன் ஈடுபடும் ஒரு பிள்ளையாக ஆரம்ப முதலே அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். அப்போது ஏனைய பிள்ளைகளுக்கு உதவியாகவும், அவர் களுடன் இணைந்தும் விளையாடக்கூடிய தேர்ச்சிகள் அனீஸிடம் தொடர்ந்து காணப்பட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளன. அதேவேளை தலைமைத்துவத்துக்கு கட்டுப்படல், வெற்றி தோல்விகளுக்கு முகங்கொடுத்தல் போன்ற திறன்களும் காணப்பட்டுள்ளன. ஆசிரியரது அறிவுறுத்துரை களைப் பின்பற்றி விளையாட்டில் ஈடுபடக்கூடிய தேர்ச்சியும் காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஆசிரியரது கண்காணிப்புக்கு வெளியில் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் ஏனைய பிள்ளைகளுடன் பிணக்குகளை அடிக்கடி ஏற்படுத்திக் கொள்பவராகக் காணப்பட்டுள்ளதை சக மாணவர்கள், ஆசிரியர் மற்றும் அனீஸின் பெற்றோர்கள் உறுதி செய்துள்ளனர். 2004 இல் கோழிச்சண்டை விளையாட்டில் சேவல்களை ஈடுபடுத்தியதில் குடும்பங்களுக் கிடையில் சண்டை மூளும் அளவுக்கு அனீஸுடைய பிரச்சினை பெரிதாகிப் போன சந்தர்ப்பம் குறிப்பாகச் சுட்டிக் காட்டத்தக்கதாகும். 2004 இல் அனீஸை விடப் பெரியவர்களுடன் தொடருந்துப் பாதையிலே கோலிக்குண்டு விளையாட்டில் ஈடுபடுபவராகக் காணப்பட்டுள்ளார். ஆசிரியர்களது கண்காணிப்பின் கீழ் நடைபெறும் விளையாட்டுக்களிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்காது தவிர்ந்து கொள்வதற்கு அவ்வப்போது முயன்றுள்ளார். விளையாட்டுத் திடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது இடைநடுவில் குழுவிலிருந்தகன்று ஆசிரியருக்கும் தெரியாமல் வீடு சென்றுவிடும் போக்கும் அவரில் காணப்பட்டுள்ளது.

2006 இல் தொலைக்காட்சி மற்றும் வீடியோக்கள் பார்ப்பதிலும் ஈடுபட்டுள்ளார். குறிப்பாக மல்யுத்த (Wrestling) வீடியோக்களை வாரம்தோறும் ஆர்வமாகப் பார்ப்பதாக அவரது தாயார் குறிப்பிட்டிருந்தார்.

ஆக்கத்திறமையுள்ள பிள்ளையாக அனீஸ் காணப்பட்டபோதிலும் நெறிப்படுத்தி ஆக்க வேலைகளில் முறையாக ஈடுபடுத்தும் வீட்டுச்சூழல் இல்லாத நிலையில் அத்திறன்கள் வெளிப்பட்டுப் பிரகாசிக்கத் தவறியுள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்படல் வேண்டும். 2003 இலும் 2004, 2006 களிலும் ஒரு சில ஆக்கங்களைச் செய்திட பாடசாலையில் சந்தர்ப்பங் கிடைத்தபோதிலும் ஆக்க முயற்சிகளுக்கு வழிகாட்டல், நெறிப்படுத்தல், சந்தர்ப்பம் வழங்கல் ஆகியன பாடசாலையிலும் கூட குறைந்த அளவிலேயே இப்பிள்ளைக்குக் கிட்டியுள்ளது.

மாணவனது வீட்டுச் சூழலின் பின்புலம் அவரது கற்றல் செயற்பாடுகளுக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் நேரெண் பங்களிப்புச் செய்யும் வகையில் அமைந்திருக்கவில்லை. அது போலவே ஒரு தனியாள் என்ற வகையில் இம்மாணவனை அருகிலிருந்து கண்காணித்து தக்க முறையில் வழிகாட்டும் சூழல் பாடசாலையிலும் கிடைக்கவில்லை. இவ்விரு முக்கிய காரணங்களினாலும் இம்மாணவனது அடைவு பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டு விட்டதாகவும் சிறந்த ஆளுமைப் பண்புகள் விருத்தியடையாமைக்கும் விரும்பத்தகாத பண்புக்கூறுகளை விருத்தியாக்கிக் கொண்டமைக்கும் இவை உதவி விட்டதாகவும் கருத லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இத்தகைய பின்புலத்திலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பராமரிப்பது தொடர்பிலும் அவர்களுக்கு வழிகாட்டுவது தொடர்பிலும் தொடர்ச்சியாகத் திசைப்படுத்தப் படுவதற்கேற்ற அமைப்புகள் பாடசாலையில் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

அதுபோலவே பிள்ளைகள் பற்றியும் தாம் ஆற்றும் பணி பற்றியும் நேர்க்கணிய மனப்பாங்கு ஏற்படும் வகையிலான பயிற்சி ஆரம்ப வகுப்புகளின் ஆசிரியர்களுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

ஒரு மாணவர் குழுவுக்கு வாய்க்கும் ஆசிரியரிடம் குறைபாடுகளிருப்பின் அவற்றின் காரணமாக ஆரம்ப நிலைக்கல்வி பெறும் மாணவர்கள் பாதிப்புக்குள்ளானால், அது அவர்களது வாழ்க்கை பூராகவும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதனைத் தவிர்ப்பதற்காக ஒரு வகுப்பில் குறைந்தது இரண்டு ஆசிரியர்களாதல் பணியாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுதல் மிகவும் பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

பிள்ளையின் விருத்திக் கோலங்களை இனங்காண்பதற்கு, அளவாய்வுகள் மற்றும் குறுக்கு வெட்டு ஆய்வுகளிலும் பார்க்க நெட்டாங்கு ஆய்வுகளே பயன்மிக்கவன. அவ்வாய்வுகளின் போது ஒரு மாதிரியின் மூலமும் குறுக்குவெட்டு ஆய்வுகளின் போது சில மாதிரிகளின் மூலமும் சேரிக்கும் தரவுகளைக் கொண்டு, தொடர்ச்சியாக விருத்தியடையும் உயிரியாகிய பிள்ளை தொடர்பான வரையறைப்பட்ட முடிவுகளையே எடுக்கலாம். வளர்ச்சிடையும் ஓர் உயிரியாகிய பிள்ளையின் விருத்திக் கோலங்களைப் பற்றி நெட்டாங்கு ஆய்வுகளின் மூலமே நம்பகரமான வகையிலும் வலுவான வகையிலும் முடிவுகளை மேற்கொள்ளலாம். பிள்ளையின் அறிவாற்றல் விருத்தி தொடர்பான ஜீன் பியஷே இனது கண்டறிகைகளின் வலுவான தன்மைக்கு, ஏனைய காரணிகளுக்கு மேலதிகமாக செல்வாக்குச் செலுத்திய காரணி, சிறு பிள்ளைகள் தொடர்பாக நெருக்கமான தொடர்ச்சியான அவதானிப்பு மூலம் தகவல் சேகரிப்பதற்காக நெட்டாங்கு ஆய்வு முறையைப் பயன்படுத்தியமையாகும். எனினும், பெருந்தொகையான பிள்ளைகள் தொடர்பான தொடரச்சியாக தரவு சேகரித்து, அத்தரவுகளைப் பகுத்தாய்ந்து விருத்திக் கோலங்களை இனங்காண்பதற்குத் தேவையான சக்தி, தனியாள்களிலும் பார்க்க தேசிய மட்ட கல்வி நிறுவனங்களுக்கும், பல்கலைக்கழகங்களுக்குமே உண்டு. இதற்கான ஒரு நல்ல உதாரணம், தேசிய கல்வி நிறுவக ஆராய்ச்சி அபிவிருத்தித் துறையினால் நடத்தப்பட்ட "இலங்கைப் பிள்ளையைப் புரிந்து கொள்ளல் : 2002 இல் அரச பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்ந்த பிள்ளைகள் தொடர்பான நெட்டாங்கு ஆய்வு 2002 – 2006" ஆகும்.

1985இன் 28ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகத்தின் குறிக்கோள்களுள் ஒன்று, கல்வி அபிவிருத்திக்கான ஆராய்ச்சிகளை தொடங்குதலும், மேம்படுத்தலும் நடத்தலும் ஆகும். இக்குறிக்கோள்களை முன்வைக்கும் வகையில் 2002இல் ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகள், கல்வியில் காட்டும் ஈடுபாட்டையும், அவர்களது தேர்ச்சிகள் விருத்தியடையும் விதத்தையும் இனங்காண்பதற்காக இந்நெட்டாங்கு ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக இலங்கைப் பாடசாலைகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் 41 பாடசாலைகளில் 43 முதலாந்தர வகுப்புக்களில் 2002இல் சேர்ந்த மாணவ-மாணவியர் 1201 பேரை உள்ளடக்கிய மாதிரியொன்று தொடர்ச்சியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அவர்களுள் 43 மாணவர்கள் தொடர்பாக நெட்டாங்குத் தனியாள் ஆய்வு நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நெட்டாங்கு ஆராய்ச்சியின் மூலம் இனங்காணப்படும் ஆரம்பப்பாடசாலைப் பிள்ளையின் விருத்தி பற்றிய கோலங்களை கல்விக் கொள்கை தயாரிப்பதற்கு தேசிய கல்வி நிறுவகத்துக்கும் தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கும், கல்வி அமைச்சுக்கும் கோடி காட்டல்கள் வழங்கும்.

நெட்டாங்கு ஆய்வொன்று, வெற்றி பெறுவதற்கு அதனுடன் தொடர்புடைய சகலரதும் தொடர்ச்சியான ஆர்வமும், அர்ப்பணிப்பும் இன்றியமையாத காரணிகளாகும். எனவே தேசிய கல்வி நிறுவக முன்னையநாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜீ.பி.குணவர்தன அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆராய்ச்சிக்கு பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்த, ஏறத்தாழ இருநூறு பேரை உள்ளடக்கிய வளவாளர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள், கல்வி சாரா பணியணியினர் ஆகியோருக்கு எனது நன்றி உரித்தாகும். ஆராய்ச்சிக்குத் தேவையான நிதி அனுசரணை வழங்கிய யுனிசெப் நிறுவகத்துக்கும், அதன் வதிவுப் பிரதிநிதியாக இருந்த திரு.டெட் சைபான் அவர்களுக்கும், நிகழ்ச்சித் திட்ட அதிகாரிகளான திருமதி ஹிரிந்தி விஜேமான்ன, திருமதி பத்மினி ரணவீர ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

2010.09.03

*கலாநிதி உ்பாலி எம்.சேதர*
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

**இலங்கைப் பிள்ளையைப் புரிந்துகொள்ளல்.**

2002ஆம் வருடத்தில் அரச பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்ந்த மாணவ மாணவியர் பற்றிய நெட்டாங்கு ஆய்வில் ஐந்து வருடங்கள் தொடர்ந்து கற்கை மேற்கொள்வதற்கென 1000 மாணவ மாணவியரைக் கொண்ட மாதிரி தெரிவு செய்யப்பட்டது. ஆரம்பக் கல்வி செயற்படும் மூன்று பிரதான கட்டங்களுக்குமுற்படும் ஐந்து வகுப்புக்களிலும் மாதிரியிலிருந்த பிள்ளைகளின் விருத்தி அல்லது மாறாத பண்புக்கூறுகள் விமர்சன ரீதியாக நோக்கப்பட்டன. இதற்கென இரண்டு பிரதான கருப்பொருள்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டன.

- ஆரம்பக்கல்வியில் இலங்கைப் பிள்ளைகளின் பங்கேற்புக் கோலம்

  இக்கருப்பொருளின் கீழ், பாடசாலைக்குப் பிள்ளைகளது நுழைவின் கோலம், பாடசாலைக்கு வருகை தரும் கோலம், தாமதித்து வருகை தரும் கோலம், பாடசாலை விட்டு விலகும் கோலம் என்பனவும் அவர்கள் பாடசாலைக் கலாசாரம், வகுப்பறைக் கலாசாரம், பாடச் செயற்பாடுகள், இணைப்பாடச் செயற்பாடுகள் ஆகியவற்றில் பங்கேற்கும் கோலங்களும் கற்கைக்கு உட்படுத்தப்பட்டன.

- இலங்கைப் பிள்ளைகளின் தேர்ச்சி விருத்திக் கோலம்

  இக்கருப்பொருளின் கீழ் வாசித்தல், எழுதுதல், பேசுதல், செவியேற்றல் ஆகிய மொழித் திறன்கள் பிள்ளைகளின் விருத்தியடையும் பாங்கும் கணிதம், இரண்டாம் மொழி, ஆக்கச் செயற்பாடு, அழகியற் செயற்பாடுகள் (சித்திரம்), விளையாட்டு, சமயமும் ஒழுக்க விழுமியங்களும் ஆகிய புலங்களில் பிள்ளைகளின் தேர்ச்சி விருத்தியடையும் பாங்கும் கற்கைக்கு உட்படுத்தப்பட்டன.

  எழுமாற்று படை கொண்ட (Random Stratified), நோக்கு (Purposive) மாதிரியாக்கல் முறைகளின் கலப்புடன் கூடிய முறையொன்றால் இலங்கையின் 41 பாடசாலைகளின் 43 வகுப்புகள் தெரிவு செய்யப்பட்டன. ஆய்வின் தொடக்கத்திலேயே மாதிரியின் மாணவர் தொகையை 1000 ஆக வரையறுத்துக் கொள்ளப்பட்டதுடன், அந்த 1000 மாணவர்கள் பற்றிய போதுமான கற்கை மேற்கொள்வதே ஆய்வின் பிரதான குவிபொருளாகியது. 41 பாடசாலைகளில் 43 வகுப்புக்களிலும் ஒருவர் வீதம் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 43 மாணவர்களை ஐந்து வருடங்கள் அவதானித்து, நேர்காணலூடாகவும் ஆவணப்பதிவுகளைப் பகுத்துரைத்தல் மூலமாகவும் செய்யப்பட்ட தனியாள் ஆய்வுகளே இவ்வாராய்ச்சியின் குவியமாகவிருத்த பிரிவாகும். ஆராய்ச்சிச் செயன்முறையில் கீழ்வரும் படிமுறைகள் அடங்கியிருக்கின்றன.

  - பாடசாலை, வகுப்பறை மாதிரிகளைத் தெரிவு செய்தல்.
  - 16 ஆராய்ச்சிக் கருவிகளை விருத்தி செய்தலும், 5 வருடங்களிலும் பங்கேற்றல் கோலம், தேர்ச்சி விருத்திக் கோலம் ஆகியவற்றை அளவீடு செய்வதற்கேற்றவாறு தேவையான மாற்றங்களுடன் அவற்றை மீளத் தயாரித்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாதிரிக்குட்படும் வகுப்பறைகளில் தரவு சேகரிப்பதற்காக மூன்று பிரதான கட்டங்களுக்குமுரிய அவ்வவ் வகுப்பாசிரியர்களை அறிவுறுத்தலும், ஆராய்ச்சி தொடர்பிலான அவர்களது தேர்ச்சியை மேம்படுத்தலும்.
- ஆசிரியர்களுக்கான ஆலோசனை வழங்கி, ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டும் தனியாள் ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டும் வகுப்பறைக்கு ஒருவர் வீதம் 43 ஆராய்ச்சியாளர்களைத் தெரிவு செய்து அறிவுறுத்துவதும் ஆராய்ச்சி பற்றிய அவர்களது தேர்ச்சியை மேம்படுத்தலும்.
- ஆராய்ச்சியின் போது ஆசிரியர்களதும், ஆராய்ச்சியாளர்களதும் நடிபங்குகளைக் கண்காணிப்பதற்கும் அவர்களது பொறுப்புகளை நிறைவேற்றிக் கொள்ள வசதியாக்கம் செயற்வதற்குமாக தேசிய கல்வி நிறுவக ஆராய்ச்சிக் குழு பாடசாலைகளில் கள விஜயங்களை மேற்கொள்ளல்.
- முதலாவது பிரதான கட்டத்தில் தினமும், மாதாந்தமும் தவணைக்கொரு முறையும் வருடாந்தமும் தரவு சேகரித்தல் இரண்டாம் பிரதான கட்டத்தின் முதலாம் வருடத்தில் தவணை அடிப்படையில் தரவு சேகரித்தலும் மூன்றாவது பிரதான கட்டத்தில் வருட இறுதியில் மாத்திரம் தரவு சேகரித்தலும்.
- ஒவ்வொரு வருட இறுதியிலும் ஆசிரியர் சேகரித்த தரவுகளை தேசிய கல்வி நிறுவக ஆராய்ச்சி அலகில் பெற்றுக் கொள்ளல், அவற்றைக் குறியிடல் மற்றும் கணினிப்படுத்தல்.
- 16 கருவிகளினூடாக ஆசிரியர்களால் சேகரிக்கப்பட்ட கணியத் தரவுகளை கணியப் பகுத்தாய்வுக்கும், ஆராய்ச்சியாளர்கள் நேர்காணல், அவதானம் மேற்கொள்ளல், ஆவணப்பதிவுகளிலிருந்து திரட்டுதல் ஆகியவற்றின் ஊடாகப் பெற்றுக் கொண்ட பண்புசார் தரவுகளைப் பண்புசார் தரவுப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தல்.
- 16 கருவிகளினூடாக தரவுகளைப் பகுத்தாய்ந்து, ஆய்வறிக்கை தயாரித்தல்.
- 43 வகுப்பறைகளிலிருந்தும் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட 43 மாணவ மாணவியர் பற்றிய 1 முதல் 5ஆம் வகுப்புகளுக்குரியதான தனியாள் கற்கையினது அறிக்கைகளைத் தயாரித்தல்.
- பிரதான ஆய்வறிக்கையைத் தயாரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வின் போது பின்பற்றியொழுகிய சில கோட்பாடுகள்.

- ஆராய்ச்சிக் கருவிகள், நடைமுறையாகிய கலைத்திட்டத்தின் அடிப்படையிலான அளவீடு செய்தலையன்றி, மாணவர் பாடசாலைக் கல்வியில் பங்கேற்றலையும் அவர்களது தேர்ச்சி விருத்தியையும் அடையாளங்காணும் நோக்கத்துடனேயே விருத்தி செய்யப்பட்டன. இதற்கான அந்தந்த வகுப்புகளுக்கு ஏற்புடையதான தேர்ச்சி மட்டங்களை நிருணயித்துக் கொள்வதற்காக மட்டுமே பாடவிதானம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது.
    - தேர்ச்சி மட்டமானது மாதாந்தம், மூன்று மாதங்களுக்கொருமுறை மற்றும் வருடாந்தம் அளவீடு செய்யப்படுவதற்கேற்றவாறு தரவு சேகரிப்புக் கருவிகள் கலைத் திட்டத் தயாரிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மதிப்பீட்டு வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட குழுவொன்றினால் விருத்தி செய்யப்பட்டது.
    - வகுப்பறையில் ஆசியரியரின் நடிபங்கிற்குத் தடையேற்படுத்தாத வகையிலும், அவருக்கு இலகுவாகப் பயன்படுத்தக் கூடிய வகையிலும் கருவிகள் விருத்தி செய்யப்பட்டன. எழுத்துமூல அறிவுறுத்தல்களினூடாகவும், கருவிகளை அறிமுகப்படுத்தலுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட வேலையமர்வுகளின் போது வழங்கப்பட்ட அறிவுறுத்துரைகளுடாகவும் கருவிகளைப் பயன்படுத்த வேண்டிய முறைபற்றி ஆசிரியர்கள் தெளிவுபடுத்தப்பட்டனர்.
    - ஆசிரியர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்குமான ஒழுக்க விழுமியங்களின் தொகுப்பொன்று அறிமுகஞ் செய்யப்பட்டு, அவர்களின் ஒப்புதலும் பெற்றுக் கொள்ளப்பட்டது.
    - இலங்கைப் பிள்ளைகள் கல்வியில் பங்கேற்கும் கோலத்தினை அடையாளங்காணல், அவர்களது தேர்ச்சி விருத்தியுறும் கோலத்தை அடையாங்காணல், மற்றும் இவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காணல் என்பவற்றுக்கான இவ்வராய்ச்சினூடாக ஆரம்பக் கல்விக் கொள்கை வகுத்தலிற்கு அடிப்படையாகக் கொள்ளத்தக்க தரவுகளையும் ஆராய்ச்சிப் பேறுகளையும் வெளிக்கொணர முடிந்தது.
    - ஆராய்ச்சியாளர்களின் பாவனைக்கெனக் களஞ்சியப்படுத்தப்பட்ட இவ்வாராய்ச்சி தொடர்பான தரவுகளின் தொகுப்பானது பிற ஆராய்ச்சிகளுக்கு ஓர் அடித்தளத்தை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.
    - இக்கற்கைக்கான அடிப்படைக் கருத்தேற்றம் செய்து உரிய செயலொழுங்குகளை விருத்தி செய்து கொள்வதற்கேற்ற வழிகாட்டல்களுடாக எம்மை ஊக்கப்படுத்தியது மட்டுமன்றி, யுனிசெப் நிறுவனத்திலிருந்து தேவையான நிதி ஒதுக்கீடு செய்து கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்ட தேசிய கல்வி நிறுவக முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜீ.பீ.குணவர்தன அவர்களுக்கும் முதன்மையாகவும், மிக்க கண்ணியத்துடனும் நன்றி பாராட்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆராய்ச்சிக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து தந்த யுனிசெப் நிறுவனத்திற்கும் அதன் வதிவிடப் பிரதிநிதி டெட் சய்பான் அவர்களுக்கும் நிகழ்ச்சித் திட்ட அதிகாரிகளான திருமதி ஹிரன்தி விஜயமான்ன, திருமதி பத்மினி ரணவீர ஆகியோருக்கும், நன்றி தெரிவிக்கின்றோம். 2007ஆம் வருடத்தில் ஆராய்ச்சிச் செயல்பாடுகளுக்குத் தேவைப்பட்ட நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொடுத்த ஆராய்ச்சி, திட்டமிடல், அபிவிருத்திப் பீடத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜயந்தி குணசேகர அம்மையாருக்கும் நன்றி செலுத்துகின்றோம்.
- இந்த கற்கைக்கெனத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கும், அப்பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டிருந்த மாதிரி மாணவர்களுக்கும், ஆரம்ப நிலைக் கல்வியின் இறுதிப் பகுதியடையும் வரை கற்பித்த அப்பாடசாலைகளின் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் இவ்வராய்ச்சியை வெற்றியடையச் செய்வதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கியமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம்.
- இக்கற்கையில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும், எப்போதும் அறிவுறுத்தல்களை வழங்கியும், நாணயமாகவம் திறமையாகவும், இச்செயற்பாட்டில் ஈடுபட்ட பாடசாலைகள் ஒவ்வொன்றுக்காகவும் நியமனஞ் செய்யப்பட்டிருந்த அனைத்து ஆராய்ச்சியாளர்களுக்கும், ஆராய்ச்சித் தரவு சேகரிப்பதற்கான கருவிகளைத் தயரிப்பதில் உதவிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சி அலுவலர்களை உள்ளடக்கிய குழுவினர்களுக்கும் பெரிதும் நன்றி தெரிவிக்கின்றோம்.
- சிங்கள, தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட எல்லா ஆராய்ச்சி அறிக்கைகளையும் ஆங்கிலத்துக்கு மொழி மாற்றம் செய்து இலங்கைப் பிள்ளையினது கல்விப் பங்கேற்பு மற்றும் தேர்ச்சி விருத்தி பற்றிய கோலத்தை சர்வ தேசத்துக்கும் அறிமுகப்படுத்துவதற்குரிய பின்னணியைத் தயாரித்துதவிய மொழி பெயர்ப்புக் குழுவினருக்கும் எமது நன்றி உரித்தாகிறது.
- தரவுகளைக் குறியீடு செய்து, கணினிப்படுத்திய ஆராய்ச்சி உதவியாளர்களுக்கும், தரவுப் பகுப்பாய்வு செய்வதற்குதவிய தனுஷ்க விதானகே, லஷ்மி, குமாரி, நிலன்தி மாவுதெல்ல, தக்ஷிலா விஜேசிங்க, பிரியதர்ஷனி, கே.டி,பீ.தர்மவர்தன, கே.ரீ.சுரேஸ்குமார், சின்தக்க ஷியாமால், பவானி ஹேவாகமகே, அனுஷ்கா த சில்வா, பிரசாதி சுபசிங்க ஆகிய பகுப்பாய்வு குழுவினருக்கும், பலதரப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகளையும், அவற்றின் திருத்தப்பட்ட பிரதிகளையும் மீண்டும் மீண்டும் கணினிப்படுத்திய கணினித் தரவுப் பதிவாளர் குழுவினருக்கும் பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய கல்விசாரா ஊழியர்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவைச் சேர்ந்த குமாரி ரணசிங்க, சிரானி புஷ்பமாலா, டி.கெப்பெட்டிபொல, தில்ஹானி ஹெட்டிகே, என்.டி.திஸ்சாநாயக்க மற்றும் சமூக விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த எஸ்.கருனாகரன், பீ.கே.ஹேரத், ஆரம்பக் கல்விப் பிரிவைச் சேர்ந்த திரு.சூதீன், உதயச்சந்திரன் ஆகியோருக்கும் அழகியற் பிரிவைச் சேர்ந்த பீ.ஏ.ஞானசிரி, ரவீந்திர தேநுவர ஆகியோருக்கும் அவர்கள் அவ்வப்போது வழங்கிய கல்விசார் ஒத்துழைப்புக்காக நன்றி தெரிவிக்கின்றோம்.
- இவ்வாராய்ச்சியின் தொடக்கம் முதல் இறுதி வரை தரவு சேகரித்தல், குறியீடு வழங்கல், அறிக்கை தயாரித்தல் அடங்கலாக ஆராய்ச்சியின் பலதரப்பட்ட கருமங்களிலும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட சுசிலாவதி, டப்ளியூ.ஏ.தயாபால, எம்.எல்.கே.ரம்புக்வெல்ல, டப்ளியூ.ஏ.சாலட், எஸ்.ஜீ.குணசிங்க ஆகியோருக்கு ஆராய்ச்சிக் குழுவின் இதய பூர்வமான விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொட்வின் கொடிதுவக்கு,
டி.ஏ.எஸ்.ரத்நாயக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இந் நெட்டாங்கு ஆய்வில் இணைந்து கொண்ட பின்னர் அவ்வப்போது தேவையான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய ஆய்வு, அபிவிருத்திக் கிளைப் பணிப்பாளர் கலாநிதி கொட்வின் கொடிதுவக்கு அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். 2002 ஆம் ஆண்டு முதல் அமுலாகி வந்த இந்நெட்டாங்கு ஆய்வில் 2004 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலேயே நான் இணைந்து கொண்டேன். அவ்வாறு இணைந்து கொள்ள வேண்டுமென என்னை உற்சாகப்படுத்தித் தூண்டியவர் சிரேட்ட செயற்றிட்ட அதிகாரி திருமதி டீ. ஏ. எஸ். டீ. ரத்னாயக்க அவர் களாவார். இணைந்து கொண்ட பின்னர் இச்செயற்றிட்டம் பற்றிய முழுமையான தெளிவான விளக்கத்தை எனக்களித்ததுடன், இந்த ஆய்வுடன் தொடர்பான அனைத்து செயற்பாடுகளின் போதும் நெருங்கியிருந்து உச்ச அளவில் அவர் ஒத்துழைப்பு வழங்கியமையை மிகுந்த நன்றியுணர்வுடன் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த ஆய்வு அறிக்கையைத் தயாரித்தலும் அவரது ஆலோசனைகள் பெரும் பங்களித்தன.

ஆய்வுக்குரிய பாடசாலையின் அதிபர் திரு. எம். ஏ. ஸி. எம். கராமத் அவர்கள் பாட சாலைக்கு நான் விஜயம் செய்த எல்லா சந்தர்ப்பங்களிலும் கௌரவமாக வரவேற்று, நான் பாடசாலையில் மேற்கொண்ட எல்லா ஆய்வுச் செயற்பாடுகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கினார். அவருக்கும், ஆய்வுக் காலப்பகுதியில் என்னுடன் தொடர்பு பட்ட ஆசிரியர்களுக்கும் நன்றியுடையவனாவேன். வகுப்பாசிரியராக இல்லாதிருந்தும் தரவுப் பதிவுப் பத்திரங்களைப் பூர்த்தி செய்வதற்குதவி புரிந்த ஆசிரியர் திரு. யூசுப் அவர்களுக்கு விசேடமாக நன்றி தெரிவித்தல் வேண்டும்.

வீட்டில் தகவல் சேகரிப்புக்காகச் சென்ற சந்தர்ப்பங்களில் மிகுந்த வசதியீனங்களுக்கு மத்தியிலும் என்னை வரவேற்று, எனக்குத் தேவைப்பட்ட தகவல்களை வழங்கிய ஆய்வுக்குரிய பிள்ளையின் பெற்றோர்களுக்கும் நன்றியுடையவனாவேன்.

மேலும் ஆய்வறிக்கையைக் கணனிப்படுத்திய செல்வி. கமலவேணி கந்தையா அவர்களுக்கும், அதனைப் பதிப்பித்தலுக்கு பங்களித்த தேசிய கல்வி நிறுவகத்தின் சகல ஊழியர் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

எஸ். எச். எம். ஷபீக்
பிரதிப் பரீட்சை ஆணையாளர்
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| புகுமுகம் | iii |
| நிறைவேற்றுப் பொழிப்பு | iv |
| முன்னுரை | xvi |
| அறிமுகம் | xviii |
| நன்றியுரை | xxiv |
| உள்ளடக்கம் | xxvi |
| அட்டவணைகள், உருவங்களது பட்டியல் | xxvii xxviii |
| அத்தியாயம் 1 | 1 |
| பாடசாலைப் பக்கப்பார்வை | |
| வகுப்பறைப் பக்கப்பார்வை | |
| ஆசிரியர் பக்கப்பார்வை | |
| பிள்ளை பற்றிய பக்கப்பார்வை | |
| ஆய்வுக்குரிய மாணவனது வீடு பற்றிய பக்கப்பார்வை | |
| அத்தியாயம் 2 | 38 |
| ஆராய்ச்சி முறைமையும் திட்ட வடிவமைப்பும் | |
| அத்தியாயம் 3 | 52 |
| பாடசாலைக்கல்வியில் மாணவனது ஈடுபாடு | |
| அத்தியாயம் 4 | 61 |
| தேர்ச்சி விருத்தி | |
| அத்தியாயம் 5 | 123 |
| முடிவும் பிரேரணைகளும் | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவங்களது பட்டி


| உருவம் | | | கம் |
|---|---|---|---|
| உரு 1 | : | பாடசாலையினதும் வீட்டினதும் அமைவி | 02 |
| உரு 2 | : | பாடசாலைத் திட்ட வரைபு – 2002ஆம் | 06 |
| உரு 3 | : | கரும்பலகையின் தோற்றம் | 13 |
| உரு 4 | : | (தரம் 01உம் தரம் 2உம்) கரும்பலகைக் (2002-2003) | 14 |
| உரு 5 | : | (தரம் 1உம் தரம் 2உம்) எண்களைக் க | 14 |
| உரு 6 | : | (தரம் 1உம் தரம் 2உம்) வகுப்பறையில்க | 15 |
| உரு 7 | : | தரம் 2 (2004) வகுப்பறை ஒழுங்கமைப்பு | 16 |
| உரு 8 | : | தரம் 4உம் தரம் உம் (2005 இலும் 2006இ ஒழுங்கமைப்பு | 18 |
| உரு 9 | : | வகுப்பறைப் பிள்ளைகளின் நகர்ந்த கோல | 28 |
| உரு 10 | : | பிள்ளையின் வீட்டுக்குச் செல்லும் வழி | 34 |
| உரு 11 | : | 2002இல் பிள்ளையினது வீட்டினது உள்ளக | 35 |
| உரு 12 | : | 2006இல் வீட்டின் உள்ளகவமைப்பு | 37 |
| உரு 13 | : | ஆரம்பப் பாடசாலைப் பிள்ளையின் கற்றலி | 38 |
| உரு 14 | : | பிள்ளையின் தேர்ச்சி விருத்தி | 39 |
| உரு 15 | : | இரண்டாம் வகுப்பிலிருந்த போது பிள்ளை | 61 |
| உரு 16 | : | அமைத்தெழுதிய வசனமொன்று | 62 |
| உரு 17 | : | இரண்டாம் வகுப்பின் மூன்றாம் தவணையிலி எழுதிய வசனங்கள் | 63 |
| உரு 18a | : | மூன்றாம் வகுப்பிலிருந்த போது பிள்ளை எழு | 64 |
| உரு 18b | : | மூன்றாம் வகுப்பில் பிள்ளை பார்த்தெழுதிய | 64 |
| உரு 18c | : | சித்திரத்தைப் பார்த்து பிள்ளை எழுதிய வசன | 65 |
| உரு 19 | : | அனிஸ் எழுதிய பாடல் வரிகள் | 66 |
| உரு 20 | : | 11.08.2005 இல் அனீஸ் எழுதியிருந்த ஒரு பக் | 67 |
| உரு 21 | : | 2006 நவம்பர் மாதத்தில் அனீஸ் எழுதிய வாக் | 68 |
| உரு 22 | : | 4ஆம் வகுப்பிலிருந்த போது அனீஸினுடைய ச | 69 |
| உரு 23 | : | ஆங்கில எழுத்துக்கள சொற்களை எழுதுதல் | 80 |
| உரு 24 | : | எண் சட்டங்களில் எண்களைவ கை குறித்தல் | 85 |
| உரு 25 | : | எண்சார் திறன்கள் - I | 86 |
| உரு 26 | : | தளவுருவங்களின் பகுதிகளைப் பின்னமாக எழு | 87 |
| உரு 27 | : | கூட்டலும் கழித்தலும் | 88 |
| உரு 28 | : | எண்சார் திறன்கள் - II | 89 |
| உரு 29 | : | நாட்காட்டியின் தரவுகளைப் புரிந்துகொள்ளல். | 90 |
| உரு 30 | : | விலைச்சிட்டியின் தரவுகளைப் புரிந்து கொள்ளல் | 91 |
| உரு 31 | : | அலகுகள் பற்றிய விளக்கம் | 92 |
| உரு 32 | : | தசம எண்கள் குறித்து விளக்கம் | 93 |
| உரு 33 | : | 2ஆம் வகுப்பிலிருந்த போது பிள்ளையின் நிறை கோலம் | 97 |
| உரு 34 | : | பூக்களைக் கண்ட எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி | 100 |
| உரு 35 | : | சந்தை | 102 |
| உரு 36 | : | வீட்டுத் தோட்டம் | 102 |
| உரு 37 | : | வழிபாட்டுத் தலங்கள் | 103 |
| உரு 38 | : | தாரவப் பகுதிகளினால் ஆக்கப்பட்ட பூவும் இலை | 104 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசிரியர் தொகை | 08 |
| 2. | ஆசிரியர் இடமாற்றம் பெற்ற கோலம் | 09 |
| 3. | மாணவர் தொகை | 09 |
| 4. | க.பொ.த.(சா.த) பெறுபேறுகள் | 10 |
| 5. | பாடசாலைக்கு சமுகமளிக்காத நாட்கள் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 1

## பாடசாலைப் பக்கப்பார்வை (School Profile)

### அடைவு

இப்பாடசாலை கொழும்பு நகர மத்தியிலமைந்துள்ள சிங்கள, தமிழ் இரு மொழி மூல வகுப்புகளையும் கொண்டதும் வகை 2 (Type 2) ஐச் சேர்ந்ததுமான முஸ்லிம் ஆண்கள் பாடசாலையாகும். இது புறக்கோட்டையிலிருந்து சுமார் 1km தூரத்திலும், கொழும்பு நகரமண்டபத்திலிருந்து 1km தூரத்திலும், மருதானையிலிருந்து ஏறத்தாழ 1½ km தூரத்திலும், காலிமுகத்திடலிலிருந்து 1km தூரத்திலும் அமைந்துள்ளது. இப்பாடசாலை ஆறு பிரதான பாதைகளின் முக்கிய சந்தியொன்றுக்கு அருகில் அவற்றுள் ஒரு பிரதான பாதைக்கு முகங் கொடுத்தவாறு அமையப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.


இதனால் கொழும்பின் எந்தப் பகுதியிலிருந்தும் இப்பாடசாலையை இலகுவில் சென்றடையக் கூடிய போக்குவரத்து வசதிகள் காணப்படுகின்றன. தனியார் மற்றும் அரச பேருந்து சேவைகள், முச்சக்கர வண்டி தாராளமாகக் காணப்படுகின்றன. மேலும் நாட்டின் தெற்கு நோக்கிய தொடருந்துப் பாதை இப்பாடசாலைக்கு அணித்தாகச் செல்வதுடன் தொடருந்து நிலையம் பாடசாலையிலிருந்து 400m-500m தொலைவில் அமையப் பெற்றுள்ளது.

### பாடசாலை வரலாறு

இப்பாடசாலை 1945 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அன்றைய காலத்தில் அரசில் ஓர் உறுப்பினராகவிருந்த மலே இனத் தலைவர் ஒருவரால், இப்பிரதேசத்தில் செறிந்து வாழ்ந்து வந்த அவ்வின மக்களது நலன் கருதி இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்தபோது 60 மாணவர்களும் 4 அல்லது 5 ஆசிரியர்களுமே இருந்துள்ளனர். அப்போது 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை ஆங்கில மொழி மூலம் கல்விப் போதனை இடம்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. ஆய்வுக்குட்படுத்தப்படும் பாடசாலை
2. பள்ளி வாசல்
3. சிறுவர் பூங்கா
4. தேவாலயம்
5. ஹோட்டல்
6. வங்கி
7. அநாதையில்லம்
8. முஸ்லிம் மகளிர் பாடசாலை
9. கல்வி அலுவலகமும், சிங்களப் பாடசாலையும்
10. சிங்கள, கத்தோலிக்கப் பாடசாலை
11. இந்துப் பாடசாலை
12. தனியார் மருத்துவ மனை
13. பிரதான பௌத்த விகாரை
14. தமிழ்ப் பாடசாலை
15. தொடருந்துப் நிலையம்
16. ஆய்வுக்குரிய மாணவனது இல்லம்
17. குளம்

உரு 1 : பாடசாலையினதும் வீட்டினதும் அமைவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையில் கற்று 5 ஆம் வகுப்பு சித்தியடைந்த மாணவர்கள், அக்கால கட்டத்தில் பிரபலமாகவிருந்த முஸ்லிம் தனியார் கல்லூரிக்கு அனுமதி பெற்றனர். இப்பாடசாலையும் தனியார் பாடசாலையாகவே இருந்து வந்துள்ளமையினால் இது பிரபல பாடசாலையின் கிளையாக அல்லது ஊட்டும் பாடசாலையாக (Fuder School) கருதப்பட்டுள்ளது. இவ்வரலாற்றுக் குறிப்புகள் பாடசாலையின் தற்போதைய அதிபரினால் சுட்டிக் காட்டப்பட்டன.

2002 இல் இலிகிதராகப் பணிபுரிந்து கொண்டிருந்த இப்பாடசாலையின் பழைய மாணவர் ஒருவரும் நேர் காணப்பட்டுள்ளார். ஒல்லாந்தர் காலத்தில் பள்ளிவாசலுக்கென இந்தோனேசியா (மலாய்) இனத்தவரால் நிலம் நன்கொடையாக வழங்கப்பட்டதெனவும், அதற்குரிய காணி உறுதிப்பத்திரம் ஒல்லாந்து மொழியிலிலேயே இருந்து பின்னர் மொழி மாற்றம் செய்யப்பட்டதெனவும் பள்ளிவாசலினது நிலத்தின் ஒரு பகுதியே பாடசாலை அமைப்பதற்காக வழங்கப்பட்டதெனவும் குறிப்பிட்டார்.

2002 இல் 60 வயதுடையவரான இப்பாடசாலையின் பழைய மாணவரொருவர் நேர்காணப் பட்டுள்ளார். அவர் கற்ற காலத்தில் சிறு தொகைப் பெண்பிள்ளைகளுடன் கூடிய கலவன் பாடசாலையாக இது இருந்துள்ளது. பாடசாலை தனியார் முஸ்லிம் பாடசாலை யெனினும் அதன் முதலாவது தலைமை ஆசிரியர் ஒரு சிங்களவராகவிருந்துள்ளார் எனவும் அப்போது முஸ்லிம் ஆசிரியர் ஒருவரும் தமிழ் ஆசிரியர்கள் இருவர் அல்லது மூவர் இருந்ததாகவும் குறிப்பிட்டார். தற்போது மூன்று மாடிக் கட்டிடம் அமைந்துள்ள விடத்தில் காணப்பட்ட ஞாபகார்த்த மண்டபம் மற்றும் தற்போதைய மதிலுக்குப் பின்புறமாக உள்ள பள்ளிவாசல் காணியிலமைந்திருந்த கட்டடம் ஆகிய இரண்டிலுமே வகுப்புகள் நடாத்தப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். அக்கால கட்டத்தில் இது காலையிலும் மாலையிலும் போதனை இடம்பெறும் இரு நேரப் பாடசாலையாக இயங்கி வந்தமையும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இப்பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவராகவிருந்தவரும் 2002 இல் நேர்காணப்பட்டுள்ளார். அவர் வாய்வழியாகப் பெற்ற தகவல்களை வழங்கியுள்ளார். 1952 ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் சுமார் 1000 மாணவர்கள் கல்வி பெற்றதாகவும், ஒவ்வொரு வகுப்பிலும் A, B,C யென பல சமாந்தரப் பிரிவுகள் காணப்பட்டதாகவும், உதைபந்தாட்டம், குத்துச்சண்டை, மற்போர் முதலான விளையாட்டுத்துறைகளிலும் பாடசாலை சிறப்புற்று விளங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்ப காலகட்டத்தில் குர்ஆன் போதனையும் இப்பாடசாலையில் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்துள்ளமையும் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பின் பிரதான முஸ்லிம் தனியார் பாடசாலையின் கிளையொன்றாக 1945 ஆம் ஆண்டில், ஜும்மா பள்ளிவாசல் காணியில் ஆங்கில போதனா மொழியுடன் தனியார் பாடசாலையாகத் தொடங்கப்பட்ட இப்பாடசாலை 1961 இல் அரச பாடசாலையாக மாறி யுள்ளது. 17.09.1961 எனத் திகதியிடப்பட்ட கல்வித் திணைக்களக் கடிதத்தின்படி பள்ளி வாசலுக்குச் சொந்தமான 38 பேர்ச் நிலம் இப்பாடசாலைக்கென பெறப்பட்டுள்ளது. மேலும்;

(1) இப்பாடசாலையில் காலை, மாலை இரு நேர வகுப்புகள் நடைபெறும்

(2) ஞாயிறு தினங்களில் இஸ்லாமிய சமய போதனை வகுப்புகள் இடம்பெறல் வேண்டும்

(3) தலைப்பாத்திஹா மற்றும் சமய வகுப்புகள் நடைபெறும்

(4) பகல் நேரங்களில் பாடசாலை வகுப்புகளும் இரவு நேரங்களில் குர்ஆன் வகுப்புகள் உட்பட சமயக்கல்வி இடம்பெறல் வேண்டும்

(5) இரண்டு கட்டிடங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன

என்ற விவரங்கள் இக்கடிதத்தில் காணப்படுகின்றன.

பள்ளிவாசல் நிலம் அரசுடைமையாக்கப்பட்டபோது இத்தகைய நிபந்தனைகள் ஏற்கப்பட்டிருந்தபோதும் காலப்போக்கில் ஏனைய அனைத்து அரச பாடசாலைகளும் இயங்கி வரும் பாணியிலேயே இப்பாடசாலையும் இயங்கலாயிற்று. எனினும் இன்றும் கூட சிற்சில சமயக்கல்வி நிகழ்ச்சிகள் (உதாரணமாக, அஹதிய்யா ஞாயிறு பாடசாலை) இப்பாடசாலை வளவினுள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

"இப்பாடசாலை ஆரம்பகாலத்தில் ஓலைக் கொட்டகையொன்றுடனேயே தொடங்கப் பட்டது. படிப்படியாக வளர்ச்சி பெற்று 1976 ஆம் ஆண்டில் இரு மாடிக் கட்டிடம் ஒன்றும் 1986 ஆம் ஆண்டில் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றும், 2000 ஆம் ஆண்டில் நூலகக் கட்டிடமும் (நூலகம் 2003 ஆம் ஆண்டில் வேறிடத்துக்கு மாற்றப்பட்டது) கட்டப்பட்டன" என்று 2002 இல் பாடசாலையில் கற்பித்த மூத்த ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார்.

"1976 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 1600 மாணவர்களையும் 70 ஆசிரியர் களையும் கொண்டிருந்த இப்பாடசாலை இருநேரப் பாடசாலையாக இயங்கி வந்துள்ளது. இப் பாடசாலைக்கு அயலில் ஒரு பௌத்த பாடசாலை, ஒரு கிறித்தவ பாடசாலை இரண்டு முஸ்லிம் பாடசாலைகள் காணப்படுகின்றமையால் பிள்ளைகள் அப்பாடசாலை களுக்கும் செல்ல ஆரம்பித்தனர். இதனால் தற்போது மாணவர் தொகை 500 வரை குறைந்துள்ளது" என அதிபர் குறிப்பிட்டார்.

இப்பாடசாலை 1960 களிலும், 1986-1992 காலப்பிரிவிலும் சிறப்புற்று விளங்கியதென மற்றொரு ஆசிரியர் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌதிக வளங்கள்

912 சதுர மீற்றர் நிலப்பரப்புடைய பாடசாலைக் காணியில் 2002 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு கொட்டங்காய் (கத்தாப்பு) மரமும் நெல்லி மரத்தையும், பப்பாசி மரமொன்றும் காணப்பட்டன. கட்டிடங்களுக்கிடையே ஆங்காங்கே பூச்சாடிகளும் வைக்கப்பட்டிருந்தன. ஆய்வுக்குரிய வகுப்புக்கு முன்னாளிருந்த நூலகக் கட்டிடத்தின் சுவரோடு இணைந்ததாக பூஞ்செடித் தொட்டியொன்றும் 2002 பிற்பகுதியில் அமைக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் ஆய்வு கூடக் கட்டிடத்தின் முன்னால் பூஞ்செடி மற்றும் மரக்கறி நடுவதற்கான சிறிய பாத்தி வடிவமைக்கப்பட்டிருந்தது.

2002 ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் மொத்தம் 5 கட்டிடங்கள் காணப்பட்டன. (உருவம் 2 ஐப் பார்க்க.) 15 வகுப்பறைகளைக் கொண்ட 33m x 7.3m அளவுடைய மூன்று மாடிக் கட்டிடம் அவற்றுள் பிரதானமானது. அதன் கீழ்த்தளத்தில் பாடசாலைக்கு உள்ளிடும் போது இரண்டாவதாக அமைந்துள்ள வகுப்பறையே அதிபரின் அலுவலகமாகப் பயன் படுத்தப்படுகிறது. இக்கட்டிடத்தில் மொத்தமாக 6m x 6m அளவுடைய 15 அறைகளுள்ளன.

L வடிவிலமைக்கப்பட்ட மற்றொரு இரு மாடிக் கட்டிடம் அங்குள்ளது. அதன் கீழ் மாடியில் 6m x 6m அளவுடைய இரு வகுப்பறைகள் ஒரு கிளையிலும் மற்றக் கிளையில் அது போன்ற இன்னொரு வகுப்பறையுமுள்ளது. L வடிவின் இவ்விரு கிளைகளும் இணையும் மூலையிலும் ஓர் அறையுள்ளது. இக்கட்டிடத்தின் மேல் மாடியில் ஒரு கிளையில் ஒரு வகுப்பறையும் மற்றக் கிளை ஒரு மண்டபமாகவும் (மேடையுடன் கூடியது) அமைக்கப்பட்டுள்ளது.


மாடிக் கட்டிடங்கள் இரண்டிலும் படிக்கட்டுகளுக்குக் கீழ் உள்ள பகுதிகள் களஞ்சியவறை களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

9m x 6m நீள அகலங்களையுடையதாக மற்றொரு கட்டிடம் அதிபர் விடுதியாகப் பயன் படுத்தப்படுகிறது. அதில் இரண்டு அறைகள் ஒரு சமையலறை உண்டு.

9m x 6m நீள அகலமுடையதும் கண்ணாடி யன்னல்கள் பொருத்தப்பட்டதுமான அறை யொன்று பல்தேவைக்கட்டிடமாக அமைக்கப்பட்டுள்ளது. 2002 இல் இது நூலகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததெனினும், 2003 ஏப்ரல் மாதத்தில் இரு மாடிக் கட்டிடத்தின் கீழ் தளத்தில் இரு கிளைகளும் இணையும் மூலையில் அமைந்துள்ள அறைக்கு நூலகம் மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு நூலகமாக மாற்றும் பொருட்டு இவ்வறை 2002 முதலே புனரமைக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் பல் தேவை நோக்கக் கட்டிடத்திலும் ஒரு வகுப்பு நடாத்தப்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண்டில் இக்கட்டிடத்திலும் ஒரு பகுதியில் தொழில் கூடம் (Work shop) அமைக்கப்பட்டதாக அதிபர் குறிப்பிட்டுள்ளார். அடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உரு 2: பாடசாலைத் திட்ட வரைபு - 2002 ஆம் ஆண்டு**

1. நுழைவாயில்
2. சிற்றுண்டிச்சாலை
3. விளையாட்டிடம்
4. மூன்று மாடிக் கட்டிடம்
5. கொடிக்கம்பமும் மேடையும்
6. அதிபர் விடுதி
7. நூலகம் (பலநோக்குக் கட்டிடம்)
8. L – வடிவ இருமாடிக் கட்டிடம்
9. விஞ்ஞான ஆய்வுகூடம்
10. மலசலகூடங்கள்
11. கொட்டங்காய் மரம்
12. விளையாட்டு முற்றம்
13. நெல்லி மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15m x 6m அளவுகளையுடையதான விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடமொன்றும் இங்குள்ளது. இதன் ஒரு பகுதியிலும் வகுப்பறையொன்று நடாத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலை நுழைவாயிலுக்கருகே சிற்றுண்டிச்சாலைக்கென ஒரு சிறிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டில் இரண்டாம் தவணையின்போது சிற்றுண்டிச்சாலையானது இரு மாடிக் கட்டிடத்தின் கீழ்த்தளத்திலுள்ளதும் அதன் படிக்கட்டிற்கு அணித்தாகவுள்ளதுமான சிறிய அறைக்கு மாற்றப்பட்டது. சில காலங்களுக்குப் பின்னர் சிற்றுண்டிச்சாலை மீண்டும் நுழைவாயிலருகில் இயங்கியது.

2002 ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்கான ஓய்வறை காணப்படவில்லை. ஆசிரியர் தமது பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கோ, பாட ஆயத்தங்களைச் செய்வதற்கோ வசதியான இடம் ஏதுவும் காணப்படவில்லை. ஆயினும் 2003 ஆம் ஆண்டு முதல் மூன்று மாடிக் கட்டிடத்தின் கீழ்த் தளத்திலுள்ள ஓர் அறை ஆசிரியர் ஓய்வறையாக மாற்றப்பட்டது. அப்போது ஆய்வுக்குரிய மாணவனது வகுப்பும் அதற்கு முந்திய தமிழ் மொழி மூல வகுப்பும் ஒரே அறையில் பல்தர வகுப்பாக இயங்க ஆரம்பித்தன.

பாடசாலையில் மலசலகூடங்கள் போதுமானளவில் காணப்படுகின்றன. ஆயினும் அவற்றுள் 4 இற்கு மட்டுமே நீர் வசதி செய்யப்பட்டுள்ளது. குழாய் நீர் வசதி பாடசாலைக்கு உண்டு.

மரத்தளபாடங்கள், குறிப்பாக கதிரை மேசைகள் போதுமானளவு உள்ளன. பழுதடைந்த அல்லது உடைந்த தளவாடங்களும் ஆங்காங்கே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

தொலைபேசி வசதி இருந்துள்ளபோதிலும் 2002 இல் இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. மின்னிணைப்பும் உள்ளது. குழாய் நீர் வசதியுமுள்ளது. கட்டிடங்கள் மிக நெருக்கமாக அமைந்துள்ளமையினால் ஓய்வு நேரங்களில் மாணவர்கள் சுதந்திரமாக ஓடியாடக்கூடிய வசதி காணப்படவில்லை. அவ்வாறே சில வகுப்பறைகளுக்கு வெளிச்சமும் காற்றோட்டமும் கூட போதுமானதாகவிருக்கவில்லை.

ஆயினும் 21m x 11m அளவுகளுடைய விளையாட்டிடம் பாடசாலை நுழைவாயிலுக்கும், மூன்று மாடிக் கட்டிடத்தின் ஒரு பக்கச் சுவருக்குமிடையிலமைந்துள்ளது. தனியான விளையாட்டு மைதானம் ஏதுமில்லை.

2002 இலேயே இப்பாடசாலை நூலகத்தில் சுமார் 1000 புத்தகங்கள் இருந்துள்ளன. தமிழ், சிங்கள, ஆங்கில மொழி மூலமான பல தினசரிகளும் சஞ்சிகைகளும் தொடர்ச்சியாக இந்நூலகத்துக்குப் பெறப்படுகிறது. மூன்று கண்ணாடி அலுமாரிகள், 40 சொகுசு கதிரைகள், 02 வாசிப்பு மேசைகள், ஒரு நூலகர் மேசை, 07 பலகை அலுமாரிகள் (Cupboards), புத்தக இறாக்கைகள், பத்திரிகை வாசிப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசைகள், அறிவித்தற் பலகை, வெண்பலகை என்பன நூலகத்திற் காணப்பட்டன வாயினும் நூலகர் ஒருவர் இல்லாமையினால் ஆசிரியர் ஒருவரே தனது கற்பித்தல் பணிகளுடன் நூலகத்தையும் பொறுப்பாக நடாத்தி வருகின்றார்.

2004, 2005, 2006 வருடங்களில் மேற்குறித்த வசதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களேற் படவில்லையெனினும் 2004 இல் பாடசாலைக்கு கணனிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஒன்று அதிபர் அலுவலகத்திலும், மற்றது நூலகத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

## மனித வளம்

2002 ஆம் ஆண்டு இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர். இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவர். அவர் மும்மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர். இந்த ஆய்வில் முழுக் காலப் பகுதியிலும் அவரே அங்கு அதிபராகவிருந்தார். இரு ஊடக மொழிகளிலும் போதனை செய்வதற்காக 2002 ஆம் ஆண்டில் 30 ஆசிரியர்கள் அங்கிருந்துள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக 3 சிற்றூழியர்களும் 2002 இல் கடமை யாற்றியுள்ளனர்.

2002 முதல் 2006 வரை இப்பாடசாலையில் இருந்த ஆசிரியர் தொகை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1 : ஆசிரியர் தொகை

| | பட்டதாரி | | | | | பயிற்சி | | | | | தொண்டர் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
| ஆண் | 4 | 3 | 3 | 3 | 4 | 7 | 7 | 8 | 7 | 7 | - | - | - | - | - |
| பெண் | 4 | 4 | 5 | 4 | 3 | 14 | 12 | 13 | 13 | 14 | 1 | 1 | 1 | - | - |

2002, 2003, 2004. 2005, 2006 ஆகிய வருடங்களில் முறையே 3, 3, 2, 2, 3 சிற்றூழியர்கள் இப்பாடசாலையில் கடமை புரிந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்ற கோலம் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2 : ஆசிரியர் இடமாற்றம் பெற்ற கோலம்**

| வருடம் | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|
| இடமாற்றலாகி வந்தோர் எண்ணிக்கை | 7 | 4 | 3 | 3 | 3 |
| இடமாற்றம் பெற்றுச் சென்றோர் எண்ணிக்கை | 7 | 4 | 3 | 3 | 3 |

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனீஸ் என்ற மாணவனது வகுப்பாசிரியையாக 2002 இலும் 2003 இலும் பாடசாலையிலிருந்த தொண்டர் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார் என்பதும், பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை இக்காலப் பகுதியில் ஒரு பிரச்சினையாகக் காணப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

இப்பாடசாலையிற் கல்வி பெற்ற மாணவர் தொகை பற்றிய விபரம் மொழிவாரியாகக் கீழ்க் குறித்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3 : மாணவர் தொகை**

| Grade | 1 | | 2 | | 3 | | 4 | | 5 | | 6 | | 7 | | 8 | | 9 | | 10 | | 11 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Year | S | T | S | T | S | T | S | T | S | T | S | T | S | T | S | T | S | T | S | T | S | T |
| 2002 | 27 | 5 | 27 | 13 | 26 | 10 | 33 | 11 | 32 | 19 | 39 | 15 | 32 | 23 | 32 | 20 | 27 | 07 | 34 | 13 | 34 | 17 |
| 2003 | 30 | 9 | 28 | 3 | 26 | 13 | 2 | 10 | 34 | 9 | 33 | 21 | 36 | 17 | 31 | 18 | 30 | 17 | 25 | 6 | 29 | 11 |
| 2004 | 23 | 7 | 30 | 8 | 30 | 4 | 23 | 14 | 26 | 10 | 31 | 10 | 34 | 17 | 33 | 14 | 33 | 14 | 26 | 15 | 24 | 5 |
| 2005 | 22 | 2 | 25 | 3 | 30 | 9 | 31 | 5 | 22 | 12 | 26 | 10 | 28 | 11 | 32 | 17 | 31 | 13 | 29 | 12 | 25 | 14 |
| 2006 | 24 | 11 | 25 | 4 | 24 | 3 | 26 | 8 | 33 | 5 | 23 | 10 | 29 | 10 | 28 | 13 | 30 | 14 | 30 | 10 | 27 | 10 |

இவ்வட்டவணையிலிருந்து தமிழ்மொழி மூலம் கல்வி பெறுவதற்காகக் குறைந்த எண்ணிக்கை மாணவர்கள் அனுமதி பெற்று வருகின்றனர் என்பதும் ஒவ்வொரு வகுப்பிலும் தமிழ்மொழி மூலப் பிரிவில் குறைந்த எண்ணிக்கை மாணவர்கள் இருந்து வருகின்றனர் என்பதும் நோக்கற்பாலது. ஆய்வுக்குரிய ஆரம்ப வருடத்தில் (2002) தமிழ் மொழி மூலம் கற்பதற்கு 34 பிள்ளைகளும் சிங்கள மொழி மூலம் கற்பதற்கு 126 பிள்ளைகளும் பாடசாலையில் சேர்ந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புத் திறன்கள்

அதிபர் வழங்கிய தரவுகளின்படி, இப்பாடசாலையிலிருந்து 2002-2005 காலப்பிரிவில் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் பிள்ளைகளெவரும் புலமைப் பரிசிலுக்குத் தெரிவு பெற்றிருக்கவில்லை. க.பொ.த. சா/ தரப் பரீட்சையில் இப்பாடசாலை யின் வினையாற்றுகை, அட்டவணை 4 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4 : க.பொ.த. (சா.த) பெறுபேறுகள்**

| வருடம் | தோற்றியோர் | | சித்தி பெற்றோர் | | சித்தி பெறாதோர் | |
|---|---|---|---|---|---|---|
| | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் |
| 2002 | 37 | 21 | 04 | 07 | 33 | 14 |
| 2003 | 24 | 15 | 02 | 06 | 22 | 09 |
| 2004 | 25 | 05 | 10 | 04 | 15 | 01 |
| 2005 | 33 | 14 | 04 | 03 | 29 | 11 |
| 2006 | 28 | 12 | 05 | 02 | 23 | 10 |

இதன்படி சிறிய வகுப்புகளான தமிழ் மொழி மூல வகுப்பு மாணவர்கள் சிங்கள மொழி மூல மாணவர்களை விடக் கூடிய சதவீத சித்தி பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது. எவ்வாறாயினும் சித்தி வீதம் மிகவும் குறைவானதென்பதும் கவனிக்கத்தக்கது.

2002 இல் வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி விவாதப்போட்டியிலும் இப்பாடசாலை மாணவர் கலந்து கொண்டுள்ளனர். தொலைக்காட்சி நாடகமொன்றையும் தயாரித்து ஒலி - ஒளிப்பதிவு செய்துள்ளனர். மற்றும் அவ்வாண்டில் 13 வயதின் கீழ் தீவு தழுவிய உதைபந்தாட்ட வீரர் திரட்டுக்கு (pool) இப்பாடசாலையின் ஒரு மாணவனும், கொழும்பு மாவட்ட உதைபந்தாட்ட அணியில் ஒரு மாணவனும் அங்கம் வகித்துள்ளனர். இவை 2002 இல் அதிபர் தெரிவித்த தகவல்களாகும்.

பாடசாலையின் பண்பாட்டு நிகழ்வுகள் பற்றிக் கூறுவதெனின் மீலாதுந்நபி விழா, கல்விச் சுற்றுலாக்கள், தமிழ் சிங்கள சாகித்திய தினங்கள், சிங்கள - முஸ்லிம் பெருநாள் ஒன்று கூடல் நிகழ்ச்சிகள் என்பன இப்பாடசாலையில் அவ்வப்போது இடம்பெறுகின்றன. தூர இடப் பாடசாலைகளிலிருந்து கொழும்புக்குச் சுற்றுலா வரும் மாணவர்களுக்காகக் கோரப்படுமிடத்துத் தங்குமிட வசதிகள் செய்து கொடுத்தல் ஒரு விசேடமான அம்சமாகக் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் சமய, பண்பாட்டுச் சூழல்

இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்த மாணவர்களே இங்கு கல்வி பெறுகின்றனர். இவர்கள் இலங்கை முஸ்லிம்களும், மலாயர்களுமாவார்கள். ஆசிரிய குழுவில் முஸ்லிம்களும், பௌத்த, இந்து, கிறித்தவ சமயங்களைச் சேர்ந்தோர்களுமுள்ளனர். பாடசாலைக்குப் பின் (மேற்கு)புறமாகப் பொதுப் பள்ளிவாசல் அமைந்துள்ளதுடன், பாடசாலை மதிலில் அப் பக்கமாக சிறிய வாயிலொன்றும் அமைந்துள்ளது. மத்தியான தொழுகையில் கலந்து கொள்ளவென சில முஸ்லிம் ஆண் ஆசிரியர்கள் அவ்வழியாகப் பள்ளி வாயிலுக்குச் சென்றுவரும் வழக்கமுடையோராகவுள்ளனர்.

இஸ்லாமிய சமயஞ் சார்ந்த வாசகங்கள் ஆங்காங்கே அரபு மொழியிலும் தமிழ் மொழி யிலுமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. காலையில் பாடம் ஆரம்பிப்பதற்கு முன்னால் சில வாசகங்களை மாணவர்கள் மொழிவார்களென 2002 ஆம் வருடத்துக்குரிய ஆழ்சிந்தனைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் இஸ்லாமியர் அணியும் வகையிலான தொப்பி அணிந்து பாடசாலைக்கு வருவர். ஒரு முஸ்லிம் ஆசிரியரும் ஒருவர் தவிர ஏனைய அனைத்து முஸ்லிம் ஆசிரியைகளும், இஸ்லாமியர் பொதுவாக அணியும் பாணியில் ஆடையணிந்து வருவர்.

சமய மரபினைப் பேணும் வகையில் ஆசிரியர் - மாணவர்கள் "சலாம்" கூறல் (சோபனம் சொல்லல்), நன்றி கூறல் முதலான அம்சங்களைக் கடைப்பிடிக்கின்றனர்.

காலைக் கூட்டங்களை திருக்குர்ஆன் வசனங்கள் சிலவற்றை ஓதி ஆரம்பிப்பதை வழக்க மாகக் கொண்டுள்ளனர்.

## சமூக, பொருளாதாரப் பின்னணி

அதிகமான பெற்றோர்கள் கல்வி மட்டத்தில் குறைந்தவர்கள். அரச அல்லது தனியார் நிறுவனங்களில் மிகக் குறைவாகவே பணிபுரிகின்றனர். முச்சக்கர வண்டியோட்டுதல், திறப்பு வெட்டுதல், வெளிநாடுகளில் பணிப்பெண் சேவை, கூலி வேலை, அங்காடி வியாபாரம் போன்றவை பிரதான பொருளாதார மூலங்களாகவுள்ளன. இப்பாடசாலைக்கு வசதிக் கட்டணம் கிடைத்தபோதிலும், குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு உதவி வழங்கக்கூடிய பெற்றோர் எவருமில்லையென அதிபர் குறிப்பிட்டார்.

மாணவர்களும், பெற்றோர்களும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் சரளமாகப் பயன்படுத்தக்கூடியோராகக் காணப்படுகின்றனர். மலே இனத்தவர்கள் மலாய் மொழியிலும் பேசக் கூடியவர்களாகவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மொழியில் கதைத்தபோதிலும் இழிவான சொற்கள், தரக்குறைவான பேச்சு மரபுகள் இடம்பெறும் வகையிலேயே அநேகர் பேசிப் பழகியிருந்தனர். இதனால் பண்பட்ட சமூகங்களில் வழக்கிலிருக்கும் பேச்சு மொழிகளிலிருந்து இந்தப் பாடசாலைப் பெற்றோர் களினதும் பிள்ளைகளதும் பேச்சு மொழி சிறிதளவு வேறுபட்டுப் புலப்படும் வகையிலுள்ளது.

பல குடும்பங்கள் கலப்புக் குடும்பங்களாகவுள்ளன. சிங்கள - முஸ்லிம், தமிழ் - முஸ்லிம் கலப்புத் திருமணங்களின் காரணமாகவே இந்த நிலைமை காணப்படுகிறது. இதனால் அத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த சில பிள்ளைகளின் வீட்டு மொழியென ஒரு தனிமொழியைக் குறிப்பிடுவது சிரமமாகவுள்ளது போலவே, குறித்த சமயமொன்றைப் பின்பற்றி ஒழுகுவதற்குப் பதிலாக ஒன்றுக்கு மேற்பட்ட சமய சம்பிரதாயங்களில் ஈடுபாடுள்ளோராகவும் சிலரைக் காணலாம். ஆய்வுக்குரிய வகுப்பில் 2002 இல் இருந்த 5 பிள்ளைகளில் இருவரது குடும்பங்கள் இத்தகைய பின்னணியுடையனவாகும். ஒரு பிள்ளையின் தாய் முஸ்லிம், தகப்பன் சிங்களவர். மற்றப் பிள்ளையின் தாய் முஸ்லிம். தகப்பன் தமிழர். ஆனால் பின்னர் அவர் முஸ்லிமாக மதம் மாறியுள்ளார். இப்பிள்ளையே ஆய்வுக்குட்படுத்தப்படும் அனீஸ் என்பவராவார்.

## வகுப்பறைப் பக்கப்பார்வை (Classroom Profile)


அனீஸ் 1 ஆம், 2 ஆம் வகுப்புகளில் கற்றபோது அவரது வகுப்பறை இரண்டு மாடிக் கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் இரண்டாம் அறையில் அமைந்திருந்தது. இவ்வறையின் அயலில் ஒரு பக்கத்திலிருந்த அறை களஞ்சியவறையாகவும் பின்னர் நூலகமாகவும் பயன்படுத்தப்பட்டது. மற்றப் பக்கமிருந்த அறையில் சிங்கள மொழி மூல வகுப்பு அமைந்திருந்தது. 6m x 6m உடைய அனீஸின் வகுப்பறையின் இரு பக்கச் சுவர்கள் பாதிக்கு மேல் கம்பி வலையிடப்பட்டிருந்தன. மற்றைய முழுமையான கற்சுவர்களில் ஒன்றில் 6m நீளமான கரும்பலகை சீமெந்தினால் அமைக்கப்பட்டிருந்தது.

இவ்வகுப்பறைக்கு முன்னால் மிக அருகிலேயே பல் தேவை நோக்குக் கட்டிடத்தின் சுவரும், பின்னால் பாடசாலை எல்லைக்குரிய மதிற்சுவரும் அமைந்திருந்தமையினால் போதியளவு வெளிச்சமும் காற்றோட்டமும் கிடைக்கவில்லை. மேலும் கம்பி வலையிடப் பட்டிருந்த பகுதிகள் நிறப் பொலித்தீனால் மறைக்கப்பட்டுமிருந்தன. குழாய் விளக்குகள் எப்போதும் வெளிச்சத்துக்காகப் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தன. வகுப்பறையின் கதவும் கம்பி வலையினால் செய்யப்பட்ட சலாகையாகவிருந்தது.

நுழைவாயிலுக்கருகில் வலப்பக்கமாக ஆசிரியர் மேசையும் கதிரையும் வைக்கப்பட்டிருந்தன. இடப்புறமாகவுள்ள சுவரில் கரும்பலகை அமைந்திருந்ததுடன் வன்னுரையில் (Regifoam) காட்சித்தட்டு ஒன்றும் தொங்கவிடப்பட்டிருந்தது. அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய தேசீயக் கொடி, மாணவரால் நிறந் தீட்டப்பட்ட படங்கள், இலக்கங்களின் கூட்டுத்தொகையைக் காட்டும் படங்கள், “கிளி பச்சை நிறமானது” என்ற வாக்கியம் எழுதப்பட்ட அட்டை என்பன காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. அத்துடன் அதன் ஒரு கோடியில் சமயம் சார்ந்த வாசகங்கள் பெரிய எழுத்தில் எழுதித் தொங்க விடப்பட்டிருந்தன. மாணவர் அவ்வப்போது அவற்றைப் பாராணயம் செய்கின்றனர்; அங்கு உலக முஸ்லிம்களின் முக்கிய பள்ளிவாசல்களில் ஒன்றான ‘மஸ்ஜிதுந்நபவி’ யினது படம் தாங்கிய நாட்காட்டியொன்றும் தொங்கவிடப்பட் டிருந்தது. அதற்கு மேலே சிறிய பிளாத்திக் கூடையொன்றும் தொங்கவிடப்பட்டிருந்தது. கரும்பலகையின் மறுகோடியில் பலகைப் பட்டிகள் பொருத்தப்பட்டிருந்தன. கரும்பலகை யானது எல்லா மாணவர்களுக்கும் தெரியக்கூடியதாகவும், நல்ல நிலையிலும் காணப்பட்டது.





**உரு 3: கரும்பலகையின் தோற்றம்**

கரும்பலகை அமைந்துள்ள சுவருக்கு எதிராகவுள்ள சுவரில் 5cm அகலமானதும் 5.4m நீளமானதுமாகிய 5 பலகைக் கீலங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அவற்றுள் முதலாவது வரிசையில் 1, 2, 3, 4, 5 ஆகிய எண்களைக் காட்டுவதற்காக பெட்டி உருவங்கள் பதிக்கப்பட்ட அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. (உரு:4) இரண்டாவது வரிசையில் அன்னாசிப்பழம், யானை ஆகிய உருவங்கள் வரையப்பட்டு நிறந்தீட்டப்பட்டிருந்த அட்டைகளிரண்டு தொங்கவிடப்பட்டிருந்தன. மூன்றாவது வரிசையில் மாணவர் ஆக்கங்கள் திரட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அனீஸுடைய ஆக்கமும் அங்கு தொங்கவிடப்பட்டிருந்தது. இந்தப் பலகைப் பட்டிகளுக்கு மேலே சுவரில் சிவப்பு, மஞ்சள் நிறங்களில் பெரிய ‘மலர்’ உருவங்கள் ஐந்து ஒட்டப்பட்டிருந்தன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 4: தரம் 1வும் தரம் 2வும் - கரும்பலகைக்கு எதிர்ப்பக்கமான சுவர் (2002,2003)

நுழைவாயிலுக்கெதிராகவிருந்த சுவரில் ஐந்து ஆமை உருவங்கள் சில பூக்கள், டெங்கு பற்றிய ஒரு சுவரொட்டி, ஒரு கலண்டர் என்பன தொங்கவிடப்பட்டிருந்தன.

ஆசிரியர் மேசைக்குப் பின்பக்கமாகவிருந்த சுவரில் 5cm அகலமான நீண்ட பலகையொன்று பதிக்கப்பட்டிருந்தது. அவதானிக்கப்பட்டபோது அதில் குடை, தண்ணீர்ப்போத்தல் ஆகியன தொங்கவிடப்பட்டிருந்தன. மேலும் 1 முதல் 8 வரையிலான எண்கள் பெரிய அளவில் எழுதப்பட்டும் அவ்வெண்களுக்கருகில் உருவங்கள் வரையப்பட்டதுமான அட்டைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.




**உரு: 5 (தரம் 1வும் தரம் 2வும்) எண்களைக் காட்டும் உருவங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களது தலைகளுக்கு மேலாக பட்டங்கள் மூன்று தொங்கவிடப்பட்டிருந்தன. யோகட் கிண்ணங்களால் செய்யப்பட்டு, நிறத்தாள் ஒட்டப்பட்ட 10 தொப்பிகள் காட்சிப்படுத்தப்பட் டிருந்தன. வகுப்பறையின் நடுவில், உயரத்தில் கரும்பலகைக்குச் சமாந்தரமாக நூலொன்று கட்டப்பட்டு அதில் சொல்லட்டைகள் நீலம், மஞ்சள், மென்சிவப்பு நிறங்களில் தக்காளி, ஆப்பிள், தோடை வடிவங்களில் வெட்டப்பட்டு அவற்றில் சில சொற்களும் எழுதப்பட்டுத் தொங்கவிடப்பட்டுக் காணப்பட்டன. அச்சொற்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒடு | ஒளி | ஏணி | ஊசி | உரல் | ஈட்டி | இனிமை | அன்பு |
| ஓணான் | ஒன்று | ஏடு | ஊஞ்சல் | உலகம் | ஈரம் | இலை | அணில் |
| ஓடம் | ஒட்டகம் | ஏரி | ஊர் | உணவு | இன்பம் | இன்பம் | அலை |

**உரு: 6 (தரம்1, தரம் 2) வகுப்பறையில் காணப்பட்ட சொல்லட்டைகள்**

வகுப்பறையில் ஆசிரியர் மேசைக்கு அணித்தாக 1.2m x 0.9m அளவுடைய கபில நிறத்திலான உருக்கு அலுமாரி வைக்கப்பட்டிருந்தது. அதன் மேல் முதலுதவிப் பெட்டியொன்றும் பூச்சாடியொன்றும் வைக்கப்பட்டிருந்தன. அலுமாரியினுள்ளே மாணவரது வர்ணப் பெட்டிகள், கத்தரிக்கோல்கள், கடதாசி வகையறாக்கள், clay, பந்து போன்றன வைக்கப்ட்டுள்ளன. மேலும் அவ்வலுமாரியில் இருந்து சற்றுத் தொலைவில் பலகையாலான நீல வர்ணம் பூசப்பட்ட ஓர் இறாக்கை வைக்கப்பட்டிருந்தது. அதில் மாணவர் வாசிப்பதற் குரிய சில சிறிய புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதனை அண்மித்தவிடமே சுற்றாடல் மூலையாகப் பயன்படுத்தப்படுகிறது எனக் குறிப்பிடப் பட்டபொழுதிலும் சுற்றாடல் மூலைக்குரிய தன்மைகள் அங்கு முழுமையாகக் காணப்படவில்லை.

நுழைவாயிலுக்கு நேரெதிரேயுள்ள பக்கத்தில் வேலை மேசை அமைக்கப்பட்டிருந்தது. 6m x 60cm நீள அகலமுடைய அதன் வலப்பக்க மூலையில் நீர்க்குழாயும், கழுவு தொட்டியும் (Basin) பொருத்தப்பட்டுக் காணப்பட்டது. வேலை மேசை மீது ஒரு தூரிகை, சில பந்துகள், ஒரு தொழுகை விரிப்பு என்பன காணப்பட்டன. மேசையின் கீழே சில பெட்டிகள், சுருட்டப்பட்ட அட்டைகள், மேல் வகுப்பு மாணவர்க்கான வாத்தியக் கருவிகள் என்பன காணப்பட்டன. வேலை மேசை மாணவரால் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதில்லை யென்பது இத்தோற்றங்களினூடாக தெளிவாகத் தெரிந்தது.


வகுப்பறையில் இருந்த 18 கதிரைகள் மற்றும் ஆறு மேசைகளும் நீல நிறப்பூச்சு பூசப்பட்டிருந்தன. இருந்த வகுப்பறையிலுள்ள 5 மாணவர்களும் ஒரே குழுவாகவே அமர்ந்திருந்தனர். தளபாடங்கள் நீங்கலாக மாணவர்களுக்கென 25.8 சதுர மீற்றர் இடம் இருந்தமையால் சராசரியாக ஒரு பிள்ளைக்கு 5.2 சதுர மீற்றர் பரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கக்கூடியதாகவிருந்தது. மாணவர் தமது புத்தகப்பை, தண்ணீர்ப் போத்தல் ஆகியவற்றை வைப்பதற்குப் பிரத்தியேக இடம் இருந்தபோதிலும் மாணவர்கள் அவற்றைத் தமது கதிரையிலோ அல்லது அயலிலுள்ள இன்னொரு கதிரையிலோ தொங்கவிட்டிருந்தனர்.

பிள்ளை 3ஆம் வகுப்புலிருந்தபோது அவரது வகுப்பு வேறு அறைக்கு மாற்றப்பட்டது. அதுவும் அதே கட்டிடத்தின் மற்றைய கிளையின் கீழ்த் தளத்திலிருந்த அறையாதலின் முன்னர் போன்ற அதே பௌதிக சூழல் காணப்பட்டது. அத்துடன் சுவரில் அமைக்கப் பட்டிருந்த சீமெந்துக் கரும்பலகைக்கருகில் ஆசிரியர் மேசை வைக்கப்பட்டிருந்ததுடன் இவ்வகுப்பறைக்குள்ளேயே மற்றுமொரு வகுப்புப் (4ஆம் வகுப்பு) பிள்ளைகளும் அமர்த்தப்பட்டு பல்தர வகுப்பறையாக இது பயன்படுத்தப்பட்டது. (உரு - 7)




**உரு – 07 தரம் - 3 (2004) : வகுப்பறை ஒழுங்கமைப்பு**


கரும்பலகைக்கருகில் நாற்காட்டி (கலண்டர்), நேர அட்டவணை தொங்கவிடப் பட்டிருந்தன. வேறு குறிப்பிடத்தக்க படங்களோ அல்லது கற்றல் சாதனங்களோ வகுப்பறையினுள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 1 ஆம், 2 ஆம் தரங்களிலிருந்த போது வகுப்பறைக்கு முன்னாலிருந்த நடைக்கூடத்(Corridor) தில் நடந்து செல்லத் தக்கதாக அது வெறுமையாக விருந்தது. ஆனால் 3 ஆம் வகுப்பில் வகுப்பறைக்கு முன்னாலிருந்த நடைக்கூடம் பழுதடைந்த, பயன்படாத தளவாடங்களால் நிரம்பி யிருந்தது. பிள்ளைகளது சுதந்திரமான நடமாட்டத்துக்கு இது மேலும் தடையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தது. அவ்வாறே வகுப்பறையினுள் 4 ஆம் வகுப்பு மாணவர்களும் அமர்ந் திருந்தமையும், பயன்படாத மரத் தளபாடங்கள் வகுப்பறையின் பின் சுவர்ப் பக்கமாக குவிக்கப்பட்டிருந்ததும் நெருக்கடியான பாடசாலைச் சூழலை மாணவருக்கு மேலும் நெருக்கடியானதாக்கிக் காட்டியதெனக் கருத முடியும். வேலை மேசை, சுற்றாடல் மூலையென எதுவும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை. வகுப்பறையில் காணப்பட்ட உருக்கு அலுமாரியில் சில ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவதானம் மேற்கொள்ளப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஆசிரியர் வழங்கிய பயிற்சிகளைச் செய்வதற்குத் தேவையான பயிற்சிக் கொப்பியை அனீஸ் கொண்டு வந்திருக்கவில்லை. அப்போது உருக்கு அலுமாரி யிலிருந்து புதிய பயிற்சிக் கொப்பியொன்றையெடுத்து அனீஸிடம் கொடுத்து "இதில் பயிற்சிகளைச் செய். இந்தக் கொப்பியைக் கவனமாகப் பயன்படுத்து" (ஆழ்சிந்தனைப் பதிவேடு: 2004) என்று ஆசிரியர் கூறினார். இந்த வகுப்பறை, மாணவர் விருப்பத்தை ஈர்க்கும் வகையில் பண்பு ரீதியான ஒழுங்கமைப்புகளுடன் கூடியதாகக் காணப்படாமையினால் பிள்ளைநேயச் சூழலுக்குரிய தன்மைகள் வகுப்பறையி லிருக்கவில்லை எனக் குறிப்பிடல் முடியும்.

அனீஸ் 4 ஆம் 5 ஆம் தரங்களில் இருந்தபோது (2005-2006) அவரது வகுப்பறை L - வடிவத்திலமைந்திருந்த இரு மாடிக் கட்டிடத்தின் மேல் மாடிக்கு மாற்றப்பட்டிருந்தது. (உரு - 8) படிக்கட்டுக@டாக ஏறியவுடன் நடைக்கூடத்தின் இடது பக்கமாக ஓர் சிறிய அறை காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏறக்குறைய 18m நீளத்துக்குக் காணப்பட்ட பெரிய மண்டபத்தில், சிறிய அறையின் அருகில் வகுப்பு அமைந்திருந்தது. அனீஸ் கற்றுக் கொண்டிருந்த 4ம் வகுப்புடன் 3ம் வகுப்பும் இணைக்கப்பட்டு பல்தர வகுப்பறையாக 2005ம் ஆண்டிலும், அவர் 5ம் வகுப்பிலிருந்தபோது 4ம் வகுப்புடன் இணைந்த பல்தர வகுப்பறையாக 2006ம் ஆண்டிலும் வகுப்பறை ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. இவ்வகுப்பறை அமைந்திருந்த மண்டபத்தின் அடுத்த கோடியில், L வடிவினது மற்றக் கிளையில் 2006 ஆம் ஆண்டில் சிங்கள மொழி மூல 5 ஆம் வகுப்பு காணப்பட்டதுடன் அதனைத் திறந்தோ பூட்டியோ வைப்பதற்காக வசதியிருந்தது. இதே கிளையின் மற்றக் கோடியில் கூட்டங்கள் நடைபெறுவதற்கு ஏற்றவாறு மேடை யொன்றும் அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு: 8 - தரம் 4வும், தரம் 5வும் (2005 இலும், 2006 இலும்) : வகுப்பறை ஒழுங்கமைப்பு

வகுப்பறை மேல் மாடியிலமைந்தும், அதன் இருபக்கச் சுவர்களின் மேல்பகுதிகள் கம்பி வலையுடனும் இருந்தமையினால் போதுமான காற்றோட்டமும் இயற்கை ஒளியும் வகுப்பறைக்குள் கிடைக்கக்கூடியதாகவமைந்திருந்தது. மூன்றாம் வகுப்பு இறுதி வரை இத்தகைய நிலைமை அனீஸ் கற்ற வகுப்பறைகளிற் காணப்படவில்லை. அத்துடன் 6m x 18m அளவுடைய பெரிய மண்டபத்தில் 4 மாணவர்களை மட்டும் கொண்ட அனீஸுடைய வகுப்பும் 10 மாணவர்களைக் கொண்ட இன்னொரு வகுப்பும் மட்டுமே இருந்தமையினால் பிள்ளைகள் சுதந்திரமாக இயங்கித் திரியும் வகையில் அங்கு இட வெளியுமிருந்தது. இதனையும் ஒரு நேரெண்மாற்றமாகக் கொள்ள முடியும்.

எவ்வாறாயினும், வகுப்பறையில் நேர அட்டவணை, கலண்டர் போன்ற எதுவும் காட்சிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. அதுபோலவே கட்புல சாதனங்களோ மாணவர் செயற்பாடு களுடன் தொடர்பான பொருட்கள், கருவிகளோ மாணவர் ஆக்கங்களோ காட்சிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இவ்வகுப்பறை அமைந்துள்ள மண்டபம், வலயத்திலுள்ள ஆசிரியர் களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள், கருத்தரங்குகள் முதலானவற்றுக்கு அடிக்கடி பயன்படுத்தப்படுவதாகவும் வகுப்பறையில் வைக்கப்படும் பொருட்கள் அவ்வாறான சந்தர்ப் பங்களில் காணாமல் போய்விடுவதாகவும் அல்லது சேதமடைந்து விடுவதாகவும் ஆசிரியர் குறிப்பிட்டார். இதுவே வகுப்பறை மூளியாகவிருப்பதன் காரணம் எனவும் ஆசிரியர் குறிப்பிட்டார். (ஆழ்சிந்தனைப் பதிவேடு 2005)

மண்டபத்தில் கூட்டம் போன்ற நிகழ்வுகள் நடைபெறும் நாட்களில் இடம் காணப்படும் ஏதாவதொரு இடத்துக்கோ அல்லது அதிபர் காரியாலயம் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டிடத்தின் சிறிய அறைக்கோ அனீஸுடைய வகுப்பு தற்காலிகமாக இடமாற்றப் படுவதாகவும் ஆசிரியர் குறிப்பிட்டார் (ஆழ்சிந்தனைப் பதிவேடு - 2005).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ஆம் 2ஆம் வகுப்புகளில் அனீஸ் கற்றபோது சிற்சில கட்புல சாதனங்களைக் காட்சிப்படுத்த லின் மூலமும் குறைந்தளவிலேனும் வேலை மேசை, சுற்றாடல் மூலை என்பனவற்றின் பயன்பாட்டின் மூலமும் பிள்ளை நேயச் சூழல் வகுப்பறையில் ஏற்படுத்தப்பட முயற்சிக்கப்பட்டிருந்ததெனினும் பௌதிகச் சூழல் பிள்ளை நேயத்துக்குரிய பண்புகளுடையதாகவிருக்கவில்லை. 3ஆம் வகுப்பிலிருந்தபோது பிள்ளை நேயத்துக் குரிய பண்புகள் வகுப்பறையில் மேலும் குறைந்து போய்விட்டன. 4ஆம் 5ஆம் வகுப்புகளில் அனீஸ் இருந்தபோது காற்றோட்டம், இயற்கை வெளிச்சம், இடவெளி போன்ற பௌதிக சூழல் ஓரளவு பிள்ளை நேயப் பண்புகளைப் பெற்ற போதிலும் வகுப்பறையின் ஏனைய பண்புக் கூறுகள் பிள்ளை நட்புக்குரியவாறு ஒழுங்கமைக்கப்பட் டிருக்கவில்லை. இவ்வாறான வகுப்பறை ஒழுங்கமைப்பு அனீஸுடையதும் அவரது சக மாணவர்களதும் கற்றலில் எதிர்கணியப் பாதிப்புகளைச் செலுத்தியுள்ளனவென்பது தெளிவாகும்.

## ஆசிரியர் பக்கப்பார்வை (Teacher Profile)

இப்பாடசாலையில் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர் தொகை (அட்டவணை 1) மற்றும் ஆசிரியர் இடமாற்றக்கோலம் அட்டவணை 2 இல் ஏற்கனவே தரப்பட்டுள்ளது. அத்துடன் ஆய்வுக்குரிய இக்காலப் பகுதியில் பாடசாலையின் பெரியதொரு பிரச்சினையெனக் கருதுமளவிற்கு ஆசிரியர் பற்றாக்குறை இருக்கவில்லை. எனினும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனீஸ் என்ற பிள்ளை 1 ஆம், 2 ஆம் வகுப்புகளில் இருந்தபோது வகுப்பாசிரியையாகப் பாடசாலையிலிருந்த தொண்டர் ஆசிரியர் கடமை பார்த்துள்ளார்.

1978 இல் இப்பாடசாலைச் சூழலில் பிறந்த இத்தொண்டர் ஆசிரியை இங்கேயே தொடர்ந்து வாழ்ந்து வருபவர். இப்பிரதேசத்தின் ஒரு பாடசாலையில் 9 ஆம் தரம் வரை கல்வி பெற்ற அவர், 10 ஆம் 11 ஆம் வகுப்புகளில் கற்பதற்காக இப்பிரதேசத்தின் வேறொரு பாடசாலைக்கு மாறியவர். 1993 ஆம் ஆண்டில் அப்பாடசாலையினூடாக க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்ற பின்னர் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டவர். எனினும் தமது சொந்த முயற்சியில் க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்கு கலைத்துறையில் தோற்றிச் சித்தி பெற்றுள்ளார். வெளிவாரியாகப் பட்டப் படிப்பைத் தொடரும் ஆர்வமுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1999 செப்டெம்பர் மாதம் முதல் இப்பாடசாலையில் தொண்டராசிரியராகப் பணிபுரிய ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கை வானொலி பகுதிநேர ஒலிபரப்பாளராக மூன்று மாதம் சேவையாற்றியுள்ளார். திருமணமாகாத இவர் நல்ல தோற்றமுடையவர் என்பதுடன் எளிமையும் கண்ணியமிக்கதுமான முறையில் ஆடையணிபவராகவும், இஸ்லாமிய பாரம் பரியங்களைத் தழுவி அணிபவராகவும் காணப்பட்டார். சமய விழுமியங்கள், கடமை களுக்கு மதிப்பளிப்பவராகவும் சமயப் பற்றுள்ளவராகவும் இஸ்லாமியரான இந்த ஆசிரியை காணப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை சார்ந்த கருமங்களில் தனது நேரத்தைச் செலவு செய்பவராகவும் (உதாரணமாக காரியாலயச் செயலருக்குரிய பல வேலைகளை அதிபர் இவரிடம் ஒப்படைப்பதுண்டு) தான் ஒரு தொழிலாக மட்டுமன்றி ஒரு சமூகத் தொண்டு புரிவதாகவும் மனதிற் கொண்டு செயற்படுபவராக இவர் தன்னைப் பற்றி விவரிப்பார்.

ஆசிரியர் என்ற வகையில் எவ்வித முறைமையான பயிற்சிகளும் பெற்றிராத இவர் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய மூன்று நாள் செயலமர்வொன்றில் (2002 ஆம் ஆண்டில்) கலந்து கொண்டுள்ளார். முன்னுதாரணமாகக் கொண்டு கற்பித்தல் அனுப வங்களையோ, திறன்களையோ வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற வேறு பொருத்தமான ஆசிரியர்கள் அவருக்குப் பாடசாலையில் வாய்க்கவுமில்லை. அவ்வாறு அனுபவம் குறைந்தவர்களுக்கு வழிகாட்டக்கூடிய நடைமுறைகள் ஏதும் பாடசாலையில் காணப்படவு மில்லை.

இக்காரணங்களால், இவ்வாசிரியர் தனது மாணவர்களை ஒத்த சூழலிலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருபவராகவிருந்தும், இம்மாணவர்களது வீட்டு மற்றும் சமூகச் சூழலை நன்கு புரிந்து கொண்டவராகவிருந்தும்; அம்மாணவர்களைப் பற்றிய நேரெண் மனப்பாங்குகள் தன்னிடமிருப்பதாக வெளிக்காட்டிக் கொள்பவராகவிருந்தும், அம்மாணவர் களில் கல்வி, ஆளுமை விருத்தியை எப்படியேனும் ஏற்படுத்துவேன் என்று உறுதிபூண்ட வராக எடுத்துக் கூறி வருபவராகவிருந்தும் மாணவரில் குறிப்பிடத்தக்க மேம்பாடு அவதானிக்கப்பட முடியவில்லை. உதாரணமாக எந்நேரமும் தாமாகவே ஏதாவ தொன்றை எழுதிக்கொண்டோ வரைந்து கொண்டோ பொழுதைக் கழிக்கும் தன்மைகளை வெளிக் காட்டிய அனீஸ் என்ற மாணவன் இரண்டாம் வகுப்பு இறுதிப் பகுதியில் கூட சிறப்பானதெனக் கூறும் வகையில் ஒரு சித்திரம் வரைய முடியாத வனாகவே காணப்பட்டான். அவ்வாறே கைகளைக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டு உணவு உட்கொள்ள ஆரம்பிக்கும் பழக்கமோ, சுற்றாடலை அசுத்தமாக்காது நேர்த்தி யாக உணவுட் கொள்ளும் பழக்கமோ அவனிடம் விருத்தியாகி இருக்கவில்லை. அதே போல அனீஸ் வருடத்தில் 30 இற்கும் மேற்பட்ட நாட்கள் பாடசாலைக்கு வருகை தராமலிருந்துள்ளமை பற்றி அவனுடைய பெற்றோர்களிடம் கேட்கப்பட்டபோது பாடசாலையில் சீரான கல்விப் போதனை இடம் பெறாமையினால் அவ்வப் போது பாடசாலைக்கு அனுப்புவதில்லையென்று அவர்கள் குறிப்பிட்டமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

எவ்வாறாயினும் ஆசிரியை தம்மைப் பற்றி நேரெண் மனப்பாங்குடன் இருப்பது வெளிக் காட்டப்பட்டதுடன் அதிபரும் இவ்வாசிரியர் நல்ல முறையில் பணியாற்றுபவர் என்ற கருத்தை கூறியுள்ளார்.

அனீஸ் 3ஆம் வகுப்பிற்கு வந்தபோது 50 இற்கு மேல் வயதுடைய முஸ்லிம் ஆசிரியரொருவர் வகுப்பாசிரியராகக் கடமை மேற்கொண்டார். இவர் நேர்த்தியான முறையில் ஆடை யணியக்கூடியவராகவும், உயரத்துக்கேற்ற பருமனுடையவராகவும், சத்தமாகக் கதைக்கக் கூடிய குரல் வளம் உடையவராகவும், கம்பீரமானவராகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டார். தோற்றத்தில் காணப்பட்ட முதிர்ச்சியும் அதிகம் கதைக்காத தன்மையும் அவரைப் பற்றிய அதிக பின்னணித் தகவல்களைப் பெற்றுக் கொள்ளத் தடையாகவிருந்தனவெனினும் அவர் திருமணமான, பயிற்றப்பட்ட ஆசிரியர் என்பதை அறிய முடிந்தது.

இவர் அவதானிக்கப்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் மரபு முறையிலான கற்பித்தல் நுணுக்கங்களை மட்டும் கையாள்பவராகவும் மாணவர் செயற்பாடுக@டாகக் கற்றல் அனுபவங்களை தயாரித்துப் பயன்படுத்தாதவராகவுமே காணப்பட்டார். மாணவர்களை ஆசிரியர் மேசைக்கருகில் அழைத்து பாடப்பொருளை விளக்குவார். அதனைத் தொடர்ந்து அப்பாடப் பொருளின் கீழ் பயிற்சிகளை வழங்கி அவற்றைச் செய்து காட்டுமாறு பணித்து மாணவர்களை அவர்களது இடங்களில் அமரச் செய்வார். ஒவ்வொரு மாணவராகப் பயிற்சி செய்து காட்டும்போது சரி, பிழை போட்டுக் கொடுப்பார். மாணவர் பயிற்சி செய்யும் வரையில் தான் ஆசிரியர் கதிரையில் அமர்ந்து ஏதேனும் தனது அலுவல்களை அமைதியாகச் செய்து கொண்டிருப்பார். இவைகளே அவர் பொதுவாகப் பின்பற்றிய கற்பித்தல் நடைமுறைகள். எனினும் புதிய கற்பித்தல் நுணுக்கங்கள் ஆசிரியர்களால் பயன்படுத்தப்பட வேண்டுமென்று கல்வியாளர்கள் எதிர்பார்ப்பதைப் புரிந்து வைத்தவராக அவரைச் சில சந்தர்ப்பங்களில் காண முடிந்தது. ஏனெனில் அச்சந்தர்ப்பங்களில் தான் அவதானிக்கப்படுவதை உணர்ந்தமையினால் மாணவருடன் கலந்துரையாடியவாறு அல்லது உடனடியாகக் கிடைத்த (உதாரணமாக பெருக்கல் வாய்ப்பாடு கற்பிப்பதற்கு கடதாசித் தாள் துண்டுகளை அப்போதே தயாரித்துப் பயன்படுத்த (முயன்றார்). பொருள்களைப் பயன்படுத்தியவாறு கற்பித்தல் முறையை மாற்றியமைக்க முயற்சித்ததைக் காண முடிந்தது. அதுபோலவே ஆராய்ச்சியாளர் பாடசாலைக்கு வருகை தந்த இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒலிநாடாவொன்றை (ஒரு பாடல் பதிவு செய்யப்பட்டிருந்தது) வகுப்பறையில் பாவித்தார். ஆயினும் பாவிப்பதற்கான நோக்கம் ஏதும் காட்டப்பட வில்லை. இது பல்தர வகுப்பாக விருந்தமையினால் இத்தகைய கற்பித்தல் முறை இரண்டு வகுப்புப் பிள்ளைகளிலும் செல்வாக்குச் செலுத்தின தவிர மாணவர்களுடன் நட்பாகப் பழகும் போக்கு அல்லது சரளமாகக் கதைக்கும் போக்கிற்குப் பதிலாக ஓரளவு மாணவரிலிருந்து தூரமாக விருந்து கட்டளைகள் பிறப்பிக்கும் வகையில் மாணவர்களுடனான அவரது ஊடாட்டம் அமைந்திருந்தது. தவறும்போது மாணவர் களுக்கு ஏசக்கூடியவராகவும், பிரம்படி வழங்கக் கூடியவராகவும் அவர் காணப்பட்டார்.

அவரது மாணவர்கள் குறும்புத்தனமுடையவர்களெனத் தெரிந்திருந்தும், ஆசிரியரது கவனயீனத்தினால் அவர்கள் தவறு செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக வசதிக்கட்டணமாகச் சேர்ந்த பணத்தை தனது மேசை மீது வைத்துவிட்டு ஆசிரியர் வகுப்பிலிருந்து வெளிச் சென்று விட்டதைக் குறிப்பிடலாம். அப்போது, அப்பணத்தில் ஒரு தொகையை அனீஸ் எடுத்து சிற்றுண்டிச்சாலையில் பொருட்களை வாங்கி உண்டு விட்டதைக் குறிப்பிடலாம். இந்நிகழ்ச்சியை ஆசிரியரும் அதிபரும் வகுப்பின் ஏனைய பிள்ளைகளும் ஆராய்ச்சியாளரிடம் சுட்டிக் காட்டினர். இவ்வாசிரியர் இந்த ஆய்வுடன் தொடர்பான படிவங்களைப் பூர்த்தி செய்து ஒத்துழைப்பு வழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வரவில்லை. எனவே அதிபர், அக்கருமங்களுக்காக வேண்டி சமய பாடம் போதிப்பதோடு நூலகத்துக்கும் பொறுப்பாகவிருந்த மற்றொரு ஆசிரியரை ஏற்பாடு செய்து கொடுத்தார். இவர் நன்கு ஒத்துழைப்பு வழங்கி தேவையான தரவுப் பதிவுப் படிவங்களை அவ்வப்போது பூர்த்தி செய்து கொடுத்தார். மேலும் மாணவன் பற்றிய அவரது அகப்பார்வை (perception) ஏதென ஆராய்ச்சியாளருக்கு விவரித்தார். 3 ஆம் வகுப்பில் அனீஸ் இருந்தபோது வாய்த்த இத்தகைய ஆசிரியரின் கற்பித்தல் செயன் முறைகள் அனீஸுடையவும் அவனது சக மாணவர்களதும் கற்பித்தலில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தின.

கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஏற்ப 3 ஆம் 4 ஆம் வகுப்புகளில் ஒரே ஆசிரியரே கற்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படினும் அனீஸ் 4ம் வகுப்பில் கற்றபோது இன்னொரு பெண் முஸ்லிம் ஆசிரியை வாய்த்தார். இவரும் 50 வயதுக்குக் கிட்டிய வயதுடையவராகவும், பயிற்றப்பட்ட ஆசிரியையாகவும், சாரி, பிளவுஸ், செருப்புகள் என்பன ஒன்றுக்கொன்று பொருந்தக்கூடியவாறு நேர்த்தியாக ஆடையணிபவராகவும் இருந்தார். ஆயினும் அவரது ஆடையணிகள் இஸ்லாமிய பாரம்பரியங்களெதனையும் பிரதிபலிக்கவில்லை. இவரது முகபாவனையும் பிள்ளை நேயமானதாகக் காணப்படவில்லை. இவரும் அனீஸ் 3 ஆம் வகுப்பிலிருந்தபோது வகுப்பாசிரியராக இருந்தவரைப்போன்று மரபு ரீதியான கற்பித்தல் நுணுக்கங்களை மட்டுமே பயன்படுத்துவதை அவதானிக்க முடிந்தது. தவிரவும் இவர் பிள்ளைகள் பற்றியும் அவர்களது பெற்றோர்கள் பற்றியும் ஓரளவு தகவல்களைத் திரட்டி வைத்திருந்தார். உதாரணமாக ஆராய்ச்சியாளர் அவதானிப்புக்காகச் சென்றிருந்த சந்தர்ப்பமொன்றில் ஒவ்வொரு பிள்ளையாக எழுந்திருக்கச் செய்தார். பின்னர் அப்பிள்ளை யின் பெயர் மற்றும் அவரது தாய், தந்தை, குடும்ப விபரங்கள், வாழ்க்கை முறைகள் பற்றிய சிற்சில தகவல்களை முன்வைத்தார். இவ்வாறு அவர் குறிப்பிட்ட சில தரவுகள் (உதாரணமாக அனீஸுடைய தகப்பன் முஸ்லிம், தாய் இந்து) ஆராய்ச்சியாளர் நேரடியாகத் திரட்டிய தகவலுக்கு முரணாகவிருந்தது. (உண்மையில் தாய் முஸ்லிம், தகப்பன் இந்து)

எவ்வாறாயினும் இவ்வாசிரியர் தமது வகுப்புப் பிள்ளைகள் பற்றிய மறையான மனப்பாங் கினையே பெரிதும் கொண்டவராகக் காணப்பட்டார். அவ்வாறே பெற்றோர்கள் பற்றியும் மறையான எண்ணக்கருத்துகளே அவரினால் அதிகமாகச் சுட்டிக் காட்டப்பட்டன. உதாரணமாக "பெற்றோர்கள் பிள்ளைகள் மீது எத்தகைய கரிசனை காட்டாதவர்கள்" மற்றும் "பிள்ளைகள் நற்பண்புகளோ, நல்ல பழக்கவழக்கங்களோ இல்லாதவர்கள்" மற்றும் "அவற்றை அப்பிள்கைகளின் வீட்டுப் பின்னணியின் காரணமாக அவர்களில் ஏற்படுத்தவும் முடியாது" என்பன போன்ற கருத்துக்களை ஆசிரியர் ஆராய்ச்சியாளரிடம் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக "அனீஸ் ஒரு மதிநுட்பமுள்ள அதேவேளை ஆக்கிரமிப்புத் தன்மையுடன் கூடிய பிள்ளையாதலின் அவர் சமூகத்துக்குப் பாரமான குடிமகனாகத்தான் வருவார். ஏனெனில் பெற்றார்கள் அவரைப் பற்றி எந்தக் கரிசனையும் காட்டுவதில்லை. இந்நிலைமையில் ஆசிரியரால் எதுவும் செய்ய முடியாது" எனவும் குறிப்பிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனீஸ் எப்போதும் மாணவர்களுடன் சண்டையிட்டுக் கொள்வதாகவும் அவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதாகவும் அதனால் அம்மாணவனை ஏனைய மாணவர்களிலிருந்து தனியாக்கி அமரச் செய்வதாகவும் ஆனால் அது பற்றி அனீஸுடைய தகப்பன் முறைப்பாடு செய்ய வந்ததாகவும் இந்த ஆசிரியர் ஆராய்ச்சியாளரிடம் குறிப்பிட்டார். பெற்றோர் எவ்வித கரிசனையும் காட்டுவதில்லையென்ற அவரது கூற்று அவரின் இந்தக் கூற்றுடன் முரண்படுவது சுட்டிக் காட்டத்தக்கது. இந்த ஆசிரியையும் பிள்ளைகளுக்குக் கட்டளைகள் பிறப்பித்துக் கீழ்ப்படியச் செய்யவும், தவறிழைக்கும்போது பிள்ளைகளைத் தண்டிக்கவும் கூடிய ஒரு மரபு ரீதியான முறையைக் கையாள்பவராக அவதானிக்கப் பட்டார். இவரது வழிகாட்டுதலும் அனீஸுடைய கற்றலை மேம்படுத்தும் வகையில் பங்களிக்கவில்லை என்பதும் அவனது பண்புக் கூறுகளைச் சீர்செய்ய உதவவில்லை யென்பதும் வெளிப்படையாகத் தெரிந்த விடயங்களாகும்.

1 ஆம், 2 ஆம் வகுப்புகளிலிருந்தபோது "டீச்சர் செய்யச் சொன்னார்;" "டீச்சர் செய்ய வேண்டாம் எனச் சொன்னார்" என்ற பாணியில் சில கருமங்களைச் செய்வதற்கும், செய்யாமல் தவிர்ப்பதற்கும் பெற்றோரிடம் அனீஸ் காரணம் கூறுவார். ஆசிரியை பற்றிய ஒரு கண்ணியம் அவர் மனதிலிருந்ததற்கு இதனைச் சான்றாகக் கொள்ளலாம். ஆயினும் 4 ஆம், 5 ஆம் வகுப்புகளிலிருந்தபோது அவ்வாறு ஆசிரியர்களை மதிப்பதன் காரணமான செயல் அவரிடம் வெளிப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும். மாற்றமாக 4 ஆம் வகுப்பில் ஆராய்ச்சியாளர் அவதானிப்புக்காகச் சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் அனீஸ் ஏனைய மாணவனுடன் சண்டையிட்டதை ஆசிரியர் கடிந்தார். அப்போது அனீஸும் கடினத்தன்மையுடன் முறைத்துப் பார்த்தவனாக ஆசிரியருக்குத் துலங்கல் காட்டினார்.

அனீஸ் 5 ஆம் வகுப்பிற்கு வந்தபோது ஒரு தமிழ்ப்பெண் அவரது ஆசிரியராகக் கடமை செய்தார். பாடசாலையிலிருந்து சற்றுத் தொலைவில் வசிக்கும் அவர் பஸ்ஸில் பாடசாலைக்கு வந்து செல்பவர். 35 வயது மதிக்கத்தக்கவர். சாதாரண உயரம், பருமன், தோற்றம் உடைய அவர் பயிற்றப்பட்ட ஆசிரியருமாவார். அவரது வீட்டிலும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழலில் வாழ்பவர். உதாரணமாக அவருடன் இருக்கும் தாய் புத்தி சுவாதீனம் இழந்தவர். எந்நேரமும் கண்காணிக்கப்பட வேண்டியவர். தவறினால் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுவார். அதுபோலவே கணவனை விட்டுப்பிரிந்து வாழும் இவருக்கு மூன்று பிள்ளைகளுள்ளனர்.

இவ்வாசிரியை இதுகால வரை அனீஸுடைய வகுப்பாசிரியர்களாக இருந்தவர்களை விட சிறிது வித்தியாசமானவராகவிருந்தார். பிள்ளைகளது வீட்டுப் பின்னணிகளை ஓரளவு தெரிந்து வைத்திருந்தபோதிலும் "இவர்கள் திருத்தப்பட முடியாதவர்கள்" என்பது போன்ற எண்ணங்களை முன்கூட்டியே ஏற்படுத்திக் கொண்டு பிள்ளைகளை அவர் அணுகவில்லை. தவிரவும் மாணவர் செயற்பாடுகளை ஏற்பாடு செய்து கொடுக்கக் கூடியவராகவும், மாணவருடன் சேர்ந்து செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவராகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாசிரியர் அவதானிக்கப்பட்டுள்ளார். உதாரணமாக பாடநூலில் தரப்பட்ட கவிதை கற்பிக்கப்படுகையில் முதலில் இராகத்துடன் பாடிக்காட்டியும், பின்னர் பிள்ளைகளைப் பாடவைத்து தானும் சேர்ந்து பாடி அக்கவிதை மூலம் பிள்ளைகள் கற்க எதிர்பார்க்கப் பட்டவற்றை அடையச் செய்ய முயற்சித்தார்.

இந்த வருடத்தில் பிள்ளைகள் 5 ஆம் வகுப்புக்குரிய புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியுள்ளமை இவ்வாசிரியர் முன்னுரிமைப்படுத்திய மற்றுமொரு அம்சமாகும். பல பாடசாலைகளிற்போல் இதற்காக நெட்டுருப்பண்ணும் அநேக செயற்பாடுகளிலும் மாதிரிப் பயிற்சிகள் செய்வதிலும் பிள்ளைகளை ஈடுபடுத்தியுள்ளார். மேலும் இதற்காக வேண்டி பாடசாலை விட்ட பிறகு மேலதிக வகுப்புகளும் வைத்துள்ளார். தனது வீட்டுச் சூழல் காரணமாக சனி, ஞாயிறு தினங்களில் அவரால் பாடசாலைக்கு வந்து கொள்ள முடியாத போதிலும் பிள்ளைகளைத் தனது வீட்டுக்கு வரச் சொல்லி அங்கு பாட போதனை நடாத்தியுள்ளார். புலமைப்பரிசில் பரீட்சையில் இப்பிள்ளைகளைச் சித்தி யடையச் செய்வது சுலபமானதல்ல என்பதை அவர் உணர்ந்திருந்தபோதிலும் முயற்சி செய்தால் இப்பிள்ளைகளையும் சித்தியடையும் மட்டத்துக்கு உயர்த்தப்படல் சாத்தியமே யென்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார். “மேலதிக வகுப்புகளுக்காக எவ்வளவு பணம் அறவிடுகிறீர்கள்” என்று கேட்டபோது வன்மையாக மறுத்து தான் பணம் அறவிடுவதில்லையெனக் குறிப்பிட்டார்.

புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்தபோது அனீஸ் 200 இற்கு 71 புள்ளிகளைப் பெற்றிருந்தார். அனீசுடையவும், இந்தப் பாடசாலைப் பிள்ளைகளது பெற்றோர்களுடையதும் வீட்டு மற்றும் சமூகச் சூழலைக் கருத்திலெடுத்தால் 71 புள்ளிகள் பெற்றது கூட குறிப்பிடத்தக்க சாதனையாகுமென்ற கருத்தை இவ்வாசிரியை குறிப்பிட்டார். அனீஸின் வகுப்பிலிருந்த மற்றொரு பிள்ளை 80 புள்ளிகள் பெற்றிருந்தார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. 5 ஆம் வகுப்பிலிருந்த போது சில ஆக்கச் செயற்பாடுகளுக்கும் பிள்ளைகளுக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தது. உதாரணமாகத் துணிகளைக் கொண்டு பணப்பை (Money Purse) தயாரித்தமை, இலை மற்றும் பூக்களைக் கொண்டு நல்லதொரு அழகிய அலங்காரக் கோலத்தை உருவாக்கியமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக அனீஸ் என்ற பிள்ளையின் பாடசாலைக் கல்வியின் முதல் ஐந்து வருடங் களிலும் அவருக்கு வாய்த்த ஆசிரியர்களும் அவ்வாசிரியர்கள் அனீஸின் கற்றலில் செலுத்திய செல்வாக்கினையும் நோக்கும்போது ஒரு உண்மை வெளிப்படையாகத் தெரிகிறது. அதாவது அனீசுடைய அடைவுமட்டம், அவரால் அடைந்திருக்கக்கூடிய மட்டத்திலும் பார்க்கப் பெரிதும் குறைந்ததாகவுள்ளமைக்கு அவருக்கு வாய்த்த ஆசிரியர் களது பங்களிப்பும் முக்கிய காரணமாகியுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளை பற்றிய பக்கப்பார்வை (Student Profile)

இக்கற்கைக்குட்படுத்தப்பட்ட அனீஸ் என்ற மாணவன் 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02ம் திகதி கொழும்பில் பிறந்தவர். அப்போது அவரது பெற்றோர் வசித்த அதே இடத்திலேயே இக்கற்கை காலம் முடியும் வரை வசித்து வருகின்றனர். 2002 ஆம் ஆண்டில் தகப்பன் 28 வயதுடையவராகவும் தாய் 23 வயதுடையவராகவும் இருந்தனர். தாய் பொலீஸில் பணிபுரிந்த வெலிமடையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரினதும், கொழும்பு மலே இனப் பெண்மணியினதும் புத்திரியாவார். பொலீஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் மீன் வியாபாரம் முதலானவற்றில் அனீஸுடைய பாட்டன் ஈடுபட்டு வந்துள்ளார். இஸ்லாம் அவர்களது சமயமாகவிருந்தது. அனீஸின் தந்தை இந்து சமயத்தைச் சேர்ந்த இந்திய வம்சா வழித் தமிழர். ஆயினும் அனீஸுடைய தாயாரைத் திருமணம் செய்யும் நோக்கில் இஸ்லாம் சமயத்தைத் தழுவியவர். இருவரும் தமிழ், சிங்கள மொழிகளில் தேர்ச்சியுடைய வர்கள். தாய் மலாய் மொழியிலும் தேர்ச்சி உடையவர்.

அனீஸுடைய தந்தை அங்காடி வியாபாரங்களிலோ அதிஷ்ட சீட்டு விற்பனையிலோ அவ்வப்போது ஈடுபடுவார். இவர் மதுபானக் குடிப்பழக்கமுடையரெனினும் அனீஸுடைய தாயாரை விட சாதுவான தன்மைகள் அவரிடம் காணப்பட்டன. தாயார், தகப்பனாருடன் சச்சரவுகளில் ஈடுபடும்போது, விசேடமாக அவர் மது அருந்திய நிலையில், பிள்ளைகளின் முன்னால் அவர்கள் கீழ்த்தரமான முறையில் ஏசிக் கொள்வதும் சண்டையிட்டுக் கொள்வதும் அனீஸுடைய மனப்பாங்குகளிலும் நடத்தைகளிலும் செல்வாக்குச் செலுத்திய முக்கிய விடயங்களாகும். இவ்வாறு நிகழ்வதாக அனீஸின் தாய்வழிப் பாட்டன் குறிப்பிட்டார். (ஆ.சி.ப.ஏ.2004).

அனீஸ் குடும்பத்தில் இரண்டாவதாகப் பிறந்த பிள்ளையாவார். இவருக்கு முன்னர் பிறந்த ஆண் குழந்தை இறந்தே பிறந்தது. அனீஸுக்கு மூன்று வயதுடைய (2002 ஆம் ஆண்டில்) ஒரு தம்பியும் இருந்தார். அனீஸ் மெலிந்த தோற்றமும், 2005 இல் 134cm உயரமும், 24.5kg எடையும் உடையவராகக் காணப்பட்டார். ஆயினும் சோம்ப லின்றியும் சுறுசுறுப்பானவராகவும், உடலுறுப்புகளைத் தொடர்ச்சியாக யாதுமொரு இயக்கத்தில் ஈடுபடுத்தியவராகவுமே காணப்பட்டார். அனீஸ் சில தினங்களில் சுத்தமான ஆடைகளணிந்து பாடசாலைக்கு வருகை தந்திருந்த போதிலும் பொதுவாக ஆடை களைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணுபவராகக் காணப்படவில்லை. 5 ஆம் வகுப்பை அடைந்த பின்னரும் கூட இப்பழக்கம் விருத்தியாகியிருக்கவில்லை. அது போலவேதான் பற்சுத்தம், தலைமயிர்களை எண்ணெயிட்டு நேர்த்தியாகப் பேணுதல் என்பனவும் அவரிடம் விருத்தியுற்றுக் காணப்படவில்லை. மூக்கிலிருந்து சளி வடிவது 1ஆம், 2ஆம், 3ஆம் வகுப்புகளில் அதிகமாகக் காணப்பட்டது 4ஆம், 5ஆம் வகுப்புக்களில் ஓரளவு குறைந்திருந்தது. எவ்வாறாயினும் அதனை முறையாகச் சுத்தப்படுத்திக் கொள்ள அனீஸ் பழக்கப்படவில்லை. அவர் பாடசாலையில் சேர்வ தற்குச் சில காலங்களுக்கு முன்னர் வீட்டுக்கருகில் விளையாடிக் கொண்டிருந்தபோது அனீஸுடன் கூட விளையாடிய பிள்ளை குளத்தில் விழுந்து விட்டது. அப்பிள்ளையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கச் சென்று அனீஸும் குளத்தில் விழுந்து விட்டான். எப்படியோ பெரியவர்கள் கண்டு அனீஸை உணர்விழந்த நிலையில் நீருக்குள்ளிருந்து வெளியிலெடுத்து மருத்துவ மனையில் சேர்த்துள்ளனர். ஏறக்குறைய 4 மணி நேரத்தின் பின்னர் அவனுக்கு உணர்வு ஏற்பட்டுள்ளது. உடனேயே மற்றப் பிள்ளையும் குளத்தில் மூழ்கிய செய்தியைத்தான் அனீஸ் குறிப்பிட்டுள்ளான். அதன் பின்னரே அவ்விரண்டாவது பிள்ளை தேடப் பட்டுள்ளான். எனினும் அப்பிள்ளை இறந்த நிலையில்தான் மீட்கப்பட்டுள்ளான். இந்நிகழ்வை மனதில் கொண்டு அனீஸுடைய செயற்பாடுகளை, அவன் வெளியில் செல்வதை அவன் நண்பர்களுடன் விளையாடுவதை மற்றும் இவைபோன்ற விடயங்களைத் தான் பெரிதும் கட்டுப்படுத்தவதாக அனீஸின் தாயார் ஆரம்பத்தில் கூறியிருந்தார். (ஆ.சி.ப.ஏ: 2002).

அனீஸ் பாடசாலைக்குச் சேர்வதற்கு முன் முறைமையான முன்பள்ளிக் கல்வி எதுவும் பெற்றிருக்கவில்லை. ஆயினும் அவரது வீட்டுச் சூழலில் சமயக் கல்விப் போதனை செய்யும் ஒரு பெண்மணியின் வீட்டில் அப்பெண்ணிடம் போதனை பெற்றுள்ளார். தொடர்ந்தும் அங்கு சென்று திருக்குர்ஆன் வாசிக்கும் பயிற்சி பெற்று வந்துள்ளார். அப்பெண்மணி தன்னிடம் இவ்வாறு ஏறக்குறைய 200 பிள்ளைகள் போதனை பெறுவதாகவும் வெவ்வேறு நேரத்தில் வெவ்வேறு குழுக்களுக்குப் பாடம் நடத்துவதாகவும் குறிப்பிட்டார். தவிர அனீஸ் குறும்பு மிகுந்த போக்கிரித்தனமான பிள்ளையெனவும் பிறரைப் பற்றிக் குறைகளை முறைப்பாடு செய்பவரெனவும் (கோள் சொல்லல்) ஆனால் அவருக்கு நன்றாகப் பாடம் வருமெனவும் குறிப்பிட்டார் (ஆழ்சிந்தனைப் பதிவேடு: 2002). 2005 இல் சமயக் கல்விக்காக பள்ளிவாசலில் நடைபெறும் வகுப்புகளுக்குச் சென்றுள்ளார்.

பாடசாலைக்குச் சேர்ந்த சமயத்தில் ஏனைய பல சிறுவர்கள் போன்று பயத்தை வெளிக் காட்டிக் கொண்டோ அழுது கொண்டோ பெற்றோர் அருகிலேயே இருக்க வேண்டுமென அடம்பிடித்துக் கொண்டோ அனீஸ் காணப்படவில்லை. சாதாரணமாகவும் அமைதியாக வும் இருந்துள்ளார். அனீஸுடைய பழக்கவழக்கங்கள் நடத்தைகளைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுதல் சுலபமல்ல. ஏனெனில் ஒன்றுக்கொன்று முரணான நடத்தைகள் இப்பிள்ளையில் மாறிமாறி வெளிக்காட்டப்படுகின்றன. உதாரணமாகப் பிறருடன் ஐக்கிய மாகச் சேர்ந்து பழகுவதில் இப்பிள்ளை சிரமப்படுகிறார். "வீட்டுக்கு அயலிலுள்ள பிள்ளைகளுடன் விளையாடச் சென்றால் குறுகிய நேரத்திலேயே அவர்களுடன் சச்சரவுகள் ஏற்படுத்திக் கொண்டு வீடு திரும்புவான்" என்பது தாயின் கூற்று. ஆரம்பத்தில் அமைதியாகவிருந்த அனீஸ் பாடசாலையிலும் படிப்படியாகக் குறும்புத்தனத்திலீடுபடலானார். ஏனைய மாணவர்களுடன் அடிக்கடி சச்சரவுகளிலீடுபட்டுக் கொள்வதும் அது பற்றி ஆசிரியரிடம் முறைப்பாடுகள் வருவதும் சாதாரணமாகக் காணக்கூடியதாயிற்று (ஆழ்சிந்தனைப் பதிவேடு, 2002 : பக்.17).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை மற்றப் பிள்ளைகளுக்கு உதவும் பண்புகளும் இவரிடத்தில் வெளிக்காட்டப் பட்டுள்ளன. உணவு, கற்றல் உபகரணங்கள் என்பவற்றை இல்லாதவருக்கு கொடுத்தல் போன்றன இதில் அடங்கும் (ஆ.சி.ப.ஏ. 2002 பக். 03).

ஆராய்ச்சியாளர் பாடசாலைக்குச் சென்றிருந்த ஒரு தினத்தில் (அனீஸ் 3ம் வகுப்பிலிருந்த போது) அனீஸ் பாடசாலைக்கு வருகை தந்திருக்கவில்லை. அத்தினம் வருகை தந்திருந்த பிள்ளைகளிடம் அனீஸ் பற்றிய அவர்களது கருத்துக்களை ஆராய்ச்சியாளர் விசாரித்துக் கொண்டிருந்தார். எல்லாப் பிள்ளைகளும் தத்தமது புத்தகங்களில் பெயர் மற்றும் விபரங் களை எழுதுவதற்கு ஒரே மாதிரியான ஒட்டிகளைப் (stickers) பாவித்தனர். இவ்வொட்டி களை அனீஸ் கொண்டு வந்து தங்களுக்குக் கொடுத்ததாக எல்லாப் பிள்ளைகளும் குறிப்பிட்டனர். புதிய புத்தகங்கள் வாங்கினால் என்ன செய்வீர்களெனக் கேட்டபோது, அனீஸிடம் ஒட்டி கொண்டு வந்து தரும்படி கேட்டால் அவன் கொண்டு வந்து தருவான் எனவும் கூறினர். இவ்வாறு மாணவர்களுக்குதவும் செயல்கள் பல சந்தர்ப்பங்களில் அனீஸினால் வெளிக் காட்டப்பட்டுள்ளன.

2002 இல் வெட்க உணர்வு முழுமை பெற்றிருக்கவில்லை. ஆராய்ச்சியாளர் அனீஸின் வீட்டுக்குச் சென்றபோது முழுநிர்வாணமாகவிருந்த அவன் அதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவுமில்லை. 2002 இலேயே பாடசாலை விட்டு வீடு சென்றவுடன் முகம், கை, கால் கழுவிக் கொள்ளும் பழக்கம் அவனிடமிருந்தது. அதேபோல் 5 ஆம் வகுப்பிற்கு வந்த பின்னரும் கூட உணவுட்கொள்ள முன் கைகழுவிச் சுத்தம் செய்து கொள்ளாமலிருந்துமுள்ளார்.

1ஆம் வகுப்பிலிருந்தபோதே பாடசாலைக்கு நேரகாலத்துடன் வரும் பழக்கம் அனீஸிடம் இருந்தது. இதற்காக வீட்டிலுள்ளவர்களின் எவ்விதத் தூண்டுதலும் தேவையாகவிருக்க வில்லை. அனீஸ் தாமாகவே அவ்வாறு செய்தார். இப்பழக்கம் ஆய்வுக்குரிய முழுக் காலப் பகுதியிலுமே ஒரேவிதமாகக் காணப்பட்டுள்ளது.


படிப்படியாகக் குறும்புத்தனம் அதிகரித்து வந்துள்ளது. ஏனைய பிள்ளைகளுடன் சச்சரவு களில் ஈடுபடுவதும் அதிகரித்து வந்துள்ளது. அவரை விட பெரிய பிள்ளைகளுடனும் பிரச்சினை ஏற்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி யாளர் பாடசாலையில் இருந்த சந்தர்ப்பத்தில் அனீஸுடைய வகுப்பின் ஏனைய பிள்ளைகள் ஒவ்வொருவராகவும் கூட்டாகவும் "இவனைத் தண்டியுங்கள் சேர்". "இவனை பெயிலாக்குங்கள் சேர்". " இவனை பாடசாலையிலிருந்து விலக்கிவிடுங்கள் சேர்" என்று கேட்டுக் கொண்டதும் அப்போது "ஏன்", என விசாரித்ததும் "இவன் கெட்டவன்", "இவன் அடிப்பான்", "இவன் ஏசுவான்", "இவன் பொருட்களைப் பறிப்பான்" போன்ற விடைகளைப் பிள்ளைகள் கூறியதனையும் உதாரணங்களைக் குறிப்பிடலாம் (ஆ.சி.ப.ஏ:2004). இன்னொரு வகுப்பறைக்குச் சென்று அங்கிருந்த மாணவர்களைச் சுழன்று சுழன்று அனீஸ் தாக்கிக் கொண்டிருந்ததும் அப்பிள்ளைகள் அனீஸைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்ததும் இறுதியாக அவர்களுள் இரண்டு பிள்ளைகள் அனீஸை இறுக்கி சுவரில் சாய்த்துப் பிடித்துக் கொள்ள எத்தனித்துக் கொண்டிருந்தமையும் ஆராய்ச்சியாளர் நேரில் அவதானித்த ஒரு சம்பவமாகும் (2004 ஆ.சி.ப.ஏ.).

மேலும் 3ஆம் வகுப்பிலிருந்தபோது வசதிக் கட்டணம் சேகரித்த வகுப்பாசிரியர் அந்தப் பணத்தை ஆசிரியர் மேசை மீது வைத்துவிட்டுச் சிறிதுநேரம் வெளியே சென்றபோது அனீஸ் அங்கிருந்த 28 ரூபா பணத்தை எடுத்து சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று உணவுப் பொருட்கள் வாங்கி சாப்பிட்டுள்ளார். ஆசிரியரின் கவனயீனம் ஒருபுறமிருப்பினும் அனீஸின் நடத்தைகள் பிறழ்வான போக்கில் கணிசமான தூரத்துக்கு வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்ததை இந்நிகழ்வு மேலும் உறுதி செய்தது. இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஆய்வாளர் பாடசாலைக்குச் சென்றிருந்தபோது பிள்ளைகள் "அனீஸ் கள்வன்", போன்ற வார்த்தைகளால் தூற்றி ஆய்வாளரிடம் குறிப்பிட்டனர். அப்போது பிள்ளைகளது நகர்வு உருவில் காட்டப்பட்டுள்ளது.




**உரு 9 : வகுப்பறையில் பிள்ளைகள் நகர்ந்த கோலம்**

அனீஸ் இக்குற்றச்சாட்டுகளைப் பெரிதாகப் பொருட்படுத்தியதாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவரது மனப்பாங்குகள் பிறழ்வான நடத்தைகளைச் சார்ந்து வளர்ந்து கொண்டிருந்ததற்னுகு இதனையும் ஒரு சுட்டியாகக் கொள்ளலாம்.

இரண்டாம் வகுப்பிலிருந்தபோதே ஆசிரியர்களது அறிவுறுத்துரைகளுக்குச் செவிசாய்க்கவோ கீழ்ப்படியவோ மறுக்கும் பண்புக் கூறுகள் வெளிக்காட்டப்படத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிவிட்டன. ஆராய்ச்சியாளர் பாடசாலையிலிருந்தபோது அனீஸ் நீர்க்குழாயைத் திறந்து பிளாத்திக் போத்தலில் நீரை நிறைப்பதும் பின்னர் அதனைக் கழுவு தொட்டியில் கொட்டுவதுமாகவிருந்துள்ளார். "நீர் விரயமாகிறது. Tap ஐ மூடுங்கள்" என்று ஆசிரியர் பலமுறை கூறியும் அனீஸ் எவ்வித துலங்கலுமின்றி தொடர்ந்து தனது அச்செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளமையும், அப்போது ஆராய்ச்சியாளரும் பலவிதமாக அறிவுறுத்துரை வழங்கியும் அனீஸ் அவற்றைச் செவியேற்காதிருந்தமையும் உதாரணங்களாகக் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும் (ஆ.சி.ப.வே. 2003). இறுதியில் "வீட்டுக்குச் செல்வதற்கு வாருங்கள்" என ஆராய்ச்சியாளர் அழைத்தபோதுதான் திரும்பிப் பார்த்தான். இதற்கிடையில் தனது உடுப்புகளையும் வகுப்பறையின் தரையை யும் நன்கு ஈரமாக்கி விட்டிருந்தார். ஏனைய பிள்ளைகளைப் பலாத்காரப்படுத்துதல், இம்சைப்படுத்துதல் போன்ற குணங்கள் கூட 2 ஆம் வகுப்பிலிருக்கும்போதே நன்கு வெளிப்பட்டுத் தெரியத் தொடங்கிவிட்டன.

3 ஆம் வகுப்பிலிருந்தபோது விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிக்காக பாடசாலைப் பிள்ளை கள் யாவரும் நகரின் பிரபலமான ஒரு விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். அங்கிருந்து ஆசிரியர்களிடமோ மாணவர்களிடமோ சொல்லிக் கொள்ளாமல் வெளியேறி நகரின் பிரதான பாதைகள் வழியாக அனீஸ் நடந்து கொண்டிருந்தான். அப்போது அறிமுகமிருந்த முச்சக்கர வண்டிச் சாரதியொருவர் அனீஸைக் கண்டு, ஆசிரியர்களிடம் கூட்டி வந்து ஒப்படைத்திருந்தார். இந்நிகழ்ச்சியும் பொதுவான ஒழுங்கு விதிகளுக்கு ஒழுகி நடவாது பிறழ்வாக நடக்கும் போக்கை வெளிப்படுத்தியது.

4 ஆம் வகுப்பிலிருந்தபோது ஆராய்ச்சியாளர் பாடசாலைக்குச் சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் அனீஸுடைய வகுப்புப் பிள்ளைகள் நூலகத்தில் அமர்த்தப்பட்டனர். ஆராய்ச்சியாளரும் ஆசிரியரும் வேறு பிள்ளைகளும் வேறு ஆசிரியர்களும் நூலகத்தி லிருந்தனர். எவருடைய அனுமதியுமின்றி அங்கிருந்த கணினியின் மவுஸ் (Mouse) ஐயும், கீபோட்டை (Key board) யும் அனீஸ் கையாளத் தொடங்கி சிறிது நேரம் அக்கருமத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். கணினித் திரையிலிருந்த காட்சிகள் திடீரென நின்றுவிட "கணினி பழுதடைந்து விட்டது" எனக் கூறினான் அனீஸ். தான் குற்றமிழைத்து விட்டது போன்று ஒரு முகபாவனையுடன் சிறிது நேரம் காணப்பட்டான். அச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் கதிரையிலிருந்தெழுந்து சற்று அப்பால் சென்றிருந்தார். அனீஸ் கம்பியூட்டர் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து நேராக ஆசிரியரின் கதிரையிருந்த இடத்துக்குச் சென்று அக்கதிரையில் அமர்ந்தான். பின்னர் ஆசிரியர் வந்து அவனுக்கு நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்கமான முறைகள் பற்றி அறிவுறுத்தினார் (ஆ.சி.ப.ஏ.2004). அதேதினம் பிள்ளைகள் நூலகத்திலிருந்து வகுப்புகளுக்கனுப்பப்பட்ட சற்று நேரத்தின் பின் ஆராய்ச்சியாளரும் நூலகத்திலிருந்து வெளியேறி வந்தார். அப்போது நடைகூடத்தில் போடப்பட்டிருந்த மேசை மீது அமர்ந்து நடைகூடத்தில் தொங்க விடப்பட்ட கால்களை ஆட்டிக் கொண்டு அனீஸ் அமர்ந்திருந்தார். ஆராய்ச்சியாளரையோ ஆசிரியரையோ அந்த நிலையில் பார்த்ததால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனில் ஒரு பதற்றமோ, பயமோ தோற்றவில்லை. அன்றி மேசையிலிருந்து கீழிறங்க முயற்சிக்கவுமில்லை (ஆ.சி.ப.ஏ. 2004). ஆசிரியர்கள் மற்றும் பெரியவர்களுக்கு மரியாதை செய்தல் அவர்களது வழிகாட்டல்களை உள்வாங்கிக் கொள்ளல், அவற்றைப் பின்பற்றி ஒழுகுதல் போன்ற நன்னடத்தைகள் இப்பிள்ளையில் எதிர்மறையாக விருத்தி பெற்றிருந்தமை இந்நிகழ்வுகள் மூலம் தெளிவாகியது.

மேலும் மேலே குறிப்பிடப்பட்டது போல (கம்பியூட்டரைக் கையாளுதல் போன்ற) தனக்குப் புதியதான ஏதேனும் உபகரணம் அல்லது பொருளைக் கண்டால் அது எவருக்கு உரித்துடையது என்பதைக் கருத்திலெடுக்காமலும் உரிமையாளரிடம் அனுமதி கோராமலும் தன்னூக்கலுடன் அவற்றைக் கையாள முன்வரும் போக்கும் இப்பிள்ளையிடம் வளர்ந்து வந்துள்ளது. ஆராய்ச்சியாளர் வகுப்பறைக்கு ஒலிப்பதிவுக் கருவியையோ, புகைப்படக் கருவியையோ எடுத்துச் சென்ற தினங்களிலும் அவற்றைக் கையாள அவன் எடுத்த பிரயத்தனங்கள் மூலம் அனீஸின் இந்தப் பண்பு நன்கு வெளிக்காட்டப்பட்டது. (ஆ.சி.ப.ஏ. 2004, 2005)

பிள்ளை 4 ஆம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தபோது ஆராய்ச்சியாளர் அவ்வகுப்புக்குச் சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், வகுப்பாசிரியரின் கருத்துக்களை ஆராய்ச்சியாளர் கேட்டறிந்து கொண்டிருந்தார். அச்சிறு கால இடைவெளியில் அனீஸ் ஏனைய பிள்ளை யொருவரைத் தாக்கி இம்சைப்படுத்தினார். அப்பிள்ளை ஆசிரியையிடம் முறையிட்டது ஆசிரியை அனீஸை உரத்த தொனியில் ஏசினார். அதற்கு ஆசிரியையை முறைத்துப் பார்த்தவண்ணம் அனீஸ் துலங்கிய விதம் தெருச்சண்டைகளிலீடுபடும் நடைபாதைவாசி களின் தன்மைகளை நினைவூட்டும் வகையிலிருந்தது. ஆசிரியையும் ஆராய்ச்சியாளரிடம் "பாருங்களேன் இவன் என்னை முறைத்துப் பார்க்கும் விதத்தை" என்று குறிப்பிட்டார். (ஆ.சி.ப.ஏ. 2005) தனது செய்கைகளுக்கு மாற்றுக் கருத்துகள் தெரிவிக்கும் எவராயினும் அவர் மீது வன்முறை பிரயோகிக்கும் மனப்பாங்கின் ஆரம்பக்கட்டமாக இதுபோன்ற துலங்கல்களை வகை காணலாம்.

அனீஸ் 3ஆம் வகுப்பிலிருந்தபோது சப்பாத்துக்குப் பதிலாக செருப்புடன் வருகை தந்திருந்தார்.

**ஆராய்ச்சியாளர்:** ஏன் சப்பாத்து அணிந்து வரவில்லை?

**அனீஸ்:** காலில் புண் (காண்பிக்கிறார்)

**ஆராய்ச்சியாளர்:** எவ்வாறு புண் ஏற்பட்டது?

**அனீஸ்:** பாட்டனாருக்குக் கோபம் வந்தது. வண்டில் சில்லு (cart wheel) ஒன்றை வீசியெறிந்து எனக்கு அடித்தார். அதனால் புண் ஏற்பட்டது. இரத்தம் வடிந்தது. (ஆழ்சிந்தனைப் பதிவேடு 2004)

சில வாரங்களின் பின் ஆராய்ச்சியாளர் பாடசாலைக்குச் சென்றபோது பின்வரும் உரை யாடல் இடம்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆராய்ச்சியாளர்:** சப்பாத்தை ஏன் கழற்றி வைத்துள்ளீர்கள்?

**அனீஸ்:** சும்மா.

**ஆராய்ச்சியாளர்:** காலைக் காட்டுங்கள்.

**அனீஸ்:** (காட்டுகிறார்)

**ஆராய்ச்சியாளர்:** இந்தப் புண் ஓரளவு சுகமாகிவிட்டதுதானே?

**அனீஸ்:** ஆம்.

**ஆராய்ச்சியாளர்:** இந்தப் புண் எப்படி ஏற்பட்டது?

**அனீஸ்:** பேருந்துப்பாதையில் நடந்து வரும்போது வழுக்கி கால் சரிந்தது. அப்போது கல்லொன்றில் கால் வேகமாகப் பட்டதால் புண்ணாகியது.

(ஆழ்சிந்தனைப் பதிவேடு 2004)

பொய் கூறுவது இப்பிள்ளைக்கு இயல்பாகச் செய்யக்கூடியவொரு செயல் என்பது மேலே குறிப்பிட்ட ஆழ்சிந்தனைப் பதிவேட்டுக் குறிப்புகள் மூலம் தெளிவாகியது. பிள்ளைகளுடன் சண்டையிட்டுக் கொண்டு அல்லது வேறு பிழைகளைச் செய்துவிட்டு அது பற்றி ஆசிரியரோ அதிபரோ விசாரிக்கும் சந்தர்ப்பங்களிலும் பொய்களையும் புனைவுகளையும் கூறித் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கும் போக்கும் இப்பிள்ளையில் அவதானிக்கப்பட்டுள்ளது.

5 ஆம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தபோது புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் பொருட்டு ஆசிரியை தனது வீட்டுக்குப் பிள்ளைகளை வருவித்துப் பாட போதனை நடத்தியுள்ளார். ஒரு தினம் அனீஸ் அவ்வாறான வகுப்புக்கு ஆசிரியர் வீட்டுக்குச் செல்லப் போவதாகப் பெற்றோரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு பின்னர் சக மாணவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு சென்றான். அத்தினம் மிகவும் தாமதித்து வீடு திரும்பியமையினாலும், கால்சட்டையிலும் உடம்பிலும் (கடற்கரைக் குளிப்பு மேற்கொண்ட தற்கு அடையாளமாக) மணல் படிந்து காணப்பட்டதாலும் வீட்டிலுள்ளோர் சந்தேகப்பட்டு எவ்வளவு விசாரித்தும் தான் ரீச்சர் வீட்டுக்குப் படிக்கத்தான் சென்றதாக அனீஸ் கூறினான். ஆனால் அடுத்த தினம் ஆசிரியையிடம் கேட்டபோது, பெற்றோர்களுக்கும் அதிபருக்கும் அறிவிக்காமல் பிள்ளைகளைத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கழைப்பதில்லையெனவும் அன்றைய தினம் அனீஸோ மற்றப் பிள்ளைகளோ தன் வீட்டுக்கு வரவில்லையெனவும் தெரிவித்தார்.

இவ்வாறு பொய்கள் மூலம் ஏய்க்கும் போக்கு இப்பிள்ளையில் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தது. பாடசாலையில் அவர் வெளிக்காட்டிய நடத்தைகள் மூலம் அடையாளம் காணக்கூடியதாகவிருந்த கோலம் பின்வருமாறு சுருக்கமாகக் கூறப்படலாம்.

பெரியோருக்கு மரியாதை செய்யாமை, ஆசிரியர் வழிகாட்டல்களை மதிக்காமை, பொய், களவு, ஏமாற்றுதல், பிறரை இம்சித்தல், வலுக் கட்டாயப்படுத்தல், வன்முறைப் பாவனை போன்ற குணவியல்புகள் 1ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிப்படியாக அனீஸ் என்ற இப்பிள்ளையில் வலுப்பெற்று வந்துள்ளன. அவர் சுறுசுறுப்பும் புதியனவற்றைப் புரிந்து கொள்வதற்கு விரைவில் தன்னை ஈடுபடுத்தும் போக்குமுள்ளவராகத் தொடர்ந்து காணப்பட்டுள்ளார். மற்றவர்களுக்குதவுதல், தனது பொருட்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளல் போன்ற நற்பண்புகள் அவ்வப்போது இப்பிள்ளையினால் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

அனீஸுடைய வீட்டுச்சூழலில் போர்ச் சேவல்களைச் சிலர் வளர்த்து வந்தனர். போர்ச் சேவல்களை ஒன்றுடனொன்று சண்டையிடச் செய்து பார்த்துக் கொண்டிருக்கும் விளையாட்டு அவர்கள் மத்தியில் காணப்பட்டது. சிலர் பந்தயம் கட்டி இத்தகைய கோழிச் சண்டை யைச் சூதாட்டமாகவும் வழக்கப்படுத்திக் கொண்டிருந்தனர். சண்டையிலீடுபட்டுக் கொண் டிருக்கும்போது சேவல்களைப் பிடித்துக் கட்டுப்படுத்தும் முறையைத் தெரிந்து அதனைத் திறம்படச் செய்வதற்கு ஒரு சிலரே ஈடுபட்டனர். அனீஸும் அவ்வாறு சேவல்களைப் பிடிப்பதற்குப் பழக்கப்பட்டு விட்டான்.

அனீஸ் 3ஆம் வகுப்பிலிருந்தபோது ஒரு நாள் இரண்டு பேருக்குச் சொந்தமான இரண்டு சேவல்கள் போரிட்டுக் கொள்வதாக அனீஸ் வீட்டிலிருந்த சந்தர்ப்பமொன்றில் பிள்ளைகள் வந்து கூறியுள்ளனர். சண்டையிடாது அவற்றை விலக்கிக் கட்டுப்படுத்த வேண்டும். இது சேவல் உரிமையாளருக்குச் செய்யும் உதவி எனக் கொண்டு அங்கே விரைந்து சென்றான். அங்கு போரிட்டுக் கொண்டிருந்த ஒரு சேவலைப் பிடிக்கும் சந்தர்ப்பத்தில் மற்றச் சேவலின் தாக்குதல் அனீஸ் பிடித்த சேவலின் கண்ணைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதடையச் செய்து விட்டது. இதற்காகப் பின்னர் சேவலின் உரிமையாளர் அனீஸைச் செம்மையாக அடித்தது மட்டுமன்றி நட்டஈடாக ரூ. 5000/= கோரி அனீஸின் பெற்றோர் களையும் பலவந்தப்படுத்தினார். இதனால் பெரும் சச்சரவும் பகையும் சிலகாலம் நீடித்து வந்தது. பிறருக்கு உதவி செய்யப்போய் இந்தப் பிரச்சினையை அனீஸ் ஏற்படுத்தி விட்டதாக அவரது தாயார் கூறினார். இவ்வாறு வெளியார்களுடன் அடிக்கடி பிரச்சினைகளை அவர் ஏற்படுத்திக் கொள்வதாகவும் அவை வீட்டுக்கு வரும்போது தன்னால் பிறருக்கு எதுவும் செய்ய முடியாமையினால் தானும் பிறர் முன்னிலை யிலேயே அனீஸைத் தண்டிப்பதாகவும் அவரது தாயார் குறிப்பிட்டுள்ளார். (ஆ.சி.ப.ஏ. 2004).“எவ்வாறான தண்டனை வழங்குவீர்கள்” எனக் கேட்டபோது “அடிப்பேன் ஏசுவேன்” என்றார். “எதனால் அடிப்பீர்கள்” எனக் கேட்டபோது “கையால் அடிப்பேன் அல்லது கையிலகப்பட்டது எதுவானாலும் அதனைக் கொண்டு அடிப்பேன்” என்றார்.


அனீஸுடைய வீட்டுச் சூழலில் வசிக்கும் வளர்ந்தவர்கள் ஒரு வகைக் கோலிக்குண்டு விளையாட்டைச் சூதாட்டமாக ஆடி வருகின்றனர். அநேகமாக தொடருந்துப் பாதையின் ஓரமாக ஆங்காங்கே காணப்படும் இடங்களில்தான் இவ்விளையாட்டில் அவர்கள் ஈடுபடுகின்றனர். அனீஸ் அவ்வாறான பெரியவர்களுடன் கோலிக்குண்டு விளையாட்டில் ஈடுபட்ட சந்தர்ப்பம் பற்றியும் அனீஸுடைய தாயார் ஆராய்ச்சியாளரிடம் குறிப்பிட்டுள்ளார். இது அனீஸ் 4ம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் நடைபெற்றது. ஆராய்ச்சி யாளர் அனீஸுடைய வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு பொழுது நேரடியாகவும் இதனை அவதானித்துள்ளார். இப்பிள்ளையின் நடத்தைக்கோலம் மற்றும் ஆளுமை விருத்தியில் அவனுடைய வீட்டுச் சூழல் செலுத்திய செல்வாக்கின் தன்மையை மேற்கூறிய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இப்பிள்ளை தண்டனை பற்றிய பயவுணர்வற்று தவறான நடத்தைகளில் ஈடுபடுவதற்கு வழங்கப்படும் பயிற்சி போல் அவனுடைய தாயார் அவனுக்கு அடிக்கடி வழங்கி வந்த தண்டனைகள் அமைந்து இருப்பதையும், பாடசாலை யில் இப்பிள்ளை பிறழ்வு நடத்தைகளில் படிப்படியாக ஈடுபட்டு வந்தமையையும் பரஸ்பரம் துணைநின்ற நிகழ்வுகளாகக் கருத முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுக்குரிய மாணவனது வீடு பற்றிய பக்கப்பார்வை (Home Profile)

கொழும்புப் பெரு நகர் மத்தியில் அடுத்தடுத்து மிக நெரிசலாக அமைந்துள்ள சிறு குடிசைகள் போன்ற வீடுகளின் தொகுதிகள் காணப்படுகின்றன. அவை தோட்டங்கள் எனவும் சேரிகள் எனவும் அழைக்கப்படுகின்றன. அனீஸ் என்ற இந்த மாணவனது வீடும் இவ்வாறான ஒரு சேரிப்புற வீடாகும். அனீஸ் கல்வி பெறும் பாடசாலையினதும் அவனது வீட்டினதும் சார்பு அமைவிடங்கள் உரு: 1 இல் காட்டப்பட்டிருக்கிறது.



உரு 10: பிள்ளையின் வீட்டுக்குச் செல்லும் வழி

பேருந்துப் பாதை வழியே கொழும்புக் கோட்டையை நோக்கிச் செல்லும்போது இடப் பக்கமாகக் கீழிறங்கிச் செல்வதற்கு ஆங்காங்கே சிறுசிறு நடைவழிகள் காணப்படுகின்றன. அவற்றுள் அனீஸுடைய வீட்டை அடைவதற்கான நடைவழி சில சிறிய சீமந்துப் படிக்கட்டுகளுடன் தொடங்குகின்றது. அப்படிகளால் இறங்கி இடப்பக்கமாக வளைந்து வளைந்து செல்லும் ஏறக்குறைய 1m அகலமான ஒடுங்கிய வழியே அனீஸின் வீட்டுக்குச் செல்லும் வழியாகும். உண்மையில் இவ்வழி குளம் வரை செல்கிறது. குளக்கரையில் இவ்வழியின் இறுதியில்தான் அனீஸுடைய வீடு அமைந்துள்ளது. (உரு:10)

இந்த வழியின் இரு மருங்கிலும் மிகச் செறிவாகத் தொடர் வீடுகள் (சேரிக் குடியிருப்புகள்) காணப்படுகின்றன. பாதை ஈரலிப்பாகவும் அசுத்தமாகவும் சில இடங்களில் மிகவும் ஒடுங்கியதாகவும் காணப்பட்டது. குளத்தை நோக்கிச் செல்லும்போது இந்த வழியின் இடது ஓரத்தால் கழிவு நீர்க்காண் ஓடுகிறது. எனினும் அழுக்குகள் மற்றும் திண்மப் பொருட்கள் நீரோட்டத்தை தடுப்பதால் ஆங்காங்கே வழியின் மீது கழிவு நீர் செல்வதைக் காணலாம். பலகைத் துண்டுகள், கல்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலசமயம் புகையிரதப் பாதைக்கான சீலிப்பர் கட்டைகள் என்பன நடப்பதற்கு வசதியாக ஆங்காங்கே போடப்பட்டிருந்தன.

அனீஸுடைய வீட்டு முன்வாயிலின் முன்னால் வீட்டுச் சுவரோடு இணைந்தாற்போல் கழிவு நீர்க்காண் செல்கிறது. அதற்கு மேலே பேருந்துப்பாதையில் பயன்படும் சீலிப்பர் கட்டைகள் சில போடப்பட்டிருந்தன. அவற்றின் கீழும் சொப்பிங் பை, இளநீர்க் கோம்பை, பழைய துணிகள் போன்ற அழுக்குகள் தேங்கிக் கிடந்தன. வீட்டின் முன் நுழைவாயிலின் கீழ்ப்பகுதி சுமார் 30 cm உயர்த்திக் கட்டப்பட்டதும், வாயில் 135 cm உயரமுடையதுமாகும். வீட்டின் சுவர்கள் பலகையினாலானவை. வீட்டுக் கூரை சுமார் 240 cm உயரத்தில் அமைந்துள்ளது. பழைய பீப்பாத் தகடுகளினாலும் சில அஸ்பெஸ்டஸ் துண்டுகளாலும் வேயப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் மண்ணெண்ணெய் விளக்கும், விறகு அடுப்பும் பயன்படுத்தப்பட்டு வந்தன. பொதுக் குழாய் நீரையே வீட்டிலுள்ளோர் பயன்படுத்தினர். அதுபோலவே பொது மலசலகூடம் பொது குளியலிடம் என்பவற்றையே பயன்படுத்தி வந்தனர்.




உரு 11: 2002 இல் பிள்ளையினது வீட்டின் உள்ளகவமைப்பு

வீட்டின் உள்ளகவமைப்பு உரு 11 இல் காட்டப்பட்டவாறு எளிமையானதாகவிருந்தது. தரை சீமெந்திடப்பட்டிருந்தது. இரு கதவுகள் காணப்பட்டன. பின் கதவுக்கு வெளியே வீட்டுக்கும் குளத்துக்கும் இடையில் சுமார் 2.25 சதுர மீற்றர் பரப்பளவுள்ள இடத்தில் பழைய தகடுகள், தடிகளால் தற்காலிகமாக மறைக்கப்பட்டிருந்தது. அதற்குக் கூரை யிடப்படவில்லையெனினும் அடுப்புக்கற்கள் மூன்றும், சிறு விறகுத்துண்டுகளும், இரும்புக் கம்பிகளினால் செய்யப்பட்ட பீங்கான் இறாக்கையொன்றும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

வீட்டினுள் கதவில்லாத அலுமாரியொன்று காணப்பட்டது. அதில் உடைகள் மடித்து நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கார் பற்றறரியொன்றும் பழுதடைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொலைக் காட்சிப் பெட்டியொன்றும், மண்ணெண்ணெய் (சிமினி) விளக்கு ஒன்றும் வீட்டில் இருந்தன. மேசையோ கதிரைகளோ காணப்படவில்லை. அனீஸ் ஏதேனும் ஒன்றை எழுதிக் கொண்டோ, வரைந்து கொண்டோ நேரத்தைச் செலவிடக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றி அவனது தாயார் குறிப்பிட்டுள்ளார். வீட்டினுள் சீமந்துத் தரையில் புத்தகத்தை வைத்து தரையில் அமர்ந்தவாறுதான் அவர் அவ்வாறு செய்து வந்துள்ளார். எழுத்துச் தேர்ச்சி களும் சித்திரம் வரைவதில் பெறப்பட வேண்டிய தேர்ச்சிகளும் இத்தகைய பின்னணியிலேயே அனீஸ் என்ற இந்த மாணவனில் விருத்தியாகின. அவனது வரையறுத்த விருத்திக்கு இந்தச் செல்வாக்கு பெரிதும் காரணமாக வமைந்துள்ளது.

தவிர நெருக்கடியும் சந்தடியுமிக்க சூழல் காணப்பட்டது. அடுத்தடுத்த வீடுகளிலும் பாடசாலை செல்லும் வயதுடைய பல பிள்ளைகள் பாடசாலை செல்லாதுள்ளனர். அனீஸ்"டைய தாயோ மூன்றாம் வகுப்பு வரை கல்வி பெற்றதாகக் கூறினாலும் தான் எந்தப் பாடசாலையில் கல்வி பெற்றார் என்பதைக் கூட சொல்ல முடியாதவர். தகப்பனும் 5ஆம் தரம் வரை மட்டுமே கற்றவர். வறுமையின் அழுத்தம். இவற்றுக்கு மத்தியில் வீட்டில் அனீஸ்"டைய கற்றலுக்கு ஏற்புடைய சூழலோ வழிகாட்டலோ காணப்படவில்லை. அவனுடைய பழக்க வழக்கங்கள், பேசும் பாணியும், வழக்குகளும் நெருக்கடிமிக்க அவனது வீட்டுச் சூழலின் செல்வாக்கிற்குப் பெரிதும் உட்பட்டிருந்தன. சூழலில் வாழ்ந்தோர் கல்வி பொருளாதார நிலைமைகளில் தாழ்ந்தவர்கள். செய்யும் தொழில்களும் அங்காடி வியாபாரம், அதிர்ஷ்ட சீட்டு விற்பனை, மீன் விற்பனை போன்றன. இவை யாவும் அனீசுடைய பழக்க வழக்கங்கள் மற்றும் குணவியல்புகளின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளாகும். எனவே அவனில் எதிர்பார்க்கக் கூடிய உச்ச விருத்தி எட்டப்படவில்லை.

2002 இல் காணப்பட்ட இந்த நிலைமைகளில் அவ்வவ்போது சிறிய மாற்றங்களேற்பட்டன வெனினும் அடிப்படையில் இதே சூழல்தான். ஆய்வுக்குரிய முழுக் காலத்திலும் காணப் பட்டதெனக் குறிப்பிடல் வேண்டும்.

வீட்டின் அமைவிடமும், வீட்டின் சுற்றாடலும், சுற்றாடலில் வாழ்ந்து வந்த மக்கள் குழுவின் தன்மையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களேற்படவில்லை. ஆனால் 2003 ஆம் ஆண்டில் கார் பற்றரி உபயோகித்து வீட்டில் மின்விளக்கொன்று எரியச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2004 இல் அனீஸ்"டைய தாய் வழிப் பாட்டனுக்குரிய அடுத்த வீட்டிலிருந்து மின்கம்பியொன்றை இணைத்து இவர்களுடைய வீட்டில் மின்விளக்கேற்றினர். அது மட்டுமன்றி வீட்டின் வெளிக்கதவுக்கும் குளத்துக்குமிடையில் தற்காலிகமாகப் பயன்படுத்தி வந்த பகுதி ஓரளவுக்கு நிரந்தரமானதாகக் கட்டப்பட்டு இந்து சமயத்தவர் களின் பூசை அறையொன்றாக மாற்றியமைக்கப்பட்டது (உரு12 ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 12: 2006 இல் வீட்டின் உள்ளகவமைப்பு

அனீஸ்"டைய தாயாரைத் தேடி வரும் வாடிக்கையாளர்கள் இவ்வறையினுள் அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் அங்கு செய்யப்படும் பூசை புனஸ்காரங்கள் மூலம் காளியம்மன் செல்வாக்கிற்குத் தான் உட்படுவதாகவும் தன்னூடாக காளியம்மன் மக்களுக்குப் பரிகாரங்கள் வழங்கு தான் உட்படுவதாகவும் தன்னூடாக காளியம்மன் மக்களுக்குப் பரிகாரங்கள் வழங்குவதாகவும் அனீஸ்"டைய தாய் கூறி வருகின்றார். இவ்வகையில் அவர் சிறிதளவு வருமானமும் பெறத் தொடங்கினார். 2005 இன் பிற்பகுதியாகும் போது வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டியொன்று பயன்படுத்தப்படத் தொடங்கியது. இரண்டு பிளாஸ்திக் கதிரைகளும் வாகனங்களின் ஆசனம் போன்ற இரண்டு பேர் அமரக்கூடிய ஆசனமொன்றும் வீட்டில் இடம்பெற்றது. 2005 ஆம் ஆண்டில் பூசையறை மேலும் உறுதியாகவும் நேர்த்தியாகவும் செங்கல் சுவர்களுடனும், குளப்பக்கமாக ஒரு யன்னலுடனும் Asbestos கூரைத்தகடுகளுடனும் அமைக்கப்பட்டது. 2005 இன் கடைசிப் பகுதி முதல் வீடியோ டெக்கொன்றும் பாவனைக்கு வந்தது. அனீஸ் மல்யுத்த (wrestling) வீடியோக்களை விரும்பிப் பார்ப்பதாகவும் ஒவ்வொரு சனிக்கிழமையும் தவறாது அவ்வாறான ஒரு பீஸ் பார்ப்பதாகவும், அனீஸ்"டைய தாயார் குறிப்பிட்டார். TV செய்திகளைப் பார்ப்பதில்லையெனவும் கார்டூன்களைப் பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். 2004 இல் இழுக்கப்பட்டிருந்த மின் கம்பிகள் தற்காலிகத் தன்மை யுடன் இருந்தனவெனினும் 2005 இல் அவை உறுதியான முறையில் தொய்வுகளெதுவு மின்றி இணைக்கப்பட்டிருந்தன. 2006 ஆம் ஆண்டில் சுவர்க்கடிகார மொன்றும் பாவனையிலிருந்தது. அனீஸ்"டைய தாயார் செல்லிடத் தொலைபேசி உபயோகிக்கக் கூடியவராக அவதானிக்கப்பட்டார். அவரிடம் பரிகாரத் தேவைகளுக்காகத் தொடர்பு கொள்வோர் இந்த தொலைபேசி மூலம் அவருடன் தொடர்பு கொண்டதை ஆராய்ச்சி யாளர் அவர்களது வீட்டிலிருந்த போது நேரில் அவதானித்தார். (ஆழ்சிந்தனைப் பதிவேட்டுக் குறிப்பு - 2006).

இவர்களுடைய குறைந்த கல்விப் பின்னணியும் வாழும் சுற்றாடலின் தன்மையும் இவர்களை இவ்வாறு மாற்றங்களுக்குட்படச் செய்துள்ளது. இவற்றுக்குப் பதிலாக தமது உணவு, உடுப்பு, சுகாதாரத் தேவைகளுக்கு அல்லது தமது பிள்ளையின் கல்வித் தேவைகளை நிறைவு செய்வதற்கு அவர்கள் முன்னுரிமை வழங்கியிருந்தால் அனீஸ்"டைய அடைவுமட்டம் தற்போதைய மட்டத்திலும் மேம்பட்டதாக அமைந்திருக்க முடியும். தவிர அவனது பழக்கவழக்கங்களும் குணவியல்புகளும் கூட தற்போதையதை விட சிறப்பானவைகளாக அவனில் விருத்தியடைந்திருக்க வாய்ப்புக் கிட்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 2


## ஆராய்ச்சி முறைமையும் திட்ட வடிவமைப்பும

**இலங்கைப் பிள்ளையைப் புரிந்துகொள்ளல்:** 2002 இல் அரச பாடசாலைகளில் முதலாந் தரத்தில் சேர்ந்த மாணவ - மாணவியர் பற்றிய நெட்டாங்கு ஆய்வுக்காகத் (2002-2006) தெரிவு செய்யப்பட்ட 1000 பிள்ளைகளது விருத்தி இரண்டு கருப்பொருள்களின் கீழ் கற்கைக்குட்படுத்தப்பட எதிர்பார்க்கப்பட்டது.

(1) பாடசாலைக் கல்வியில் பிள்ளையின் பங்கேற்பு

(2) பிள்ளையின் தேர்ச்சி விருத்தி


பாடசாலைக் கல்வியில் பிள்ளையின் பங்கேற்பு என்ற கருப்பொருளின் கீழ் கற்கைக்குட் படுத்தப்பட எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உருவொன்றில் காட்டப்படலாம். (உ௫:13)




உரு 13 : ஆரம்பப் பாடசாலைப் பிள்ளையின் கற்றலிலான பங்கேற்பு

பிள்ளையின் தேர்ச்சி விருத்தி என்ற கருப்பொருளின் கீழ் ஆராய்வுக்குட்படுத்தப்பட எதிர் பார்க்கப்பட்ட விடயங்கள் பின்வரும் உருவின் (உரு 14) மூலம் காட்டப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 14 : பிள்ளையின் தேர்ச்சி விருத்தி

**நோக்கம்:**

இவ்வாய்வுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுள் 43 (27T) என்ற பாடசாலையின் தெரிவு செய்யப்பட்ட மாணவன் மீது மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வின் நோக்கங்களெனப்பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(1) பெருநகர், பல்லின, பன்மத, பன்மொழி, சேரிப்புறப் பாடசாலையில் 1 ஆம், 2 ஆம் 3 ஆம் 4 ஆம் 5 ஆம் வகுப்புகளில் கல்வி பெற்ற காலப் பகுதியில் பிள்ளை கல்வியில் பங்கேற்ற பாங்கினை அடையாளங் காணுதல்.

(2) பெருநகர் பல்லின, பன்மத, பன்மொழி, சேரிப்புறப் பாடசாலை மாணவனில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை வெவ்வேறு தேர்ச்சிகள் விருத்தி பெற்ற கோலத்தை அடையாளங் காணல்.

(3) பாடசாலை, வகுப்பு, ஆசிரியர், வீடு என்பன பிள்ளை கல்வியில் பங்கேற்றலிலும் பிள்ளையினது தேர்ச்சி விருத்தியிலும் செலுத்துகின்ற செல்வாக்கினை அடையாளங் காணுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலையினதும் பிள்ளையினதும் தெரிவு

இந்நெட்டாங்கு ஆய்விற்காக 43(27 T) இலக்கப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டபோது கருத்திற் கொள்ளப்பட்ட விடயங்கள் பற்றிக் குறிப்பிடுவதாயின் பெருநகர் மத்தியில் சேரி வாழ் மக்களது குழந்தைகள் கல்வி பெறும் பாடசாலையாக இது தேரப்பட்டது. அத்துடன் ஒரு முஸ்லிம் பாடசாலையாகவும், தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு போதனா மொழிகளிலும் வகுப்புகளைக் கொண்ட பாடசாலையாகவும், இப்பாடசாலை காணப்பட்ட துடன் அது ஆண் பிள்ளைகள் மாத்திரம் கற்கும் பாடசாலையுமாகும். பல்லின, பன்மத, பன்மொழி பேசும் மக்கள் கலந்து வாழும் சூழலைக் கொண்ட இப்பாடசாலையில் பல்லின, பன்மத, பன்மொழி சார் ஆசிரியர்கள் சேவையாற்றினாலும் முஸ்லிம், மலாய் மாணவர்கள் மட்டுமே கல்வி பெறுவோராகவிருந்தனர். குறைந்த கல்வி மற்றும் வாழ்க்கைத் தரங்களையுடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளை அதிகமாகக் கொண்ட பாடசாலையின் அமைவிடம் பெருநகரின் மத்தியாதலின், நகர்ப்புற வசதிகள் பாடசாலைக்கு எட்டக் கூடிய வகையிலுமிருந்தது. இத்தகைய பாடசாலை ஆய்வுக்கான மாதிரியில் இடம் பெற்றிருந்தபோதிலும் அப்பாடசாலையின் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்க விருப்புக் காட்டாத காரணத்தினால், மேலே குறிப்பிடப்பட்ட தன்மைகளையுடைய வேறொரு பாடசாலை 43 (27 T) இலக்கத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டது.

2002 இல் 1ஆம் வகுப்பில் தமிழ் மொழி மூலம் கற்பதற்குப் பாடசாலையில் சேர்ந்த 5 மாணவர்களுள் அனீஸ் (கற்பனைப் பெயர்) என்ற மாணவன் சம்பவக் கற்கைக்காக எதேச்சையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

### தரவு சேகரிப்பு முறை

இந்த ஆய்வுக்குத் தேவைப்படும் தரவுகளும், அத்தரவுகளைச் சேகரிக்கப் பயன்படும் முறைமைகளும் **“பங்கு பற்றி அவதானித்தல்”** (Participant as Observer) என்ற முறைமையை அடிப்படையாகக் கொண்டவை. அதாவது ஆராய்ச்சியாளர் ஓர் அவதானிப் பாளராகப் புலத்தில் பங்கேற்பார். தனது அவதானிப்புகளை ஆழ்சிந்தனைப் பதிவேட்டில் பதிவு செய்வார். இப்பதிவுகளில் காணப்படும் தரவுகளை உறுதி செய்யும் வகையில் ஆய்வுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட பிள்ளை, அவரது ஆசிரியர், பெற்றோர் ஆகியோருடன் நேர்காணல் மேற்கொள்ளப்படும். இவற்றுக்கு மேலதிகமாகப் பிள்ளையினது பயிற்சிப் புத்தகங்கள், சித்திரங்கள் போன்ற ஆவணங்கள், ஆக்கங்கள் மற்றும் வகுப்பறையில் பேணப்படும் ஆவணங்கள் என்பனவும் பயன்படுத்தப்படும். பிள்ளை பற்றி ஆசிரியரது புலக்காட்சி (perception) யினை எழுத்தில் பதிவாக்கு வதற்கும் பின்னர் அப்பதிவுகளிலிருந்து தரவுகள் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர இந்நெட்டாங்கு ஆய்வுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட 1000 பிள்ளைகளும் பற்றிய தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, தரவு சேகரித்தல் பத்திரங்களை உள்ளடக்கிய 16 கருவிகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. இக்கருவிகள் 01, 02, 03, ...... 16 என எண்ணிடப்பட்டிருந்தமையால் இவற்றைக் கருவி எண் 01, கருவி எண் 02, ...... என்றவாறு இனி வரும் பந்திகளில் சுட்டுவோம். இக்கருவிகளில் பதிவாகும் தரவுகளை அவ்வப்போது ஆராய்ச்சியாளர் பரிசீலித்து நெறிப்படுத்துவார். இத்தரவுகளும் ஆய்வுக் காகப் பயன்படுத்தப்படும்.

இம்முறைகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

(1) ஆவணங்கள், ஆக்கங்கள், தரவு சேகரிப்புக் கருவிகள்

(2) புலக்காட்சி → ஆராய்ச்சியாளர், ஆசிரியர், பெற்றோர்

(3) அவதானிப்பு → ஆசிரியர், ஆராய்ச்சியாளர்

(4) நேர்காணல் → பிள்ளையுடன், ஆசிரியருடன், பெற்றோருடன்

மேற்குறித்த வகைகளில் தேவையாகும் தரவு சேகரிக்கப்பட இயலாத சந்தர்ப்பம் ஏற்படுகையில், அத்தரவினை சேகரித்துக் கொள்வதற்காகப் பிள்ளைக்கு செயற்பாடு களை ஒப்படைத்து அவதானம் மேற்கொள்வதன் வாயிலாகவும் தரவு சேகரிக்கப்படும்.

பாடசாலைக் கல்வியில் பிள்ளையின் பங்கேற்பும், பிள்ளையில் தேர்ச்சி விருத்தியும், நெட்டாங்கு ஆய்வினதும் அதன் பகுதியான இச்சம்பவக் கற்கையினதும் பிரதான நோக்கங்களாதலின், இந்நோக்கங்களையடைவதற்குத் தேவையாகும் தரவுகள் யாவை என அடையாளங் காண்பதுவும், அத்தரவுகளைச் சேர்த்துக் கொள்வதற்கு மேற் கொள்ளப்பட்ட முறைகளும் கீழே விபரிக்கப்படுகின்றன.

முதலில் பாடசாலைக் கல்வியில் பிள்ளையினது பங்கேற்பு என்ற கருப்பொருளின் கீழ் சேர்க்கப்பட்ட தரவுகள் பற்றிக் குறிப்பிடுவதாயின் பாடசாலையின் நுழைவு, பாடசாலைக்கு தினமும் வருகை தரல், தாமதித்து வருகை தரல், பாடசாலையிலிருந்து விலகிச் செல்வாராயின், விலகிச் செல்லல் என்ற தலைப்புகளின் கீழ் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலையில் நுழைவு பற்றிய தகவல் சேகரிப்புக்குப் பின்வரும் முறைகள் கையாளப்பட்டன.**

- **"கண்டதும் பிள்ளை பற்றி ஏற்படும் அபிப்பிராயம்"** என்ற தலைப்பிலான 2002 ஆம் வருடத்துக்குரிய கருவி இல 02 இனைப் பயன்படுத்தல்.
- ஆசிரியருடன் பிள்ளை பாடசாலையில் நுழைவு பெற்ற விதம் பற்றி கலந்துரையாடல்.
- பெற்றோருடன் பிள்ளையின் பாடசாலை நுழைவு பற்றிய முறைசாரா நேர்காணல்.

**பிள்ளை பாடசாலைக்குத் தினமும் வருகை தருதல் பற்றிய தரவுகள் சேகரிப்பதற்கான முறைகள்.**

- தரவு சேகரிப்புக் கருவி 03 இன் கீழ் **"வரவின்மையும், வரவின்மைக்கான காரணங்களும்"** குறிப்பிடப்பட்டுள்ள பத்திரத்தினூடாகத் தரவுகளைப் பெறுதல்.
- வகுப்பு வரவு இடாப்பின் பதிவுக@டாகத் தரவு சேகரித்தல்.
- பிள்ளை தினமும் பாடசாலைக்கு வருகை தரும் விதம் பற்றி ஆசிரியர் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடல் மூலம் தரவுகளைப் பெறுதல்.

**தாமதித்து வருகை தரல் பற்றிய தரவுகள் சேகரிப்பதற்குப் பயன்படுத்திய முறைகள்.**

- தரவு சேகரித்தல் கருவி இலக்கம் 04 இனைப் பயன்படுத்தல்.
- தாமதித்து வருகை தரல் பற்றி ஆசிரியருடனும், பெற்றோருடனும் முறைசாரா நேர்காணல்.

**பாடசாலையிலிருந்து விலகிச் சென்ற விதம் பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்கான முறைகள்.**

- தரவு சேகரிப்புக்கான கருவி இல 02 பத்திரத்தினூடாக பாடசாலையிலிருந்து விலகிச் சென்ற திகதி அதற்கான காரணங்கள் என்பன தொடர்பிலான தரவுகளைச் சேகரித்தல்.
- பெற்றோருடன் முறைசாரா நேர்காணல்.

அடுத்து கற்றலில் பிள்ளையின் பங்கேற்றல் தொடர்பிலான தரவுகள் கீழ்க்குறித்த தலைப்பு களின் கீழான முறைகள் பயன்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டது. அவையாவன பாடசாலைக் கலாசாரத்தில் பங்கேற்றல், வகுப்பறைக் கலாசாரத்தில் பங்கேற்றல், பாடங்களில் பங்கேற்றல், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கேற்றல், பெற்றோரின் பங்கேற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளை பாடசாலைக் கலாசாரத்தில் பங்கேற்றல் தொடர்பிலான தரவுகள் சேகரிப்பதற்கான முறைகள்.**

- தரவு சேகரிப்பதற்கான கருவி இலக்கம் 13, 14 என்பவற்றினூடாக முறையே குணவியல்புகள் மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பிலான தரவுகள் சேகரிக்கப் படும்.
- பாடசாலைக் கலாசாரத்தில் பிள்ளையின் பங்கேற்றல் பற்றி ஆசிரியர் மற்றும் பெற்றோருடன் நேர்காணல்.
- ஆழ்சிந்தனைப் பதிவேட்டில் காணப்படும் அவதானிப்புக் குறிப்புகளினூடாகவும், ஆராய்ச்சியாளரதும் ஆசிரியரதும் புலக்காட்சி பதிவுகளிலுள்ள தரவுகளினூடாகவும்.

**வகுப்பறைக் கலாசாரத்தில் பிள்ளையின் பங்கேற்றல் தொடர்பிலான தரவுகள் சேகரிப்பதற்குப் பயன்படும் முறைகள்.**

- தரவு சேகரிப்பதற்கான கருவி இலக்கங்கள் 13, 14 என்பவற்றினூடாக முறையே குணவியல்புகள் மற்றும் பழக்க வழக்கங்கள் பற்றிய தரவுகள் சேகரித்தல்.
- ஆழ்சிந்தனைப் பதிவேட்டிலுள்ள அவதானக்குறிப்புகள் மற்றும் புலக்காட்சிப் பதிவுகள்.
- வகுப்புக் கலாசாரத்தில் பிள்ளையின் பங்கேற்றல் பற்றி ஆசிரியருடன் முறைசாரா நேர்காணல்.

**பாடவிதான செயற்பாடுகளில் பங்கேற்றல் தொடர்பான தரவுகள் சேகரிப்பதற்குப் பயன்படும் முறைகள்.**

- தரவு சேகரிப்புக் கருவிகள் 05, 06, 07, 09, 10, 12 என்பவற்றினூடாக முறையே புத்தாக்கம், எழுத்து, வாசிப்பு, செவியேற்றல், கணிதம், பேச்சு பற்றிய தரவுகள் சேகரித்தல்.
- வகுப்பறையில் பாடம் நடக்கும் வேளையிலும் வகுப்பறைக்கு வெளியில் செயற்பாடு களில் ஈடுபடும் வேளையிலும், ஓய்வுவேளையிலும் மேற்கொள் ளப்பட்ட அவதானிப்புகளின் அடிப்படையில் ஆழ்சிந்தனைப் பதிவேட்டில் பதிவாகி யுள்ள பிள்ளை பற்றிய தரவுகள்.
- பாடசாலை முன்கல்வி தொடர்பான அறிக்கைகள், பயிற்சிப் புத்தகங்கள், செயல் நூல்கள் மற்றும் முதன் மொழி, கணிதம், சூழல் தொடர்பான செயற்பாடுகள், சமயம் பற்றிய ஆவணப்படுத்திய கணிப்பீட்டு அறிக்கைகளிலிருந்து தரவு பெறல்.
- பாடவிதான செயற்பாடுகளில் பிள்ளையின் பங்கேற்றல் தொடர்பாக பெற்றோர் மற்றும் ஆசிரியருடன் முறைசாரா நேர்காணல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பிள்ளையின் பங்கேற்றல் பற்றிய தரவுகள் சேகரிப்பதற்கான முறைமைகள்:**

- தரவு சேகரிப்பு கருவி 11 இனூடாக பிள்ளையின் விளையாட்டுத் திறமைகள் பற்றிய தரவுகளைப் பெறுதல்.
- பாடசாலையிலும் வெளியிலும் நடைபெறும் விளையாட்டு விழாக்கள், பெருநாள் விழாக்கள், சித்திரப் போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் பிள்ளையின் பங்கேற்றல் தொடர்பாக அவதானிப்பதன் மூலம் தரவு சேகரித்தல்.
- இவை பற்றி ஆசிரியருடன் நேர்காணலூடாகத் தரவுகள் பெறுதல்.

**பிள்ளையின் கல்விக்கு ஒத்துழைப்பு வழங்கிப் பெற்றோர் எவ்வாறு பிள்ளையின் கற்றலில் பங்கேற்றுள்ளனர் என்பது தொடர்பான தரவுகள் பின்வரும் முறைகளால் சேகரிக்கப்பட்டன.**

- ஆராய்ச்சியாளர் பிள்ளையின் வீட்டுச் சூழலை அவதானித்தும், பெற்றோருடனும் சகோதர சகோதரிகளுடனும் கலந்துரையாடல்களை நிகழ்த்தியும் பெற்ற தரவுகளை உள்ளடக்கிய ஆழ்சிந்தனைப் பதிவேட்டிலிருந்து தரவுகள் பெறல்.
- ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தகவல் பெறுதல்.
- தரவு சேகரிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள கருவி எண் 08 இன் கீழ் ஆகாரமாகக் கொண்டு வரும் பொருட்களை அறிக்கைப்படுத்தும் பத்திரத்தின் வாயிலாக போசணை பற்றிய தகவல்களைச் சேகரித்தல்.
- பிள்ளைக்கு வீட்டில் பெற்றுக் கொள்ளத்தக்கதாகவுள்ள புத்தகங்கள் கருவிகள் முதலானவற்றைப் பரீட்சித்து தரவு பெறுதல்.

பிள்ளையின் தேர்ச்சி விருத்தி பற்றிய கற்கை மேற்கொள்வதற்குரிய தகவல் சேகரிப்பு முறைகளை அடுத்து நோக்குவோம்.

**பிள்ளையின் நடத்தை விருத்தியுறும் பாங்கு பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற் கான முறைகள்:**

- கண்டதும் பிள்ளை பற்றியேற்படும் முதல் அபிப்பிராயம் என்ற கருவியினூடாக
- பிள்ளையின் குணவியல்புகள் பற்றி ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்.
- பிள்ளையின் குணவியல்புகள் பற்றி பெற்றோருடன் நேர்காணல்.
- ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் பதிவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளையின் புத்தாக்கத் தேர்ச்சித்திறன் விருத்தி பற்றிய தரவு சேகரிப்பதற்கான முறைகள்:**

- "தாளிற்கும் எழுதுகோலிற்கும் காட்டும் உணர்வு" என்ற கருவி எண் 5 இன் கீழ்வரும் பத்திரத்தின் தகவல்க@டாக.
- கருவி எண் 15 இன் கீழ் புத்தாக்கத்திறன்களை அடையாளங் காண்பதற்கான தரவுகள்.
- புத்தாக்கத் தேர்ச்சித்திறன்கள் பற்றி ஆராய்ச்சியாளரது ஆழ்சிந்தனைப் பதிவேட்டி லிருந்து பெறத்தக்க தகவல்கள்
- ஆசிரியர்களுடன் நேர்காணல்.
- பெற்றோருடன் நேர்காணல்.
- நாள்தோறும் பாடசாலையில் பிள்ளை ஆற்றும் கருமங்கள் மற்றும் சித்திரங்களை ஆக்குதல் என்பவற்றினூடாகத் தகவல் பெறுதல்.

**பிள்ளையின் எழுத்துத் தேர்ச்சி பற்றிய தரவுகள் சேகரிக்கப் பயன்படுத்தும் முறைகள்:**

- கருவி எண் 06 இன் கீழ்வரும் பத்திரங்களில் எழுத்துத் தேர்ச்சிகளை அடையாளங் காண்பதற்குரிய பத்திரங்களின் பதிவுகள் வாயிலாக.
- ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் எழுத்துத் தேர்ச்சி பற்றிய தரவுகள்.
- பிள்ளையின் பயிற்சிப் புத்தகங்களிலிருந்து தகவல் சேகரித்தல்.
- ஆசிரியர்களுடன் நேர்காணல்.
- தாய்மொழி மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து தரவுகளைப் பெறல்.
- பெற்றோருடன் நேர்காணல்.

**வாசிப்பு தொடர்பிலான பிள்ளையின் தேர்ச்சி விருத்தி பற்றிய தரவுகள் சேகரிப்பதற்கான முறைகள்:**

- "எழுத்துக்களை அடையாளங் காண்பது தொடர்பிலான செயற்பாட்டுப் பத்திரம்" என்ற கருவி எண் 07 இன் கீழ்வரும் தரவுகள்.
- ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் பதிவுகளிலிருந்து.
- தாய்மொழி மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து தரவுகளைப் பெறல்.
- ஆசிரியருடன் நேர்காணல்.
- பெற்றோருடன் நேர்காணல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளையின் போசணை தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படவுள்ள முறைகள்:**

- கருவி எண் 08 இன் கீழ் ஆகாரமாகக் கொண்டு வரும் பொருட்கள் பற்றிய தரவுகள் பதியப்பட்டுள்ள பத்திரத்தின் வாயிலாக.
- ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் பதிவுக@டாகத் தரவு சேகரித்தல்.
- ஆசிரியர்களுடன் பிள்ளையின் போசணை பற்றிக் கலந்துரையாடித் தரவுகள் பெறல்.
- பெற்றோருடன் நேர்காணல் ஊடாக.
- வகுப்பறையில் பதிவாகும் போசணை அறிக்கைகளிலிருந்து தரவுகளைப் பெறல்.

**செவிமடுத்தல் தேர்ச்சி விருத்தி பற்றிய தரவுகள் சேகரிக்கப்படு:ம் முறைகள்:**

- கருவி இல 09 இன் செவிமடுத்தல் தேர்ச்சிகள் பற்றிய தரவுப்பத்திரங்களினூடாக.
- தாய்மொழி மதிப்பீட்டு அறிக்கைகளிலிருந்து தரவு பெறல்.
- ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் பதிவுக@டாக.
- ஆசிரியர்களுடன் பிள்ளையின் செவிமடுத்தல் தேரச்சி பற்றி நேர்காணல்.
- பெற்றோருடன் பிள்ளையின் செவிமடுத்தல் தேர்ச்சிகள் பற்றி நேர்காணல்.

**கணிதத் தேர்ச்சித்திறன்களின் விருத்தி பற்றிய தரவுகள் சேகரிக்கப்படும் முறைகள்:**

- கருவி இலக்கம் 10 இன் கீழ் "எண் பற்றிய விளக்கம்" பத்திரங்களில் உள்ள தரவுகள்.
- ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் தரவுகள்.
- கணிதத்தில் மதிப்பீட்டு அறிக்கைகளிலிருந்து தரவுகள் பெறல்.
- பிள்ளையின் கணிதப் பயிற்சிப் புத்தகங்களிலிருந்து தரவுகளைச் சேகரித்தல்.
- ஆசிரியருடன் பிள்ளையின் கணிதத் தேர்ச்சிகளது விருத்தி பற்றி நேர்காணலினூடாக.
- பெற்றோருடன் பிள்ளையினது கணிதத் தேர்ச்சி விருத்தி பற்றி முறைசாரா நேர்காணல்.

**பிள்ளையின் விளையாட்டு - உடலியல் தேர்ச்சி விருத்தி பற்றிய த்ரவுகள் சேகரிக்கப்படும் முறைகள்:**

- "விளையாட்டுச் செயற்பாடுகள்" எனும் கருவி இலக்கம் 11 இன் கீழ்வரும் பத்திரங்களிலிருந்து தரவுகளைப் பெறுதல்.
- ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டிலிருந்து உரிய தரவுகளைப் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சூழல் தொடர்பான செயற்பாடுகள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து தரவுகள் பெறுதல்.
- ஆசிரியர்களுடன் பிள்ளையினது விளையாட்டு - உடலியல் தேர்ச்சிகளது விருத்தி பற்றிக் கலந்துரையாடுதல் மூலம் தகவல் பெறல்.
- பெற்றோருடன் பிள்ளையினது விளையாட்டு - உடலியல் தேர்ச்சி விருத்தி பற்றிக் கலந்துரையாடல் மூலம் தகவல் பெறல்.
- பாடசாலையில் நடைபெறும் இணைப்பாடவிதான (விளையாட்டு விழா போன்ற) செயற்பாடுகளின்போது மேற்கொள்ளப்படும் அவதானிப்புக@டாகத் தரவு பெறுதல்.

**பிள்ளையின் பேச்சு தொடர்பான தேர்ச்சி விருத்தி பற்றிய தரவுகள் சேகரிக்கப்படும் முறைகள்:**

- "உரையாடுதல் தொடர்பான தேர்ச்சிகள்" பற்றிய கருவி 12 இன் கீழ்வரும் பத்திரங்களிலிருந்து தரவுகள் பெறுதல்.
- தாய்மொழி மதிப்பீட்டு அறிக்கை வாயிலாக தரவுகள் பெறுதல்.
- ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டிலிருந்து தரவுகளைப் பெறல்.
- ஆசிரியர்களுடன் பிள்ளையின் பேச்சுத்தேர்ச்சிகளின் விருத்தி பற்றி நேர்காணல்.
- பெற்றோர்களுடன் பிள்ளையின் பேச்சுத்தேர்ச்சிகளின் விருத்தி பற்றி நேர்காணல்.

**பிள்ளையின் குணவியல்புகள் பற்றிய தரவு சேகரிப்பு முறைகள்:**

- கருவி எண் 13 இன் பிள்ளையின் குணவியல்புகள் பற்றிய பத்திரத்தினூடாக தரவு சேகரித்தல்.
- ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் பதிவுகளில் இருந்து தரவுகள் பெறல்.
- பிள்ளையின் குணவியல்புகள் பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடல் மூலம் தரவுகள் சேகரித்தல்.
- பெற்றோருடன் முறைசாரா நேர்காணல் ஊடாக.

**பிள்ளையின் பழக்கவழக்கங்கள் தொடர்பான தகவல் சேகரிப்பதற்கான முறைகள்:**

- பிள்ளையின் பழக்கவழக்கங்கள் தொடர்பான கருவி எண் 14 இன் தரவுப் பத்திரங் களிலிருந்து.
- ஆழ்சிந்தனைப் பதிவேடுகளின் (ஆராய்ச்சியாளர் / ஆசிரியர்) பதிவுகளிலிருந்து.
- பிள்ளையின் பழக்க வழக்கங்கள் பற்றி ஆசிரியருடன் நேர்காணல்.
- பிள்ளையின் பழக்க வழக்கங்கள் பற்றிப் பெற்றோருடன் முறைசாரா நேர்காணல் ஊடாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆராய்ச்சியாளரது கள விஜயங்கள்**

ஆராய்ச்சியாளர் தரவு சேகரித்தலுக்காக கள விஜயங்கள் மேற்கொண்டு செயற்பட்ட கோலம் அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை: 5**
**2004, 2005, 2006 ஆம் ஆண்டுகளில்**
**ஆராய்ச்சியாளர் மேற்கொண்ட கள விஜயங்கள்**

| மாதமும், திகதியும் | செயற்பாடு |
|---|---|
| (1) 2004 யூன் 17 | வகுப்பறையினுள் அவதானிப்பு.<br>ஓய்வு நேரத்தில் பிள்ளையை அவதானித்தல்.<br>ஆசிரியருடன் நேர்காணல்.<br>பிள்ளையுடன் நேர்காணல்.<br>ஏனைய பிள்ளைகளுடன் நேர்காணல். |
| (2) 2004 யூன் 29 | வகுப்பறையினுள் பிள்ளையின் செயற்பாடுகளை அவதானித்தல்.<br>ஓய்வுநேரத்தில் பிள்ளையின் நடத்தையை அவதானித்தல். |
| (3) 2004 ஒக்டோபர் 05 | ஓய்வு நேரத்தில் பிள்ளையின் நடத்தைக் கோலத்தை அவதானித்தல்.<br>தரவு சேகரிக்கும் ஆசிரியருடன் நேர்காணல்.<br>பிள்ளையுடன் நேர்காணல்.<br>வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளுடன் நேர்காணல். |
| 2004 ஒக்டோபர் 12 | ஆசிரியர் வருகை தரவில்லை. தரவு சேகரிக்கும் ஆசிரியரின் உதவியுடன் வகுப்பறைக்கு வெளியில் மாணவர் செயற்பாட்டை அவதானித்தல். |
| (4) 2004 நவம்பர் 09 | வீட்டுச் சூழலை அவதானித்தல்.<br>பிள்ளையின் தாய், தந்தை, பாட்டன் ஆகியோருடன் நேர்காணல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (5) 2004 டிசம்பர் 02 | தவணைப் பரீட்சையாதலின் கற்றல் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படவில்லை.<br>ஆசிரியையுடன் நேர்காணல்.<br>பிள்ளையுடன் நேர்காணல்.<br>வகுப்பின் ஏனைய பிள்ளைகளுடன் நேர்காணல்.<br>வீட்டுக்குச் சென்று பிள்ளையின் தாயாருடன் நேர்காணல். |
| (6) 2005.08.09 வும்<br>2005.08.10 வும் | பிள்ளையுடன் நேர்காணல்.<br>வகுப்பின் ஏனைய பிள்ளைகளுடன் நேர்காணல். |
| (7) 2005.08.11 வும்<br>2005.08.10 வும் | வகுப்பறையினுள் மூன்று கற்றல் சந்தர்ப்பங்களில் பிள்ளையின் நடத்தைகளை அவதானித்தல். |
| (8) 2005.09.22<br><br>2005.09.27 | ஆசிரியை வருகை தரவில்லை. கணிதம் I, செவியேற்றல், ஆங்கிலம், மற்றும் எழுத்து தொடர் பான நான்கு செயற்பாடுகளிலும் பிள்ளைகளை ஈடுபடுத்தி அவதானம் மேற்கொள்ளல்.<br><br>கணிதம் II, கணிதம் III தொடர்பான செயற்பாடு களில் பிள்ளைகளை ஈடுபடுத்தி அவதானங்களை மேற்கொள்ளல்.<br><br>தரவுகள் சேகரித்தல், சுத்திகரித்தல் தொடர்பில் ஆசிரியருக்கு வழமை போல் உதவுதல். |
| (9) 2005.11.10 வும்<br>2005.11.11 வும் | வகுப்பாசிரியை, தரவு சேகரிக்கும் ஆசிரியர், மற்றும் 1 ஆம் 2 ஆம் வகுப்புகளில் பிள்ளை யிருந்தபோது வகுப்பாசிரியராகவிருந்த ஆசிரியை ஆகியோருடன் நேர்காணல். |
| (10) 2005.12.08 | பிள்ளையின் தாய், தகப்பன், பாட்டன் ஆகியோ ருடன் நேர்காணல். வீட்டினதும் சூழலினதும் மாறுதல் |
| (11) 2006.09.12<br><br>2006.09.13<br><br>2006.09.14 | மூன்று கற்றல் சந்தர்ப்பங்களின் பிள்ளையின் நடத்தையை அவதானித்தல்.<br><br>பிள்ளையின் தாயுடன் நேர்காணல்.<br><br>பிள்ளையுடனும், அவரது வகுப்பின் ஏனைய பிள்ளைகளுடனும் நேர்காணல். |
| (12) 2006.10.12 | வீட்டுச் சுற்றாடல் மீது அவதானம் மேற்கொள்ளல்.<br>பிள்ளையின் தாயுடனும் தகப்பனுடனும் நேர்காணல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (13) 2006.11.09 | ஆராய்ச்சி தொடர்பான உபகரணங்கள் பற்றி விவரிக்கும் செயலமர்வில் ஆசிரியர் பங்குபற்றாமை யினால், அவருக்கு அவை பற்றி விளக்கமளித்தல். |
| 2006.11.14 | தரவு சேகரித்தல் மற்றும் சுத்திகரித்தல் தொடர்பில் ஆசிரியருக்கு உதவுதல். |
| 2006.11.16 | கணிதம் மற்றும் செவியேற்றல் தொடர்பான செயற் பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தி அவதானம் மேற்கொள்ளல். |
| 2006.11.21 | தரவு சேகரித்தல் சுத்திகரித்தல் தொடர்பில் வழமைபோல் ஆசிரியருக்கு உதவுதல். |
| 2006.11.23 | மூன்று கற்றல் சந்தர்ப்பங்களில் பிள்ளை மீது அவதானம் மேற்கொள்ளல். |
| 2006.11.24 | பிள்ளையின் வீட்டுக்குச் சென்று வீட்டுச்சூழலை அவதானித்தல். தாயாருடன் நேர்காணல். |
| 2006.11.28 | தரவு சேகரித்தல், சுத்திகரித்தல் தொடர்பில் ஆசிரியருக்கு வழமைபோல் உதவுதல். |
| 2006.11.30 | எழுத்து தொடர்பான பரீட்சையிலும், பேச்சு தொடர் பான செயற்பாட்டிலும் பிள்ளையை ஈடுபடுத்தி, அவதானம் மேற்கொள்ளல்.<br><br>பாடசாலை விட்ட பின் வகுப்பாசிரியையுடனும் மேலும் இரண்டு ஆசிரியர்களுடனும் நேர்காணல். |
| (14) 2006.12.07 | ஆங்கிலம் தொடர்பான பரீட்சையிலும் எழுத்து தொடர்பான செயற்பாட்டிலும் பிள்ளைகளை ஈடுபடுத்தி அவதானம் மேற்கொள்ளல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரைபாடுகள் (Limitations)

- ஆய்வுக்குரிய இந்தச் சம்பவக் கற்கை தொடர்ச்சியாக ஒரே ஆய்வாளரினால் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும் 2002 ஆம் 2003 ஆம் ஆண்டுகளில் ஆராய்ச்சியாளராக ஒருவரும் அதன் பின்னர் வேறொருவரும் இக்கற்கையை மேற்கொண்டமை ஒரு குறைபாடாகும். ஆரம்ப முதலே ஆராய்ச்சியாளருக்கு வழங்கப்பட்ட அறிசுறுத்துரைகள், பயிற்சிகள் தொடர்ச்சியாக கற்கையின் உள்ளீடுகளாக அமையவில்லை.

- தரவு சேகரிப்பதற்கான முறைகளுள் பிள்ளை "வெவ்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும்போது அவதானித்தல்" முக்கிய இடம் வகிக்கிறது. ஆயினும் வகுப்பறையில் பிள்ளை அனுபவங்களைப் பெறக்கூடிய வகையில் செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் அருமையாகவே காணப்பட்டன. இந்தக் கற்கையின் ஒரு வரைப்பாடாக இக்காரணி பங்களித்தது.

- ஆய்வாளருக்கு வழங்கப்பட்டிருந்த ஒலிப்பதிவுக்கருவி மற்றும் புகைப்படக் கருவி போன்றவற்றின் குறைந்த நம்பகத்தன்மை மற்றுமொரு வரைப்பாடாக விருந்தது. உதாரணமாக ஒலிப்பதிவு செய்யப்பட்டதான வகுப்பறை அவதானிப்புச் செயற்பாடுகள் பதிவாகாமல், அதன் காரணமாகப் பின்னர் நினைவாற்றல் வழியாக ஆழ்சிந்தனைப் பதிவேட்டுக்கு உள்வாங்கப்பட வேண்டியேற்பட்டன. இவ்வாறு பெற்ற தரவுகளின் பண்புசார் தரம் குறைவான தாகவே எதிர்பார்க்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 3

## பாடசாலைக் கல்வியில் மாணவனது ஈடுபாடு (Student Participation in School Education)

முதலாம் வகுப்பில் கற்பதற்காகப் பாடசாலையில் சேர்வதற்கென 10.01.2002 இல் இப்பிள்ளை தனது தாயுடன் சமூகமளித்துள்ளான். தாய் பற்றி ஆசிரியை "சுத்தமற்றவர்" எனவும், "பிள்ளையின் கல்வி விடயங்களில் ஆர்வமற்றவர்" எனவும் தனது உணர்வுகளைப் பதிவு செய்துள்ளார். (கருவி இல: 02).

இத்தினத்தில் அனீஸ் அமைதியாகக் காணப்பட்டுள்ளான். ஆயினும் வேறு சில சிறுவர் களைப் போல அழுதுகொண்டோ பயந்து பதுங்கியவாறோ காணப்படவில்லை.

அவனிடம் கேள்விகள் கேட்கப்பட்டபோது கூட வாய் திறந்து பதிலளிக்காமல் அமைதி காத்துள்ளான். எனினும் குறுகிய காலத்துக்குள் கேட்கப்படும் கேள்விகளுக்குத் துணிந்து, முன்வந்து பதிலளிப்பவனாகவும், அடுத்த மாணவர்களது பிரச்சினைகளைக் கூட ஆசிரியருக்கு முதலில் தெரியப்படுத்துபவனாகவும் அனீஸ் மாறிவிட்டான்.

பாடசாலையில் சேர வந்த முதலாவது நாளிலும் கூட அவனது மூக்கிலிருந்து சளி வடிந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவிருந்துள்ளது. இந்நிலைமை, இப்பிள்ளை அவதானிக்கப்பட்ட காலங்களில் தொடர்ந்து காணப்பட்டுள்ளது. அதனை முறையாகத் துப்பரவு செய்து கொள்ளும் பழக்கம் 5 ஆம் வகுப்பை அடைந்த பின்னர் கூட இப்பிள்ளை யில் ஏற்பட்டிருக்கவில்லை. (ஆழ்சிந்தனைப் பதிவேடு 2006.)

### பாடசாலைக்கு வருகை தராமை

முதலாம் வகுப்பிலிருந்தபோது (2002 இல்) மொத்தமாக 48 நாட்கள் வருகை தரவில்லை. வருகை தராமைக்கான பிரதான காரணமாக சுகவீனம் அமைந்திருந்தது. சுகவீனங்களில் சளிபிடித்தல் அதிக நாட்களில் காணப்பட்டுள்ளது. அதேவேளை காலில் ஏற்பட்ட சுளுக்கு சில நாட்கள் வருகை தராமைக்குக் காரணமாகவிருந்துள்ளது.

2 ஆம் வகுப்பில் கற்றபோது (2003 இல்) வருகை தராமை 2 நாட்களால் குறைந்து 46 நாட்களாகக் காணப்பட்டுள்ளது. வருட ஆரம்பத்தில் 5 நாட்கள் தொடர்ச்சியாக வருகை தரவில்லை. இதற்குக் காரணமாக பாடசாலை செல்வதற்கான ஆயத்தங்களெதுவும் செய்யப்படாமை குறிப்பிடப்பட்டுள்ளது. 17 நாட்கள் சுகவீனம் காரணமாகவும், 05 நாட்கள் மழை காரணமாகவும், 03 நாட்கள் தாமதித்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயிலெழுந்தமை காரணமாகவும், 02 நாட்கள் காரணங்களெதுவுமில்லாமலும் வருகை தரவில்லை. அதிகமான சந்தர்ப்பங்களில் சளி அல்லது காய்ச்சல் சுகவீனமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3 ஆம் வகுப்பிலிருந்தபோது 2004 இல் 45 நாட்கள் வருகை தரவில்லை. இவ்வருடத்திலும் சுகவீனமே வருகை தராமைக்குப் பிரதான காரணமாகவிருந்துள்ளது. 45 நாட்களுள் 24 நாட்கள் அவ்வாறு சுகவீனமுற்ற நாட்களாகும். முன்னைய வருடங்களை விட சுகவீனமாக தலைவலியும் (2 நாட்கள்), பல்வலியும் (02 நாட்கள்) இவ்வருடத்தின் பிற் பகுதியில் (செப்டம்பரின் பிறகு) குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வருடத்திலும் பாடசாலை தொடங்கும் நாளில் ஆயத்தமின்மை காரணமாக வருகை தராமலிருந்துள்ளார். மேலும் பயணங்கள் செல்லும்பொருட்டு ஜனவரி மாதத்தில் இரண்டு நாட்களும், மே மாதத்தில் 04 நாட்களுமாக 06 நாட்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்காதிருந்துள்ளார்.

4 ஆம் வகுப்பில் கற்ற காலத்தில் (2005 ஆம் ஆண்டு) 52 நாட்கள் பாடசாலைக்கு வருகை தராமலிருந்துள்ளான். முன்னைய வருடங்களில் கூறப்பட்ட அதே காரணங்களுக்காகவே வராதிருந்துள்ளானெனினும், பல்வலி, கண்நோய் என்பனவும் மேலதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

5 ஆம் வகுப்பிலிருந்தபோது (2006 இல்) 68 நாட்கள் பாடசாலைக்கு வருகை தரவில்லை. எனினும் "சார்க்" நாட்டு விளையாட்டு விழாவுக்காக 4 நாட்கள் விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் 9 நாட்கள் பாடசாலைகள் குண்டுத் தாக்குதலுக்குட்படும் என்ற பீதி காரணமாக அனீசும் அவனது வகுப்பின் ஏனைய பிள்ளைகளும் வருகை தரவில்லை. இந்தப் 13 நாட்களைத் தவிர்த்துப் பார்ப்பினும் கூட இவ்வருடத்தில் 55 நாட்கள் பாடசாலைக்கு வருகை தரவில்லை. இவ்வருடத்திலும் முன்னைய வருடங்களைப் போன்ற காரணங்களே குறிப்பிடப்பட்டுள்ளன. வீடு கட்டுதலில் பெற்றோருக்குதவுதல், சப்பாத்து இல்லாமை, பீதி, வீட்டுவேலைகளை (Home work) செய்யாமை, புத்தகங்கள் மழையில் நனைந்து விட்டமை, ஒப்படை பூர்த்தியாக்கப்படாமை என்ற காரணங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. முதல் மூன்று வருடங்களை விட இவ்வாறான காரணங்கள் பிந்திய இரு வருடங்களில் காணப்பட்டமையும், பாடசாலை செல்வதா இல்லையாவென தற்றுணிபின்படி தீர்மானித்து அதன்படி நடந்துவிட்டு வருகை தராமைக்குக் காரணங்கூறிக் கொள்பவனாக அனீஸ் பிந்திய வருடங்களில் இருந்துள்ளமையும் கவனிக்கத்தக்க அம்சங்களாகும்.

2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08ம் திகதி ஆசிரியருடன் நேர்காணலின் போது உள்ள பதிவு கீழே தரப்பட்டுள்ளது (ஆழ்சிந்தனைப் பதிவேடு 2005).

| | |
|---|---|
| ஆராய்ச்சியாளர்: | அனீசுடைய வரவு குறைவானதாகத் தோன்றுகிறதே. |
| ஆசிரியர்: | மிகவும் ஒழுங்கீனமான வரவு. |
| ஆராய்ச்சியாளர்: | என்ன காரணமாகவிருக்கலாம்? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **ஆசிரியர்:** | அதிகமான சந்தர்ப்பங்களில் சுகவீனமுற்றதாகவே கூறுவான். கடிதமும் கொண்டு வருவான். சில சந்தர்ப்பங்களில் உண்மையில் சுகவீனமடைவதும் உண்டு. |
| **ஆராய்ச்சியாளர்:** | ஏனைய சந்தர்ப்பங்களில் பொய்யா? |
| **ஆசிரியர்:** | ஆம். அனீஸ் பொய் சொல்லப் பயப்படுவதோ தயங்குவதோ இல்லை. பொய்யை உண்மை போல் சொல்வான். |
| **ஆராய்ச்சியாளர்:** | தண்டனை வழங்கப்படுமா? |
| **ஆசிரியர்:** | சிலவேளைகளில் அடிக்கவும் படுவான். அடிபட்டாலும் அழுவதில்லை. |

இதேவருடம் (2005) செப்டம்பர் மாதத்தின் 22ம் திகதி ஆராய்ச்சியாளர் பாடசாலைக்குச் சென்றிருந்த நாள் அன்று அனீஸ் பாடசாலைக்கு வரவில்லை. பிள்ளைகளை அனுப்பி அவனைக் கூட்டி வரச் செய்தார் ஆசிரியர். மு.ப. 10.00 மணியளவில் அவன் வருகை தந்தபோது நடைபெற்ற உரையாடல் கீழே தரப்படுகிறது. (ஆழ்சிந்தனைப் பதிவேடு 2005).

| | |
|---|---|
| **ஆராய்ச்சியாளர்:** | இன்று ஏன் பாடசாலைக்கு வரவில்லை? |
| **அனீஸ்:** | பெரியப்பா மவ்த்தாகி (இறந்து) விட்டார். |
| **ஆராய்ச்சியாளர்:** | எப்போது? |
| **அனீஸ்:** | சென்ற திங்கட்கிழமைக்கு முந்திய திங்கட்கிழமை. |
| **ஆராய்ச்சியாளர்:** | நேற்று பாடசாலைக்கு வந்தீரா? |
| **அனீஸ்:** | ஆம். |

சிறிய காரணங்களுக்காகவும், காரணமேதுமில்லாதும் அவன் பாடசாலைக்கு வருகை தருவதைத் தவிர்த்து விட்டுப் பின்னர் காரணங்களைச் சோடித்துக் கூறுபவன் என்பதை இச்சம்பவங்கள் உறுதி செய்கின்றன.

இம்மாணவன் பாடசாலைக்கு வருகை தராமல் இருந்துள்ள நாட்களின் எண்ணிக்கையிலும், வருகை தராமைக்கான காரணங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. ஐந்து வருடங்களிலும் ஒரேவிதமான போக்கே வெளிப்படுத்தப் பட்டுள்ளமை தெளிவாகிறது. ஆயினும் 4 ஆம் 5 ஆம் வகுப்புகளிலிருந்தபோது வருகை தராத நாட்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் மிகச் சிறியதொரு காரணமே பாடசாலைக்கு வருகை தராமலிருக்கப் போதுமானதாகவிருந்துள்ளது சுட்டிக்காட்டப்படத் தக்கதாகும் (அட்டவணை: 5 ).

மேலே விபரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் புலக்காட்சிகளுக்கேற்ப இப்பிள்ளை அடிக்கடி சளி காரணமாக நோய்வாய்ப்பட்டு பாடசாலைக்கு வருகை தராமலிருந்துள்ளமை பாடசாலையில் சேர்ந்தது முதல் தொடர்ந்து காணப்பட்டுள்ளது. அது போலவே ஒவ்வொரு வருத்திலும் ஆரம்ப தினங்களில் தயாரின்மை காரணமாகப் பாடசாலைக்கு வருகை தராமலிருந்துள்ளமையும் தெளிவாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Table – 6: Number of days absent from school**

| | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct | Nov | Dec | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2002 | 5 | 5 | 11 | 1 | 8 | 7 | 1 | 2 | 7 | 1 | - | - | 48 |
| 2003 | 5 | 2 | - | 5 | 3 | 9 | 9 | 6 | 5 | 2 | - | - | 46 |
| 2004 | 4 | 2 | 4 | 1 | 3 | 7 | 6 | 7 | 5 | 1 | 3 | 2 | 45 |
| 2005 | 1 | 5 | 3 | 2 | 10 | 7 | 4 | 8 | 6 | - | 5 | 1 | 52 |
| 2006 | 12 | - | 3 | 7 | 10 | 8 | 3 | 13 | 4 | - | 8 | - | 68 |
| **Total** | **27** | **14** | **21** | **16** | **34** | **38** | **23** | **36** | **27** | **4** | **16** | **3** | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவுப் பதிவுப் படிவங்களுக்கேற்ப மேற்குறித்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் இவற்றுக்கு மேலதிகமாக ஆராய்ச்சியாளரது ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் குறிப்புகளுக் கிணங்க பின்வரும் காரணங்களும் வருகை தராமைக்குப் பங்களித்துள்ளமை காரணங்களாக குறிப்பிடத்தக்கது.

(1) அனீசுடைய தாயாரிடம் பாடசாலைக்குச் சமூகந் தராமலிருப்பதற்கான காரணம் கேட்டபொழுது, பாடசாலையில் பாடபோதனை சீராக நடப்பதில்லையெனவும், அதனால் அனீஸ் பாடசாலைக்குச் செல்லாமலிருப்பதாகவும் குறிப்பிட்டார். (2004 மே 03ஆம் திகதி).

(2) தகப்பன் அங்காடி வியாபாரத்தில் (பட்டம், லொத்தர் சீட்டு ஆகியன) அவ்வப்போது ஈடுபடுவார். அனீஸ் சிலவேளைகளில் அவருடன் செல்வதுண்டு. இதுவும் சமூக மளிக்காமைக்குப் பங்களித்தவொரு காரணமாகும்.

## தாமதித்து வருகை தரல்

ஆரம்பம் முதலாக பாடசாலைக்கு இம்மாணவன் தாமதித்து வருகை தரும் போக்கு காணப்படவில்லை. 1 ஆம் வகுப்பிலிருந்த போது இரண்டு நாட்கள் மட்டுமே தாமதித்து வருகை தந்துள்ளார். அதுவும் பாடசாலைக்கு இம்மாணவனைக் கூட்டி வரும் பெண் தாமதித்து வந்தமையினாலாகும். அதே பெண் வேறொரு பிள்ளையையும் அழைத்து வருபவராகவிருந்தார். அந்தப் பிள்ளை தாமதித்ததால் இம்மாணவனும் தாமதிக்க நேர்ந்துள்ளது. 2002 இல் பாடசாலை நாட்களில் அதிகாலையிலேயே துயிலெழுந்து விடுவாரெனவும், தாமாகவே பாடசாலைக்குச் செல்லத் தயாராகுவாரெனவும் இம்மாணவ னது தாயார் குறிப்பிட்டுள்ளார் (ஆழ்சிந்தனைப்பதிவேடு 2002).

இரண்டாம் வகுப்பிலிருந்தபோது முழு வருடத்திலும் இரண்டு நாட்கள் மட்டுமே பாடசாலைக்குத் தாமதித்து வந்துள்ளாரெனப் பதிவாகியுள்ளது. எனினும் தாமதித் தமைக்கான காரணம் பதிவு செய்யப்படவில்லை. முதலாம் வகுப்பில் போலவே நேரகாலத்துடன் துயிலெழுந்து பாடசாலைக்குச் செல்ல வீட்டில் தயாராகும் போக்கு இரண்டாம் வகுப்பிலும் காணப்பட்டுள்ளது. இதனை மாணவனது தாயும், தகப்பனும் கூறியுள்ளனர் (ஆழ்சிந்தனைப் பதிவேடு, 2003).

3 ஆம் வகுப்பில் தாமதித்துப் பாடசாலைக்குச் சமூகந் தந்த நாட்கள் பற்றிய தரவுகள் பூரணமாகக் கிடைக்கப் பெறவில்லையெனினும் தாமதித்து வரும் போக்கு காணப்படவில்லை என்பதை அறிய முடிந்தது. 2004 ஆகஸ்ட் 16ம் திகதி சுகவீனம் காரணமாகத் தாமதித்து வருகை தந்ததாகப் பதிவாகியுள்ளது. பாடசாலைக்குச் செல்லும் வழியில் உள்ள ஏனைய மாணவர்களது வீட்டுக்கு, அவர்கள் துயிலெழும் முன்னரே சென்று அவர்களைக் கூப்பிடுவதாகவும், பின்னர் அவர்கள் எழுந்து தயாராகியதும் அவர்களுடன் ஒன்றாகப் பாடசாலைக்கு வருவதாகவும் அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் குறிபிட்டுள்ளனர். இம்மாணவனும் ஏனைய மாணவர்களும் தாமதித்து வருகை தருவது அரிதெனவும், தாமதிக்க நேர்ந்தால் பாடசாலைக்கு வருகை தராமல் வீட்டில் தங்கி விடுவதாகவும் ஆசிரியர் தரவுப் பதிவுப் படிவத்தில் இணைத்துள்ள குறிப்பில் கூறியுள்ளார்.

பாடசாலைக்கு நேரகாலத்துடன் வருகை தந்து விளையாட்டுக்களில் ஈடுபடுவதாகவும், ஏனைய பிள்ளைகளுடன் சண்டையிட்டுக் கொள்வதாகவும் ஆசிரியரும் குறிப்பிட்டுள்ளார். பாடசாலையில் ஆசிரியர்களது மேற்பார்வையில்லாத சந்தர்ப்பங்களில், தன்னிச்சையான செயற்பாடுகளில் இம்மாணவனிடம் ஆர்வம் காணப்பட்டுள்ளது. பாடசாலைக்கு நேர காலத்துடன் வருகை தருவது இத்தகைய ஆர்வத்தின் ஒரு வெளிப்பாடாகக் கொள்ளப்பட முடியும்.

4 ஆம் 5 ஆம் வகுப்புகளில் அனீஸ் கற்றல் மேற்கொண்ட காலங்களிலும் அவன் பாடசாலைக்கு பொதுவாக நேரம் தாழ்த்தி வருகை தரவில்லை. நேரகாலத்துடன் பாடசாலைக்கு வருவதும் பாடசாலை ஆரம்பிக்கும் வரை ஏனைய பிள்ளைகளுடன் விளையாட்டுகளில் ஈடுபடுவதும் அவனோடு இணங்காதவர்களுடன் சச்சரவுகளில் ஈடுபடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளன. 5 ஆம் வகுப்பிலிருந்த போது ஒரேயொரு நாள் துயிலெழும்பத் தாமதித்தமையினால் பாடசாலைக்கும் தாமதித்து வருகை தந்திருந்தான். 4 ஆம் வகுப்பில் ஒரு தினமேனும் தாமதிக்கவில்லை.

### ஏனைய போக்குகள்

அனீஸ் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் வகுப்புகளிலிருந்தபோது பாடசாலை விடுவதற்கு முன்னராகப் பாடசாலையிலிருந்து செல்வதற்கு முயற்சிக்கவில்லை. அவ்வாறு சென்ற ஓரிரு சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன. அப்போது அவனது பெற்றார்களுள் ஒருவர் வந்து காரணம் கூறி அழைத்துச் சென்றுள்ளனர். அல்லது அனீஸ் கடிதம் கொண்டு வந்து கொடுத்துச் சென்றுள்ளான்.

ஆயினும் 4 ஆம் 5 ஆம் வகுப்புகளில் கற்றபோது ஆசிரியரிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் அவன் பாடசாலையை விட்டுச் சென்றுவிட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன. பாடசாலையில் ஆசிரியர் வருகை தராத நாட்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்ற நாட்கள் என்பவற்றிலேயே அவ்வாறு நடந்து கொண்டுள்ளான்.

பாடசாலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இம்மாணவன் அவ்வவ்போது கலந்து கொண்ட போதிலும் பெரிய ஆர்வம் காட்டவில்லை. தவிரவும் பிள்ளைகளின் ஆர்வம் தூண்டப்படும் வகையிலோ அவர்களது கவனம் ஈர்க்கப்படும் வகையிலோ நிகழ்ச்சிகள் பாடசாலையில் அதிகளவில் நடைபெறவுமில்லை. காலைக்கூட்டம், சமய நிகழ்ச்சிகள் என்பவற்றில் ஏனோதானோவென்று அனீஸ் கலந்து கொள்வான். தனியாகவும், ஏனைய சிறுவர்களுடன் ஒன்று சேர்ந்தும் விளையாட்டு போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவனாகவிருந்த அனீஸ், வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளப் பின்வாங்கினான். ஆயினும் ஏனைய பிள்ளைகளுக்குப் பரிசில்களோ சான்றிதழ்களோ கிடைத்தபோது தனக்கும் கிடைக்க வேண்டுமென விரும்புவான்.

பாடசாலையில் நடைபெறும் அடிப்படை அன்றாட நிகழ்ச்சிகளில் இப்பிள்ளையும் ஏனையவர் களுடன் ஒன்றாக ஈடுபட்டபொழுதிலும் அவற்றிலும் நிறையோ, நேர்த்தியோ காணப்படவில்லை. உதாரணமாக, பாடசாலைச் சீருடையுடன் வந்தபோதிலும் அவற்றைத் தூய்மையாகவும் நேர்த்தியாகவும் பேணவில்லை. இறப்பர் சிலீப்பர்களுட னும், சிலவேளை வெற்றுக்கால்களுடனும் அனீஸ் பாடசாலையில் காணப்பட்டுள்ளான்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இப்பிள்ளையின் ஈடுபாடு பற்றிக் குறிப்பிடும்போது, ஆரம்பம் முதலாக பாடசாலையில் அவ்வாறான செயற்பாடுகள் தாராளமாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லையாதலினால் ஏனைய பிள்ளைகளைப் போலவே இப்பிள்ளைக் கும் குறைவான சந்தர்ப்பங்களே கிடைத்துள்ளன. அவ்வாறு கிடைக்கப் பெற்ற ஓரிரு சந்தர்ப்பங்களிலும் அனீஸ் முன்வந்து பங்குகொள்ளவில்லை. மாற்றமாக அவ்வாறான நிகழ்ச்சிகளிலிருந்து விடுபட்டுக் கொண்டுதான் சுயமான செயற்பாடுகளில் ஈடுபடுபவ னாகக் காணப்பட்டுள்ளான். முடிந்தபோது பாடசாலையிலிருந்து வெளியேறிச் சென்று விடுபவனாகவும் காணப்பட்டுள்ளான்.

வகுப்பறையிலிருந்த சந்தர்ப்பங்களில் பொதுவான நிகழ்ச்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டபோதிலும், அவற்றில் கரிசனையுடன் அனீஸ் ஈடுபடவில்லை. காலையில் வகுப்பு ஆரம்பிப்பதற்கு மணி அடித்ததும் சமய சுலோகங்கள் (திருக்குர்ஆன் வசனங்கள்) ஒலிக்கப்பட்டால் ஏனைய பிள்ளைகளைப் போன்று எழுந்து நிற்பான். எனினும், அவற்றைக் கவனமாகச் செவிமடுப்பதோ நகராது நின்று மரியாதை தெரிவிப்பதோ இல்லை. ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் வரும்போது எழுந்து நிற்பதும் முகமன் கூறுவதும் அதே பாணியிலேயே இடம்பெற்று வந்துள்ளது.

பாடவிதான செயற்பாடுகளின்போது அவனது கவனம் ஈர்க்கப்படும் வகையில் வகுப்பறைச் செயற்பாடுகள் பெருமளவில் இடம்பெறவில்லை. ஆசிரியர்களது அறிவுறுத்தல்களுக்குப் பணிந்து நடப்பதற்காக மட்டும் செயற்கையான முறையிலேயே அதிக சந்தர்ப்பங்களில் ஈடுபாடு காட்டியுள்ளான். சுய விருப்புடன் அரிதாகவே ஈடுபட்டுள்ளான்.

விரிவுரைகள் போன்று கற்பித்தல் நடைபெற்ற வேளைகளில் அனீஸின் கவனம் கற்பித்தல் நடைபெற்ற விடயங்களிலும் வேறு விடயங்களிலும் துரிதமாக மாறிமாறி இருந்து வந்துள்ளதை 3 ஆம் 4 ஆம் 5 ஆம் வகுப்புகளில் தெளிவாக அவதானிக்கப் பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது உடலியக்கங்கள் பார்வை, அசைவுகள் என்பன இதனை உறுதி செய்துள்ளன. பிள்ளைகளின் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட வேளைகளில் அனீஸ் வகுப்பறையில் அச்செயற்பாடுகளில் ஈடுபட முயன்று வந்துள்ளான். உதாரணமாக ஆசிரியர் ஒரு பாட விடயத்தை விளக்கிய பின்னர் பயிற்சி வழங்கினால் இப்பயிற்சிகளை வகுப்பறையிலிருந்து செய்வான். அப்போது ஏனைய பிள்ளைகளுக்கு இடையூறாகவுமிருப்பான். உதவியும் செய்வான். தேவையான கருவிகள் (பென்சில், அழிறப்பர், புத்தகம், கொப்பி என்பன) தன்னிடம் இல்லாதவிடத்து மற்றவர்களுடையதைப் பலவந்தமாகப் பெற்றுக் கொள்ள முயற்சித்தல் அவதானிக்கப்பட்ட விடயமாகும். அவ்வாறே செய்யும் பயிற்சிகள் தொடர்பிலான சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளும் வகையில் ஏனைய பிள்ளைகளுடன் கலந்துரையாடுவதும், அப்பிள்ளைகளுக்குத் தெரியாதன பற்றிச் சொல்லிக் கொடுப்பதும் அனீசிடம் காணப்பட்ட குணவியல்புகளாகும்.

தன்னிடமுள்ள பொருட்களினை (உதாரணம்: உணவு வகைகள், பெயரொட்டிகள், கற்றல் உபகரணங்கள்) மற்றைய பிள்ளைகளுடன் இயல்பாகப் பகிர்ந்து கொள்ளும் அதேவேளை மற்றவர்களது பொருட்களைத் தனக்குரியவை போல் பாவிப்பதையும் இயல்பாகச் செய்வான்.

அவனுக்கு ஆரம்பத்தில் சில விடயங்களில் ஆர்வமிருந்துள்ளது. உதாரணமாக ஏதேனும் ஒன்றைத் தனியாகவிருந்து வரைந்து கொண்டிருப்பவனாக அவன் காணப்பட்டுள்ளான். அதுபோலவே அவன் சோம்பி செயலற்று அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மிகவும் அரிது. இவ்வாறு அவன் ஆர்வம் காட்டிய விடயங்களில் அவன் தக்க முறையில் வழிகாட்டப்படவில்லை. மாற்றமாக எதிரிடையான ஊக்கங்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களுள்ளன. எனவே சித்திரம் வரைதல் போன்ற அவனுக்கு ஆர்வமிருந்த துறைகளில் கூட அவனது திறமைகள் போசிக்கப்படவில்லை. 4 ஆம் 5 ஆம் வகுப்புகளுக்கு வந்து விட்ட பின் அத்தகைய துறைகளிற்கூட அவனுக்கிருந்த ஆர்வமும் ஈடுபாடும் தேய்வுற்றுக் குறைந்து போய்க் காணப்பட்டன.

4 ஆம் 5 ஆம் வகுப்புகளிலிருந்த போது பாடசாலையில் நடைபெற்ற தவணைப் பரீட்சைகளில் கூட தோற்றாமல் இருந்துள்ளார். ஒரு பரீட்சையில் அவர் தோற்றாதிருந்த வினாப்பத்திரத்தை ஆசிரியர் பிறிதொரு நாளில் வழங்கிய போதிலும் அனீஸ் அதனைச் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. ஆசிரியர் பணித்ததற்காக ஏனோதானோவென அவசரமாகவும் மிகவும் குறைவுடையதாகவும் விடையளித்து விட்டு ஏனைய பிள்ளைகளுடன் விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளார்.

அனீசுடைய பெற்றோர்களில் அவனுடைய தாயின் செயற்பாடுகள் தான் அவன் மீது கூடிய செல்வாக்குச் செலுத்தின. அவர் தனது எண்ணங்களுக்கேற்ப பிள்ளையை வழிநடாத்துவார். பிள்ளை வேறுவிதமாகச் செயற்பட்டால் தாய் கடினமானவளாகி விடுவார். தண்டனைகள் வழங்குவார்; ஏசுவார்; அடிப்பார். தந்தை பிள்ளை பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை விட கருணையுடன் இருந்தபோதிலும் அவரும் தாயின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுபவராகவே இருந்துள்ளார்.

பிள்ளை பற்றி பாடசாலையுடன் தொடர்புபட வேண்டிய அநேக சந்தர்ப்பங்களில் தாய்தான் தொடர்புபடுவார். பாடசாலைக்கு வருமாறு பெற்றோர் பணிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் அவர்தான் வருவார். பிள்ளையைக் கூட்டிச் செல்லுதல் போன்ற தேவைகளுக்கு மட்டுமே தந்தை வருவார்.

தாய் தனது பிள்ளை பற்றி "நீங்கள் அவனுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் பரவா யில்லை; அவனைத் திருத்துங்கள்" என்பது போன்ற வார்த்தைகளை ஆசிரியரிடம் கூறியுள்ளார். தான் தினமும் ஏதாவதொன்றுக்காகவேனும் பிள்ளைக்குத் தண்டனை வழங்கும் போக்குடையவராகவிருந்துள்ளார். வீட்டில் ஏதேனும் எழுதுவது, வரைவது போன்ற கருமங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் சிலவேளைகளில் அவ்வாறு இருக்க வேண்டாமெனக் கடிந்து கொண்டுமிருக்கிறார். "இப்படியிருந்தால் அதிகம் படித்து உனது மூளை குழம்பிவிடும்" என்றும் கூறியுள்ளார்.

அவ்வவ்போது பிள்ளையின் கற்றல் நடவடிக்கைகளைத் திசை மாற்றுவதற்கும் முயற்சி செய்துள்ளார். உதாரணமாக மூன்றாம் வகுப்பிலிருந்தபோது பாடசாலையிலிருந்து பிள்ளையை விலக்கிக் கொள்ளவும், வெகு தொலைவில் இயங்கி வந்த சமயஞ்சார்ந்த அறபுக் கல்லூரிக்கு பிள்ளையைச் சேர்க்கவும் முயற்சியெடுத்துள்ளார். இக்காரணத்தினால் பிள்ளை சில தினங்கள் தொடர்ந்து பாடசாலைக்கு வருகை தராமலுமிருந்துள்ளார்.

இவ்வாறாக பாடசாலைக் கல்வியில் அனீஸின் ஈடுபாடு அவனது ஆளுமை மற்றும் கல்வி விருத்தியில் கணிசமான செல்வாக்கைச் செலுத்தக்கூடிய வகையிலிருந்துள்ளன. அத்தகைய செல்வாக்கு நேர்க்கணியமாகவிருந்துள்ளதை விட அதிகமாக எதிர்க்கணிய முடையதாகவிருந்துள்ளமையை மேலே குறித்த விடயங்கள் தெளிவாகச் சுட்டி நிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேர்ச்சி விருத்தி (Competency Development)

## எழுத்து (Writing)

அனீஸ் என்ற இம்மாணவன் 2002 ஆகஸ்ட் மாதமளவில் பென்சிலை வலது கையால் முறையாகப் பிடித்து எழுதுவதற்குத் தேர்ச்சி பெற்றிருந்தார். எனினும் "கா", "தூ" போன்ற எழுத்துக்களையெழுதும் தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. வீட்டில் எதனையாவது எழுதுவதிலும், வரைவதிலும் தன்னிச்சையாக ஈடுபட்டு அதிக நேரம் செலவிடுவதாக அனீஸின் பெற்றோர்கள் பலமுறை கூறியுள்ளனர். 2002 செப்டம்பரில் அவர் தனது பெயரை எழுதும் தேர்ச்சி பெற்றிருந்த போதிலும் பெயரில் இடம்பெறும் 'ஜ' என்ற எழுத்தை உரிய வடிவில் எழுதுவதற்கு அவர் தேர்ச்சியடைந்திருக்கவில்லை.

அக்டோபர் மாதத்தில் ஒரு சொல்லை முழுமையாகப் பார்த்த பின் அச்சொல்லை எழுதும் பழக்கம் பெற்றிருந்தார். அப்போது சொல்லின் எழுத்துக்களை ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து எழுதி சொல்லைப் பூரணப்படுத்துபவராக அனீஸ் காணப்படவில்லை.

2003 ஆம் ஆண்டு சனவரி, பெப்ரவரி மாதங்களில் வசனங்களைப் பார்த்து எழுதும் தேர்ச்சியை இம்மாணவர் அடையப் பெற்றிருந்தார். ஒரே சொல்லின் எழுத்துக்களை ஒரு தொகுதியாகவும், வசனத்தின் வெவ்வேறு சொற்களை இடைவெளி விட்டுத் தனியாகவும் எழுதக்கூடிய தேர்ச்சி அவரிடம் காணப்பட்டுள்ளது. வசனங்களின் இறுதியில் முற்றுப்புள்ளி வைத்து எழுதுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. பார்த்து எழுதும் சந்தர்ப்பங்களில் சில இடங்களில் நெடில் குறியாகிய "ா" ஐத் தவிர்த்தும் (உதாரணமாக "அழகானது" என்பதனை "அழகனது") வேறு சில சந்தர்ப்பங்களில் புள்ளி தேவையற்ற எழுத்துக்களுக்குப் புள்ளி வைத்தும் (உதாரணமாக "பொம்மை" என்பதனை "பொம்மைம்" என்று) தவறுகள் விட்டுள்ளார். (உரு: 15)





உரு 15: இரண்டாம் வகுப்பிலிருந்தபோது பிள்ளை எழுதிய விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இரண்டாம் தவணையில் 5-6 சொற்களுடன் கூடிய எளிய வசனங்களை அமைக்கவும், அவற்றையெழுதவும் அனீஸ் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆயினும், அவ்வாறு அவர் எழுதிய வசனங்களில் ஒரு சில எழுத்துப் பிழைகள் காணப்பட்டுள்ளன. குறிப்பாக நெடில், குறில் வேறுபாடுகளில் இக்குறைகள் சுட்டிக் காட்டத்தக்கன. உதாரணமாக "கூரையில்" என்பதனைக் " குரையில்" எனவும், "ஏறி" என்பதனை "எரி" எனவும் எழுதி யுள்ளார். இங்கு "ர", "ற" வேறுபாடும் தவறாக எழுதப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத் தக்கது. வசனத்தில் சொற்களின் ஒழுங்கு இடம் மாறி அமைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடப்பட வேண்டிய அம்சமாகும். "நான் கூரையில் ஏறி பட்டம் விட்டேன்" என எழுத வேண்டிய ஒழுங்கை "நான் பட்டம் கூரையில் ஏறி விட்டேன்" என்றவாறாகப் பிறழ்வான ஒழுங்கில் எழுதியிருந்தார். (உரு: 16)




உரு 16: அமைத்து எழுதிய வசனமொன்று

2003 ஆம் ஆண்டு மூன்றாம் தவணையாகும்போது, அதாவது செப்டம்பர் மாதத்தில், அதிக எண்ணிக்கை சொற்களை உள்ளடக்கியதான வசனங்களை அமைத்து எழுதுவதற்கு அனீஸ் தேர்ச்சியடைந்திருந்தார். எழுத்துக்களை உறுப்பமையவும், தனித்தனியாக வேறுபடுத்தியும், வசனத்தை நேராகவும் இம்மாணவன் எழுதக்கூடியவராக இருந்துள்ளார். எனினும் சிற்சில எழுத்துப் பிழைகள் (உதாரணம்: "புறா" இற்குப் "பறா" எனவும், "நிறம்" என்பதனை "நிரம்" எனவும் எழுதியிருந்தார்) தொடர்ந்தும் காணப்பட்டுள்ளன. மேலும் எழுவாய் பன்மைச் சொல்லுடன் ஆரம்பிக்கும் வசனங்களை ஒருமையில் முடிவுறுத்தும் இலக்கணப்பிழைகளும் அனீஸ் எழுதிய வசனங்களில் காணப்பட்டுள்ளன. உதாரணமாக "புறாக்கள் சாப்பிட்டுக் கொண்டு இருந்தது" என அவர் எழுதியிருந்தார். (உரு: 18a)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உரு 17: இரண்டாம் வகுப்பின் மூன்றாம் தவணையிலிருந்தபோது பிள்ளை எழுதிய வசனங்கள்

இம்மாணவன் வசனங்களை அமைத்து எழுதுவதில் பெற்றிருந்த தேர்ச்சி உறுதியானதாகக் காணப்படவில்லை. சிலவேளைகளில் ஒரு சில பிழைகளுடனும் வேறு சில வேளைகளில் அதிக எண்ணிக்கையான பிழைகளுடனும் சொற்கள் மற்றும் வசனங்கள் இம்மாணவனால் எழுதப்பட்டிருந்தன. 3ஆம் வகுப்பிலிருந்த போதும் அனீசுடைய எழுத்துத் திறன்கள் விருத்தியாகி வரக் காணப் பட்டன. பார்த்து எழுதுமாறு பணிக்கப்பட்டபோது ஆர்வத்துடன் கருமத்தில் ஈடுபடுவராகவும், விரைவில் வேலையை முடித்துவிட்டு ஓய்வாகவிருக்கவும், விளையாட்டுக்களில் ஈடுபடவும், ஏனைய பிள்ளைகளுக்கு உதவவும் விரும்பி முன்வருபவராக அவதானிக்கப்பட்டுள்ளார்.


பாரத்தெழுதிய பந்தியிலும் உறுப்பமைய எழுத்துக்கள் காணப்பட்டன. சொற்களிடையே போதுமான இடைவெளி விட்டும், இடைவெளி விடாமலும் எழுதியிருந்தார். சில நெடில் குறிகளைத் தவறவிட்டுமிருந்தார். "கண்டு" என்பதற்குப் பதிலாக ஒத்த ஒலியுடன் கூடிய "கண்று" என எழுதியிருந்தார் (உரு: 18a).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உரு 18a : மூன்றாம் வகுப்பிலிருந்தபோது பிள்ளை எழுதிய வசனங்கள்**

மேலும் ஒரு பந்தியை பார்த்து எழுதியபோது அதிக நேரமெடுத்து முன்னரை விட அழகாக எழுதியிருந்தான். இங்கும் முன்னர் போன்ற வழுக்கள் அவதானிக்கப்பட்டன. ஆயினும் சொற்களுக்கிடையில் சமனான இடைவெளி விட்டு எழுதியிருந்தான் (உரு: 18b).





**உரு 18b: மூன்றாம் வகுப்பில் பிள்ளை பார்த்து எழுதிய வசனங்கள்**

செவிமடுத்து எழுதுதல் பயிற்சி வழங்கப்பட்டபோதும் உற்சாகத்துடனும், கவனத்துடனும் செவிமடுப்பவராகவும் மேலும் எழுதத் தருமாறு வேண்டுபவராகவும் அனீஸ் காணப்பட்டார். சக மாணவருக்கு உதவி செய்ய முன்வருபவராகவும் அவதானிக்கப் பட்டார். யூலை மாதத்தில் (2004) அவர் எழுதியதை விட அக்டோபர் மாதத்தில் அழகாகவும், குறைந்த எண்ணிக்கை வழுக்களுடனும் எழுதியிருந்தார். உரு: 18b உம், உரு: 18c யும் இதனை எடுத்துக் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரமொன்றைப் பார்த்து அது பற்றிய வாக்கியங்கள் எழுதுமாறு பணிக்கப்பட்டபோது, சித்திரத்தை உன்னிப்பாகக் கவனித்து ஆர்வத்துடன் அதனை ஆராய்பவராக அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். அதனைப் பார்த்து உற்சாகத்துடன் எழுதினார். உரு: 18c.


3rd Term
6.12.(3)
பாடசாலை இல : 27T மாணவர் இல : 02 சித்திரத்தைப் பார்த்து எழுதுகல்

உரு 18c : சித்திரத்தைப் பார்த்து பிள்ளை எழுதிய வசனங்கள்

இரண்டாம் தவணையிலும், 3ஆம் தவணையிலும் அனீஸ் படம் பார்த்து வசனம் எழுதிய சந்தர்ப்பங்களில் ஏறக்குறைய ஒரேவிதமாகவே எழுதியிருந்தார்.

இரண்டு சந்தர்ப்பங்களிலும் எளிய வசனங்களை எழுதியிருந்தாரெனினும் ஒருமை, பன்மை ஒத்திராத வகையிலும் சில வசனங்களை எழுதியிருந்தார். ஒரு சில எழுத்துப் பிழைகளும் காணப்பட்டன. அழகுற எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. உரு: 18b யும், உரு 18c யும் அனீஸ் முறையே இரண்டாம், மூன்றாம் தவணைகளில் இவ்வாறு எழுதிய வசனங்களைக் காட்டுகின்றன.

அனீஸ் என்ற இப்பிள்ளை 4ஆம் வகுப்பின் ஆரம்பத்தில் இருந்தபோது (2005 பெப்ரவரி மாதம்) சினிமாப் பாடலொன்றின் நான்கு வரிகளை மிக நேர்த்தியாக எழுதியிருந்தார். (உரு: 19) காதலியிடம் காதலன் கூறுவதாக அமைந்திருந்த இப்பாடல் வரிகளில் எழுத்துப் பிழைகள் எதுவும் காணப்படவில்லை. சொற்களுக்கிடையில் சீரான இடைவெளி விடப்பட்டிருந்தது. எழுத்துக்களின் அளவு சரியான விகிதாசாரத்திலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தடுத்த எழுத்துக்களுக்கிடையிலான இடைவெளி சீரானதாகவும் காணப்பட்டன. பாடலடிகளை தனித்தனி வரிகளில் முறையாக எழுதியிருந்தார்.

இவ்வாறு மிக அழகாக எழுதப்பட்டிருந்த இந்த நான்கு வரிகளைத் தொடர்ந்து மேலும் சில வரிகள் எழுதப்பட்டிருந்தன. அவை மிகவும் கிறுக்கலானதும் தெளிவற்றதுமான எழுத்துக்களாகவிருந்தன. ஒரு வரியின் சொற்கள் ஒரே நேராகக் கூட அமைந்திருக்கவில்லை. என்ன எழுதப்பட்டுள்ளதென வாசிப்பது கூட சிரமமாகவிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதே பக்கத்தில் நீரில் மிதக்கும் படகு ஒன்றின் உருவம் வரையப்பட்டும் 1000 என்ற எண்ணை எழுதி வட்டமிடப்பட்டுமிருந்தது.

அனீஸ் தேவையானபோது சிறப்புற எழுதும் தேர்ச்சி பெற்றிருந்தமையையும், அதேவேளை அவனுக்கு ஆர்வமில்லாதவிடத்து அத்தேர்ச்சிகள் அடையப் பெறாதவர் களைப் போன்று துலங்கவும் கூடிய தன்மைகளுடனிருந்தமையை இது உறுதி செய்கிறது.

மேலும் அனீசுடைய எழுத்துக்களில் உறுப்பமைய எழுதப்படாத சந்தர்ப்பங்கள் மாறி மாறி வெளிக்காட்டப்பட்டுள்ளன.




உரு: 19 அனீஸ் எழுதிய பாடல் வரிகள்

உதாரணமாக "இ" என்ற எழுத்தை அவ்வப்போது "கு" என்றவாறும், "ரு" என்ற எழுத்தை " ரூ " என்றவாறும், " சூ "என்ற எழுத்தை " கு " என்றவாறும், "வி" என்ற எழுத்தை "பி" என்றவாறும், "ய்" என்ற எழுத்தை "ப்" என்றவாறும், "யூ" என்ற எழுத்தை "மூ" எனவும் அனீஸ் எழுதியிருந்தான். ஆயினும் எப்போதும் அவ்வாறு எழுதவில்லை. சில சந்தர்ப்பங்களில் சரியாகவும், வேறு சில சந்தர்ப்பங்களில் பிழையாகவும் மாறிமாறி எழுதுபவனாக அனீஸ் காணப்பட்டுள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடில் குறில் பேதம் இப்பிள்ளையினால் உறுதியாகப் பின்பற்றப்படவில்லை. உதாரணமாக "காலை" என்பதனை "கலை" எனவும், "மாமா" என்பதனை "மாம" எனவும், "நாகப்பாம்பு" என்பதனை "நாகாப்பம்பு" எனவும், "சென்றேன்" என்பதனை "சென்றென்"எனவும், "படித்தேன்" என்பதனை "பாடித்தென்" எனவும், "பள்ளிக்கு" என்பதனை "பாள்ளிக்கு" எனவும், "விளையாடினேன்" என்பதை "வீளையாடினேன்" எனவும், "யாசீன்" என்பதனை "யாசின்" எனவும் எழுதியிருந்தான். 2005 ஆகஸ்ட் மாதத்தில் அவன் எழுதியிருந்த ஒரு பக்கம் உரு 20 இல் காட்டப்பட்டுள்ளது.



உரு 20: 11.08.2005 இல் அனீஸ் எழுதியிருந்த ஒரு பக்கம்

இவ்வாறே எளிய இலக்கணப் பிழைகளும் அனீஸுடைய எழுத்துக்களில் காணப்பட்டன. குறிப்பாக இறந்த கால, நிகழ்கால, எதிர்கால பேதங்களையும், ஒருமை, பன்மை பேதங் களையும் சரியான முறையில் இப்பிள்ளை கையாளவில்லை. அவ்வப்போது சரியாகவும் கையாண்டிருந்தார். ஆதலின் இவ்விடயத்திலும் உறுதித்தன்மை காணப்படாமை குறிப் பிடத்தக்கது. காலம் தொடர்பில் பிழையாக அவன் பின்வருமாறான வசனங்களை எழுதி யிருந்தான்.

நான் கொப்பியில் படிக்கிறது.

அவன் வழுக்கி விழுந்து புண் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்புணர்ச்சியில் இப்பிள்ளை பெரிதும் இடர்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளான். உதாரணமாக 'எலிக்குஞ்சு' இற்கு 'எலிகுஞ்சு', "மணியடி" இற்கு " மணிஅடி", "அச்செழுத்து" இற்கு "அச்சுஎழுத்து", "இடத்திலுள்ள" இற்கு "இடத்தில் உள்ள", "மணியளவில்" இற்கு "மணிஅளவில்", "வாழைப்பழம்" இற்கு "வாழைபழம்" என்ற வாறே பயன்படுத்த விளைந்துள்ளான்.


தன்னுடைய கருத்தை வெளிப்படுத்தி சில சொற்களுடன் கூடிய வாக்கியங்களை எழுதும் தேர்ச்சி அடையப் பெற்றிருந்த அனீஸ் 2005 ஆகஸ்ட் மாதத்திலும் மிக எளிமையான வசனங்களாகவே அமைப்பான். உதாரணமாக,

நான் மாமி வீட்டுக்குச் சென்றேன்.
நான் சைக்கிள் விளையாடினேன்.

அவர் எழுதிய வசனங்களில் அவரது சுற்றாடலில் - வீட்டினதும், பாடசாலையினதும் - காணப்பட்ட வழக்குகள் பெரிதும் பிரதிபலித்தன. பின்வருவனவற்றை உதாரணங் களாகக் குறிப்பிடலாம்:

பகல் ஆவினால் பள்ளிக்குப் போவோம்.
சாயந்தரம் ரூசன் பைட்டு வந்து நின்று படுப்பேன்.

மேலே குறிப்பிட்டவாறே 2006 இலும் அனீஸுடைய எழுத்துத் தேர்ச்சிகள் பெரிய மாற்றங் களேதுமின்றிக் காணப்பட்டுள்ளன. கால வேறுபாடு, ஒருமை, பன்மை வேறுபாடு, சொற் புணர்ச்சி போன்ற அம்சங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டில்லை. 2006 நவம்பர் மாதத்தில் கொடுக்கப்பட்ட படத்தைப் பார்த்து குறைந்தபட்சம் நான்கு சொற்களைக் கொண்டதான ஆறு வாக்கியங்கள் எழுதுமாறு பணிக்கப்பட்டபோது அனீஸ் எழுதிய ஆறு வாக்கியங்கள் உரு 21 இல் காட்டப்பட்டுள்ளன.





**உரு 21: 2006 நவம்பர் மாதத்தில் அனீஸ் எழுதிய வாக்கியங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியில் எழுத்து மூலம் தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் தேர்ச்சி அனீஸிடம் ஓரளவு விருத்தியுற்றுக் காணப்பட்டமை தெளிவாகிறது. ஆயினும் 5 ஆம் வகுப்பு மாணவனொருவனிடம் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு அவனிடம் அத்தேர்ச்சி விருத்தியாகி யிருக்கவில்லை.

சிங்கள மொழியில் අ, ආ, ඉ, ඊ போன்ற ஆரம்ப எழுத்துக்களையும், අම්මා ˊபோன்ற ஆரம்ப சொற்களையும் பார்த்து எழுதுவதற்கு மட்டுமே அனீஸ் தேர்ச்சியடைந் திருந்தான்.



உரு 22: 4 ஆம் வகுப்பிலிருந்தபோது அனீஸ"டைய சிங்கள எழுத்துக்கள்

## வாசிப்பு (Reading)

அனீஸ் என்ற இம்மாணவனால் 2002 பெப்ரவரி மாதத்தில் "அ" என்ற எழுத்தை மாத்திரமே இனங்காண முடிந்துள்ளது. மார்ச் மாதத்தில் அ, ஊ, எ ஆகிய எழுத்துக்களையும், ஏப்ரல் மாதத்தில் அ, ஆ, ய, ப, ச, ஐ, ன, வ, இ ஆகிய எழுத்துக்களையும் மே மாதத்தில் அ, ஆ, ப, ச, ய, ஐ, ஊ, வ, இ ஆகிய எழுத்துக்களையும் அவரால் அடையாளங் கண்டு வாசிக்க முடிந்துள்ளது. இவ்வாறாக அடையாளங் கண்டு வாசிக்கும் எழுத்துக்களின் தொகை படிப்படியாக அதிகரித்து ஜ"லை மாதமாகுபோது வீடு, ஆடு, பூ, குடை, பசு, மரம், பத்து, பட்டு, மாமா, படம் ஆகிய எளிய சொற்களை வாசிக்கும் தேர்ச்சி இம்மாண்வனால் அடையப் பெற்றிருந்தது. ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அவரால் வாசிக்கக்கூடிய எழுத்துக்களினதும் சொற்களினதும் எண்ணிக்கை அதிகரித்து, ஒக்டோபர் மாதத்தில் எல்லா எழுத்துக்களையும் அடையாளங் கண்டு வாசிக்கும் தேர்ச்சியை அவர் அடையப் பெற்றிருந்தார். எனினும், ஒரு சந்தர்ப்பத்தில் அடையாளங் காண முடியுமான சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களை (உதாரணம்: உ) வேறு சில சந்தர்ப்பங்களில் அடையாளங் காணவியலாது மறந்துவிட்டதாக அனீஸ் குறிப்பிடுபவராகக் காணப்பட்டுள்ளார். இவ்வாறாக ஆண்டிறுதியில் 2002 இற்குரிய வாசித்தல் தொடர்பான தேர்ச்சித் திறன்களை அனீஸ் அடையப் பெற்றிருந்தார்.

2 ஆம் தரத்திலிருந்தபோது தரவுப் பதிவுக்குரிய 7.4 கருவியில் தரப்பட்டுள்ள சொற்களை வாசிக்கக்கூடியவராக அனீஸ் காணப்பட்டுள்ளார். ஆயினும் வல்லின, மெல்லின வேறுபாடுகள் புலப்படும் வகையில் உச்சரிக்கும் தேர்ச்சி காணப்படவில்லை. 2004 ஆம் ஆண்டில் வாசிப்புக்குரிய தரவுப்பதிவுகள் கிடைக்கப் பெறவில்லையெனினும் கருவி 7.6 இல் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் மூன்றையும் இம்மாணவன் ஆர்வமுடன் வாசித்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் நிறுத்தற்குறிகளை அனுசரித்து வாசிக்கக்கூடியவராகவோ வல்லின, மெல்லின வேறுபாடுகளுக்கேற்ப உச்சரித்து வாசிக்கக்கூடியவராகவோ அவர் காணப்படவில்லை. வாசித்த இம்மூன்று வாக்கியங்களினதும் கருத்தைக் கிரகித்துக் கொண்டவராகவும் அவர் காணப்படவில்லை. உதாரணமாக "நவீன தொடர்பு சாதனம் எது?" என்ற வினாவிற்கு விடையளிக்கத் தவறியுள்ளார்.

3 ஆம் வகுப்பு இறுதியில் அனீஸ் நன்றாக வாசிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார். எனினும் இச்சந்தர்ப்பத்திலும் வசனங்களின் கருத்து தெளிவாகும் வகையில் சொற்கள், சொற்கூட்டங்களை வேறாக்கியும் நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும், சொற்களைத் தொகுதியாக்க வேண்டிய இடங்களில் தொகுதியாக்கியும் வாசிக்கும் தேர்ச்சி அவரிடம் காணப்படவில்லை.

மேலும் வாசித்தலின்போது எழுத்துக்கள் உச்சரிக்கப்படும் பாங்கு, மாணவரது வீட்டுச் சூழலில் பயன்படுத்தப்படும் வழக்குகளைப் பிரதிபலிப்பதாகக் காணப்பட்டுள்ளது. அன்றியும் னகர - ணகர, லகர - ளகர - ழகர மற்றும் ரகர - றகர பேதங்கள் உட்பட வல்லின மெல்லின உச்சரிப்புகள் சரியான முறையில் விருத்தியாகியிருக்கவில்லை.

4 ஆம் வகுப்பின் (2005 இல்) மூன்றாம் தவணையிலிருந்தபோது வாசிப்புத் தேர்ச்சிகள் அனீஸிடம் மேலும் விருத்தியாகிக் காணப்பட்டன. நிறுத்தற்குறிகளை அனுசரித்தும், சரியாக உச்சரித்தும் வாசிக்கக்கூடியவராக அவதானிக்கப்பட்டுள்ளார். வாசிக்கும் போது சொற்களின் மீது விரலை வைத்தவாறும் நிறுத்தி நிறுத்தியும் வாசிக்கக்கூடிய வராக விருந்துள்ளார். குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் வாசிக்கக்கூடியவராகவும் அவ்வப்போது காணப்பட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் மூன்றாம் தவணைக்குரிய கருவி இல 07 இன் கீழ்வரும் வாசித்தலுக்கான மூன்று பந்திகளை அனீஸ் வாசித்தபோது பெறப்பட்ட அவதானிப்புகளாகும். சில சந்தர்ப்பங்களில் ஒருவிதமாகவும் வேறு சில சந்தர்ப்பங் களில் வேறொரு விதமாகவும் அனீஸ் துலங்கல் காட்டியமை இங்கு குறிப்பிடப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். உதாரணமாக முதலாம் பந்தியை வாசித்தபோது குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் வாசிக்கத் தவறிய அனீஸ் இரண்டாவது மூன்றாவது பந்திகளை வாசித்தபோது குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் வாசித்தான். அவ்வாறே முதலாம், இரண்டாம் பந்திகளை வாசித்தபோது சொற்களை விட்டுவிட்டு வாசிக்கத் தவறியிருந்த அனீஸ் மூன்றாம் பந்தியை வாசித்தபோது அதனைச் செய்பவராகக் காணப்பட்டார்.

மேலும் நிறுத்தற்குறிகளை அனுசரித்து வாசித்தல் என்ற திறனைக் கருதினாலும், அத்திறன் அனீஸிடம் காணப்பட்ட அதேவேளை, வாசித்த சில சந்தர்ப்பங்களில் அந்தத்திறன் அவரிடம் விருத்தியாகியிருந்தமை வெளிக்காட்டப்படவில்லை. சரியாக உச்சரித்து வாசித்தல் என்ற திறனை எடுத்துக் கொண்டாலும் இதுவே நிலைமையாக விருந்தது.

வாசித்த பந்தியின் முழுக்கருத்தை விளங்கியமையை உணர்த்தியவாறு வாசிக்கத் தவறி யிருந்தார். எனினும் கொடுக்கப்பட்ட பந்திகளுள் இறுதியானதை வாசித்தபோது வாசித்த விடயத்தின் கருத்தை ஓரளவு விளங்கிக் கொண்டவராகக் காணப்பட்டார். இவ்வாறாக 4 ஆம் வகுப்பிலிருந்தபோது அவரது வாசித்தல் தேர்ச்சித் திறன்கள் விருத்தியாகிக் காணப்பட்டன.

5 ஆம் வகுப்பிலிருந்தபோது வாசித்தல் தொடர்பிலான தேர்ச்சிகள் பெரிய வித்தியாசங் களின்றி 4 ஆம் வகுப்பில் காணப்பட்டவாறே அவதானிக்கப்பட்டன. சரியான உச்சரிப்புடன் வாசித்தல், சொற்களின் மேல் விரல்களை வைத்துக் கொண்டு வாசித்தல், சொற்களை விட்டுவிட்டு வாசித்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். நிறுத்தற் குறிகளை அனுசரித்து வாசித்தல் என்ற விடயத்தைக் கருத்திற் கொண்டால் அனீஸிடம் கொடுக்கப்பட்ட மூன்று பந்திகளை (கருவி 7.8.1) வாசித்தபோதும் இந்தத் திறனை வெளிக்காட்டத் தவறியிருந்தார். கருத்து விளங்கி வாசித்துள்ளாரா? என்பதைக் கவனத்திற் கொண்டபோது 3 பந்திகள் தொடர்பில் கேட்கப்பட்ட 6 வினாக்களில் அவர் முதலாம் பந்தியின் 2வது வினாவிற்கு மட்டுமே விடையளிக்கக்கூடியவராகக் காணப்பட்டார். அனீஸ் கற்ற வகுப்பின் மிகச் சிறந்த மாணவன் (மாணவன் இலக்கம் 01) சற்று திக்கு வாய் குறைபாடுடையவன். வகுப்பில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டால் அனீஸுசும் இந்த மாணவனும் ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடி பயிற்சிகளுக்கு விடையளிப்பவர்களாக அவதானிக்கப்பட்டுள்ளனர். கணித பயிற்சிகளைச் செய்து கொண்டிருந்த அவ்வாறானவொரு சந்தர்ப்பம் ஆராய்ச்சி யாளரின் அவதானத்துக் குட்பட்டது (ஆழ்சிந்தனைப் பதிவேடு 2006). புத்தகத்திலிருந்த வினாவை வாசித்து அதில் கொடுக்கப்பட்டிருந்த தரவுகளையும் கேட்கப்பட்டிருந்த கேள்வியையும் அனீஸ் இலக்கம் 01 மாணவனுக்கு விளங்கப்படுத்துவான். அப்போது அம் மாணவன் பிரச்சினையை இப்படித்தான் தீர்க்க வேண்டுமெனக் கூற இருவருமாக விடையெழுதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பின் மிகச் சிறந்த மாணவனை விடவும் வாசித்து கிரகிக்கும் தேர்ச்சி அனீஸிடம் கூடுதலாக விருத்தியுற்றுக் காணப்பட்டதென்பதை இந்த அவதானிப்பு எடுத்துக் காட்டியது.

1ஆம் வகுப்பிலிருந்து படிப்படியாக விருத்தியாகிய வாசித்தல் தேர்ச்சிகள், 5 ஆம் வகுப்பையடைந்தபோது அனீஸினால் எந்தவொரு விடயத்தையும் வாசிக்கக்கூடிய மட்டத்துக்கு விருத்தியுற்றுக் காணப்பட்டன. ஆயினும் உச்சரிப்பு, நிறுத்தற்குறிகளை அனுசரித்தல், கருத்தறிதல் போன்ற விடயங்களில் போதுமான தேர்ச்சியை அவன் பெற்றிருக்கவில்லை யென்பதனை மேலே கூறிய விடயங்கள் உறுதி செய்கின்றன.

## செவிமடுத்தல் (Listening)

முதலாம் வகுப்பிலிருந்தபோது (2002 இல்) செவிமடுத்தல் பற்றிய தரவுகள் கிடைக்கப் பெறவில்லையெனினும், ஆசிரியர் புலக்காட்சியின்படியும் ஆய்வாளர் புலக்காட்சியின் படியும் அனீஸ் என்ற இம்மாதங்கள் செவிமடுத்துத் துலங்கல் காட்டக்கூடியவராக விருந்துள்ளமையைக் குறிப்பிடுகின்றன.

இரண்டாம் வகுப்பின் (2003ம் ஆண்டின்) மார்ச், யூலை, ஒக்ரோபர் மாதங்களில் இம்மாணவனது செவிமடுத்தல் பற்றிய தரவுகள் பதிவாகியுள்ளன. மார்ச் மாதம் முதலே வினாக்களுக்கு வாய்மொழி மூலம் சரியான துலங்கல் காட்டக்கூடியவராக இருந்துள்ள அனீஸ் யூலை, ஒக்ரோபர் மாதங்களிலும் இத்தேர்ச்சியைத் தொடர்ந்து பேணி வந்துள்ளார். அவ்வாறே சிந்தித்துத் துலங்கல் காட்டும் தன்மையும் அவரிடத்தில் ஆரம்பம் முதலே இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அக்டோபர் மாதத்தில் ஒரு பாடலை ஆசிரியர் பாடும்போது அதனை மிகக் கவனமாகச் செவிமடுப்பவராக அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். எனினும் உணர்வுகளை முகத்தில் காட்டக்கூடியவராகவோ, பாடலுக்கு ஏற்ப தாளமிடக்கூடியவராகவோ அவர் காணப்பட வில்லை.

மார்ச், யூலை, ஒக்ரோபர் ஆகிய மூன்று சந்தர்ப்பங்களிலும் குழுவில் செவிமடுத்துத் துலங்குபவராகவும், தனியே செவிமடுத்துத் துலங்குபவராகவும் நயப்புடன் செவிமடுத்துத் துலங்குபவராகவும் அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் செவிமடுப்பவராகக் காணப்பட்ட அனீஸ் அதற்கேற்பத் துலங்காமலும் இருந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

4ஆம் வகுப்பின் (2005 ஆம் ஆண்டின்) முதலாம் தவணையில் அனீஸ் கவனமாகச் செவிமடுத்தலில் சாதாரண தேர்ச்சி பெற்றிருந்தானெனினும் இரண்டாம், மூன்றாம் தவணைகளில் இத்தேர்ச்சி அவனிடம் உயர்வான மட்டத்தில் காணப்பட்டுள்ளது. அவனுக்கு ஆர்வமுள்ள விடயங்கள் தொடர்பில் வினா எழுப்பியவாறும் அனுபவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் உணர்வுகளை வெளியிட்டவாறும் துலங்குபவனாக ஆசிரியரது புலக்காட்சி சுட்டிக் காட்டுகிறது. அவ்வாறான விடயங்களினைச் செவிமடுத்த பின்னர், தொடர்புபட்ட இடப்பெயர்கள், சம்பவங்கள் என்பனவற்றை ஞாபகத்தில் சொல்லக்கூடியவனாகவு மிருந்துள்ளான். தனக்கு ஆர்வமில்லாதவொரு விடயம் பற்றியதெனின் பெரும்பாலும் கவனமாகச் செவிமடுத்தலுக்குரிய மேற்கூறிய துலங்கல்களை வெளிக்காட்டாதவனாகவே அனீஸ் காணப்பட்டுள்ளான். செவிமடுத்தலின்போது வாய்மொழி மூலமல்லாத துலங்கல் களைப் பொதுவாக அனீஸ் சுயமாக வெளிக்காட்டியில்லை. எனினும் வேண்டப்படு மிடத்து துலங்கல் காட்டினான். உதாரணமாக "தெரியும்" என்பதைக் கையுயர்த்திக் காட்டி வெளியிடுமாறு வேண்டப்பட்டால் அவ்வாறு துலங்குவான். மேலும் அருகிலுள்ள பிள்ளைகளுக்குத் தொல்லை கொடுக்கக்கூடியவராகவும் மூர்க்கத்தன்மை வெளிப்படு மாறும் அனீஸ் துலங்கியமை ஆசிரியரது புலக்காட்சியூடாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கவனமாகக் கிரகித்துச் செவிமடுத்தலில் போலவே நயப்புக்காகச் செவிமடுத்தலின் போதும் கற்றலுக்காகச் செவிமடுக்கும்போதும் சிந்தனைக்காகச் செவிமடுக்கும்போதும் அனீஸ் துலங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கற்றலுக்காகச் செவிமடுத்தலின்போது அருகிலிருக்கும் பிள்ளைகளிடம் விபரங்களை விசாரிக்கக்கூடியவனாகவும், தனக்கு விளங்காதனவற்றை "விளங்கவில்லை" என்று கூறக் கூடியவனாகவும் அவன் காணப்பட்டுள்ளான். வழங்கப்படும் அறிவுறுத்துரைக்குச் செவிமடுத்த வேளைகளில் சிறிதுநேரம் செவிமடுத்து வேறு வேலைகளில் ஈடுபடக்கூடிய வனாக அனீஸ் காணப்பட்டபோதிலும் துலங்கல் உயர்மட்டத்திலிருந்ததென்பது ஆசிரியரின் புலக்காட்சியாகும். மூன்றாம் தவணையாகும்போது கவனமாகச் செவி மடுத்து உயர் மட்டத் துலங்கல் காட்டியதாகவும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

ஐந்தாம் வகுப்பை அடைந்தபோது அனீஸ்"டைய செவிமடுத்தல் தொடர்பான தேர்ச்சிகள் ஏறத்தாழ நான்காம் வகுப்பிலிருந்த அதேமட்டத்தில் காணப்பட்டன.

கதைகள், பாடல்களை நன்கு செவிமடுக்கக்கூடியவனாகவும், பாடல்களைச் செவிமடுத்த வேளை தாளம் தட்டக்கூடியவனாகவும், தாளத்துக்கேற்ப அசையக்கூடியவனாகவும், முகத்தில் மகிழ்ச்சி, இரசனையை வெளிக்காட்டக்கூடியவனாகவும் அனீஸ் இருந் துள்ளான். பாடங்களின்போது வினாக்கள் கேட்டவாறு பாடத்துடன் தொடர்பு கொள்ப வனாகவும், பொது அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின் ஆசிரியைக்கு அருகில் வந்து அது பற்றி மீண்டும் வினவக்கூடியவராகவும், விளையாட்டுத்திடலில் வழங்கப்பட்ட கட்டளை களை நன்கு செவிமடுத்துத் துலங்குபவனாகவும் அனீஸ் இருந்துள்ளதாக ஆசிரியரின் புலக்காட்சி வெளிப்படுத்தியது. அதுபோலவே ஆசிரியர் அறிவித்த விடயத்தைப் பற்றி நண்பர்களிடம் மீண்டும் வினவி விளங்கும் போக்கும் காணப்பட்டுள்ளது. ஆசிரியர் அறிவுறுத்தல் வழங்கிய பின், விளங்காதவை பற்றி எழுந்து நின்று வினவுவதாக ஆசிரியர் புலக்காட்சி வெளிப்படுத்துகிறதெனினும் ஆராய்ச்சியாளரின் அவதானிப்புகளின் படி கதிரையில் அமர்ந்தவாறே அனீஸ் வினாவெழுப்புவது அதிக சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளது. ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுடன் கதைத்துக் கொண்டிருத்தல், அல்லது வேறு வேலைகளில் ஈடுபடுதல் அனீசிடம் காணப்பட்ட தன்மைகளாகும். ஏனைய பிள்ளைகளைப் பாடத்தின் போதும் தொந்தரவு செய்யக்கூடியவனாகவும் காணப்பட்டுள்ளான்.

செவிமடுத்த சிறு சம்பவத்தைக் கூட முற்றாக மறந்து விடுவான் என்றும் செவிமடுத்த சம்பவத்தின் ஒழுங்குமுறையை நினைவில் வைத்துக் கொள்வதில்லையெனவும் ஆசிரியர் புலக்காட்சி சுட்டிக் காட்டுகிறது.

ஆர்வம் செலுத்தாத விடயங்களைப் பொறுத்தவரை இது சரியாயினும் அனீசுக்கு ஆர்வமுள்ள விடயங்களைப் பொறுத்தவரை இக்கூற்று பொருந்தாதென்பது ஆராய்ச்சி யாளரின் கருத்தாகும். ஆர்வமிருப்பின் சம்பவத்தை அல்லது விடயத்தை நன்கு கிரகித்தும் நினைவில் வைத்தும் அவனால் துலங்க முடியுமாகவிருந்துள்ளது. ஏனோ தானோவெனச் செவிமடுத்த சந்தர்ப்பங்களில் சரியான கருத்தை விளங்கிக் கொள்ளத் தவறுவதும், ஏனைய பிள்ளைகளின் கவனத்தைக் கலைக்கும் வகையிலான செயல் களில் ஈடுபடுவதும் காணப்பட்டுள்ளது.

இவ்வாறாக அனீசுடைய செவிமடுத்தல் தேர்ச்சிகள் விருத்தியாகியிருந்தன. இப்பிள்ளை தனக்குத் தேவையான அல்லது தான் ஆர்வங் கொண்டுள்ள விடயங்களில் கவனமாகச் செவிமடுத்து தேவையானவற்றைக் கிரகித்துக் கொள்பவனாகவும் அதேவேளை தான் ஆர்வங் கொள்ளாதவிடத்து செவிமடுத்தலில் கவனஞ் செலுத்தாது வேறு விடயங்களில் ஈடுபடுபவனாகவும் இருந்துள்ளமை அனீசுடைய பொதுவான ஆளுமை விருத்தியுற்றிருந்த பாங்குடன் இயைபுடையதாகவுள்ளமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

## பேச்சு (Speech)

முதலாம் வகுப்புக்குரிய (2002ம் ஆண்டு) தரவுப் பதிவுப் பத்திரங்களின் பதிவுகளின்படி, அனீஸ் மார்ச் மாதம் முதல் யூலை மாதம் வரை சற்று நேரம் அமைதியாகவிருந்து விட்டுச் சிறுகச் சிறுகவே உரையாடல்களில் ஈடுபடுபவனாகக் காணப்பட்டுள்ளான். இக் காலப் பகுதியில் அவன் உரையாடல் தேர்ச்சிகளை அடையப் பெற்றிருந்தமை ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் 34ம் பக்கப் பதிவுகளால் தெளிவாகின்றது. விருப்புடனும், அனுபவங்களுக்கேற்பவும், சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்தும் கதைக்கக்கூடியவனாக இந்த வருட செப்டம்பர், ஒக்ரோபர் மாதங்களில் அவன் அவதானிக்கப்பட்டுள்ளான். இச் சந்தர்ப்பங்களில் சம்பவங்களைக் கட்டியெழுப்பும் வகையிலும், அங்க அசைவு அபிநயங் களுடனும் விவரித்துக் கதைக்கும் திறன் பெற்றிருந்தான். ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் 18, 22, 23, 25, 29, 30, 32, 34 ஆகிய பக்கங்களில் இவை பற்றிய குறிப்புகள் பதிவாகி யுள்ளன.

இரண்டாம் வகுப்பின் (2003ம் ஆண்டு) யூன் மாதமளவில் சம்பவம் ஒன்றைக் குறிக்கும் பட அட்டைகளை அவதானித்து, அவற்றிற் காணப்படும் சம்பவங்களைப் புரிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, அச்சம்பவங்களை விபரித்துக் கதைக்கும் தேர்ச்சி பெற்றிருந்தான். பட அட்டைகளின் நிகழ்ச்சி ஒழுங்கு வரிசையில் சம்பவத்தை விபரித்துக் கதைக்கக்கூடிய வனாகவும் காணப்பட்டுள்ளான். அதைப்போலவே அட்டைப்படங்களுக்கேற்ப ஆக்க பூர்வமாகக் கதைகளை உருவாக்கி, உருவாக்கிய கதைகளைச் சொல்லக்கூடிய தேர்ச்சியும் அடையப் பெற்றிருந்தான்.

பட அட்டவணைகளுடன் தொடர்பாக மேலே குறித்துக் காட்டிய திறமைகள் 2003 நவம்பர் மாதத்திலும் இம்மாணவனில் அவதானிக்கப்பட்டுள்ளன. அப்போது யூன் மாதத்தை விடவும் இத்திறமைகள் மேம்பட்டுக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் வகுப்பின் (2004 ஆம் ஆண்டு) முதலாம் தவணையில் பாடல் ஒன்றை அல்லது கவிதையொன்றைத் தனியாகப் பாடக்கூடியவராக அனீஸ் அவதானிக்கப் பட்டுள்ளார். அவ்வாறு பாடும்போது தன்பாட்டுக்குத் தனியாகத் தாளமிடக்கூடிய வராகவும் அவர் காணப்பட்டுள்ளார். எனினும் ஏனைய பிள்ளைகளுடன் கூட்டாக ஆடிப்பாடும் போக்கு அவரிடம் காணப்படவில்லை. ஆனால் இரண்டாம் தவணையாகும் போது, மற்றப் பிள்ளைகளுடன் கூட்டாகச் சேர்ந்து ஆடிப்பாடும் தேர்ச்சியினையும் அடையப் பெற்றிருந்தார்.

முதலாம் தவணையிலேயே அவரிடம் வழங்கப்படும் செய்தியொன்றை உரியவரிடம் அச்சொட்டாக கூறும் திறமை பெற்றிருந்தார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது சொந்த சொற்களைப் பயன்படுத்தினாலும், செய்தியின் உள்ளடக்கமோ, கருத்தோ திரிபடையாதவாறு செய்தியைக் கூறும் திறமையும் அவரிடம் இருந்துள்ளது. அனீஸுடைய வீட்டுச் சூழலில் வழக்கிலுள்ள சொற்களும், பேச்சு வழக்குகளும் அவரது உரையாடல்களில் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. தூசனம் இழையோடும் இழிசொற் களும் தாழ்ந்த ரக வழக்குகளும் புறநடையாகவிருக்கவில்லை. இவ்வகுப்பிலிருந்த போது யூன் மாதத்தில் ஆராய்ச்சியாளர் (புதிதாக நியமிக்கப்பட்டவர்) முதன்முதலாகப் பாடசாலைக்குச் சென்றிருந்தார். அதிபர் தனது அலுவலக அறைக்கு அனீஸை வரவழைத்து ஆராய்ச்சி யாளருக்கு அடையாளங் காட்டினார். அவனது சட்டைப் பாக்கெட்டில் மடித்து வைக்கப்பட்டிருந்த தாளொன்று வெளியில் நீட்டிக் கொண்டிருந்தது. "அது என்ன?" என்று ஆராய்ச்சியாளர் வினவியபோது தான் சப்பாத்து அணிந்து வராமைக்குத் தாயார் எழுதிக் கொடுத்த மன்னிப்புக் கடிதம் என்பதை மிக இயல்பாகவும், கூச்ச உணர்வுகளை வெளிக்காட்டாமலும் அனீஸ் கூறினான். அப்போது அதிபருக்கு முன்னால் நிற்பதனாலோ, அறிமுகமில்லாத வெளியாரது கேள்விக்குப் பதிலளித்தமையினாலோ எவ்வித சங்கடமோ, கூச்சமோ அவனால் வெளிக்காட்டப்படவில்லை. அதே தினம் வகுப்பறையில் அவதானம் மேற்கொள்ளப்பட்ட போதும் இயல்பாகவும் சரளமாகவும் பேசும் தேர்ச்சி அவனில் விருத்தியாகியிருந்ததை நன்கு வெளிக்காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : மழைக்கு முன் வானம் எப்படி இருக்கும்?

அனீஸ் : கறுப்பாகவிருக்கும்.

ஆசிரியர் : எவ்வாறாகச் சத்தம் கேட்கும்?

அனீஸ் : "டும்-டும்" என்று கேட்கும்.

ஆசிரியர் : மின்னல் என்றால் என்ன?

அனீஸ் : பளிச் வெளிச்சம்.

ஆசிரியர் : பெரிய மரம் ஏன் விழுந்தது?

அனீஸ் : (கைகளால் அசைவைக் காட்டியபடி) பலத்த காற்று வீசியதால்

ஆசிரியர் : தண்ணீர் எவ்வாறு ஓடியது?

அனீஸ் : பார்த்து ஓடியது.

இங்கு தண்ணீர் "பாய்ந்து" ஓடியது என்று ஆசிரியர் விளக்கியதைப் "பார்த்து" ஓடியது என்று அனீஸ் புரிந்து கொண்டிருந்தான். (ஆழ்சிந்தனைப் பதிவேடு, 2004).

இக்காலப் பகுதியில் அவன் இயல்பாகப் பேசும் தனது தேர்ச்சியை தவறான முறைகளிலும் பயன்படுத்தினான். உதாரணமாக மேற்குறித்த பாடசாலை விஜயத்துக்கு அடுத்ததாக ஆராய்ச்சியாளர் யூலை மாதத்திலும் விஜயம் செய்தார். அனீஸ் பழையதான சப்பாத்துச் சோடியொன்றை அத்தினம் அணிந்து வந்திருந்தான்.

ஆராய்ச்சியாளர் : எப்போது சப்பாத்து வாங்கினீர்கள்?

அனீஸ் : அதிக காலமாகிவிட்டது. (மிச்சம் நாள்)

ஆராய்ச்சியாளர் : சென்ற மாதம் நான் வந்தபோதும் இதே சப்பாத்துடன்தான் வந்திருந்தீரா?

அனீஸ் : ஆம்.

ஆராய்ச்சியாளர் : நன்றாக நினைவுபடுத்திச் சொல்லுங்கள்.

அனீஸ் : இதே சப்பாத்துடன்தான் அன்றுமிருந்தேன்.
(ஆழ்சிந்தனைப்பதிவேடு, 2004)

மேற்குறித்த இரண்டு சந்தர்ப்பங்களினையும் ஒப்பிடும்போது இயல்பாகவும் தயக்கமின்றியும் பொய் உரைப்பவனாக அனீஸ் இருந்தமை வெளிக்காட்டப்பட்டது. அதுபோலவே எவருடனும் கூச்சமின்றிக் கதைக்கக்கூடிய அவனது தேர்ச்சியைத் தனது தவறுகளை மறைப்பதற்கும் பிறரை அபாண்டமாகக் குற்றஞ் சாட்டுவதற்கும் பயன்படுத்துபவனாக அனீஸ் காணப்பட்டுள்ளான். உதாரணமாக ஆராய்ச்சியாளர் வகுப்பறையில் அவதானம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் ஒரு முறை சக மாணவனின் புத்தகத்தை இழுத்துப் பறித்துக் கொள்ள முயற்சித்த அனீஸ் அம்மாணவன் தடுத்தபோது "சேர் இவன் புத்தகம் தரமாட்டான்" என்று முறையிட்டான். தான் ஆசிரியரால் ஐந்து வாக்கியங்கள் எழுதுமாறு பணிக்கப்பட்ட போது அவனது எழுத்தில் ஏற்பட்ட பிழையை அழிப்பதற்கு அவனிடம் அழிறப்பர் இருக்கவில்லை. அவனது சக மாணவனது இறப்பரைப் பலாத்காரமாகப் பறித்து எடுத்துக் கொண்டான். அம்மாணவன் அதனைத் திரும்பிப் பெற முயன்ற போது "சேர் இறேசரைப் பறிக்கிறான்" என்று முறையிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோலவே பெயர் ஒட்டி (Stickers) களையும் அடுத்திருந்த மாணவனுக்குரியதைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயன்று, அம்மாணவன் எதிர்த்தபோது அருகிலிருந்த ஆராய்ச்சியாளரிடம் "சேர் sticker தரமாட்டான்" என்று முறையிட்டான். (ஆழ்சிந்தனைப்பதிவேடு 2004).

4ம் தரத்திலிருந்தபோது (2005 இல்) அனீசுடைய பேச்சு தொடர்பான தேர்ச்சிகள் இதுவரை காணப்பட்ட அதே பாங்கில் மேலும் வலுவடைந்தன. ஆசிரியரது புலக்காட்சியின்படி தரவுப் பதிவுப் படிவங்களில் அவர் பதிவு செய்துள்ள குறிப்புகள் கீழே விபரிக்கப்படுகின்றன.

தான் விரும்பிய கதையொன்றைக் கூறுமாறு பணிக்கப்பட்டபோது, விருப்புடன் முன்வந்து தயக்கமின்றிக் கதை கூறுபவராக அனீஸ் காணப்பட்டார். அப்போது பயன்படுத்திய சொற்களைத் தெளிவாகக் கூறினார். கதையின் சம்பவங்களை ஒழுங்கு முறையுடன் கூறுவதில் இடர்பட்டுள்ளார். சிந்தையைக் கவரக்கூடிய விதத்திலோ, பொருத்தமான அங்க அசைவுகளுடன் கூடியதாகவோ கதையை கூறும் தேர்ச்சி அவனிடம் விருத்தியுற்றுக் காணப்படவில்லை.

ஒரு பாடலைப் பாடுமாறு பணிக்கப்பட்டபோதும் அதனைத் தனியாக, தாளத்தை அனுசரித்துப் பாடுவதில் வெற்றி கண்ட அனீஸ் சிந்தை கவரத்தக்க விதத்திலோ பொருத்தமான அங்க அசைவுகளுடனோ பாடத் தவறியிருந்தான்.

ஒரு தலைப்புக்கு அமைவாகக் கருத்துத் தெரிவித்துப் பேசக்கூடியவனாகக் காணப்பட்ட இந்தப் பிள்ளை விடயங்களைத் தெளிவாக முன்வைக்கக்கூடியவனாகவோ, ஆக்கபூர்வ மாகவும், பொருத்தமான அங்க அசைவுகளுடனும் பேசக்கூடியவனாகவோ, குரலைக் கட்டுப்படுத்தியவாறு சரளமாகப் பேசக்கூடியவனாகவோ அவதானிக்கப்படவில்லை.

தாம் கண்ட ஒரு சம்பவத்தை அல்லது தாம் பெற்றுள்ள ஓர் அனுபவத்தைச் சித்திரமாக வரைந்து அது பற்றி கருத்துத் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டபோது சித்திரத்தை வரைந்து அதிலுள்ளவற்றைச் சுருக்கமாக விவரிக்கக்கூடியவனாக மட்டுமே அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளான்.

இருவருக்கிடையே உரையாடலின்போது தயக்கமின்றிக் கருத்துத் தெரிவிப்பவனாகவும், தான் கூறுபவற்றை விளங்கிக் கூறுபவனாகவும், பிரதேசத்துக்குரிய வார்த்தைகளையும் அவனது வீட்டுச் சூழலில் வழக்கிலிருந்த வார்த்தைகளையும் பயன்படுத்துபவனாக அனீஸ் காணப்பட்டுள்ளான்.

ஐந்தாம் வகுப்பிலிருந்தபோதும் (2006) இப்பிள்ளையிடம் மேலே குறித்த பேச்சு தொடர் பிலான தேர்ச்சிகள் அதே அமைப்பில் காணப்பட்டுள்ளன. எனினும் ஓர் அனுபவத்தை

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சம்பவத்தை விவரிக்கும்போது நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கூறும் தேர்ச்சி விருத்தியாகியிருந்தமை பதிவாகியுள்ளது. (தரவுப்பதிவுப் பத்திரம் 2006).

ஆரம்பம் முதலே பேச்சு தொடர்பிலான தேர்ச்சிகள் அனீஸிடம் விருத்தியுற்றிருந்தன. அவை ஐந்தாம் வகுப்பு வரையிலான காலப் பகுதியில் படிப்படியாக வலுவடைந்து வந்துள்ளன. அத்திறமைகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதை விட பொய்யுரைப்ப தற்கும், பிறரை தப்பாக வழிப்படுத்துவதற்கும், அனீஸ் கூடுதலாகப் பயன்படுத்தி யிருந்தமை தெளிவாகியது. இதற்கும் அவனது வீட்டுச் சூழல், கணிசமாகப் பங்களித் திருந்த அதேவேளை, ஆக்கபூர்வமாக அவனது பேச்சுத் தேர்ச்சிகளைப் பயன்படுத்தும் வகையில் பாடசாலையிலும் போதுமான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

## ஆங்கிலம் (English)

முதலாம் வகுப்பில் (2002ம் ஆண்டில்) அனீஸ் ஆங்கிலத்தில் எவ்வித தேர்ச்சியும் பெற்றிருப்பதாக அவதானிக்கப்படவில்லை. போதனை எதனையும் பெற்றிருக்கவுமில்லை.

இரண்டாம் வகுப்பிலிருந்தபோது (2003ம் ஆண்டில்) ஆங்கிலம் கற்பதற்காகப் பிரத்தியேக வகுப்பொன்றுக்குச் சென்றதாக ஆசிரியரின் தரவுப் பதிவுகள் காட்டுகின்றன.

இவ்வருட பெப்ரவரி மாதத்தில் அறிவுறுத்தப்படும்போது நன்றி தெரிவிப்பதற்கு "Thank You" எனக் கூறக்கூடியவராக அனீஸ் காணப்பட்டுள்ளார். மேலும் ஐந்து நிறப்பெயர்களை ஆங்கிலத்தில சொல்லும்படி கேட்கப்பட்டபோது இரண்டு நிறங்கள் மட்டும் சொல்லக்கூடிய வராகவும், சுற்றாடலில் காணப்படும் 5 மிருகங்களின் பெயர் கூறும்படி கேட்கப்பட்டபோது ஒன்றின் பெயரை மட்டும் (Dog) கூறக்கூடியவராகவும் இம்மாணவன் அவதானிக்கப்பட் டுள்ளார். அதேபோல் ஆங்கிலத்தில் வழங்கப்பட்ட "Please close your book", "Please clap your hands" என்ற அறிவுறுத்துரைகளுக்குச் சரியான துலங்கல் காட்டக்கூடியவராகவும் அவர் அவதானிக்கப்பட்டுள்ளார்.

பெப்ரவரி மாதத்தை விட ஆங்கிலத்தில் வழங்கப்பட்ட சில மேலதிக அறிவுறுத்துரைகளுக்கு அக்டோபர் மாதத்தில் சரியான துலங்கல் காட்டியுள்ளார்.

Please open your book

Please bring the duster

Please give me the ruler என்பன அவர் சரியாகத் துலங்கல் காட்டிய அத்தகைய அறிவுறுத்துரைகளாகும்.

தவிர ஐந்து நிறப்பெயர்கள் வினவப்பட்டபோது மூன்று நிறங்களை ஆங்கிலத்தில் சொல்லக் கூடியவராகவும் வகுப்பறையிலுள்ள 10 பொருட்களின் ஆங்கிலப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்களைக் கேட்ட போது 2 பொருட் பெயர்களைக் கூறக்கூடியவராகவும், 5 பிராணி களின் பெயர் கூறக்கூடியவராகவும் அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார்.


3ம் வகுப்பிலிருந்தபோது (2004ம் ஆண்டில்) மேலே குறிப்பிடப்பட்ட தேர்ச்சிகள் தொடர்ந்து காணப்படவில்லையெனினும், அவ்வப்போது சொல்லிக் கொடுத்தால் பயன்படுத்தக்கூடிய வராக அனீஸ் காணப்பட்டுள்ளார்.

ஆங்கில எழுத்துக்களை அடையாளங் காணவும் எழுதவும் அவருக்கு இயலுமாகவிருந் துள்ளது. ஆயினும் b யை d எனவும் p யை g எனவும் மாற்றி அடையாளங் காண்ப வராகவும், அவ்வாறு மாற்றி எழுதுபவராகவும் அவர் அவதானிக்கப்பட்டுள்ளார். ஆங்கில மொழித் தேர்ச்சிகள் இழிவளவிலேயே இம்மாணவனில் விருத்தியாகியுள்ளமை மேற்குறிப் பிடப்பட்டவைகள் மூலம் தெளிவாகின்றது.

4ம் வகுப்பிலிருந்த போதும் (2005 ஆம் ஆண்டிலும்) அனீஸுடைய ஆங்கில அறிவும், திறன்களும் குறிப்பிடத்தக்களவில் விருத்தியாகவில்லை. எனினும் தெளிவான எழுத்துக் களாக எழுதக்கூடிய தேர்ச்சி பெற்றிருந்தார். “கெப்பிற்றல்” வகையும் “சிம்பள்” வகையிலும் கலந்துதான் அவ்வாறு எழுதினார். ஆசிரியர் கூறிய a, p, s, d, f, y ஆகிய எழுத்துக்களைச் சரியாக எழுதினார். “dinner time”, “Tea time” என்பவற்றைப் புரிந்து கொண்டார். Car, House, Kite, Bat, Bell, Ship, Sea, Aeroplane, Fly ஆகிய சொற்களின் கருத்து அவருக்குத் தெரியுமாகவிருந்துள்ளது. அதுபோலவே Duster, Picture, Register, Water, Bottle என்ற பொருட்பெயர்களைக் கூறியதும் அப்பொருள்களைக் காட்டக்கூடிய வராகவும் காணப்பட்டார். 15 சொற்களைக் கொடுத்து அவற்றை Vehicles, Fruits, Months, Days, Vegetables என்ற தலைப்புகளின் கீழ் வகைப்படுத்துமாறு பணிக்கப்பட்ட போது April, Leaks, Beans என்ற சொற்களை Fruits எனவும், Friday என்பதனை Vegetables எனவும் பிழையாக வகைப்படுத்தியிருந்தார். ஆயினும் ஏனைய 11 சொற்களையும் சரியாக வகைப்படுத்தினார். ஆறு படங்கள் கொடுக்கப்பட்டு அவை குறித்து நிற்கும் பெயர்களை எழுதுமாறு அறிவுறுத்தப்பட்டபோது House, Pineapple என்பவற்றை எழுதவில்லை. ஆயினும் Dog, Umbrella என்பவற்றைச் சரியாக எழுதி யிருந்ததுடன் Mouse இற்கு Mise எனவும், Ship இற்கு Shpx எனவும் பிழையாக வெழுதியிருந்தார். (உரு: 27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடசாலை இல : 27/7 மாணவர் இல : 02

16.3.2 செயற்பாட்டுப்படிவம் (ஒக்டோபர்)

(அ) புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.

சரியான இடத்தில் எழுத தொடங்கிய எழுத்துக்கள்

(ஆ) இடைவெளி நிரப்புக.

117

உரு 23: ஆங்கில எழுத்துக்கள், சொற்களை எழுதுதல்.

ஆங்கிலத்தில் வழங்கப்படும் அறிவுறுத்துரைகளைச் செவிமடுத்து விளங்குதல் தொடர்பில் "Please give me a bottle" என்ற அறிவுறுத்துரைக்குச் சரியாகத் துலங்கிய அனீஸ் "Please come forward", "Please show me your nose", "Please keep this box on the table" போன்ற அறிவுறுத்துரைகளைப் புரிந்து கொள்ளவில்லை. Nursery rhyme ஒன்றின் சில பகுதிகளைப் பாடுவார். ஒன்று முதல் 10 வரை ஆங்கிலத்தில் சரியாக எண்ணக்கூடிய தேர்ச்சியும் பெற்றிருந்தார்.

Toads என்பதனை Toabs என எழுதிய அனீஸ் வகுப்பிலுள்ள பிள்ளைகளின் பெயர்களை MINHAJ இற்குப் பதிலாக MINNHJ எனவும், Jawfar இற்குப் பதிலாக JaFar என்றும், JOFR என்றும் இருவிதமாகவும் எழுதினார்.

Life in the trees என்பதில் trees என்ற சொல்லைச் சரியாக வாசிக்க முடியவில்லை. Toads and frogs என்பதனை "டோடிஸ்" எனவும் "புறொஜ்" எனவும் உச்சரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 ஆம் வகுப்பில் (2006ம் ஆண்டிலும்) "கெப்பிற்றல்", "சிம்பல்" வகை எழுத்துக்களைக் கலந்து எழுதும் போக்கு தொடர்ந்து காணப்பட்டதெனினும் "What is your name?", "How old are you?", "Where do you live?" ஆகிய வினாக்களுக்குச் சரியாக விடை யெழுதினார்.

10 பொருட்களின் படங்களைக் கொடுத்து அவற்றின் சரியான பெயரைத் தெரிவு செய்யு மாறு கேட்கப்பட்டபோது 9 பெயர்களைச் சரியாகத் தெரிவு செய்தார்.

6 நகரங்கள் பற்றிய தகவல்களை Part of the Country, What it is famous for என்ற தலைப்புகளின் கீழ் ஓர் அட்டவணையாக வழங்கிய பின், அவ்விபரங்கள் தொடர்பாக வினவப்பட்ட ஐந்து வினாக்களில் நான்கிற்குச் சரியாக விடையளித்தார்.

அதுபோலவே book shop, textile shop, market என்பவற்றில் விற்கப்படும் பொருட்களைக் காட்டியபோது அவை விற்கப்படும் இடங்களைச் சரியாகத் தெரிவு செய்தார். பத்திரிகை விளம்பரம் ஒன்றை (எளிமையாக்கிய)க் கொடுத்து அதன் தகவல்களின் அடிப்படையில் கேட்கப்பட்ட நான்கு வினாக்களுள் இரண்டிற்குச் சரியாக விடையளித்தார். அவையாவன:

(1) How far is the land from Colombo - Ratnapura highway?

(2) How big is each block of land?

We go to playground போன்ற செய்கைகள் ஒரு நிரலிலும் to play games போன்ற காரணங்கள் இன்னொரு நிரலிலும் வித்தியாசமான ஒழுங்கில் கொடுக்கப்பட்டு பொருந்து வனவற்றை இணைக்குமாறு கேட்கப்பட்டபோது அவர் சரியாகத் துலங்கினார்.

Annual inter house sportsmeet ஒன்றினது Programme கொடுக்கப்பட்டு அதன் அடிப்படை யில் வினவப்பட்ட 3 வினாக்களுள் ஒன்றிற்குச் சரியாக விடையளித்தார். உதாரணமாக When is the Teachers' race? ஒருமை, பன்மை வேறுபாடு சரியாகப் புரிந்து கொண்டு வசனங்களமைக்கவில்லை. உதாரணமாக Susanthika won a gold medals எனவும், Shathi wrote a letters எனவும், There are nine planet எனவும் வசனங்களைப் பூர்த்தி செய்திருந்தார்.

கடற்கரைக் காட்சியொன்றின் படம் கொடுத்து 4 வசனங்கள் எழுதுமாறு கேட்கப்பட்டபோது ஒரு வசனமேனும் எழுத அனீஸ் முன்வரவில்லை.

விளையாட்டுப்போட்டியின் போது வழங்கப்படுவது போன்று ஓர் Announcement வாசிக்கப் பட்டு அனீஸுடைய listening skill அறியப்பட்டது. அப்போது Announcement இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் அதன் உள்ளடக்கம் தொடர்புபடுத்தி வினவப்பட்ட 4 வினாக்களுள் 3 இற்குச் சரியாக விடையளித்தார்.

ஆங்கிலத்தில் ஓரளவு வாசிக்கும் ஆற்றல் இப்பிள்ளையிடம் காணப்பட்டுள்ளது. உதாரண மாக "Rathnapura is famous for gems", "Netball is a team game for girls", "Amali's mother baked a christmas cake" ஆகிய வசனங்களை இடர்பாடின்றி வாசித்தார். "Vesak is a colourful festival" என்பதன் "Vesak is a என்ற பகுதிகளையே வாசிக்க முடிந்தது. "The coconut tree is useful to people in many ways" என்பதிலும் சில சொற்களையே வாசிக்க முடிந்தது.

Thank you, Sorry, Happy birthday, Please give me your pencil, Please give me some water போன்று துலங்க வேண்டிய சந்தர்ப்பங்களைக் கொடுத்து எவ்வாறு துலங்குவீர்?. எனக் கேட்கப்பட்டபோது அனீஸ் தமிழில் விவரங்களைக் கேட்டானேயன்றி சரியான துலங்கலைக் காட்டத் தவறினான்.

அனீஸுடைய ஆங்கில மொழி தொடர்பிலான தேர்ச்சிகள் மேலே விவரித்தவாறு விருத்தி யுற்றனவாயினும் உண்மையில் அவரிடம் விருத்தியாகியிருக்கக்கூடிய அளவிற்கு அவர் தேர்ச்சி பெறவில்லை. பாடசாலையிலோ வெளியிலோ முறையான கற்பித்தல் - கற்றல் சந்தர்ப்பங்கள் வாய்க்காமை இதற்குரிய காரணமாகவிருத்தல் முடியும். அத்துடன் ஆங்கில மொழிப்பாவனை பாடசாலைச் சூழலிலும் அனீஸுடைய வீட்டிலும் அரிதாகவிருந் தமையும் இதற்கான மற்றுமொரு காரணமாகக் கொள்ளப்படலாம்.

## கணிதம் (Mathematics)

தரவுப்பதிவுப் படிவங்களில் ஆசிரியர் பதிவு செய்திருந்த தரவுகளின்படி 2002 மார்ச் மாதத்தில் முன் கணிதத் தேர்ச்சிகள் 7 ஐயும் அனீஸ் அடையப் பெற்றிருந்தார். எண்ணுதல் தேர்ச்சிகள் 2 ஐ பெப்ரவரியிலும் ஆகஸ்டில் 1 ஐயும் செப்டம்பரில் 2 ஐயும் ஒக்டோபரில் 1 ஐயும் ஆக 6 தேர்ச்சிகளையும் ஒக்டோபர் மாதத்தில் அடையப் பெற்றிருந்தார். எண் எண்ணக் கருக்கள் தொடர்பான 2 தேர்ச்சிகளை மார்ச் மாதத்திலும் மேலுமொரு தேர்ச்சியை செப்டம்பரிலும் அடைந்த இம்மாணவன் 1 இலிருந்து 9 வரை எண் குறிகளை எழுதும் தேர்ச்சியை வருட இறுதியிலும் அடையப் பெறவில்லை. கூட்டல் தேர்ச்சிகள் இரண்டையும் செப்டம்பரில் அடைந்து விட்ட அனீஸ் அளத்தல் தேர்ச்சிகள் 8 இல் 2 ஐ வருட இறுதியிலும் அடையப் பெற்றிருக்கவில்லை. இரு பொருட்களின் நீளங்களை ஒப்பிட்டு நீளம் கூட, நீளம் குறைய அல்லது நீளம் சமன் எனக் கூறும் தேர்ச்சி அவற்றுள் ஒன்றாகும். மற்றையது இரு பொருட்களில் பாரங் கூடியதை அல்லது பாரங் குறைந்ததை இனங்காணும் தேர்ச்சியாகும். ஒக்டோபர் மாதத்திலேயே வடிவங்கள் பற்றிய தேர்ச்சியை அனீஸ் அடைந்திருந்தார். எதிர்பார்க்கப்படும் 28 தேர்ச்சிகளுள் 25 ஐ வருட இறுதியில் இம்மாணவன் அடையப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் வகுப்பிலிருந்தபோது (2003 ஆம் ஆண்டில்) குறித்த எண்ணிக்கைகளின் பெறுமானங்களைக் கூறக்கூடியவராகவும், அவற்றை இலக்கங்களில் எழுதக்கூடிய வராகவும் அனீஸ் காணப்பட்டுள்ளார். 1ஆம், 2ஆம், 3ஆம் தவணைகளுக்குரிய 10.5 தரவுப் பதிவுப்படிவத்தில் இத்தகவல் பதிவாகியுள்ளது. இலக்கங்களில் கொடுக்கப் பட்டுள்ள 100 இலும் குறைவான எண்களை எழுத்தில் எழுதவும், அவ்வாறே எழுத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்களை இலக்கங்களில் எழுதவும் அவர் தேர்ச்சி பெற்றுள்ளார். எனினும் எழுத்துப் பிழைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

சனவரியில் கூட்டுத்தொகை 9 இலும் மேற்படாதவாறான இரு எண்களை, படங்கள் அல்லது பொருட்களின் உதவியுடன் கூட்டும் தேர்ச்சி பெற்றிருந்த அனீஸ், பெப்ரவரி இறுதியில் படங்களினதோ அல்லது பொருட்களினதோ உதவியின்றியே கூட்டும் தேர்ச்சி அடையப் பெற்றிருந்தார். அத்துடன் 9 இற்கு மேற்படாத ஓர் எண்ணிலிருந்து அதனை விடக் குறைந்த ஓர் எண்ணைக் கழிக்கவும் அவரால் முடியுமாகவிருந்தது. மார்ச் மாதத்தில் கூட்டுத்தொகை 20 இற்கு மேற்படாதவாறான இரு எண்களைக் கூட்டும் தேர்ச்சி பெற்றுள்ளார். மே மாதத்தில் 20 இலும் குறைவான ஓர் எண்ணிலிருந்து, அதனிலும் குறைந்த மற்றுமொரு எண்ணைக் கழிக்கும் தேர்ச்சி பெறப்பட்டிருந்தது. செப்டம்பர் மாதமாகும்போது 99 வரையிலான எண்களின் கூட்டல் கழித்தல்களைச் செய்யக்கூடியவராக இம்மாணவன் இருந்துள்ளார். இச் சந்தர்ப்பத்தில் இடப்பெறுமானத் துக்கேற்ப கொண்டு செல்லல் தொடர்புபடும் கூட்டல், கழித்தல்களிலும் அனீஸ் தேர்ச்சி யடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வருட ஆரம்பத்திலேயே நாணயங்களை இனங் காண்பதற்கு அனீஸ் தேர்ச்சியடைந் திருந்தார். மூன்றாம் தவணையில் ஒரு நாணயத்தைப் பயன்படுத்தியும், ஒன்றுக்கு மேற்பட்ட நாணயங்களைப் பயன்படுத்தியும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யக்கூடியவராக அவர் காணப்பட்டுள்ளார்.

முக்கோணி, வட்டம், சதுரம், செவ்வகம் ஆகிய தளவுருவங்களைப் பெயரிடக்கூடியவராக ஜுன் மாதத்திலும், வெவ்வேறு தளவுருவங்களுள் பெயர் குறிக்கப்படுபவற்றை இனங் காட்டக்கூடியவராக ஜுலை மாதத்திலும் இம்மாணவன் காணப்பட்டுள்ளார். எனினும், முப்பரிமாணப் பொருட்களைக் கொண்டு யாதேனுமொரு உருவத்தை ஆக்கும் தேர்ச்சி அடையப் பெற்றிருக்கவில்லை.

மூன்றாம் வகுப்பின் (2004ம் ஆண்டின்) முதலாம் தவணையிலேயே 1000 வரையிலான எண்களை வாசிக்கவும், அவற்றை எழுத்தில் எழுதவும் அவ்வாறே எழுத்தில் கொடுக்கப்படும் எண்களை இலக்கங்களில் எழுதவும் அனீஸ் தேர்ச்சி பெற்றிருந்தார். வருடம் முழுவதிலும் இத்தேர்ச்சி அவரிடம் காணப்பட்டுள்ளதைத் தரவுப்பதிவுப் படிவங்களில் பதிவாகியுள்ள தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. அத்துடன் எண் சட்டங்கள் மூலம் வகை குறிக்கப்படும் எண்களைச் சரியாக இனங்கண்டு எழுதவும் தேர்ச்சி பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஜுலை மாதத்தில் இரண்டு சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள வெவ்வேறு உருவங்களின் அரைவாசியை இனங்கண்டு நிறந் தீட்டுவதற்கும் தேர்ச்சி பெற்றிருந்தார். இக்காலப் பகுதியில் கொடுக்கப்பட்ட பொருட் தொகுதியொன்றின் அரைவாசியை இனங் காணவும் அவரால் முடியுமாகவிருந்துள்ளது. அவ்வாறே நான்கு சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்ட உருவத்தின் நான்கில் ஒரு பகுதியை அடையாளங் கண்டு நிறந் தீட்டவும் அவரால் முடியுமாகவிருந்துள்ளது. மேலும் கொடுக்கப்படும் பொருட் தொகுதியொன்றின் நான்கில் ஒரு பகுதியை அடையாளங் காணவும் முடியுமாகவிருந்துள்ளது. எனினும் பொருட்களின் எண்ணிக்கை 4 ஆகவும், 8 ஆகவும் இருந்தபொழுது நான்கில் ஒரு பகுதியைச் சரியாக இனங்கண்ட அனீஸ் எண்ணிக்கை 12 ஆகவிருந்தபொழுது நான்கில் ஒரு பகுதியைச் சரியாக இனங்காணத் தவறியுள்ளார்.

முதலாம் தவணையில் இடப்பெறுமானத்துக்கேற்ப ஒன்றின் கீழொன்றாக எழுதிக் கொடுக் கப்பட்ட 1000 இலும் குறைவான இரண்டு எண்களைக் கூட்டவும், பெரிய எண்ணிலிருந்து சிறியதைக் கழிக்கவும் அவரால் முடியுமாகவிருந்துள்ளது. எனினும் அவ்வப்போது பிழையாகவும் கூட்டல், கழித்தல்களை மேற்கொண்டுள்ளார். இங்கு "கொண்டு செல்லல்" தேவைப்படும் சந்தர்ப்பங்களில் கூட்டல், கழித்தல் தேர்ச்சிகள் பெறப் பட்டிருந்தமையும், இவ்வாறான செயற்பாடுகளில் உற்சாகத்துடன் ஈடுபடும் தன்மையும் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இரண்டாம் தவணையில் நாணயத்தாள், நாணயக்குற்றிகளைச் சரியாக உபயோகிக்கும் சந்தர்ப்பம் உள்ளிட்ட ஒரு கணிதச் செய்கை மட்டும் அடங்கிய எளிய மனக் கணிதப் பிரச்சினைகளைத் தீர்க்கும் தேர்ச்சியை அடையப் பெற்றிருந்ததுடன், மூன்றாம் தவணையில் இரண்டு கணிதச் செய்கைகளடங்கிய மனக் கணிதப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியவராகவும் காணப்பட்டுள்ளார்.


ஜுலை மாதத்தில் எண்களைப் பெருக்குவதற்குத் தேர்ச்சி பெற்றிருந்த அனீஸ் வகுத்தலில் தேர்ச்சியடையத் தவறியிருந்ததும் தரவுப் பதிவுப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செப்டம்பரில் எண்ணிக்கைகளுடன் தொடர்பான சித்திர அட்டவணைகளிற் காணப்படும் தரவுகளைச் சரியாகப் புரிந்து கொண்டு, அவற்றைச் சொல்வதற்கும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

அத்துடன் 2005 ஆம் ஆண்டிலும் அனீஸுடைய கணிதத் தேர்ச்சிகள் மேற்குறித்த வகை யிலேயே விருத்தியடைந்து வந்துள்ளன. 2005 செப்டம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்ட போது எண் சட்டமொன்றில் வகை குறிக்கப்படும் எண்ணைச் சரியாக இனங்கண்டு இலக்கங்களில் எழுதக்கூடியவராகவும், அவ்வாறே கொடுக்கப்படும் எண்ணை எண் சட்ட மொன்றினால் வகை குறிக்கக்கூடியவராகவும் அவதானிக்கப்பட்டுள்ளார். (உரு: 24 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடசாலை இல: 277 பிள்ளையின் இல: M2 கணிதம் பகுதி I

1. எண் சட்டத்தில் தரப்பட்டுள்ள எண்ணின் எண்பெயரை வாசித்து அதனை இலக்கத்தில் எழுதுங்கள்.

ஆ நு ப ஒ ஆ நு ப ஒ ஆ நு ப ஒ

2. தரப்பட்டுள்ள ஒவ்வொரு எண்ணையும் எண் சட்டங்களில் தனித் தனியாகக் குறித்துக் காட்டுங்கள்.

I. 1 2 3 4

ஆ நு ப ஒ

II. 3 0 6 7

ஆ நு ப ஒ

உரு: 24

3, 4, 6, 8 ஆகிய இலக்கங்களைக் கொடுத்து அவற்றினால் ஆக்கக்கூடிய ஏதேனும் நான்கு எண்களை எழுதுமாறு கேட்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அந்த அறிவுறுத்துரையைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிய அனீஸ் 8, 6, 4, 3 என விடையளித்திருந்தார். எனினும் இச்சந்தர்ப்பத்தில் வாசித்து விளங்கிக் கொள்வதில் அவருக்கிருந்த இடர்பாட்டை நீக்கிக் கொள்ளும் பொருட்டு கணித புத்தகத்தையெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையொத்த வினாக்களை அதில் தேடியமை இங்கு சுட்டிக் காட்டத்தக்க அம்சமாகும். (உரு: 25)

7129, 2179, 7912, 2179 என்ற எண்களைக் கொடுத்து பெரிய எண் முதல் சிறிய எண் வரை ஒழுங்குபடுத்தியெழுதுமாறு கேட்கப்பட்டபோது அனீஸ் 9721, 7129, 7912, 2179 என எழுதியிருந்ததுடன் அவற்றை எழுதிய சந்தர்ப்பத்தில் 7912 என்ற எண்ணை "ஏழாயிரத் துத் தொண்ணூற்றிப் பன்னிரண்டு" என வாசித்தமையும் அதனைக் கேட்டுக் கொண்டிருந்த சக மாணவன் "இல்லை, இல்லை; ஏழாயிரத்துத் தொள்ளாயிரத்துப் பன்னிரண்டு" என்று கூறியதும் உடனே ஆமாம்; ஆமாம் என ஏற்றுக் கொண்டதும் அவதானிக்கப்பட்ட நிகழ்வாகும். (உரு: 25)

இச் சந்தர்ப்பத்தில் ஒரு கோலத்துக்கேற்ப தரப்படும் எண் தொடரொன்றில் காணப்படும் கோலத்தை அடையாளங் காணவும், அக்கோலத்துக்கேற்ப தொடரில் இடைவெளிகளாக இடங்களைப் பொருத்தமான எண்களால் பூர்த்தி செய்யவும் தேர்ச்சி பெற்றிருந்தார். (உரு: 25)

3. வட்டத்துக்குள் தரப்பட்டுள்ள இலக்கங்களினால் ஆகக் கூடிய ஏதேனும் நான்கு எண்களை எழுதுங்கள்.




i ...8...............
ii ...6...............
iii ...4...............
iv ...3...............

4. மேலே நீங்கள் எழுதிய நான்கு எண்களையும் சிறியது முதல் பெரியது வரை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.

................ ................ ................ ................

5. கீழே தரப்பட்டுள்ள நான்கு எண்களையும் மிகப் பெரிய எண் முதல் மிகச் சிறிய எண் வரை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.

7129 2179 7912 9721

9721...... 7129...... 7912...... 2179...

6. கோலத்தை இனங்கண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.

i. 3, 5, 7, 9, 11, 13
ii. 5, 10, 15, 20, 25, 30
iii. 10, 20, 30, 40, 50
iv. 5, 8, 11, 14, 17, 20
v. 300, 305, 310, 315, 320, 325


**உரு: 25**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சந்தர்ப்பத்தில் பின்னங்கள் பற்றிய சரியான எண்ணக்கருவை அனீஸ் அடைந்திருக்க வில்லை. சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட தளவுருவங்களில் சில பிரிவுகளை நிறந் தீட்டி முழு உருவத்தின் பின்னமாக எழுதுமாறு கேட்கப்பட்டபோது அறிவுறுத்துரையைச் சரியாக வாசிக்காமலேயே விடைகளை எழுதினார். அப்போது பின்னத்தின் பகுதியெண்ணையும், தொகுதியெண்ணையும் மாற்றி 1/3 ஐ 3/1 எனவும், 2/4 ஐ 4/2 எனவும், 5/8 ஐ 8/5 எனவும், 3/5 ஐ 5/3 எனவும் எழுதினார். (உரு: .26 )

7. பின்வரும் ஒவ்வொரு படத்திலும் நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதியை முழுப்படத்தின் பின்னமாக எழுதுங்கள்.




தரப்பட்ட பின்னமொன்றின் சமவலுப் பின்னம் பற்றிய எண்ணக்கரு விருத்தியாகி யிருந்ததாக அனீஸ் காணப்படவில்லை. சமவலுப் பின்னத்தை அடையாளங் காணுமாறு கேட்கப்பட்ட வினாக்களுக்கு "சமனாகப் பிரித்து எழுதுட்டுமாம்" என்று ஏனைய பிள்ளைகளுக்குக் கூறியது மட்டுமன்றி அவ்வினாக்களுக்கு விடையளிக்காது தவிர்த்துக் கொண்டு அடுத்த வினாக்களை முயற்சித்தான்.

சில மீன் உருவங்களைக் கொடுத்து தரப்பட்டுள்ள மீன்களின் எண்ணிக்கையை உரோம எண்ணில் எழுதுமாறு கேட்கப்பட்டபோது "இது சின்னப்பிள்ளைகளுக்கான கேள்வி. மிக்க லேசானது" எனக் கூறியவனாக iv இற்கு 4 எனவும், ii இற்கு 2 எனவும், viii இற்கு 8 எனவும், x இற்கு 10 எனவும் எழுதினான்.

1000 இலும் குறைவான இரண்டு அல்லது மூன்று எண்களைச் சரியாகக் கூட்டவும் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்ணைக் கழிக்கவும், அவன் பெற்றிருந்த தேர்ச்சியைத் தொடர்ந்தும் வெளிக்காட்டிய அனீஸ் தசம எண்களைக் கூட்டும் தேர்ச்சியையும் வெளிக் காட்டினான். எனினும் கவனயீனப் பிழைகள் அவ்வவ்போது ஏற்பட்டுள்ளன. (உரு: 27 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கூட்டுக.

| | | | |
|---|---|---|---|
| 173 | 486 | 124 | 0 . 4 |
| +255 | +850 | 350 | +0 . 3 |
| 428 | 1336 | +317 | 0.7 |
| | | 791 | |

12. கழிக்குக.

| | | | |
|---|---|---|---|
| 746 | 857 | 904 | 0 . 8 |
| -582 | -132 | -253 | -0 . 5 |
| 164 | 125 | 651 | 1.3 |

உரு: 27

எண்களின் பெருக்குதல், வகுத்தல் ஆகிய கணிதச் செய்கைகளில் அனீஸ் போதிய தேர்ச்சியடைந்திருக்கவில்லை. உதாரணமாக 11 ஐ 7 ஆல் சரியாகப் பெருக்கி விடையளித்த அவன் 25ஐ 8 ஆல் 30ஐ 9 ஆல் 52 ஐப் 10 ஆல் சரியாகப் பெருக்கி விடையளிக்கத் தவறியிருந்தான். அவ்வாறே 2, 3, 4, 5 ஆகிய எண்களால் வகுக்குமாறு பணிக்கப்பட்டபோதும் அவனால் அவற்றைச் செய்யமுடியவில்லை. கூட்டல் கழித்தலுடன் தொடர்பான எளிய பிரசினங்களை வாசித்து விளங்கி விடையளிப்பதிலும் இப்பிள்ளை தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. (உரு: 28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஒரு வியாபாரியிடம் இருந்த கன்று வகைகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பழவகைக் கன்றுகள் | 245 |
| காய்கறிவகைக் கன்றுகள் | 312 |
| பூங்கன்றுகள் | 227 |

I. இந்த வியாபாரியிடம் மிகக் கூடுதலாக இருந்த கன்று வகை எது? ....................

II. வியாபாரியிடம் மிகக் குறைவாக இருந்த கன்று வகை எது? ....................

III. வியாபாரியிடம் இருந்த மொத்தக் கன்றுகள் எத்தனை? ....................

IV. அந்த வியாபாரி தன்னிடம் இருந்த மொத்தக் கன்றுகளில் 215 கன்றுகளை விற்றார். அவரிடம் மீதியாக உள்ள கன்றுகள் எத்தனை? ....................

14. பெருக்குக.

| | | | |
|---|---|---|---|
| 11 | 25 | 30 | 52 |
| x7 | x8 | x9 | x10 |

15. ஒரு பிள்ளைக்கு 6 கொய்யாப்பழங்கள் வீதம் 8 பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்கு எத்தனை கொய்யாப்பழங்கள் தேவை? ....................

16. பிரிக்குக.

I. 639 ÷ 3 = ...........

II. 520 ÷ 2 = ...........

III. 676 ÷ 5 = ...........

IV. 432 ÷ 4 = ...........

உரு: 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்காட்டியைப் பார்த்து தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் தேர்ச்சி 2005 செப்டம்பரில் விருத்தியாகியிருக்கவில்லை. உதாரணமாக 2005 யூன் 5ம் திகதி என்ன கிழமையென வினவப்பட்டபோது ஞாயிறு எனச் சரியாக விடையளித்திருந்தபோதிலும் இலங்கையில் சுதந்திர தினம் கொண்டாடப்படும் மாதத்தில் எத்தனை நாட்கள் உள்ளன? என்ற வினாவிற்கோ "2005 ஆம் வருடத்தில் 30 நாட்களில் முடிவடையும் கடைசி மாதம் எது?" என்ற வினாவுக்கு இப்பிள்ளையினால் பதிலளிக்க முடியவில்லை. (உரு: 29 )

பாடசாலை இல: 27T ............ பிள்ளையின் இல: M 2 ............ கணிதம் பகுதி II

17. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 2005 ஆம் வருட நாட்காட்டியைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

2005 நாட்காட்டி

சனவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | * | * | * | * | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

பெப்ரவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| * | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | * | * | * | * | * | * |

யூலை

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | * | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

ஆகஸ்ட்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

மார்ச்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| * | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | * | * | * |

ஏப்ரில்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | * | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | * |

செப்ரம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | * | |

ஒக்ரோபர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | * | * | * | * | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

மே

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | * | * | * | * | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

யூன்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| * | * | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | * | * | |

நவம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| * | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | * | * | * | * |

திசம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | * |

2005 யூன் 5 ஆந் திகதி என்ன கிழமை? ஞாயிறு......

இலங்கையில் சுதந்திர தினம் கொண்டாடப்படும் மாதத்தில் எத்தனை நாள்கள் உள்ளன? ....................................

2005 ஆம் வருடத்தில் 30 நாள்களில் முடிவடையும் கடைசி மாதம் எது?
திசம்பர்..............

உரு: 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளில் காட்சிப்படுத்தப்படுவது போன்ற விலைப்பட்டியலைப் பார்த்து விலையை அறிந்து கொள்ள இயலுமாகவிருந்தபோதிலும் சிட்டையொன்றில் தரப்படும் விவரங்களைப் பற்றிய விளக்கம் இப்பிள்ளையிடம் காணப்படவில்லை. (உரு: 30)

21. ஒரு சில்லறைக் கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

| பொருள் | ஒரு கிலோ கிராமின் விலை | | |
|---|---|---|---|
| | ரூபா. | | சதம் |
| அரிசி | 33 | . | 00 |
| உருளைக்கிழங்கு | 80 | . | 00 |
| பருப்பு | 73 | . | 00 |
| சீனி | 42 | . | 00 |

ஒரு சிறுவன் இந்தக் கடைக்குச் சென்று 2கிலோகிராம் அரிசி, 1கிலோகிராம் உருளைக்கிழங்கு, 2கிலோகிராம் பருப்பு, 3 கிலோகிராம் சீனி ஆகியவற்றை வாங்கினான். பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்து அச்சிறுவன் செலுத்திய மொத்தப் பணத் தொகையைக் காண்க.

| பொருள் | அளவு | ஒரு கிலோ கிராமின் விலை<br>ரூபா. சதம் | பெறுமதி<br>ரூபா. சதம் |
|---|---|---|---|
| அரிசி | ........ | ....33.00 | ........ . ........ |
| உருளைக்கிழங்கு | 1kg | 80 . 00 | ........ . ........ |
| பருப்பு | ........ | ....73.00 | ........ . ........ |
| சீனி | ........ | ....42.00 | ........ . ........ |
| | | மொத்தப் பணம் | ........ . ........ |

உரு: 30

மீற்றர் - சென்றிமீற்றர், கிலோகிராம் - கிராம், லீற்றர் - மில்லிலீற்றர் ஆகிய அலகுகளினிடைத் தொடர்பு பற்றிய விளக்கமும் இப்பிள்ளையினால் வெளிக்காட்டப்படவில்லை. (உரு: 31 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேத்திரகணிதவுருவங்கள் தொடர்பில் செங்கோணம் அடங்கியுள்ள வடிவங்களை நிறந் தீட்டுமாறு கேட்கப்பட்டபோது அனீஸ் அதனைச் செய்யத் தவறியிருந்தார்.

18. மீற்றரிலும் சென்றிமீற்றரிலும் எழுதுங்கள்.

400 cm ....................

675 cm ....................

கிலோகிராமிலும் கிராமிலும் எழுதுங்கள்.

2000 g ....................

5450 g ....................

லீற்றரிலும் மில்லிலீற்றரிலும் எழுதுங்கள்.

3000 ml ....................

4300 ml ....................

19. கூட்டுக.

| m | cm | kg | g | l | ml |
|---|---|---|---|---|---|
| 8 | 35 | 20 | 435 | 4 | 773 |
| + 4 | 75 | + 5 | 602 | + 5 | 632 |
| 13 | 00 | 26 | 037 | 11 | 495 |

20. கழிக்குக.

| m | cm | kg | g | l | ml |
|---|---|---|---|---|---|
| 24 | 73 | 12 | 388 | 8 | 690 |
| - 15 | 22 | - 7 | 191 | - 2 | 325 |
| 29 | 51 | 5 | 197 | 7 | 375 |


உரு: 31

திசைகள் தொடர்பில் சரியான விளக்கம் இருப்பதாக அவர் வெளிக்காட்டவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமச்சீர் பற்றிய எண்ணக்கரு விருத்தியுற்றிருப்பதையும் அவர் வெளிப்படுத்தவில்லை. செவ்வக உருவங்கள், இருசமபக்க முக்கோணி உருவம் என்பவற்றைக் கொடுத்து சமச் சீராகப் பிரிக்கும் கோட்டை (சமச்சீரச்சு) வரையுமாறு கேட்கப்பட்டபோது அவர் அளித்த விடைகள் இதனை வலியுறுத்துகின்றன. (உரு:32)




உரு:32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபைப் பார்த்து (சலாகைகள்) தரவுகளை அறிந்துகொள்ளும் திறனும் விருத்தியாகிக் காணப்படவில்லை என்பதை உரு 32 இல் கொடுக்கப்பட்ட வரைபும் அதனையொட்டிய வினாக்களுக்கு அனீஸ் விடையளித்திருந்த விதமும் எடுத்துக் காட்டுகின்றன.

ஐந்தாம் வகுப்பின் (2006ம் ஆண்டின்) மூன்றாம் தவணையில் அவதானிக்கப்பட்டபோது மேலே குறிப்பிட்ட தேர்ச்சிகள் அனீஸிடம் மேலும் விருத்தியுற்றுக் காணப்பட்டன.

எண்கள் தொடர்பில் 1000 இலும் மேற்பட்ட எண்களையும் கூட்டுவதற்குத் தேர்ச்சி பெற்றிருந்த அனீஸ், ஐந்து இலக்க எண் தொகுதியொன்றில் மிகப் பெரியதைச் சரியாக அடையாளங் காட்டினார். எனினும் 10,000 இற்கு மேற்பட்ட 73842 போன்ற நான்கு எண்களைக் கொடுத்து இறங்கு வரிசைப்படுத்துமாறு கேட்கப்பட்டபோது அனீசினால் விடையளிக்க முடியவில்லை. ஆயினும் தொள்ளாயிரத்து என்பதையும், தொண்ணூற்று என்பதையும் தெளிவாகப் பிரித்தறியவில்லை. இடப்பெறுமானம் பற்றிய சரியான விளக்கம் அவரிடமிருந்தது. உதாரணமாக 9752, 9275, 7592, 7295 ஆகிய எண்களைக் கொடுத்து "நூறினிடத்தில் ஆகக்கூடிய பெறுமதியைக் கொண்ட எண் யாது?" என்று கேட்கப்பட்டபோது 9752 எனச் சரியாக விடையளித்தார்.

பின்னங்கள் தொடர்பான எண்ணக்கரு 2005 ஆம் ஆண்டை விட விருத்தியாகிக் காணப் பட்டது. உதாரணமாக 8 சம பகுதிகளாக்கப்பட்ட தளவுருவொன்றின் மூன்று பகுதிகளை நிறந்தீட்டி, அதில் நிறந் தீட்டப்பட்ட பகுதி முழு உருவின் எத்தனை பங்கு என வினவப் பட்டபோது 3/8 எனச் சரியாக விடையளித்தார். மேலும் 2/4 இற்கு சமமான பின்னமாக 4/8 ஐத் தெரிவு செய்தார்.

தசம எண்கள் பற்றிய தேர்ச்சிகளும் முன்னைய வருடத்தை விட விருத்தியாகிக் காணப் பட்டன. உதாரணமாக 7 3/10 என்பதை 7.3 எனச் சரியாக எழுதினார். 12.63 + 5.35 என்ற வகையில் கொடுக்கப்பட்ட தசம எண்களின் சரியான கூட்டுத்தொகையை எழுதினார்.

அட்டவணையொன்றில் கொடுக்கப்பட்ட தரவுகளைப் (எண்ணாகவோ, வரவுக் குறியாகவோ) புரிந்து கொள்ளும் திறன் அவரிடம் காணப்பட்டது.

கிலோகிராம் - கிராம், லீற்றர் - மில்லிலீற்றர், மீற்றர் - சென்றிமீற்றர் இடையிலான தொடர்பைச் சரியாகப் பாவிக்கக்கூடியவராக அவதானிக்கப்பட்டார். உதாரணமாக 30kg 350g, 35kg 750g நிறைகளுடைய இரு பிள்ளைகளின் மொத்த நிறை என்னவெனக் கேட்கப்பட்டபோது 66kg 100g என்ற சரியான விடையைத் தெரிவு செய்தார். மேலும் 5930 *ml* நீருள்ள பாத்திரத்தின் படத்தைக் கொடுத்து, அதிலுள்ள நீரின் அளவை லீற்றர், மில்லிலீற்றர் என்பவற்றில் எவ்வாறு எழுதுவர் எனக் கேட்கப்பட்டபோது 5 *l* 930 *ml* என்று சரியாக விடையளித்தார். அவ்வாறே மூன்று பொருட்களின் விலைகளை ரூபாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டு (ரூ 150.00+ரூ.28.00+ரூ.65.00) மொத்த விலை கேட்கப்பட்டபோதும் சரியான விடைகொடுத்தார்.

கேத்திர கணித எண்ணக்கருக்கள் இன்னும் போதுமானளவில் விருத்தியாகிக் காணப் படவில்லை. ஒரு விரிகோணம், இரண்டு கூர்ங்கோணங்கள், ஒரு செங்கோணம் ஆகிய உருவங்களைக் கொடுத்து எவ்வுருவில் செங்கோணம் காணப்படுகிறது என்ற கேள்விக் குச் சரியாக விடையளிக்க அவரால் முடியவில்லை.

திசைகள் பற்றிய அறிவு முன்னரை விட விருத்தியாகியதற்கு சான்று கிடைக்கவில்லை. உதாரணமாக தென்கிழக்கான திசையில் ஒரு பிரயாணத்தைப் படமொன்றில் குறித்து, இப்பிரயாணம் எத்திசையில் இடம்பெற்றதெனக் கேட்கப்பட்டபோது வடகிழக்கு என விடை யளித்தார்.

எண்கணிதச் செய்கைகளான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பவற்றில் அனீஸ் தேர்ச்சி பெற்றிருந்த போதிலும், எண்கணித செய்கையொன்றுடன் தொடர்பான எளிய நிகழ்வொன்றை விவரித்து தொடர்புபடும் எண்கணிதச் செய்கையை அடையாளப் படுத்துமாறு கேட்கப்பட்டபோது அவரால் அதனைச் செய்ய முடியவில்லை. உதாரண மாக 1532 சட்டைகள், 1375 கால்சட்டைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்தம் எத்தனை எனக் கண்டு பிடிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டு கழித்தல், கூட்டல், வகுத்தல், பெருக்கல் என்ற விடைகளைக் கொடுத்தபோது அவரால் சரியான விடையைத் தெரிவு செய்ய முடியவில்லை.

முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரை அனீஸிடம் கணிதத் தேர்ச்சிகள் படிப் படியாக விருத்தியுற்ற விதம் மேலே விவரிக்கப்பட்டுள்ளது.

இங்கு சில தேர்ச்சிகளை அவர் அடையப் பெற்ற பின்னரும், அவற்றை அடையப் பெறாத மாணவனைப் போல் அனீஸ் துலங்கிய சந்தர்ப்பங்கள் குறிப்பிடத்தக்கன. அதாவது அடையப் பெற்ற தேர்ச்சிகள் உறுதியானவையாகக் காணப்படவில்லை. எனினும் ஐந்தாம் வகுப்பின் மூன்றாம் தவணையிலிருந்தபோது இத்தன்மையில் சிறிய மாற்றம் காணப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் அவர் தேர்ச்சியடைந்திருந்த திறன்களில் ஓரளவு உறுதித் தன்மை காணப்பட்டதே அம்மாற்றமாகும்.

ஐந்தாம் வகுப்பில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் பொறிமுறை வகையிலானதும் மீண்டும் மீண்டும் வழங்கப்பட்டதுமான பயிற்சிப் பயிற்று விப்புகள் மேற்குறித்த மாற்றத்துக்குக் காரணமாகவிருந்திருத்தல் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போசணை (Nutrition)

போசணை தொடர்பில் 2002, 2003 ஆம் ஆண்டுகளுக்குரிய தரவுகள் கிடைக்கப் பெறவில்லை. ஆயினும் இவ்வாண்டுகளில் அனீஸ் மந்த போசணை மட்டத்தில் காணப் படவில்லை என்பது ஆசிரியர் புலக்காட்சியூடாகத் தெளிவாகியது. அவ்வாறே இவ்விரு ஆண்டுகளிலும் பாடசாலைக்கு வருகை தரும் நாட்களில் வீட்டிலிருந்து காலை ஆகாரம் கொண்டு வந்து உண்ணக் கூடியவராகவும் அவர் காணப்பட்டுள்ளார். மேலதிகமாகப் பணம் கொண்டு வந்து பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் வாங்கி உண்ணும் பழக்கமும் காணப்பட்டுள்ளது.


மூன்றாம் வகுப்பிலிருந்த 2004ஆம் ஆண்டிற்கான தரவுப் பதிவுப் படிவங்களின் பதிவுகளின்படி, அதிகமான நாட்களில் பணம் கொண்டு வந்து சிற்றுண்டிச் சாலையில் றொட்டி, பாண் போன்ற உணவுப் பொருட்களை வாங்கி உண்ணக்கூடியவராகவும் அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். சில தினங்கள் வீட்டிலிருந்து ஆகாரம் கொண்டு வரக்கூடியவராகவும் காணப்பட்டுள்ளார். அவ்வாறு கொண்டு வந்த உணவுகளுள் முட்டை, பனிஸ், றொட்டியும் கறியும், றொட்டியும் சம்பலும், நூடில்ஸ், அல்லது கேக் என்பன காணப்பட்டுள்ளன.

ஏனைய இருவரையும் போலவே அனீஸ் ஓய்வு நேரத்தில் காலையுணவை உட்கொள்ப வராகக் காணப்பட்டுள்ளார். அவர் இடைவேளை உணவை ஒரு நாளும் வீட்டிலிருந்து கொண்டு வரவில்லை. எனினும் பணம் கொண்டு வந்து சிற்றுண்டிச் சாலையில்- வாங்கி உண்ணுவார். அதிகமாக ஐஸ் கிறீம், நொறுக்குத் தீனிகள் இவ்வாறு வாங்கி உண்ணப் படும் ஆகாரங்களாகும்.

2004ம் ஆண்டு மே 13ம் திகதி 18.4 kg எடையுடையவராயிருந்த அனீஸ் யூன் 21ம் திகதி 19.7kg வரை 1.3kg இனால் பாரம் அதிகரித்துக் காணப்பட்டதாகப் பதிவாகியுள்ளது. எனினும் இவ்வதிகரிப்பு அசாதாரணமாகத் தோன்றுகிறது. நிறை மாற்றத்தின் சாதாரண கோலம் இவ்வாண்டின் டிசம்பர் மாதம் வரையிலான தரவுகளினடிப்படையில் கீழே காட்டப் பட்டுள்ளன. (உரு 33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 33: 2 ஆம் வகுப்பிலிருந்து பிள்ளையின் நிறை மாற்றமடைந்த கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூன் மாதம் 21ம் திகதி 117.4cm உயரமுடையவராகக் காணப்பட்ட அனீஸ், ஒக்ரோபர் மாதம் 04ம் திகதியும் அதே உயரமுடையவராக அவதானிக்கப்பட்டுள்ளார்.

பிள்ளை 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் வகுப்புகளிலிருந்த காலப்பகுதியில் அவனது நிறையில் ஏற்பட்ட மாற்றத்தின் கோலம் கீழே காட்டப்பட்டுள்ளது.

இரண்டாம் வகுப்பின் ஆரம்பத்தில் (2003 பெப்ரவரி) 111cm உயரமுடையவனாகவிருந்த அனீஸ் அவ்வருட நடுப்பகுதியில் (யூன் மாதம்) 112.5cm உயரத்துக்கு வளர்ந்திருந்தான் ஏறக்குறைய ஓராண்டு காலத்தின் பின்னர் (2004 யூன் மாதத்தில்) ஏறத்தாழ 5cm ஆல் அதிகரித்து அவனது உயரம் 117.4cm ஆகக் காணப்பட்டது. 4 ஆம் வகுப்பின் ஆரம்பத்தில் (2005 பெப்ரவரி) 128cm உயரமுடையவனாகவும் இவ்வருட யூன் மாதத்தில் 130cm ஆகவும் ஒக்ரோபர் மாதத்தில் 134cm ஆகவும் உயர வளர்ச்சி அடையப் பெற்றிருந்தான். 2004 ஆம், 2005 ஆம் வருடங்களில் துரிதமாக உயர வளர்ச்சி அடைந்துள்ளமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

## சித்திரம் (Art)

அனீஸ் என்ற இந்த மாணவன் 1 ஆம் வகுப்பில் இருந்தபோது (2002ம் ஆண்டின்) பெப்ரவரி மாதத்தில் மனித உருவங்களை வரைவதற்கு முயற்சித்துள்ளதாக அவதானிக் கப்பட்டுள்ளார். பெரும்பாலும் முக்கோண வடிவத்தில் இத்தகைய உருவங்கள் அமைந் திருந்தன. இவ்வாறு அனீஸ் வரைந்த ஓர் உருவம் பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது, அது தனது தகப்பனின் உருவப்படம் என அனீஸ் விளக்கமளித்துள்ளார்.

இவ்வாண்டின் ஜுன் மாதமளவில் சில பொருட்களின் உருவங்களை வரைவதற்கு முயற்சிப்ப வராக அனீஸ் காணப்பட்டுள்ளார். மண்வெட்டி, பூ என்பன அவ்வாறான பொருட்களிற்குச் சில உதாரணங்களாகும். தெளிவான உருவங்களாக அவற்றை வரைவதற்கு இக்காலப் பகுதியில் அனீஸ் தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. வரைந்த உருவங்கள் பெரும்பாலும் வட்ட வடிவங்கள் கொண்டனவாகவமைந்திருந்தன. அவ்வாறு அவர் வரைந்த சித்திரங்களைப் பற்றிக் கேட்கப்பட்டபோது ஆமை, முட்டை என்பன போன்ற விடைகளை அனீஸ் தருவார்.

2ம் வகுப்பிலிருந்தபோது (2003ம் ஆண்டு) பெப்ரவரி மாதத்தில் சில பொருட்களையும், சில கருத்துக்களையும் ஓவியமாக்க அனீஸ் முயற்சித்துள்ளமை அவதானிக்கப்பட் டுள்ளது. இதற்குச் சில உதாரணங்களைக் குறிப்பிடல் முடியும்.

(1) ஒரு பறவை உணவு தேடுகின்றது என்ற கருத்து வெளிப்படும் வகையிலான ஓவியம்.

(2) பகல் நேரம் என்பதனை வெளிக்காட்டும் வகையில் சூரியனும், வீடொன்றினுள் இணைக்கப்பட்டுள்ள மின்விசிறியும் கொண்டதான ஓவியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) தலை, முண்டம் என்பவற்றை முறையே சிறியதும் பெரியதுமான வட்டங்களாலும் நான்கு கால்கள் மற்றும் வால் உடையதான உருவங்கள் மூலம் மிருகங்களை வகை குறிக்கும் சித்திரம்.

(4) அவ்வாறே பறவை என்ற கருத்து வெளிப்படும் வகையில் வரையப்படும் சித்திரம்.

(5) ஆண், பெண் வேறுபட்டுப் புலப்படும் வகையில் வரையப்பட்ட மனித உருவங்கள்.

எனினும், அனீஸ் வரைந்திருந்த எந்தவொரு ஓவியமும் அதற்குரிய பொருளைச் சரியாக எடுத்துக்காட்டத் தவறியிருந்தமை தெளிவாகப் புலப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மூடிய உருவங்களை அவற்றின் எல்லைக்குள் நிறந்தீட்டும் தேர்ச்சி அனீஸிடம் காணப்பட்டுள்ளது. இதற்கு கிரேயன் பயன்படுத்தியுள்ளார். எனினும் நிறந்தீட்டல் சீரானதாக அமைந்திருக்கவில்லை. அத்துடன் உருவத்தின் எல்லைக் கோட்டுக்கு அருகாமையில் உருவின் உட்பகுதி நிறந்தீட்டப்படாமல் விடுபட்டுள்ளமை கவனிக்கத்தக்க அமிசமாகும்.

மூன்றாம் வகுப்பிலிருந்த 2004 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் பிற மாணவர்களுடன் கலந்துரையாடி ஓவியங்கள் வரைவதில் ஈடுபடும் போக்கு அனீஸிடம் காணப்பட்டுள்ளது. வரைவதற்குத் தேவையான பொருத்தமான பதார்த்தங்களைத் தானே தெரிவு செய்து வரையக்கூடியவராகவும், கவனமாக வரைதலில் ஈடுபடக்கூடியவராகவும் காணப்பட்டுள்ளார். 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இவற்றுக்கு மேலதிகமாக சித்திரங்கள் தீட்டுவதில் ஆர்வமுடன் ஈடுபடுபவராகவும் இம்மாணவன் காணப்பட்டுள்ளார்.

பாடசாலைக்கு வராதபோது வீட்டில் என்ன செய்தீரென ஆராய்ச்சியாளர் வினவிய ஒரு சந்தர்ப்பத்தில் படம் வரைவதாகக் குறிப்பிட்ட அனீஸ், என்ன படம் எனக் கேட்டபோது தனது கால் சட்டப்பையில் இருந்த கசங்கிய பன்முறை மடிக்கப்பட்ட தாளொன்றை வெளியிலெடுத்து இதோ என்று அதில் வரையப்பட்டிருந்த ஓர் உருவத்தைக் காண்பித்துள்ளார். அதில் "புள்ளைகள்" என்று தலைப்பிடப்பட்டிருந்தது. (2003 மார்ச் 19ம் திகதி ஆழ்சிந்தனைப் பதிவேடு).

தவிர வீட்டில் தாமாகவே ஏதாவது எழுதிக் கொண்டும் வரைந்து கொண்டும் அதிக நேரத்தை அவர் செலவிடுவதாக ஆராய்ச்சியாளரிடம் அனீஸின் தாயாரும் தகப்பனாரும் குறிப்பிட்டுள்ளனர். சித்திரம் வரைவதில் அவருக்கு இருந்துள்ள ஆர்வத்தை எடுத்துக்காட்ட இந்நிகழ்வுகள் போதிய சான்றுகளாகவுள்ளன.


சித்திரங்கள் வரைவதில் அனீஸ் 2002, 2003, 2004 ஆம் வருடங்களில் அதிக ஈடுபாடு காட்டி வந்துள்ளார். வீட்டில் எப்போதும் ஏதாவதொன்றை வரைந்து கொண்டு காலத்தைச் செலவிடும் சந்தர்ப்பங்கள் அப்போது வெளிக்காட்டப்பட்டிருந்தன. அவ்வாறே பாடசாலையிலும் சித்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைவதில் அவர் தன்னிச்சையாகவே ஈடுபடும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. ஆயினும் இவ்வருடத்தில் (2005) அத்தகைய ஈடுபாடு குறைவான மட்டத்திலேயே காணப்பட்டுள்ளது.

'பூச்சாடியில் அழகான பூக்களைக் கண்ட எனக்கு மட்டிலா மகிழ்ச்சி' என்பதன் கீழ் சித்திரம் வரைந்த சந்தர்ப்பத்தில் ஆசிரியரிடம் வினவி உதவி கோரியவாறும், சகமாணவருடன் கலந்துரையாடியவாறும் வரைதலில் ஈடுபட்டுள்ளமை தகவல் பதிவுப் படிவத்தில் பதிவாகியுள்ளது. மேலும் சித்திரம் வரைதலின் வெவ்வேறு படிமுறைகளைச் செய்வதற்கு ஆசிரியரின் கட்டளைகளை எதிர்பார்ப்பவராகவும், உபகரணங்களைப் பகிர்ந்து பரிமாறிக் கொள்பவராகவும் அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். மனித உருவங்களை வரைவதில் அதிக விருப்புக் காட்டியுள்ளவராகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் சித்திரத்தை வரைந்து நிறந் தீட்டிப் பூரணப்படுத்துவதில் தேர்ச்சிகாட்டவில்லை. மேலும் தமது உணர்வுகள் வெளிப்படும் வகையில் சித்திரம் தீட்டவும் தவறியிருந்தார். அவர் வரைந்த சித்திரத்தை அவதானித்தால் பூச்சாடி வரைவதற்கு முயன்று, அதனைச் சாதிக்க இயலாது கைவிட்டுள்ளதாகத் தோன்றுகிறது. பூஞ்செடிகளுக்குப் பதிலாக மரங்கள் சிலவற்றின் தோற்றத்தில் வரையப்பட்டு அவற்றுக்கு நீரூற்றும் மனித உருவமும் அச்சித்திரத்தில் காணப்படுகிறது. நீரூற்றப் பாவிக்கப்படும் நீர்ச்சாடியிலிருந்து மேல்நோக்கி அதன் மூக்கினூடாக நீர்த்தாரை பாய்வதாகச் இச்சித்திரத்தில் வரையப்பட்டுள்ளது (உரு 34).



**உரு: 34 பூக்களைக் கண்ட எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி**

வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்கள் பூச்சாடியும், பூவும் அனீஸை விடச் சிறப்பாக வரைந்து நீரூற்றும் மனித உருவையும் சிறப்பாக வரைந்து அவற்றுக்கு பெஸ்டல் வர்ணம் கொண்டு நிறந் தீட்டியுமிருந்தனர்.

சந்தை வரையும் சந்தர்ப்பத்தில் மாணவன் அவதானிக்கப்பட்டபோது பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப அனீஸ் தரப்பட்ட தலைப்புக்கு ஏற்பவும், அருகிலுள்ள பிள்ளைகள் வரைவதைப் பார்த்தும் ஆசிரியரிடம் வினவி உதவி கோரியவாறும் கலந்துரையாடியவாறும் வரைதலின் வெவ்வேறு படிமுறைகளைச் செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் கட்டளைகளை எதிர்பார்ப்பவராகவும், அதேநேரம் வேறுவேறு அலுவல்களில் ஈடுபடுபவராகவும் உபகரணங்களைப் பகிர்ந்து பரிமாறிக் கொள்பவராகவும் காணப்பட்டுள்ளார். இச் சந்தர்ப்பத்தில் தமது சித்திரத்தை வரைந்து நிறந்தீட்டிப் பூரணப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். சித்திரத்தில் ஒரு பெரிய கடை பெயர்ப்பலகையுடன் வரையப்பட்டு சில மனித உருவங்கள் அங்கு வரையப்பட்டுள்ளன. அக்கடையைச் சூழ சில வியாபாரப் பொருட்கள் கொண்ட பெட்டிகளும் அவற்றை விற்பனை செய்யும் மனித உருக்களும் வரையப்பட்டிருந்தமை அனீஸ் என்ற இம்மாணவன் வாழும் சூழலின் தாக்கத்தை எடுத்துக் காட்டுவனவெனக் கொள்ளலாம். உயர்ந்த வளைந்த மரமொன்றும், அதில் ஒருவர் வாகனமொன்றில் செல்வது போலவும் வரையப்பட்டிருந்தமை ஆச்சரியமான ஒன்றாகும் (உரு: 35 - சந்தை).


வீட்டுத்தோட்டம் வரைந்த சந்தர்ப்பம் மூன்றாவதாக அவதானிக்கப்பட்டபோதும் முன்போலவே வித்தியாசமின்றி அனீஸ் என்ற இம்மாணவன் நடத்தைகளை வெளிக்காட்டியுள்ளார். வீடு வரையப்பட்டு நிறந் தீட்டப்பட்டிருந்தது. அதனைச் சுற்றிலும் பலவித மரங்கள் செடிகள், மிருகங்கள், பறவைகள், வண்டுகள் என்பனவற்றைக் குறிப்பிடும்படியான உருவங்களை வரைந்தும் அவற்றுள் சிலவற்றுக்கு பெஸ்றல் வர்ணம் மூலம் நிறந் தீட்டியுமிருந்தார். (உரு: 36 - வீட்டுத்தோட்டம்).

அனீஸ் வரைந்த ஓவியங்களில் கவனிக்கத்தக்க மற்றுமொரு பிரதான அம்சம் உருவங்களின் பருமன் விகிதாசார அளவுகளுக்கு ஏற்புடையதாக அமைந்திராமையாகும். உதாரணமாகப் பெரிய அளவில் மரம் வரைந்து, பொருந்தாத அளவுக்குச் சிறியதான கிளைகளை வரைந்திருந்தமையைக் குறிப்பிடலாம்.

அனீஸ் என்ற இம்மாணவன் ஆரம்ப வருடங்களில் வரைந்த சித்திரங்களையும், அப்போது வரைதலில் காட்டிய ஈடுபாட்டையும் கவனத்திற் கொண்டால், இவ்வாண்டில் அவர் இதனை விடத் தரம் மிக்கதான சித்திரங்களை வரையக்கூடியவராக இருந்திருத்தல் வேண்டும். ஆயினும் வகுப்பின் ஏனைய மாணவர்களது சித்திரங்களில் காணப்பட்ட தரம் கூட அனீசுடைய சித்திரங்களில் காணப்பட்டவில்லை. உதாரணமாக ஒரு மரம், மனிதவுரு, மிருகமொன்றின் உருவம், பறவையுருவம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை ஏனைய பிள்ளைகள் அனீஸை விடத் தெளிவாக வரைந்து காட்டியிருந்தனர். அவ்வாறே நிறந் தீட்டலின்போதும் சீராகவும், உரிய எல்லைகளுக்குள்ளும் நிறந் தீட்டுவதில் அனீஸ் இருக்க வேண்டி தேர்ச்சி மட்டத்தில் காணப்படவில்லையெனக் குறிப்பிடல் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 35: சந்தை




உரு 36: வீட்டுத்தோட்டம்

5 ஆம் வகுப்பிற்கு வந்த பின்னர் (2006 ஆம் ஆண்டில்) அனீஸ் ஓய்வாகவிருக்கும் சந்தர்ப்பங்களில் முன்னர் போல் ஏதேனும் வரைந்து கொண்டு நேரத்தைச் செலவழிப்ப வராகக் காணப்படவில்லை. எனினும் வகுப்பறையில் அமர்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலைகளில் தனது புத்தகங்களிலும் கொப்பிகளிலும் கிறுக்குச் சித்திரங்கள் தீட்டுபவராகக் காணப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு சமய வழிபாட்டுத் தலங்களை வரைந்தபோது முஸ்லிம்களின் பள்ளிவாசலைப் பிரதிபலிக்கும் வகையில் பென்சிலால் கோடுகள் வரைந்தும், அங்கு காணப்படும் மனிதர்களைப் பென்சிலால் வரைந்துமிருந்தார். நிறந் தீட்டும்போது அவ்வாறு வரையப்பட்ட முழுப் பிரதேசத்தையும் ஒரே நிறத்தால் (பெஸ்டல்) நிறந்தீட்டியிருந்தார். இதனைப் போலவே தேவாலயம் என்று புலப்படும் வகையில் பென்சில் கோடுகளால் கட்டிடமொன்று வரையப்பட்டதெனினும் முழுவுருவையும் ஒரே நிறத்தால் (பெஸ்டல்) நிறந்தீட்டியிருந்தார். பௌத்த விகாரையும் அவ்வாறே காணபட்டது. இந்துக்கோயில் மாத்திரம் அவர் வரைந்த கட்டிடத்தின் கீழ்ப்பகுதி ஒரு நிறத்தாலும், கோபுரம் போலிருந்த பகுதியை வேறொரு நிறத்தாலும் நிறந்தீட்டி நுழைவாயில் பகுதியை நிறம்தீட்டாது வைத்து வெவ் வேறாகப் புலப்படும் வகையில் அமைத்திருந்தார். இந்த நான்கு உருவங்களிலும் 5 ஆம் வகுப்பு மாணவன் ஒருவனின் சராசரி தேர்ச்சி மட்டம் கூட எய்தப் பெறாத நிலைமையே வெளிப்பட்டது.





உரு 37: வழிபாட்டுத் தலங்கள்

தாவரமொன்றின் பகுதிகளைப் பயன்படுத்தி சித்திரமொன்றை நிர்மாணிக்கும் செயற்பாட்டை அனீஸ் ஏனைய பிள்ளைகளைப் போலவே நன்றாகச் செய்திருந்தார். மலர் இதழ்களை முறையாக ஓர் அட்டையில் ஒட்டி பூவாகவும் (ரோஜா) இலைகளையும் தண்டுகளையும் நேர்த்தியாக ஒட்டி பூவுடன் இணைந்ததாக நிர்மாணித்திருந்தார்.
(உரு: 38 - தாவர பகுதிகளினால் ஆக்கிய உரு).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப வருடங்களில் சித்திரம் வரைவதில் அனீஸ் சுயமாகக் காட்டிய ஆர்வமும் ஈடுபாடும் சரியான முறையில் போசிக்கப்பட்டு அவன் வழிகாட்டப்பட்டிருந்தால் ஐந்தாம் வகுப்பை அடைந்த போதும் அந்த ஆர்வம் அவனிடம் காணப்பட்டிருக்கும். அது மட்டுமன்றி ஐந்தாம் வகுப்பை அடைந்தபோது சிறந்த தேர்ச்சியும் அடையப் பெற்றிருப்பான். ஆயினும் பாடசாலையில் அவ்வாறான வழிகாட்டல் தொடர்ச்சியாக அவனுக்குக் கிடைக்க வில்லை. அதுமட்டுமன்றி 2ஆம், 3ஆம் வகுப்புகளில் இருந்தபோதே வீட்டிலும் அவனுக்கு எதிருக்கம் வழங்கப்பட்டது. உதாரணமாக சுயமாக ஏதேனும் வரைந்து கொண்டு நேரத்தைக் கழித்த சந்தர்ப்பங்களில் "அதிகம் படித்து மூளையைக் குழப்பிக் கொள்ளதே" என்று தாயார் கடிந்து கொண்டதனைக் குறிப்பிடலாம். இவ்வாறாக தேர்ச்சி விருத்தியடைய வேண்டிய பிள்ளையில் தேர்ச்சி போதுமானளவு விருத்தியடையாமை பாடசாலை மற்றும் வீட்டுப் பின்னணியின் செல்வாக்கு எனக் குறிப்பிடல் பொருத்தமானது.



உரு 38: தாவர பகுதிகளினால் ஆக்கப்பட்ட பூவும் இலைகளும்

## ஆக்கம் (Creativity)

முதலாம் வகுப்பில் (2002 இல்) அனீஸ் இருந்தபோது ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுப வராகக் காணப்பட்டுள்ளார். வீட்டில் இருக்கும் சந்தர்ப்பங்களில் அநேகமாக எதனையாவது வரைந்து கொண்டு நேரத்தைச் செலவிடுவதாக பல சந்தர்ப்பங்களில் அவனது பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். அவ்வாறு வரைந்த சில உருவங்களும் அவதானிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு எந்நேரமும் ஈடுபடுவதை மாணவனின் தாய் தடுத்து "இப்படியிருந்தால் மூளை குழம்பிப்போகும்" என அறிவுறுத்தியதாகவும் பதிவுகள் காட்டுகின்றன. இவ்வாண்டில் மிருகக் காட்சிசாலை ஒன்றை (மாதிரி) நிருமாணித்து தனது ஆக்கத்திறனை பாடசாலையில் அனீஸ் வெளிப்படுத்தியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 ஆம் வகுப்பிலிருந்த (2003 ஆம்) ஆண்டில் மார்ச் மாதத்தில் களிமண், clay, கடதாசிக்கூழ் ஆகியவற்றைப் பயன்படுத்தி உருவங்களை அமைக்கும் தேர்ச்சி இம்மாணவனில் காணப்பட்டுள்ளது. குறிப்பாக சில பழங்கள், சில மரக்கறிகள் மற்றும் சில பலகாரங்களின் உருவங்களை ஆக்கியுள்ளார்.

இந்த வருடத்தின் யூலை மாதத்தில் கிழங்கு, வெண்டிக்காய் போன்ற மரக்கறிகளைப் பயன்படுத்தி அச்சுகளை ஆக்கியுள்ளார். அவ்வச்சுகளின் துணையுடன் வெவ்வேறு நிறங்களைப் பாவித்து வித்தியாசமான கோலங்களை இம்மாணவன் உருவாக்கியுள்ளார்.

ஒக்ரோபர் மாதத்தில் பால்மா பெட்டி அட்டை, நூல் என்பவற்றைப் பாவித்து வெவ்வேறு வடிவங்களில் முகமூடிகளை ஆக்கியுள்ளார். அம்முகமூடிகள் பெரும்பாலும் பழங்கள், மரக்கறி வகைகளின் உருவங்களைப் பெற்றிருந்தன. ஆசிரியரால் வகுப்பறையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த சொல்லட்டைகள், பழங்கள், மற்றும் மரக்கறி வகைகளின் உருவத்தில் இருந்தமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

மார்ச், யூலை, ஒக்ரோபர் ஆகிய மூன்று சந்தர்ப்பங்களிலும் ஆக்கத்துக்குத் தேவையான பொருட்களைத் தானே தெரிவு செய்யக்கூடியவராகவும், தெரிவு செய்த பொருட்களை முறையாகக் கையாளக்கூடியவராகவும், ஆக்கச் செயற்பாட்டில் மகிழ்ச்சியுடன் ஈடுபடக் கூடியவராகவும் அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார்.

மார்ச் மாத, ஒக்ரோபர் மாத ஆக்கச் செயற்பாடுகளின் இறுதியில் சுமாரான ஒரு ஆக்கத்தைப் பூர்த்தி செய்திருந்த அனீஸ் யூலை மாதத்தில் சிறந்த ஆக்கமொன்றைப் பூர்த்தி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் வகுப்பிலிருந்தபோது (2004 இல்) கடதாசி வகையறாக்கங்களினால் விசிறியொன்றை ஆக்கும் செயற்பாட்டின்போது அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். இந்த செயற்பாட்டின்போது அருகிலுள்ள மாணவர்களைப் பார்த்தும், அவர்களிடம் வினாக்கள் வினவியவாறும் ஆக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார். ஏனைய மாணவர்களிடமும் ஆசிரியரிடமும் உதவிகளைப் பெற்றுக் கொள்பவராகவும் அவர் அவதானிக்கப்பட்டுள்ளார். அதேவேளை உபகரணங்களை ஏனைய பிள்ளைகளுடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்பவராகவும் அவதானிக்கப்பட்டுள்ளார். இறுதியில் ஆக்கத்தைப் பூர்த்தி செய்தும் உள்ளார்.

4 ஆம் வகுப்பிலிருந்தபோது வாத்தியக் கருவிக்குப் பிரதியீடாகப் பயன்படுத்தக்கூடியவாறு ஆக்கச் செயற்பாடுகளில் பிள்ளைகள் ஈடுபடுத்தப்பட்டனர். அப்போது அனீஸ் துலங்கிய விதம் தரவுப் பதிவுப் படிவத்தில் பதிவாகியுள்ளது. அருகிலுள்ள பிள்ளைகளைப் பார்த்து ஆக்கம் புரிபவராகவும், ஆசிரியரிடம் உதவி கோருபவராகவும் ஏனைய பிள்ளைகளுக்கு இடைஞ்சல் புரிபவராகவும் அவதானிக்கப்பட்டுள்ளார். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவர் தொடர்ச்சியாக செயற்பாட்டிலீடுபட்டு ஆக்கத்தைப் பூர்த்தி செய்தார். கருவிகளைச் சரியாகக் கையாளக்கூடியவராகவுமிருந்துள்ளார். பூர்த்தி செய்த இசைக் கருவியில் ஒலியெழுப்பி அதனைக் கேட்டு மகிழ்ந்து கொண்டுமிருந்தார்.

5 ஆம் வகுப்பிலிருந்தபொழுது பணம் மற்றும் சிறு பத்திரங்களை வைப்பதற்கேற்ற ஒரு பை தைத்து ஆக்குவதற்கு பிள்ளைகள் வேண்டப்பட்டுள்ளனர். அப்போதும் அனீஸ் தேவையான பொருட்களைத் தேடிப் பெற்றுக் கொண்டவராகவும், உபகரணங்களையும், ஊசி, நூல் என்பவற்றையும் சரியாகக் கையாளக்கூடியவராகவும் ஆசிரியரிடம் உதவி பெற்றவராகவும் ஆக்கத்தில் ஈடுபட்டுள்ளார். ஏனைய பிள்ளைகளுக்கு உதவியும் புரிந் துள்ளார். பையை மூடுவதற்கு "ஜலட்" அல்லது தறி வைக்க அவரால் முடியவில்லை. ஆக்கத்தைப் பூரணப்படுத்தவும் தவறியிருந்தார். எனினும் செயற்பாட்டின் முடிவில் உபகரணங்களை உரிய இடத்தில் வைத்துவிட்டு இடத்தைத் துப்பரவு செய்துள்ளார்.

எனினும் ஆக்கச் செயற்பாடுகளின் போது இடையிடையே வேறு வேலையில் ஈடுபடுபவ ராகவும் அனீஸ் காணப்பட்டுள்ளார். ஆக்கத் திறமையுள்ள பிள்ளையாகவிருப்பினும், நெறிப்படுத்தி ஆக்க வேலைகளில் முறையாக ஈடுபடுத்தும் வீட்டுச்சூழல் இல்லாத நிலையில் அத்திறமைகள் வெளிப்பட்டுப் பிரகாசிக்கத் தவறியுள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்படலாம். பாடசாலையிலும் ஆக்க முயற்சிகளுக்குப் போதுமான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதும் ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டுக் குறிப்புகள் எடுத்துரைகின்றன.

## சமயமும் ஒழுக்க விழுமியங்களும் (Religion and Ethics)

அனீஸுடைய வீட்டுப் பின்னணி அவனது சமயம் சார்ந்த நிலைப்பாட்டிற்கு துணை நின்றுள்ளன. தாயார் மலே இனத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண் ஆயினும் அவர் வெறும் கவுன் அணிந்து கொண்டு காணப்படுவார். தூசனம் பகிரங்கமாகக் கதைப்பார். இந்து சமயத்தவர்கள் நம்பும் காளியம்மன் தன்னை ஆட்கொள்வதாகக் கூறுவார். காளி யம்மனை வருவிப்பதற்காக இந்துக்கள் செய்வது போல் பூசைகள் செய்வார். அதற்கென இந்துக்கள் பயன்படுத்துவது போன்ற பூசைப் பொருட்கள் சிலைகள் என்பவற்றைத் தானும் பாவிப்பார். வீட்டில் இவ்வகை நடவடிக்கைகளுக்கெனத் தனியாக இடமும் ஒதுக்கி வைத்திருந்தார். தகப்பன் முன்னர் இந்து சமயத்தைப் பின்பற்றியவர். பின்னர் இஸ்லாத்தைத் தழுவியவர். அவர் வெள்ளிக்கிழமைகளில் பள்ளிவாசலுக்குச் செல்வதாகக் குறிப்பிட்டார். இஸ்லாம் சமயம் வன்மையாகத் தடை விதித்துள்ள மது அருந்துதல், அதிஷ்டசீட்டு விற்பனை போன்றவற்றில் ஈடுபடுவார்.

அனீஸ் மிகவும் பிரச்சினைகளையேற்படுத்தி மற்றவர்கள் வீட்டுக்கும் வந்து ரகளை ஏற்படுத்திய சந்தர்ப்பத்தில் அவனுடைய தந்தை அனீஸின் கால்களில் விழுந்து "இவ்வாறெல்லாம் செய்யாதே" என அழுது கொண்டு வேண்டினார். இவ்வாறான பின்னணியில் வளர்ந்து வந்த அனீஸிடம் இஸ்லாமிய மார்க்கம் சார்ந்த சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரங்கள் காணப்பட்டன. அவன் 4, 5 ஆம் வகுப்புகளிலிருந்தபோது வெள்ளிக் கிழமைகளில் தகப்பனாருடன் பள்ளிக்குச் செல்வான். எனினும் அதனை நிலைபேறாகச் செய்யவில்லை. பள்ளிக்குச் சென்றாலும் பிறருக்கு இடைஞ்சலில்லாமல் நடந்து கொள்ள வேண்டும் என்பதில் அவன் அக்கறை காட்டவில்லை. வயோதிபர்களோ, பெரியவர்களோ எவராயினும் முட்டி மோதிக் கொண்டு சென்று தனது வேலைகளை முடிப்பதிலே கவனம் செலுத்தியுள்ளான். வழிவிட்டுச் செல்லும் தன்மை காணப்பட வில்லை. அவ்வாறே சூழலில் வாய் கழுவிய நீர் முதலானவற்றால் அசுத்தப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்ற மனப்பாங்கு அவனில் காணப்பட்டமைக்கான சான்றுகள் வெளிக்காட்டப்படவில்லை.

பாடசாலையில் உணவு உட்கொண்ட சந்தர்ப்பங்களில் கூட கைகளைக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டு "பிஸ்மில்லாஹ்" என்ற வார்த்தையை உச்சரித்த பின் ஆரம்பிக்கவு மில்லை. உணவுட் கொண்டு முடிந்ததும் "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறவுமில்லை. சிறுவர்கள் உள்ளிட்ட முஸ்லிம்களிடம் பொதுவாகக் காணப்படும் சமயப் பழக்கம் இதுவாகும். உணவு கொள்ளும் போது தனது சுற்றாடலை அசுத்தமாக்காது பேணுப வராகவும் அனீஸ் காணப்படவில்லை.

பாடசாலையில் சலவாத்து போன்ற எல்லாப் பிள்ளைகளும் ஒருமித்துக் கூறும் சமயம் சார்ந்த சுலோகங்களை (சலவாத்து) சில சந்தர்ப்பங்களில் சப்தமிட்டுத் தானும் கூறுவார். வேறு சில சமயங்களில் அதனைப் பொருட்படுத்தாமல் தன்னுடைய கருமத்தில் ஈடுபட்ட வராகக் காணப்பட்டுள்ளார்.

முகமன் கூறும் இஸ்லாமிய முறையாகிய "அஸ்ஸலாமு அலைக்கும்" என்பதை ஆசிரியர்களைக் காணும்போது கூறுவான். ஆயினும் அதைச் சொல்லும் போது கண்ணியம் செலுத்தும் பாவனையில்லாது, மிகுந்த பொடுகுபோக்குடன் அதனைச் சொல்வதையே அவதானிக்க முடிந்துள்ளது.

4 ஆம் வகுப்பிலிருந்தபோது ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றுள்ளார். எனினும் அது பற்றிய பெறுமானம் எதுவும் உள்ளத்திலில்லாமலேயே அதனைச் செய்துள்ளார். வெளிநாடு சென்று திரும்பிய உறவினர் ஒருவர் சாக்லெட் கொண்டு வந்தபோது அதனை உண்டு நோன்பை முறித்துக் கொண்டமை இதற்குச் சான்றாகும்.

திருக்குர்ஆனை வாசிக்கக் கற்றிருந்தார். அவர் 4 ஆம் வகுப்பிலிருந்த போது ஆராய்ச்சியாளர் அவர்களது வீட்டுக்குச் சென்றிருந்தார். அப்போது தனக்கு குர்ஆன் ஓதத் தெரியுமென்று பெருமிதத்துடன் குர்ஆன் பிரதியொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு ஆராய்ச்சியாளர் அருகே வந்து ஓதிக் காண்பித்தார். சில பொழுது வீட்டில் ஓதியுமுள்ளார். பின்னர் ஓதும் அப்பழக்கத்தைக் கைவிட்டு விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனீஸ் வகுப்பறையில் சக மாணவர்களுக்கு உதவிகள் செய்யக்கூடியவராகக் காணப் பட்டுள்ளார். தனது உணவுகளை அவர்களுக்கும் பகிர்ந்தளித்தல், தனது பொருட்களை மற்றவர்களுக்கும் பயன்படுத்த இரவல் கொடுத்தல், தனக்குத் தெரிந்தவற்றை மற்றவர் களுக்குச் சொல்லிக் கொடுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். அதுபோலவே மற்றவர் களின் குறைகளையும் தீமைகளையும் பற்றிக் கதைக்கும் போக்கு அவரிடம் காணப்பட வில்லை. 4 ஆம் வகுப்பிலிருந்தபோது தாயார் பாடசாலைக்கு வந்த சமயம் "இப் பிள்ளையை பாடசாலையில் திருத்த முடியாது, இவன் மிகவும் தறுதலைத்தனமாக நடந்து கொள்கிறான்" எனக் கூறி அதனை விளக்கும் வகையில் ஒரு சம்பவத்தைக் கூற ஆசிரியை முற்பட்டார். ஆசிரியை வேறு வேலையிலிருந்தபோது அனீஸிடம் "யார் ஆசிரியையிடம் இதனை முறையிட்டது?" எனத் தாயார் எவ்வளவு கேட்டும் அனீஸ் எந்தப் பிள்ளையின் பெயரையும் சொல்லவில்லை. இறுதியாக அன்று பாடசாலைக்கு வராத ஒரு பிள்ளையின் பெயரைக் கூறினான். எனினும் ஆசிரியர் திரும்பி வந்தவுடன் அங்கிருந்த ஒரு பிள்ளையிடம் அச்சம்பவத்தைக் கூறும்படி பணித்தபோது அப்பிள்ளை அச்சம்பவத்தைக் கூறியது.

இவ்வாறு தனது சக மாணவர்கள் அகப்பட்டுக் கொள்ளாது பாதுகாக்கும் தன்மை அனீஸிடம் காணப்பட்டது.

வீட்டிலும் எவ்வளவுதான் தம்பியுடன் சண்டையிட்டாலும் அவனுக்குத் தேவையானவை களைச் செய்து கொடுப்பதிலும் தெரியாதவற்றை சொல்லிக் கொடுப்பதிலும் ஆர்வம் காட்டியுள்ளான். அதுபோலவே வீட்டில் வந்து அனீஸுக்கு ஏசி அவனது குறைகளைக் கூறி பின்னர் அதன் காரணமாக தாயாரிடம் தண்டனை பெற்றிருந்தும் அத்தகையவர் களுக்கும் கூட தேவையான பொருட்களைக் கடைக்குச் சென்று வாங்கி வந்து கொடுப்பது போன்ற உதவிகளை செய்யக்கூடியவனாக அனீஸ் காணப்பட்டான்.

சில சமய சம்பிரதாயங்களை அவ்வப்போது நடைமுறைப்படுத்தினாலும் கூட அவற்றை நிலைபேறுடையதாகப் பின்பற்றவில்லையென்பதும், பின்பற்றிய விடயங்களிற் கூட அவற்றின் பெறுமானம் எதனையும் உள்வாங்கிக் கொண்டவனாக அனீஸ் காணப்பட வில்லை என்பதும் தெளிவாக அவதானிக்கப்பட்ட அம்சங்களாகும். தக்க முறையில் வழிகாட்டப்பட்டிருந்தால் அவனிடம் இயல்பாகவே வளர்ந்து வந்த சமய விழுமியங்கள் நன்றாக நெறிப்படுத்தப்பட்டு அப்பிள்ளை நல்ல நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டிருக்க முடியும்.

## விளையாட்டும் ஓய்வுநேரப் பயன்பாடும் (Sports and Use of Leisure)

ஆரம்பம் முதலே அனீஸ் என்ற இம்மாணவன் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஆர்வமுடன் ஈடுபடக்கூடியவராகவும், சுயாதீனமாக விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுத் திருப்தியுறுபவராகவும் காணப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரது மேற்பார்வையின் கீழ் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களில் ஆசிரியரது அறிவுறுத்துரைகளைச் செவிமடுப்பவராகவும் விளங்கிக் கொள்பவராகவும் அனீஸ் காணப்பட்டுள்ளார். எனினும் அவ்வறிவுறுத்துரைகளுக் கேற்பச் செயற்படும்போது முறைப்படி அவ்வறிவுறுத்துரைகளுக்கமைவாகச் செயற்பட வில்லை. உதாரணமாக ஒரு பக்கத்தில் நீர் நிரம்பிய வாளிகளும் மற்றப் பக்கத்தில் வெற்று வாளிகளும் வைக்கப்பட்டு பிள்ளைகளது கையில் போத்தல்கள் கொடுக்கப்பட்டு, அப்போத்தல்களில் நீரை மீண்டும் மீண்டும் அள்ளிக் கொண்டு வந்து வெற்று வாளிகளை நிரப்பும் ஒரு விளையாட்டில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பிடலாம். ஆரம்பித்த இடம், அவ்விடமிருந்து குறிப்பிட்ட சமிக்கையின் பின் நீருள்ள வாளியை நோக்கி ஓடிச்செல்லல், அங்கு போத்தலை நீரால் நிரப்புதல், திரும்பி வெற்றுவாளியிருந்த இடத்துக்கு ஓடிப் போத்தலில் இருந்த நீரை அவ்வாளியினுள் ஊற்றுதல், மீண்டும் நீருள்ள வாளியை நோக்கி ஓடுதல், ஓடும்போது உரிய தடத்தில் ஓடுதல் போன்ற அறிவுறுத்துரைகளை விளங்கிக் கொண்டு செயற்படுத்தினார். ஆனால் நீரை வெளியில் கொட்டி கொண்டும், தனது சப்பாத்துகளுக்குள்ளும் நீரைச் செலுத்திக் கொண்டும், உடுப்புகளை ஈரமாக்கிக் கொண்டும், ஓடும்போது போத்தலில் இருந்த நீர் வெளியில் கொட்டிக் கொண்டவாறும், தடத்தினைச் சேறாக்கிக் கொண்டும், அந்தச் சேற்றை தனது உடலிலும் உடுப்புகளிலும் பூசிக் கொண்டும், சேற்றில் கால்களை சடுதியாக வைக்கும்போது அது தெறித்து பக்கத்தில் நின்றவர்களையும் அசுத்தமாக்கக் கூடியவாறும் அவர் செயற்பட்டார். (ஆ.சி.ப.ஏ: 2004).

இவ்விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அனீஸ் வெளிக்காட்டிய பின்வரும் நடத்தைகள் கவனத்திற் கொள்ளத்தக்கன.

(1) இன்னொரு பிள்ளையுடன் மோதிக் கொள்ள நேர்ந்தபோது அது பற்றியோ, அப்போது கீழே விழுந்துவிட்ட தனது தொப்பியைப் பற்றியோ எவ்வித கரிசனையும் காட்டாது தனது விளையாட்டில் ஈடுபட்டனர்.

(2) நீரை வெளியில் கொட்டிக் கொண்டு ஓடியபோது ஆசிரியர் நீரைக் கொட்டாமல் ஓடுமாறு அறிவுறுத்தினார். அதற்கேற்ப ஒரு முறை கவனமாகச் செய்த அனீஸ் மீண்டும் முன்பு போலவே நீரைக் கொட்டிக் கொண்டு சென்றான்.

(3) நீரால் வெற்றுவாளியை நிரப்பி முடிந்ததும் அவ்வாளியைத் தூக்கிக் கொண்டு சென்ற அனீஸ் அதிலிருந்த நீரை ஏனைய பிள்ளைகள் மீது ஊற்றியடித்தான்.

(4) ஓடிக் கொண்டிருந்தபோது ஏனைய பிள்ளைகள் அண்மிக்கும்போது அவர்களைக் காலால் உதைத்துக் கொண்டு தன்பாட்டில் ஓடினான்.

(5) இச் சந்தர்ப்பத்தில் ஜனரஞ்சகமாகவிருந்த திரைப்படங்கள் மதுரை, கில்லி என்பனவாகும். "நான் மதுரைபோல் கில்லிபோல் தோற்கடிப்பேன்" என மற்றப் பிள்ளைகளிடம் கூறிக்கொண்டு விளையாட்டில் ஈடுபட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) விளையாட்டு முடிந்ததும் ஆசிரியரிடமோ அங்கிருந்த ஆராய்ச்சியாளரிடமோ எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளாது அவ்விடத்திலிருந்து அகன்று ஓடிச் செல்லலானான். அப்போது ஆசிரியர் அவனை மீள அழைத்தார். திரும்பி வந்து "சப்பாத்துகள் ஈரம் சேர" என்று கூறியவனாக அவற்றையும் சொக்ஸ் ஐயும் கழற்றி வெய்யில் படும் இடத்தில் உயரவிட்டான்.

(7) ஏனைய பிள்ளைகள் வாளியில் எஞ்சியிருந்த நீரால், நிலத்தில் எஞ்சிய இடங்களை ஈரளிப்பாக்கினர். (தூசு தவிர்ப்புக்காக) அனீஸ் அவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

தரவுப் பதிவுப் படிவப் பதிவுகளுக்கேற்ப அனீஸ் பிறருக்கு இடைஞ்சலின்றி விளையாட்டு களில் ஈடுபடல், ஏனையோருடன் ஒத்துழைத்துச் செயற்படல், தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல், வெற்றி தோல்விகளைச் சமனாக ஏற்றல் ஆகிய தேர்ச்சிகள் அடையப் பெற்றுள்ளாரெனினும் மேலே வெளிக்காட்டிய நடத்தைகள் அதற்கு முரணாகவுள்ளன.

விளையாடும்போது உபகரணங்களை நன்றாகக் கையாள்வதற்குரிய தேர்ச்சிகளைப் பெற்றவராக 2003 ஆம் ஆண்டு யூன் மாதத்திலேயே அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். உதாரணமாக டென்னிஸ் பந்தை வீசி ஏனைய விளையாட்டாளர்களை அடிக்கும் விளையாட்டின்போது பந்தை இலாகவமாகப் பிடித்துக் கைப்பற்றிக் கொள்பவராகவும் பின்னர் அதனை வீசி அடிக்கும்போதும் பந்தை முறையாகக் கையாளக்கூடியவராகவும் அவர் அவதானிக்கப்பட்டுள்ளார். அனீஸுடைய உடலியக்கங்கள் விளையாட்டின்போது சீரான இசைவாக்கமுடன் காணப்பட்டமை விசேடமாகக் குறிப்பிட வேண்டிய அம்சமாகும். அவர் கிரிக்கெற் விளையாடும்போது துடுப்பினால் பந்தை அடித்த பாங்கு இதனை உறுதி செய்தது. (ஆ.சி.ப.ஏ. 2006).

இப்பிள்ளை ஆசிரியர் மேற்பார்வையின் கீழ் விளையாடும்போது எப்படியும் அவ்விளையாட்டைப் பூர்த்தியாக்கும் வரையில் விளையாட்டில் ஈடுபடக்கூடியவராக அவதானிக்கப்பட்டிருந்தார். எனினும் இவருக்கு விருப்பமில்லாத செயற்பாடு ஆன சந்தர்ப்பத்தில் அச் செயற்பாட்டில் ஈடுபடலை தவிர்ந்து கொள்ளவும், ஈடுபடவேண்டி யேற்பட்டால் இடைநடுவில் விட்டுச் சென்றுவிடவும் அனீஸ் முயற்சித்துள்ளார். பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்காமையும், விளையாட்டுப் பயிற்சிக்காக நகரின் பிரதான விளையாட்டரங்கொன்றிற்கு அனைத்துப் பிள்ளைகளும் அழைத்துச் செல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் குழுவிலிருந்து பிரிந்து சென்றுவிட்டமையும் இக்காரணத்தினாலேயாகும்.

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்காத போதிலும், பங்கேற்றவர்கள் சான்றிதழ் பெற்றவேளை, தனக்கும் சான்றிதழ் வேண்டுமென ஆசிரியரிடம் நச்சரித்துக் கொண்டிருந்தமையினால் இந்தப் பிள்ளையின் மனம் புண்படக்கூடாதெனக் கருதி வெற்று சான்றிதழ் பிரதியொன்றைப் பிள்ளையிடம் கொடுத்து அதனை பின்னர் தன்னிடம் ஒப்படைத்து விட வேண்டுமெனவும் ஆசிரியர் அறிவுறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளார். அதனை எடுத்துக் கொண்டு தனது பிள்ளையின் பெயர் எழுதத் தவறியிருப்பதாக முறைப்பாடு செய்வதற்கு அனீஸின் தகப்பனார் பாடசாலைக்கு வந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இப்பிள்ளை பாடசாலையிலிருந்தபோது சுயமாக ஓடித் திரிவது போன்ற செயற்பாடுகளிலேயே அதிக நாட்டம் காட்டியுள்ளார். ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடச் சென்றால் சொற்ப நேரத்திலேயே அவர்களுடன் ஏதேனும் பிணக்குகளை ஏற்படுத்திக் கொள்வார். அல்லது சண்டையிலீடுபடுவார். எனினும் அவர் விரும்பிய அல்லது அவர் தெரிவு செய்த சந்தர்ப்பங்களில் ஏனைய பிள்ளைகளுக்கு உதவியாகவும் ஒத்துழைப்புடன் செயற்படுபவராகவும் அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார்.

வீட்டிலும் அனீஸ் ஆரம்ப கால முதற்கொண்டே சுயாதீனமாகவும் தனியாகவும் ஓய்வு நேரத்தைச் செலவிடக்கூடியவராக அதிக சந்தர்ப்பங்களிற் காணப்பட்டுள்ளார். ஆயினும் அவர் மிகவும் ஆர்வம் காட்டிய "சேவற்போர்" விளையாட்டில் அவர் ஈடுபட்டுள்ளார். தவிரவும் விளையாட்டு உபகரணங்களைக் கையாளும் தேர்ச்சி போலவே சேவற் போரிலீடுபடும் போர்ச் சேவல்களைப் பிடித்துக் கட்டுப்படுத்தவும் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். இது வளர்ந்த பெரியவர்களில் கூட அநேகருக்குக் கைவராத திறனாகக் காணப்பட்டமை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

இதுதவிர பெரியவர்கள் விளையாடிய கோலிக்குண்டு விளையாட்டிலும் அவர்களுடன் அனீஸ் ஈடுபட்டமை அவதானிக்கப்பட்டது. புகையிரதப்பாதையோரமாகவுள்ள ஒற்றையடிப் பாதை போன்ற இடைவெளிகளில்தான் இத்தகைய ஆட்டத்தில் வளர்ந்தோர் ஈடுபடுவர். சிலவேளை இதனை சூதாட்டமாகவும் (betting) அவர்கள் விளையாடுகின்றனர். அவர்களுடன் இவ்விளையாட்டில் 4ஆம் வகுப்பிலிருந்தபோது அனீஸ் ஈடுபட்டுள்ளார். (ஆ.சி.ப.ஏ. 2005).

மேலும் 3ஆம் வகுப்பிலும் 4ஆம் வகுப்பிலுமிருந்தபோது வேறு நண்பர்களுடன் கேரம் விளையாட்டில் ஈடுபட்டுள்ளான். அதற்கென அவனது சுற்றாடலில் கேரம் பலகை காணப்பட்ட வீட்டுக்கு அவன் செல்வான். 5 ஆம் வகுப்பிற்கு வந்தபோது அவனுக்கு கேரம் பலகை சொந்தமாகக் கிடைத்தது. இவ்வருடத்தில் சில போது அவனது சமவயதுப் பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்து வந்து கேரம் விளையாட்டில் ஈடுபட்டுமுள்ளான். ஏனைய சந்தர்ப்பங்களில் தனது தம்பியைக் கூட்டிக் கொண்டு கேரம் விளையாடுபவராகவும் அவர் காணப்பட்டுள்ளார்.

ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்கு விளையாட்டுகள் தவிர தொலைக்காட்சி பார்ப்பதிலும் அனீஸ் ஈடுபாடு காட்டியுள்ளான். ஆராய்ச்சியாளர் அவனது வீட்டுக்குச் சென்ற ஒரு சந்தர்ப்பத்தில் முற்பகல் 10.00 மணியளவில் தாயும் மற்றும் உறவுக்காரப் பெண்பிள்ளைகள் இருவரும் அனீசும் TV பார்த்துக் கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. பொதுவாக சண்டைக்காட்சிகளுடன் கூடிய திரைப்படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களையே பார்த்தனர். அனீஸ் குறிப்பாக மல்யுத்தம் பதிவு நாடாக்களை உபயோகித்து அக்காட்சிகளைப் பார்ப்பதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளான். (ஆ.சி.ப.ஏ. 2006).

## கற்றலுக்குக் கற்றல் (Learning to Learn)

அனீஸ் என்ற இந்த மாணவனில் கற்றலுக்குக் கற்றல் தேர்ச்சி விருத்தியடைந்துள்ள பாங்கினைக் கருத்திற் கொள்ளும்போது முதலில் குறிப்பிடத்தக்க விடயம் சுயாதீனமாகக் கற்றல் திறன்களாகும். பாடசாலையில் அனுமதி பெற்ற ஆரம்ப காலம் முதற்கொண்டே பாடசாலை செல்வதற்குச் சுயமாகத் தயாராகும் போக்கு இப்பிள்ளையில் வெளிக்காட்டப் பட்டுள்ளது. பாடசாலை தினங்களில் அவர் நேரகாலத்துடன் துயிலெழுந்து பாடசாலை செல்ல ஆயத்தமாவதற்குப் பெற்றோர்களின் உதவியை நாடவில்லை. பெற்றோர் அவ்வாறு உதவவுமில்லை.

ஆரம்ப காலம் முதற்கொண்டே வீட்டிலிருக்கும் நேரங்களிலும் கூட ஏதேனும் எழுதிக் கொண்டோ அல்லது வரைந்து கொண்டோ நேரத்தைச் செலவிடுபவராக இப்பிள்ளை அவதானிக்கப்பட்டுள்ளார். நிலத்தில் கொப்பியை அல்லது தாளை வைத்துத் தானும் நிலத்தில் அமர்ந்து இவ்வாறு செய்து வந்துள்ளார். எவருடைய உற்சாகப்படுத்தலோ, பிற ஊக்கங்களோ இன்றி அனீஸ் இத்தகு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளமை சுயாதீனமாகக் கற்றலில் ஈடுபடும் திறன் அவரிடமிருந்துள்ளதை வெளிக்காட்டுகின்றது. உண்மையில் "எந்நேரமும் இவ்வாறு படிப்பிலீடுபட்டு மூளையைக் குழப்பிக் கொள்ளாதே" (ஆழ்சிந்தனைப் பதிவேடு 2003) என்பது போன்ற தாயாரின் எச்சரிக்கைகளுக்கு மத்தியில் சிறுவன் இவ்வாறு இயங்கியுள்ளமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

மழை பற்றிய பாடம் கற்பிக்கப்பட்ட பின் ஆசிரியர் சில பயிற்சிகளைக் கொடுத்திருந்தார். பாடத்தில் அதிக கவனஞ் செலுத்தாதிருந்த அனீஸ் பயிற்சிகளைச் செய்யுமாறு பணிக்கப் பட்டபோது முதலில் கேள்வியை வாசித்து விட்டு, அதற்குரிய விடையைப் பாடநூலில் உரிய பாடத்தின் கீழ் தேடுபவராக அவதானிக்கப்பட்டார். இவ்வாறு ஒவ்வொரு கேள்விக்கும் விடைகளைத் தேடித் தேடிப் பெறுபவராகவும் சில விடைகள் பற்றி சக மாணவர்களுடன் கலந்துரையாடிய பின் தனது விடை பற்றி இறுதித் தீர்மானம் எடுப்ப வராகவும் அச்சந்தர்ப்பத்தில் அனீஸ் காணப்பட்டார். (ஆழ்சிந்தனைப் பதிவேடு, 2004).

ஆராய்ச்சியாளர் கணிதம் தொடர்பான உபகரணமொன்றை வழங்கி அதில் காணப்பட்ட கணிதப் பயிற்சிகளைச் செய்யுமாறு மாணவர்களை வேண்டிக் கொண்ட சந்தர்ப்பத்தில் (ஆழ்சிந்தனைப் பதிவேடு, 2005). அனீஸிற்குப் பெருக்கல் வாய்ப்பாடு தெரியாம லிருந்தது. வாய்ப்பாடு தேவைப்பட்ட கணக்கைச் செய்வதற்காக அவர் தனது புத்தகப் பையிலிருந்த கொப்பியொன்றையெடுத்து அதன் அட்டையில் அச்சிடப்பட்டிருந்த பெருக்கல் வாய்ப்பாடுகளை உபயோகப்படுத்துபவராக அவதானிக்கப்பட்டார். பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்காகத் தான் அளித்த விடைகளை சக மாணவர்களது விடைகளுடன் ஒப்பிட்டுக் கொள்பவராகவும், தன்னுடைய விடை பிழையானதென அறிந்தால் அதனைத் திருத்திக் கொள்பவராகவும், சகமாணவர்களது விடை பிழையென அவர் நினைக்கும்போது அம்மாணவர்களுக்கு அதனை விளக்குபவராகவும் இச்சந்தர்ப்பத்தில் அனீஸ் காணப்பட் டுள்ளார்.

மூன்றாம் வகுப்பிலிருந்தபோதும் இவ்வியல்பு அவரில் அவதானிக்கப்பட்டிருந்தது (ஆ.சி.ப.ஏ, 2004). இவ்வாறாக அவரில் காணப்பட்ட சுயாதீனமாகக் கற்றல் திறன்கள் வெளிக்காட்டப்பட்டன.

அனீஸ் தனக்குப் புதியதான கருவிகளைக் கண்டபோது அவற்றை இயங்கச் செய்து பார்ப்பதில் தீவிரமாக ஆர்வம் காட்டினார். ஆராய்ச்சியாளர் ஒலிப்பதிவுக்கருவியை வகுப்பறைக்குக் கொண்டு சென்றிருந்த சந்தர்ப்பங்களில் அனீஸ் அதனைக் கையிலெடுத்துப் பார்க்கவும், இயங்கச் செய்து பார்க்கவும் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருந்ததுடன், இதில் ஆர்வமேலீட்டால் வகுப்பறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த கற்றல் நடவடிக்கைகளில் குறைந்த ஈடுபாட்டைக் காட்டினார் (ஆ.சி.ப.ஏ. 2004, 2005 குறிப்புகள்). அவ்வாறே புகைப்படக்கருவியைக் கொண்டு சென்றிருந்த சந்தர்ப்பத்திலும் அதனைக் கையாள்வதற்குப் பெரும் ஆர்வம் காட்டினார். "தாங்க சேர்" என்று மீண்டும் மீண்டும் ஆராய்ச்சியாளரை நச்சரித்துக் கொண்டிருக்கக் காணப்பட்டார். (ஆ.சி.ப.ஏ.2005).

அவ்வாறே நூலகத்தில் அமர்த்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அங்கிருந்த வகுப்பாசிரி யரையோ ஏனைய ஆசிரியர்களையோ ஆராய்ச்சியாளரையோ மற்றப் பிள்ளைகளையோ பொருட்படுத்தாமல் சுயமாகச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த கணினியை இயக்கிப் பார்க்கும் வகையில் அதன் ஆளித்தட்டின் (Key board) பொத்தான்களை அழுத்தி அழுத்திப் பார்க்கத் தொடங்கிவிட்டார் அனீஸ். கணினித் திரையில் எதுவும் காணப்படாத நிலை தோன்றும்வரை இவ்வாறு செய்து கொண்டிருந்த அனீஸ், அந்நிலை தோன்றியதும் கணினியைத் தான் பழுதடையச் செய்துவிட்டதாகக் கருதி அவ்விடத்தி லிருந்து அகன்றார் (ஆழ்சிந்தனைப் பதிவேடு, 2004).

இவ்வாறு புதிய கருவிகளைக் கையாளவும் இயங்கச் செய்யவும் அவர் காட்டிய ஈடுபாடு கற்றலுக்குக் கற்றல் தேர்ச்சிகளின் பகுதியாகக் கொள்ளப்பட முடியுமாயினும் அத் தேர்ச்சிகள் நெறிப்படுத்தப்பட்டுப் போசிக்கப்படக்கூடிய சூழல் வீட்டிலோ பாடசாலை யிலோ அப்பிள்ளைக்கு அமையப் பெறவில்லை என்பதனை இங்கு குறிப்பிடல் வேண்டும்.

அனீஸ்"டைய வீட்டுச் சூழலில் புழக்கத்திலிருக்கும் சொற்கள் பேச்சு வழக்குகள் என்பன வற்றை அவர் விரைவாக உள்வாங்கிக் கொண்டமையும் அவற்றைப் பொருத்தமானவாறு பயன்படுத்தி வருகின்றமையும் கற்றலுக்குக் கற்றல் தேர்ச்சியெனக் கருத முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு சூழலில் காணப்பட்ட வழக்குகள் நாகரீகமானவையெனக் கருதப்பட முடியாதெனினும் பிள்ளையில் காணப்பட்ட தேர்ச்சியே இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

தனக்குத் தெரியாத இடங்களுக்குச் செல்வதற்கு இப்பிள்ளை தயக்கம் காட்டவில்லை. கொழும்புப் பெருநகர் மத்தியில் அமைந்துள்ள விளையாட்டரங்கொன்றிற்குப் பிள்ளைகள் அழைத்துச் செல்லப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அனீஸ் தனது குழுவிலிருந்து விலகி நகரின் பெருந் தெருக்களுக்குத் தனியாக வந்துவிட்டார். நகரின் பாதை வலையமைப்பில் தன்னுடைய வீட்டுக்குச் செல்லும் சரியான பாதையைத் தன்னால் கண்டறிந்து வீட்டைச் சென்றடைய முடியும் என்ற நம்பிக்கை அவரில் இருந்துள்ளது. (ஆழ்சிந்தனைப் பதிவேடு, 2004). அவ்வாறே 5 ஆம் வகுப்பில் கற்கும்போது ஏனைய இரண்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பெற்றோரிடம் வகுப்பாசிரியர் வீட்டுக்குப் பாடம் கற்கச் செல்வதாகப் பொய் கூறிவிட்டு கடற் குளிப்பிற்காகச் சென்ற நிகழ்ச்சியையும் குறிப்பிடலாம். முன்னர் சென்றிராத இடத்துக்குச் சென்று வந்தது மட்டுமன்றி முன்னநுபவமில்லாதிருந்தும் பாதுகாப்பாகக் கடற்கரையில் குளித்துவிட்டுத் திரும்பியுமிருந்தனர். வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் சுயாதீனமாகக் கற்றுக் கொள்ளும் திறன் இப்பிள்ளையில் நன்கு விருத்தியாகியிருந்ததை இந்நிகழ்வுகள் சுட்டிக்காட்டினவாயினும் பிறழ்வான நடத்தைகளிற் காகவே அது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையும், அத்திறன் நெறிப்படுத்தப்படாமையும் போசிக்கப்படாமையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய அம்சங்களாகும்.

அனீஸுடைய வீட்டுச் சூழலில் சேவல்கள் போரிட வைக்கப்படும். 'கோழிச்சண்டை' விளையாட்டு பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்தது. போரிட்டுக் கொண்டிருக்கும் சேவல்களைப் பிடித்துக் கட்டுப்படுத்துவதற்கு விசேடமான திறன்கள் தேவைப்பட்டன. அங்கிருந்த வளர்ந்தவர்களில் கூட பலருக்கு இந்தத் திறன் இருக்கவில்லை. ஆயினும் எவரிடமும் பயிற்சி பெறாமலேயே தான் அந்தத் திறன்களை அனீஸ் பெற்றுக் கொண்டார். அவருக்கோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ போர்ச் சேவல் சொந்தமாகவிருக்கவுமில்லை. இருந்தும் அவர் விரும்பிய இந்த விளையாட்டுடன் தொடர்புடைய திறன்களை அவர் வழிகாட்டல் ஏதுமின்றியே வளர்த்துக் கொண்டிருந்தமை கற்றலுக்குக் கற்றல் தேர்ச்சி அவரில் வளர்ச்சி பெற்றிருந்தமைக்கு அடையாளமாகும். இதுபோலவே அவரது வீட்டுச் சூழலில் வழக்கிலிருந்த பெரியவர்கள் விளையாடும் கோலிக்குண்டு விளையாட்டில் அவர் பெற்றிருந்த தேர்ச்சியையும் சுட்டிக்காட்ட முடியும்.

மூன்றாம் வகுப்பிலிருந்தபோது பெருக்கல் வாய்ப்பாடு பாடத்தில் ஆசிரியர் 2ஆம் வாய்ப்பாட்டை கற்பித்தார். அப்போது சிறு கடதாசித் துண்டுகளை பிள்ளைகளிடம் இவ்விரண்டாகக் கொடுத்து பின்னர் இரண்டு பேரிடம் இருக்கும் எண்ணிக்கை மூன்று பேரிடம் இருக்கும் எண்ணிக்கை என்பவற்றைக் காட்டி $1x2 = 2, 2x2 = 4, 3x2 = 6, \ldots$ என்றவாறு பாடம் திட்டமிடப்பட்டிருந்தது. இச்செயற்பாட்டின்போது அனீஸ் தொடர்ச்சியாக பாடத்தில் கவனஞ் செலுத்திக் கொண்டிருக்கவில்லை. அவ்வப்போது அவனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்து ஆசிரியர் வினா எழுப்பிய போது சிலவேளை சரியாகவும், சிலவேளை பிழையாகவும் மாறிமாறி விடையளித்தார். சிலவேளை விடையேதும் கூறாமல் அமைதி யாகவுமிருந்தார். உதாரணமாக "உன்னிடம் 2 டொபி உண்டு. அவனிடம் 4 டொபி உண்டு. உன்னை விட அவனிடம் எத்தனை அதிகம்?" என ஆசிரியர் கேட்டார். 'நான்கு' என்று அனீஸ் பதிலளித்தான். எனினும் மூன்று முறை இரண்டு எத்தனை? ஆறு. ஆறு முறை இரண்டு எத்தனை? பன்னிரண்டு போன்ற விடைகளைச் சரியாகவும் கூறினான். கற்பித்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆசிரியரையும் கவனித்தான். வேறு விடயங்களிலும் கவனம் செலுத்தினான். உதாரணமாக பென்சிலை விரலிடுக்கு களில் வைத்து ஓரொரு விதமாக அதனை அசைத்தான். ஒரு காலில் நின்ற வண்ணம் மற்றக் காலை உயர்த்தி பலவாறு அசைத்தான். கையை மற்றக் கைக்குரிய சட்டையினுள் செலுத்தினான். பார்வையை வகுப்புக்கு வெளியிலும் செலுத்தினான். இந்நிகழ்ச்சியானது ஒரு விடயத்தில் அவனால் கவனக் குவிப்பு செய்யக்கூடிய நேரம் குறுகியதெனக் காட்டின. எனினும் TV இல் அவனுக்கு விருப்பமான மல்யுத்த காட்சிகளைத் தொடர்ந்து உன்னிப்பான அவதானத்துடன் பார்த்துள்ளான். அதில் உள்ள செயன்முறைகளை தானும் பாவனை செய்து தனது தம்பியை மல்யுத்த வீரன் போல் தாக்கினான். தம்பியின் கழுத்தை நெரித்தான். இவ்வாறு நடைபெற்றதை அவனுடைய தாயார் குறிப்பிட்டார் (ஆ.சி.ப.ஏ. 2005) கவனக் குவிப்பு செய்யக்கூடிய நேர ஆயிடை அதிகமாக்கக்கூடிய விதத்தில் அவனது கவனத்தை ஈர்க்கத் தக்க விதத்தில் செயற்பாடுகள் அவனுக்கு பாடசாலையிலும் வீட்டிலும் கிடைக்காமையே இந்தத் தேர்ச்சி உயரளவுக்கு விருத்தியடையாமைக்குக் காரணமெனவும் கற்றலுக்கு கற்றல் தேர்ச்சியிலடங்கும் அவதானமாக மேற்பார்வை (Survey) செய்யும் ஆற்றலும் ஓரளவிற்கே விருத்தியடைந்திருந்தது. அவர் கண்ட நிகழ்ச்சிகளை விவரித்துக் கூறிய பாங்கிலிருந்து இதனை அறிய முடியும். உதாரணமாக பாதையில் இரண்டு வாகனங்கள் மோதிக் கொண்டதை விவரித்தபோது " வேனும் ஆட்டோவும் மோதின. ஆட்டோவின் லைட் உடைந்தது. வேன் சக்கையானது" என்று மேலோட்டமாக விவரித்தான். (ஆ.சி.ப.ஏ. 2004). அவன் வரைந்த சித்திரங்களை நோக்கினால் வரைந்த பொருளை அல்லது காட்சியைத் துல்லியமாக Survey செய்தமை அவற்றில் வெளிக்காட்டப்படவில்லை. உதாரணமாக 5 ஆம் வகுப்பிலிருந்தபோது அவன் வரைந்த சிறுமியின் முகத்தில் வாய் வரையப்படவில்லை. அவ்வாறே மொழியை எடுத்துக் கொண்டாலும் னகர, ணகர பேதம், ரகர,றகர பேதம் போன்றன அவனால் சரியாக Survey பண்ணப்படவில்லை. அல்லது இவை போன்ற நுணுகிய விவரங்கள் அவனால் உள்வாங்கப்படவில்லை. எனவே இப்பேதங்கள் உணர்த்தப்படும் வகையில் உச்சரிக்கவும், எழுதும்போது சரியான எழுத்துக்களைப் பயன்படுத்தவும் அனீஸ் தவறுகின்றார். மேலும் திருக்குர்ஆனை ஓதப் பழகியிருக்கும் அனீஸ் 5 ஆம் வகுப்பில் கற்கும் காலத்தில் ஆராய்ச்சியாளரிடம் திருக்குர்ஆனை ஓதிக் காண்பித்தான். அதிலும் விரைந்து ஓதினானே தவிர சரியான உச்சரித்தல், நீட்டல், இராகத்துடன் சொற்களை இணைத்தல் போன்ற நுணுக்கங்களைப் பின்பற்றத் தவறியிருந்தான். கற்றலுக்குக் கற்றலின் ஓர் அம்சமாகக் கொள்ளக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாதொன்றினதும் நுணுக்கமான அம்சங்களைக் கருத்திலெடுக்கும் ஆற்றல்" இப்பிள்ளையில் போதுமானளவு விருத்தி பெறவில்லையெனக் கூறலாம்.

கற்றலுக்குக் கற்றல் தேர்ச்சி பெற்றிருந்தால் பிள்ளை மாற்றங்களுக்கு சிறப்புறத் துலங்கவும், மாற்றங்களைச் சமாளிக்க இயலுமையுடையவராகவுமிருத்தல் வேண்டும். அனீஸுடைய வீட்டில் காளியம்மனுக்காகவென பூசையறை அமைக்கப்பட்டபோது அது அவனை எவ்விதத திலேனும் பாதித்ததாக அவனில் துலங்கல் வெளிக்காட்டப்பட வில்லை. அவன் பாடசாலையில் அனுமதி பெற்ற நாளில் ஏனைய குழந்தைகளைப் போல துலங்கல் காட்டாது அமைதியாக இருந்துள்ளான். அவனுடைய வகுப்பு புதிய அறைகளுக்கு மாற்றப்பட்ட சந்தர்ப்பங்களிலும், வகுப்பாசிரியர் மாற்றப்பட்ட சந்தர்ப்பங் களிலும் அவன் அம்மாற்றங்களை சீரணித்துக் கொண்டு இருந்தானேயன்றி அவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டது போலவாவது காட்டிக் கொள்ளவில்லை. ஏதேனும் துர்நடத்தைகளில் ஈடுபட்ட பின்னர் தாயாரிடம் தண்டனை பெற்ற சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர்களிடம் தண்டனை பெற்ற சந்தர்ப்பங்களிலும் ஏச்சுப் பெற்ற சந்தர்ப்பங்களிலும் அவ்வாறே. ஏனைய பிள்ளைகள் அனைவரும் இவனைக் "கள்வன்" போன்ற வார்த்தை களால் இழித்துரைத்த சந்தர்ப்பங்களிலும் அவற்றைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தான். அடிபட்டபோது அழவுமில்லை. ஏச்சுக் கேட்டபோதும், தூற்றப்பட்ட போதும் எவ்வித உணர்வுகளையும் வெளிக்காட்டவில்லை. தனக்குப் பாதகமாக சூழல் மாற்றமடையும் சந்தர்ப்பங்களை முகாமை செய்யும் ஆற்றல் அவனில் காணப்பட்ட தென்பதற்கு மேற்குறித்த நிகழ்ச்சிகள் சான்றுகளாகவுள்ளன.

அதுபோலவே அவனது வகுப்பிலிருந்த பிள்ளைகள் (4ஆம், 5ஆம் வகுப்புகளில் இருந்த போது) பல்துலக்கியபடி தலைக்கு எண்ணெயிட்டும், ஆடைகளைச் சுத்தமாக்கி அயன் செய்து அணிந்து கொண்டும் பாடசாலைக்கு வருகை தந்தனர். இச்சூழலில் தானும் இருந்தபோதிலும் அதற்கேற்ப தன்னை பொருத்தப்பாடுள்ளனவாக்கிக் கொள்ள அனீஸ் தவறியிருந்தார். 5ஆம் வகுப்பிலிருந்த போது கூட பல் துலக்காமல் பாடசாலைக்கு வருகை தந்திருந்தார். சுற்றாடலில் காணும் மாற்றங்களுக்கேற்ப நல்ல விடயங்களைப் பொறுத்தவரை அவர் குறைந்தளவிலேயே பொருத்தப்பாடு ஏற்படுத்திக் கொண்டமையை இது சுட்டி நிற்கிறது.

## சுற்றாடல் சார் தேர்ச்சிகளது விருத்தி

## (Competencies Related to the Environement)

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனீஸ் என்ற இந்தப் பிள்ளையின் சுற்றாடலுடன் தொடர்புபடும் சில தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் இங்கு கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப முதலே (2002 இல்) இப்பிள்ளை தனது சட்டை, கால்சட்டை, தொப்பி, பாதணி கள் என்பவற்றை நேர்த்தியாகவும் சுத்தமாகவும் பேணுபவராகக் காணப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 ஆம் வகுப்புக்கு வந்த பின்னரும் கூட அழுக்குப் படிந்ததும், பொத்தான் கழன்று போனதுமான சட்டையுடன் பாடசாலைக்கு அனீஸ் வந்திருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. (ஆ.சி.ப.ஏ. 2006). அவ்வப்போது கழுவிச் சுத்தம் செய்த ஆடைகளுடன் பாடசாலைக்கு வந்தாரெனினும் விரைவிலேயே அவற்றை அழுக்கும் அசுத்தமுமாக்கிக் கொள்பவராகக் காணப்பட்டார். சப்பாத்து அணிந்து வந்த நாட்களில் வகுப்பறையில் இருந்தபோது சப்பாத்துகளைக் கழற்றி வைத்துவிட்டு வெறும் கால்களுடனிருப்பார். பொதுவில் சப்பாத்துகள் அழுக்குற்றனவாகவே காணப்பட்டன. 2005 ஆம் ஆண்டு ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் கீழ்குறித்த பதிவு இங்கு பொருத்தமாகிறது.

அனீசுடைய கால்சட்டை வெட்டப்பட்டு ஒரு துண்டு அகற்றப்பட்டிருந்தது. அதைக்கண்ட ஆராய்ச்சியாளர் அனீசிடம் கேட்ட வினாக்களும் அனீஸ் துலங்கிய விதமும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆராய்ச்சியாளர் : கால்சட்டைக்கு என்ன நடந்தது?
அனீஸ் : வெட்டினது
ஆராய்ச்சியாளர் : யார் வெட்டினார்?
அனீஸ் : நான்
ஆராய்ச்சியாளர் : ஏன் வெட்டினீர்கள்?
அனீஸ் : சும்மா
ஆராய்ச்சியாளர் : உங்களுடைய உம்மா தடுக்கவில்லையா?
அனீஸ் : வேண்டாமென்று தடுத்தார்.
ஆராய்ச்சியாளர் : அப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்?
அனீஸ் : நான் வெட்டினேன்.
ஆராய்ச்சியாளர் : எதனால் வெட்டினீர்கள்?
அனீஸ் : கத்தரியால்

தனது உடுப்புகளைப் போலவே தனது உடம்பையும் 2002 முதலே சுத்தமாகப் பேணாதவராக அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளார். தலைக்கு முறையாக எண்ணெய் இட்டு தலைசீவி வரவில்லை. நகங்களை வெட்டி சுத்தமாக வருபவராகவும் காணப்படவில்லை. பற்துலக்காமல் பாடசாலைக்கு வந்திருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஆராய்ச்சியாளரின் ஆழ்சிந்தனைப் பதிவேட்டின் ஒரு குறிப்பு கீழே தரப்படுகிறது.

ஆராய்ச்சியாளர் : இன்று பல்துலக்கினீர்களா?
அனீஸ் : ஆம்.
ஆராய்ச்சியாளர் : இல்லையே, பற்களைக் காட்டுங்கள்.
அனீஸ் : தயங்கியபடி சிறிதுநேரம் இருந்துவிட்டு
பல் துலக்கவில்லை என்று தயக்கத்துடன் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **ஆராய்ச்சியாளர்** | : | ஏன்? |
| **அனீஸ்** | : | சும்மா |
| **ஆராய்ச்சியாளர்** | : | இன்று குளித்தீர்களா? |
| **அனீஸ்** | : | ஆம் |
| **ஆராய்ச்சியாளர்** | : | எங்கே? |
| **அனீஸ்** | : | Tap இல் |
| **ஆராய்ச்சியாளர்** | : | எப்படி? |
| **அனீஸ்** | : | வாளியில் சேர்த்து சேர்த்து குளித்தேன். |

ஐந்தாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தபோதும் கூட இவ்வாறான எளிய சுகாதாரப் பழக்கவழக்கங்கள் அவரிடம் விருத்தியாகிக் காணப்படவில்லை.

முதலாம், இரண்டாம், மூன்றாம் வகுப்புகளில் கற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இப்பிள்ளைக்கு மூக்கில் அதிகமாக சளி வடியும். அப்போது அதனை முறைப்படி சுத்த மாக்கிக் கொள்ளவோ, அதற்காகக் கைக்குட்டை பாவிக்கவோ அனீஸ் பழக்கப்பட்டிருக்க வில்லை. மாற்றமாக தனது கையின் வெவ்வேறு பகுதிகளை மூக்கில் வைத்து வடியும் சளியை துடைப்பான். சிலவேளை சட்டையின் கையை மூக்கின் அருகில் வைத்து அதனால் துடைப்பான். 4 ஆம், 5 ஆம் வகுப்புகளிலிருந்தபோது மூக்கில் சளி வடிதல், ஒப்பீட்டளவிற் குறைந்திருந்ததெனினும், சரியான முறையில் சுத்தம் செய்து கொள்ளும் தேர்ச்சியை அப்போதும் அனீஸ் பெற்றிருக்கவில்லை. தனது உடம்பிலோ உடை களிலோ அழுக்கு ஏறுகிறது என்ற உணர்வேதுமில்லாதவன் போல் அழுக்கேற்றக் கூடிய பொருட்களைக் கையாளக்கூடியவனாகவும் சுவர், மரம், கொடிக்கம்பம் போன்றவற்றின் அருகில் அவற்றுடன் சாய்ந்து தொடுகையிலிருப்பவனாகவும் அனீஸ் அடிக்கடி அவதானிக்கப்பட்டுள்ளான்.

அனீசுடைய வீட்டுப் பாவனைக்கெனத் தனியான மலசல கழிப்பிடம் இருக்கவில்லை. குளிப்பதற்கும் ஆடைகளைக் கழுவுவதற்கும் வீட்டுக்குச் செல்லும் அடிப்பாதையில் ஓரிடத்தில் அமைக்கப்பட்டிருந்த பொது நீர்க் குழாய்தான் பாவிக்கப்பட வேண்டியிருந்தது. அனீசுடையதைப் போன்ற பல வீடுகளைச் சேர்ந்தவர்கள் அதனையே பாவித்தனர். இந்தப் பிள்ளையிடம் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் மற்றும் சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வு விருத்தியாகாமைக்கு இத்தகைய காரணிகளும் பங்களித்துள்ளன.

இவ்வாறு தனது உடம்பையும் ஆடைகளையும் சுத்தமாகப் பேணும் தேர்ச்சி பெற்றிராத அனீஸ் சுற்றாடலையும் அசுத்தமாக்கக் கூடிய வகையில் செயற்படுவது அவதானிக்கப் பட்டுள்ளதென்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சுற்றாடலைப் பற்றிய எவ்வித உணர்வும் இல்லாதவனாகவே காணப்பட்டுள்ளான். உதாரணமாக மூன்றாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த 2004 ஆம் ஆண்டில் ஆராய்ச்சியாளர் வகுப்பறை நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டிருந்தார். ஆசிரியர் கற்பித்தலை நிறைவு செய்து பயிற்சிகளை வழங்கினார். பயிற்சிக் கொப்பியையும் பென்சிலையும் கையிலெடுத்த அனீஸ் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென்சிலைச் சீவுதற்கு ஆரம்பித்தான். இதற்காக பிளேட் ஒன்றைப் பயன்படுத்திய அனீஸ் சீவல்களை மேசையிலும் வகுப்பறை நிலத்தின் பல இடங்களிலும் சிதற விட்டான். கடைசியில் பென்சில் கூரானதும் எழுத ஆரம்பிப்பதற்கு, மேசை மீதிருந்த சீவல்களைத் தனது கைகளால் வாரி நிலத்தில் பலவிடங்களிலும் சிதறி விழுமாறு தட்டித்தட்டி விட்டான். (ஆ.சி.ப.ஏ. 2004). அதே தினத்தில் சிற்றுண்டிச்சாலையில் வாங்கிய உணவை வாயில் போட்டுக் கொண்டு அதிலிருந்த கழிவுத்தாளை நின்ற விடத்திலேயே கீழே போட்டதையும் இடைவேளையின்போது அவன் அங்குமிங்குமாக ஓடித்திரிந்து கொண்டிருந்தபோது கண்ட கண்டவிடங்களில் எச்சில் உமிழ்ந்துவிட்டதை யும் காணக்கூடியதாகவிருந்தது.

முதலாம், இரண்டாம் வகுப்புகளில் கற்றுக் கொண்டிருந்தபோது வீட்டிலிருந்தும் உணவுப் பொருட்களைக் கொண்டு வரக்கூடியவனாக அனீஸ் காணப்பட்டான். அப்போது வகுப்பறையினுள் வைத்து அவ்வுணவை உட்கொள்வான். ஆனால் சுற்றாடலில் உணவுப் பொருக்குகள் விழாமல் அவன் கவனமாக உணவு உட்கொள்ளவில்லை. அவ்வாறே தனது கைகளைச் சுத்தமாக்கிக் கொண்டவனாக ஆகாரமெடுக்கவும் தவறி விடுவான்.

இந்தப் பிள்ளையின் புத்தகங்கள், கொப்பிகள் என்பவற்றைக் கவனித்தபோது அவற்றைத் தூய்மையாகப் பேணும் பழக்கம் அனீசிடத்தில் விருத்தியாகியிருக்கவில்லை என்பது தெளிவாகியது. கொப்பிகளின் வெவ்வேறு பக்கங்களில் கிறுக்கல்கள், கிறுக்கல் சித்திரங்கள் என்பன காணப்பட்டன. அவ்வாறே தாள்கள் ஆங்காங்கே கிழிக்கப்பட்டு மிருந்தன. சுற்றாடலில் காணப்படும் பொருட்களைத் தூய்மையாகப் பேணும் உணர்வு அனீசிடம் காணப்படவில்லையென்பதற்கு இதனையும் ஒரு சுட்டியாகக் கொள்ள முடியும்.

பாடசாலை வளவினுள் இடைவெளி குறைவாகவும் நெருக்கடியாகவும் இருந்தமையும், வகுப்பறையினுள்ளும் வெளியிலும் கழிவுகளை இலகுவில் போடக்கூடியவாறான வசதிகள் காணப்படாமையும் இப்பிள்ளையின் இந்தப் போக்கிற்கு காரணமாக விருந்திருக்கலாம். அதுபோலவே வகுப்பறையில் (உதாரணம் 3ஆம் வகுப்பில் இருந்த போது) உடைந்த பாவிக்க முடியாத தளபாடங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தல் அதே வருடம் வகுப்பறை வாயிலால் வெளியேறியதும் காணப்பட்ட நடைபாதையின் பகுதியில் உடைந்த தளபாடங்கள் ஒழுங்கீனமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை போன்ற பாடசாலையில் காணப்பட்ட அம்சங்கள், சுற்றாடலை முறையாகப் பேண வேண்டுமென்ற மனப்பாங்கு பிள்ளையில் வளர்வதற்கு எதிர்த்தூண்டிகளாக அமைந்திருத்தல் முடியும்.

சுற்றாடல் தேர்ச்சிகளுள் நீர்வளம் தொடர்பான தேர்ச்சிகள் சிறுவயது முதற்கொண்டே பிள்ளைகளில் கட்டியெழுப்பப்பட வேண்டியனவாகும். ஆனால் எந்தவித தேவையோ, எந்தவித நோக்கமோ இல்லாது நீரை போத்தலில் சேகரித்து கழிவுநீர் தொட்டியில் தொடர்ந்து ஊற்றிக் கொண்டிருந்த நிகழ்ச்சியானது அனீஸ் முதலாம், இரண்டாம் வகுப்புகளிலிருந்த பொழுதே நீரின் அருமை பற்றிய உணர்வேதுமின்றி அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரயமாக்கக் கூடியவனாக இருந்ததை எடுத்துக் காட்டியது. (ஆ.சி.ப.ஏடு: 2002). கையில் நீர் இருந்தால் அதனை பக்கத்திலுள்ள பிள்ளைகள் மீது வீசித் தெளித்து அவர்களை ஈரப்படுத்தி வேடிக்கை பார்ப்பவனாகவும் அனீஸ் அவதானிக்கப்பட்டுள்ளான். (ஆ.சி.ப.ஏடு: 2004). அவனது வீடு வாவிக் கரையில் அமைந்திருந்தது. அவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் பல பொருட்களையும், கழிவுகளையும் வாவியில் தள்ளி விடுவதை அனீஸ் அன்றாடம் காண்பான். அவனது வீட்டின் கழிவுகளும் அந்த வாவியில் தள்ளப்படுகின்றன. மேலும் அவனது வீட்டுக்கு முன்னால் கழிவுநீர்க்கான் சென்று கொண்டிருந்தது. அதன் அழுக்குகளும், நீரும் நேரடியாக வாவியினுள் சென்று அவனது வீட்டுக்கருகிலேயே கலக்கின்றன. அனீஸ் இவ்வாறு வாவியின் நீர் மாசடைவது பற்றிய விழிப்புணர்வு பெறக்கூடிய சூழல் அவனது வீட்டிலும் காணப்படவில்லை. மாற்றமாக வாவியில் அசுத்தங்களைச் சேர்த்து மாசுறுத்துவதுதான் இயல்பாக நடைபெற வேண்டியதென்ற மனப்பாங்கு வளரக்கூடிய விதத்திலேயே அந்தச் சூழல் அமைந்திருந்தது.

அனீஸ் நடந்து செல்லும்போது வழியில் காணப்படும் கடதாசிச் சுருள்கள், சிறு பெட்டிகள் போன்ற பொருட்களை கால்களால் தட்டித் தட்டி விடக்கூடிய பழக்கமுடைய வனாகக் காணப்பட்டான். அவ்வாறே மணற்பாங்கான இடங்களில் நடமாடும்போது மணலைக் கிளறியவாறு கால்களால் அடிப்பான். அதிலிருந்து எழும் தூசுகள் பற்றி அவன் அக்கறை காட்டவில்லை. குறிப்பாகப் பாடசாலையின் பிரதான வாயிலிற்கும், மூன்று மாடிக் கட்டிடச் சுவருக்குமிடையிலிருந்த திடலில் நடக்கையில் அவன் இவ்வாறு செய்வதனை ஆசிரியர் பலமுறை அவதானித்துள்ளார். (ஆ.சி.ப.ஏ: 2004).

அதுபோலவே இருமல், தும்மல் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் தனது வாயிலும் மூக்கிலு மிருந்து வெளியேறுபவற்றை கைக்குட்டையினாலோ வேறு எதனாலுமோ மறைத்துக் கொள்ளும் பழக்கமும் அவனிடம் காணப்படவில்லை. தான் இருந்த நிலைமையை மாற்றிக் கொள்ளாமல் அப்படியே இருமி விடுவதும் தும்மி விடுவதும் தனக்கு முன்னால் இருப்பவர்களைப் பாதிக்குமென்ற உணர்வோ, அவற்றை வளிமண்டலத்தில் கலக்கவிடக் கூடாதென்ற உணர்வோ ஐந்தாம் வகுப்பை அடைந்த பின்னர் கூட இந்தப் பிள்ளையில் ஏற்பட்டிருக்கவில்லை. இது பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் (ஆ.சி.ப.ஏ. 2006).

அனீஸ்"டைய வீட்டுக்கு ஆராய்ச்சியாளர் சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களது வீட்டுச் சுற்றாடலில் பெரும் துர்வாடை வீசிக் கொண்டிருந்தது. வீட்டினுள்ளும் அது நன்குணரப்பட்டது. அது வீட்டுக்கு முன்னால் காணப்பட்ட சாக்கடைக் கானிலிருந்து வரும் துர்நாற்றமாக இருந்திருக்க முடியும். அத்துடன் ஆராய்ச்சியாளர் இது பற்றிய எவ்வித உணர்வையும் வெளிப்படுத்தாமல் தன் கருமங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். எனினும் அனீசுடைய தாயார் அன்று மட்டுந்தான் இப்படியானதொரு நிலைமை இருப்பது போல் பாசாங்கு செய்து கொண்டு "எலிப்புழுக்கை உள்ளது போலும். நீ போய் ஊதுபத்தி கொண்டு வா" என அனீசை அனுப்பி வைத்தார். சற்று நேரத்தில் அவன் ஊதுபத்தியுடன் திரும்பி வந்ததும் அவற்றைப் புகைக்க விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது தாயார் ஆராய்ச்சியாளருடன் உரையாடினார் (ஆ.சி.ப.ஏ: 2005). இத்தகைய துர்வாடை வீசிக் கொண்டிருந்தமை தொடர்பில் அனீஸ் எந்தவித துலங்கலையும் வெளிக்காட்டவில்லை. அவனுக்குப் பழகிப் போயிருந்த ஒரு நிலைமையாக இது இருந்திருத்தல் கூடும்.

இவ்வாறு நீர், வளி மண்டலம் என்பவற்றுடன் தொடர்பான மிக எளிய தேர்ச்சிகள் கூட அனீசிடம் விருத்தியாகிக் காணப்படாமை போலவே தாவரங்கள் விலங்குகளையுள்ளடக்கிய உயிர்க்கோளம் தொடர்பான தேர்ச்சிகளும் அவனிடம் விருத்தியாகிக் காணப்படவில்லை. அனீசுடைய வீட்டுக்கு அண்மையில் மரம் செடி கொடிகள் காணப்படவில்லையெனினும் அவனது வீட்டுக்குப் பின்னால் உயரமாக வளரும் புல் காணப்பட்டது. ஆராய்ச்சியாளர் அங்கு சென்றிருந்தபோது அத்தகைய புதர்கள் சில பலகைச் சுவர்களின் இடைவெளி க*டாக வீட்டுக்குள்ளும் நீட்டிக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது (ஆ.சி.ப.ஏ. 2006). அது தவிர வேறு தாவரங்கள் அங்கு காணப்படவில்லை. பாடசாலையிலும் சில மரங்கள் இருந்தன. 2004 ஆம் ஆண்டில் ஆய்வுகூடக் கட்டிடத்துக்கு முன்னால் சில மரக்கறி வகைகளும், பூச்செடிகளும் வளர்க்கப்பட்டிருந்தன. அனீஸ் எவ்வித தேவைக்காகவுமில்லாது மரக்கறிச் செடிகளை ஒடித்துக் கொண்டிருப்பவனாக அவதானிக் கப்பட்டான். (ஆ.சி.ப.ஏ: 2004). தான் வளர்க்காவிட்டாலும் பிறரால் வளர்க்கப்படும் பலன் தரும் பயிர்களைத் தானும் சேதப்படுத்தாமல் இருக்க வேண்டுமே. அந்த உணர்வு கூட இந்தப் பிள்ளையில் விருத்தியாகியிருக்கவில்லை.

விலங்குகளைப் பொறுத்தவரையில் அனீசுடைய மனப்பாங்கு எவ்வாறிருந்ததென அவதானிக்கப்பட முடியவில்லையெனினும் அவன் போர்ச் சேவலை விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளான். போர்ச் சேவல்களைச் சண்டையிலீடுபடுத்தும் விளையாட்டு அவனது வீட்டுச் சூழலில் காணப்பட்டதாலும் அத்தகைய சண்டைகளைப் பார்ப்பதில் ஆர்வம் உடையவனாக இருந்தமையாலும் அனீஸ் இவ்வாறு கூறியிருத்தல் கூடும்.

ஏனைய மக்களுடன் அனீசுடைய ஊடாட்டம் இம்மாணவன் பற்றிய பக்கப்பார்வையின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆளிடைத் தொடர்புகள் பற்றிய கீழ்க்குறித்த அம்சங்கள் கவனத்திற் கொள்ளத்தக்கனவாகும்.

(1) குறைந்த பயவுணர்வு - பாடசாலைக்குச் சேர்வதற்காக வந்திருந்த சமயத்திலேயே வெளிக்காட்டப்பட்டது. தொடர்ந்து இத்தன்மை அனீசிடம் காணப்பட்டுள்ளது.

(2) குறைந்த வெட்கவுணர்வு: தனது செயல்களைப் பற்றியோ ஆடையலங்காரம் பற்றியோ பிறர் என்ன கருதுவார்கள் என்று அலட்டிக் கொள்ளாத அனீஸுடைய தன்மை 5 ஆம் வகுப்பிலிருந்த காலத்திலும் ஆடையணியாமல் வீட்டில் காணப் பட்டமை.

(3) ஏனைய பிள்ளைகளுடன் கூட்டாகவிருக்க விருப்புக்காட்டியது போலவே தான் மட்டும் சுயாதீனமாகத் தனியாகவிருக்கவும் விருப்புக் காட்டியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) ஏனையவர்களுடன் சேர்ந்து செயற்படச் சென்றால் அல்லது விளையாடச் சென்றால் குறுகிய நேரத்திலேயே சண்டை சச்சரவுகளையேற்படுத்திக் கொள்பவனாக அனீஸ் காணப்பட்டுள்ளான்.

(5) சக மாணவர்களுக்கு தான் விரும்பிய பொழுதுகளில் உதவிகள் செய்யக்கூடிய வனாகவும் தனது பொருட்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய வனாகவும் அவதானிக்கப்பட்டுள்ளான். அதேவேளை அதிக சந்தர்ப்பங்களில் மற்றவர்களைப் பயமுறுத்துபவனாகவும், அவர்களது பொருட்களைப் பறித்துக் கொள்பவனாகவும் தான் காணப்பட்டுள்ளான்.

(6) பொய், களவு, ஏமாற்றல் என்பவற்றை இயல்பாகச் செய்யக்கூடியவன்.

(7) ஆசிரியர்களுக்கும் பெரியவர்களுக்கும் மரியாதை செய்யக்கூடிய தன்மை அவனில் குறைவாகவே காணப்பட்டுள்ளது.

(8) ஆசிரியர் மற்றும் பெரியவர்களது வழிகாட்டல்களைப் பின்பற்றியொழுகும் தன்மை அனீஸிடம் குறைவாகவே காணப்பட்டுள்ளது. அறிவுறுத்தல் வழங்கப்பட்டவுடன் மாத்திரம் பின்பற்றினாலும் நிலைபேறாகப் பின்பற்றமாட்டான்.

(9) குழுவாகச் செயற்படும்போது ஒத்துழைத்துச் செயற்படும் போக்கும் அனீசிடம் குறை வாகவே காணப்பட்டுள்ளது. பிறருக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் அவன் செயற்பட்டுள்ளான்.

இவ்வாறாக அனீசிடம் சுற்றாடல் தொடர்பான தேர்ச்சிகள் மிக இழிவளவிலேயே விருத்தி யாகியிருந்தமை தெளிவாகியது. வீட்டின் சூழலும், பாடசாலையின் சூழலும் அதற்குக் காரணமாகவிருந்துள்ளதுடன் வீட்டிலோ பாடசாலையிலோ இத்தேர்ச்சிகள் பிள்ளையில் விருத்தியாவதற்கேற்ற வழிகாட்டல்களோ ஊக்கல்களோ பிள்ளைக்குக் கிடைக்காமையும் இந்த நிலைமைக்குப் பங்களித்த பிரதான காரணமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 5

## முடிவும் பிரேரணைகளும் (Conclusions and Suggestions)

மேலே விவரிக்கப்பட்ட தரவுப் பகுப்பின் அடிப்படையில் பின்வரும் முடிவுகளை மேற்கொள்ளலாம்.

1. இச்சம்பவக் கற்கைக்கு உட்படுத்தப்பட்ட அனீஸ் என்ற பிள்ளையிடம் பாடசாலைக் கல்வியில் பங்கேற்றலுக்கான ஆற்றலும், தயார் நிலையும் பாடசாலையில் நுழைவு பெறும் சந்தர்ப்பத்திலேயே காணப்பட்டன. ஆயினும் அவனது வீட்டின் அமைப்பும் பௌதிக வளங்களும், வீட்டில் வாழ்ந்தவர்கள், வீட்டுக்கு வருகை தந்தவர்கள், வீட்டின் சூழலில் வாழ்ந்தவர்கள், வீட்டின் பௌதிகச் சூழல் என்ற காரணிகளில் காணப்பட்ட பண்புக்கூறுகள் இப்பிள்ளையில் காணப்பட்ட ஆற்றலை நெறிப்படுத்தி, வளமாக்கி வெளிக்கொணர உதவவில்லை. மாற்றமாக பிள்ளையில் காணப்பட்ட ஆற்றலை மழுங்கச் செய்யும் வகையில் எதிர்க்கணியப் பங்களிப்பையே வழங்கின. இதனால் பிள்ளை பாடசாலைக் கல்வியில் பங்கேற்ற கோலம் எதிர்க்கணியப் போக்குடையதாகப் படிப்படியாக விருத்தி பெற்றது.

2. இந்தப் போக்கைப் பாடசாலை இனங்கண்ட போதிலும், அதனைத் திசைமாற்றி யமைக்கப் பாடசாலையின் வளங்களினால் போதிய பங்காற்ற முடியவில்லை. பிள்ளைநேயப் பாடசாலை ஒன்றின் பல இயல்புகள் இப்பாடசாலையில் காணப்படாமை இதற்கான பிரதான காரணமாகும்.

3. ஆரம்பநிலைக் கல்வி பெற்ற பிள்ளை அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படும் பல தேர்ச்சிகளை அனீஸ் அடைந்திருந்தார். இந்த அடைவுக்குப் பாடசாலைப் பின்புலமே முக்கிய பங்களித்திருந்தது. சூழலில் வாழ்ந்த சமூகத்தின் பண்புக்கூறுகள் உட்பட வீட்டுப் பின்புலம் இழிதளவிலேயே அனீஸுடைய அடைவுகளுக்குப் பங்களித்தன. வீட்டுப் பின்புலம் அவனது அடைவுக்குத் தடையாகவுமிருந்துள்ளது.

4. தொடர்பாடல், கற்றலுக்காகக் கற்றல், விளையாட்டும் ஓய்வு நேரப் பயன்பாடும், ஆக்கம் என்பவற்றுடன் தொடர்பான தேர்ச்சிகளை அடைவதற்கு அனீஸிடம் இயல்பாகவே ஆற்றல் இருந்துள்ளது. இவ்வாற்றல்களை முழுமையாக வெளிக் கொணர்ந்து உச்ச அடைவை ஏற்படுத்துவதில் வீட்டுப் பின்புலத்தைப் போலவே பாடசாலைப் பின்புலமும் தவறியுள்ளது. அடையப்பட வேண்டிய பல தேர்ச்சிகள் ஐந்தாம் வகுப்பில் கற்ற போதும் அடையப்படாமலேயேயும் இருந்துள்ளன.

5. இந்த கற்கைக்குரிய ஐந்து வருட காலத்தில் அனீஸ் விருத்தியடைந்து வந்த கோலத்தினடிப்படையில் நோக்கினால், அவன் எதிர்காலத்தில் தனக்கும், சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ள நற்பிரசையாக வளர்ச்சி பெறுவான் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் அவனது சூழலிலுள்ள சமூகத்தின் சராசரிப் பிரசையாகவே உருவாகுவான். அந்தச் சமூகமோ வறுமை, சமூகவிரோதச் செயற்பாடுகள் என்பவற்றுடன் தாழ்ந்த வாழ்க்கைத் தரமுடையதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரேரணைகள் (Suggestions)

1. குறைந்த வாழ்க்கைத் தரமுடைய பெற்றோர்களை அடையாளங் காணவும், பிள்ளைகளைச் சரியான முறையில் வழிகாட்டுதல் தொடர்பாக அத்தகைய பெற்றோர்களைத் தொடர்ச்சியான அடிப்படையில் திசைப்படுத்தவும் ஏற்ற ஒழுங்கு முறையொன்று ஆரம்பப் பாடசாலைகளில் நிறுவப்படுதல் வேண்டும்.

2. ஆரம்ப நிலை வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடுத்தப்படும் ஆசிரியர்களது மனப்பங்கு மாற்றம் ஏற்படுத்தலை நோக்காகக் கொண்டு தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டமொன்று எல்லா ஆரம்பப் பாடசாலைகளிலும் இருத்தலுக்கு வகை செய்தல் வேண்டும்.

3. ஆரம்பநிலை வகுப்புகளில், குறைந்தபட்சம் முதலாம் இரண்டாம் வகுப்புகளிலாவது ஒரே வகுப்புக்கு இரண்டு ஆசிரியர்கள் சமகாலத்தில் பணிபுரிவதற்கு வாய்ப்பேற் படும் வகையிலான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by : Press
National Institute of Education
Maharagama
Website : http://www.nie.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org